These copper-plates are inscribed in the letters of Telugu – Kannada that were in use in 700 A.D. We have not the original of the grant, but only a copy of it taken two hundred years later. These were published by Sri H. Krishna Sastri in the Epigraphia Indica Vol. XV.

The donor of the grant was Simhavarman the son of Vishnugopan, the grand-son of Skandavarman and the great grand-son of Viravarman.

22 Darsi Copper-plate

Only the first leaf of the copper-plates is available. This was discovered in the nineteenth century in the village of Darsi in the Nellore district. It was published in the Epigraphia Indica Vol. I. It is inscribed in the Pallava-grantha characters belonging to the early half of the sixth century A.D.

The great grand-father of the donor is mentioned as Virakorchavarman. After mentioning his name, this leaf stops abruptly. This Virakorcha is believed by some scholars to have been none other than Viravarman, the grandfather of Yuvamaharaja Vishnugopan.

23. Sura Copper-plates

About fifty years ago, these copper-plates were handed over to the then Deputy Collector of Guntur district by a Muslim who dwelt in Narasaraopet. He was evidently under the impression that these plates related to his own property. These were first published in the Annual Report of the South Indian Inscriptions 1913–14, and later on published in the Epigraphia Indica Vol. XXIV.

This grant is inscribed in the ancient Telugu–Kannada characters. It is only a copy of the original grant made by a Pallava king who ruled in the fifth century A.D. At the time when this grant was copied, the eastern Chalukyas had annexed this region to their kingdom.

The donor of the grant was Vijaya Vishnugopavarman, the grand-son of Yuvamaharaja Vishnugopan. He is also mentioned as the son of Simhavarman and the great grandson of Skandavarman.

24. Udayendiram Copper-plates-II

These copper-plates were discovered in 1850 in the village of Udayendiram in the North Arcot district. These were first published in the Salem Manual by Rev. T. Foulkes, and later appeared in the Indian Antiquary Vol. VIII. Dr. Kielhorn published them in the Epigraphia Indica Vol. III.

It was in the first year of his reign that Nandivarman I made this grant. This monarch seems to have reigned almost in the middle of the sixth century A. D. This grant is the only one exclusively in Samskrit. It bears none of the characters of the languages that flourished at the time in the South. The grant is inscribed in the characters of Telugu–Kannada that were in vogue in the Andhra districts. The letters resemble those that belonged to the tenth century A.D.

From this one may infer that the grant is not the original one but a copy. As this grant, however, was considered to be genuine during the reign of the Chola monarch Parantaka I. it must be assumed to be so by us.

25. Mayidavolu Copper-plates

These are considered to be the earliest of the available Pallava copper-plates. They were published by Dr. Hulzsch in the Epigraphia Indica Vol. VI. The grant is in Prakrit. The donor is Yuvamaharaja Sivaskanda Varman. He authorised the chief of Dhanyakatam, the then capital of the Guntur region, to confer a village on two brahmins well-versed in Sastras. At the time when the grant was made, this part of the country which belonged to Sri Parvatha Rajyam was under the sway of the Pallavas.

26. Hirahadagalli Copper-plates

This village Hirahadagalli is in the district of Bellary. These copper-plates were published in Epigraphia Indica Vol. I.

The donor Sivaskandavarman is considered to be the same as the donor of the Mayidavolu grant. The grant is in Prakrit with the benedictory verse in Samskrit.

In this grant we come across the word 'Bappar' which means 'father'. Some historians are of opinion that Bappaswami may have been the father of Sivaskandavarman and the first ruler of the Pallavas. Sri T. N. Subramanian, however, does not share this view.

27. Gunapadeyam Copper-plates

These copper-plates were unearthed in Gunapadeyam village in the Guntur district and are kept in the British Museum. These were published by Dr. Fleet in the Indian Antiquary Vol. XIX as well as in the Epigraphia Indica Vol. VIII by Dr. Hulzsch.

The grant is inscribed in Prakrit, and we find two slokas in Samskrit towards the end. This grant was later than those of Mayidavolu and Hirahadagalli.

The grant was made by Charudevi during the reign of Maharaja Vijayaskandavarman. Charudevi is mentioned here as the spouse of Vijayabuddhavarman and the mother of a son whose name ends with Ankura. Dr. Hulzsch conjectures that Buddhiankura was the name of Charudevi's son

What exactly was the relationship between Vijayaskandavarman and Vijayabuddhavarman? Historians are of the opinion that Vijayabuddhavarman was the son of Vijayaskanda Varman. Charudevi probably ruled over a section of the Pallava kingdom. One has to infer that her husband was not alive then and that she had acted as regent for her son.

Research scholars are generally of opinion that Vijayaskandavarman who had made grants of Mayidavolu and Hirahadagalli was the same as Sivaskandavarman; for 'Siva' and 'Srivijaya' are epithets expressive of auspicious qualities. Sri T. N. Subramanian does not agree with this view and maintains that Sivaskandavarman and Vijayaskandavarman were two different persons

28. Hosakkottai Copper-plates

These were found in Hosakkottai, the chief town of a taluq in the Bangalore district. The grant is inscribed in the ancient characters of Telugu-Kannada. These plates are kept in the Archaeological Department, Mysore.

The grant praises the Ganga line of kings. It was made during the reign of Konkanyadiraja (the king of Konkana). Research scholars are of opinion that the king referred to was Avinithan.

The mother of Simhavishnu made a grant to raise a Jaina temple for the glorification of the illustrious line of her husband. The Ganga king gifted the land. From this one may infer that she belonged to the Ganga clan. The grant establishes some relationship in those days between the Gan gas and the Pallavas.

29. Hullagere Copper-plates

These were found in the village of Hullagere in the Mandayam Taluq of the Mysore district. The grant was published in the Epigraphia Karanatika Vol. III about seventy years ago.

The grant was made during the reign of Sivamaran (713–14 A. D.). The plates mention that the two beloved sons of 'Pallava yuvamaharaja' made this brahmadeyam grant. Who is this Pallava yuvamaharaja? There is no definite answer here to this question. Bhuvikraman, the elder brother of Sivamaran, defeated the Pallavas at Velanga. The Pallavas overeign hid himself in a mountain-fortress. The heir-apparent must have been kept a prisoner in the hands of the Gangas. The two sons of the heir-apparent seem to have been under the protection of the Ganga sovereigns. This is the view of the historians of Karnataka.

30. Haldipur Copper-plates

These copper-plates were unearthed in the village of Haldipur in the Hanava taluq in the north Kannda. The grant was written in ancient Telugu-Kannada characters that prevailed in the land of the Karnataka in the eigth century.

Gopaladevan calls himself a Pallava but does not give any information regarding his Pallava genealogy. There was no love lost between the Chalukyas of Vatapi and the Pallavas of Kanchi. Gopaladevan seems to have been a petty prince under the rule of the Chalukya king Vikramaditya II. He and his ancestors were subrodinate rulers on the west coast.

* * *

The thirty copper-plates which are now being edited and discussed cover a long period of over five centuries. The inscriptions reveal in great measure the probity of the Pallavas who seem to have maintained a high standard of ethics. They were, indeed, animated by a robust and living faith in the gods and goddesses they worshipped. They were mostly of both persuasions Saiva and Vaishnava, marked by wise tolerance. The Jains and Buddhists freely moved about and lived in amity with others in Kanchi.

The Pallavas' ardent religious fervour and devotion have found their noblest expression in many a magnificent temple and monastery. It was an age when a great tide of Hindu religious revival swept acrosss the land.

Some captains, chieftains and petty princes who had gathered under the war-banner of the Pallavas became saints and sages and later looked down in contempt upon the pomp and pageantry of life. Tirumangai Alvar who was a chieftain under Nandivarman II bemoans the melancholy waste of years he spent in the service of the emperor. Paranjoti who had served the conqueror of Vatapi and later became Siruttondar, was immortalised in Tevaram and Peria-puranam.


The Pallava kings were great patrons of learning, and the liberal grants which they had bestowed on pious and learned brahmins and Jaina savants testify to their broad-mindedness.

The court-language was Samskrit, and by its contact Tamil has been enriched in a variety of ways. The hymns of Alvars and Nayanmars have stirred the heart of the Tamil people.

Not only in the realms of religion and literature, but also in the spheres of music, painting, architecture and sculpture, the Pallavas took keen interest and the age was characterized by remarkable activity and achievement.

A Note on the Arrangement of the Copper-plates

The first twelve plates of the Pallava monarchs from Simhavarman to Nripatungavarman have been chronologically arranged in the present volume. But with regard to the early Pallava sovereigns we are not on sure ground. So, the Telugu plates dealing with them have not been properly arranged. However, the Special Editor T. N. Subramanian has given us a genealogy drawn from a study of those copper-plates:



In consonance with his views, the following chronological order is given:

1. Mayidavolu Copper-plates
2. Hirahadagalli Copper-plates
3. Gunapadeyam Copper-plates
4. Sendalur Copper-plates
5. Ongodu–I Copper-plates
6. Uruvappalli Copper-plates
7. Nedungaraya Copper-plates
8. Vesanda Copper-plates
9. Bhikira Copper-plates
10. Mangalore Copper-plates
11. Vizhavetti Copper-plates
12. Ongodu–II Copper-plates
13. Sura Copper-plates
14. Udayendiram Copper-plates

The single leaf-plate of Darsi about which nothing definite can be said at present is also given here, for it may prove of some use to future research scholars.

Regarding the three Kannada copper-plates published towards the end of the present volume, they cannot, strictly speaking, be styled Pallava copper-plates. However, they throw some light on the Pallava line of sovereigns.

- Nandivarman
  - Simhavishnu
    - Mahendravarman I
      - Narasimhavarman I
        - Mahendravarman II
          - Paramesvaravarman I
            - Narasimhavarman II
              - Paramesvaravarman II
              - Mahendravarman III
  - Bhimavarman
    - Buddhavarman
      - Adityavarman
        - Govindavarman
          - Hiranyavarman
            - Nandivarman II
              - Dantivarman
                - Nandivarman III
                  - Nripatungavarman
                    - Aparajita

பல்லவர் வரலாற்றுச் சுருக்கம்

காஞ்சிபுரத்தைத் தலைநகராகக்கொண்டு தொண்டை மண்டலத்தையும் அதனைச் சுற்றியுள்ள நாடுகளையும் கி. பி. மூன்றும் நூற்றாண்டிலிருந்து கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு வரையில் சுமார் ஆறு நூற்றாண்டுகளுக்குப் பல்லவர்கள் அரசு புரிந்திருக்கிறார்கள்.

அவர்கள் ஆட்சிக் காலத்தை மூன்று பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். தொடக்கத்திலிருந்து ஆறும் நூற்றாண்டின் மத்திவரை உள்ளது ஒன்று. இந்த ஆறும் நூற்றாண்டின் மத்தியிலிருந்து எட்டாம் நூற்றாண்டின் மத்திவரையில் உள்ளது இரண்டாவது பிரிவு. எட்டாம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டு வரையில் உள்ளது மூன்றாவது பிரிவு. முதல் பிரிவில் ஆண்ட அரசர்களைப்பற்றி நமக்கு அதிகமாகத் தெரியவில்லை. இதையே பிராகிருத சாசனங்களை வழங்கிய அரசர் காலம்', ஸம்ஸ்கிருத சாசனங்களை அளித்த அரசர் காலம் என்று இருவிதமாக ஆராய்ச்சியாளர்கள் பிரிப்பர்.

கர்நாடக தேசத்திலே வைஜயந்தி என்னும் வனவாசியைத் தலைநகராகக்கொண்டு அரசு புரிந்த கதம்ப வம்சம் நிறுவப்பட்டது இந்தக் காலத்திலேதான். ஏறக்குறைய இந்தக் காலத்தின் முடிவிலேயே கதம்ப வம்சத்தின் அரசு மறையவும் ஆரம்பித்துவிட்டது. அதேபோல, தாழைக்காட்டைத் தலைநகராகக்கொண்டு, அரசு புரிந்த கதம்ப வம்சம் நிறுவப்பட்டது இந்தக் காலத்திலேதான். ஏறக்குறைய இந்தக் காலத்தின் முடிவிலேயே கதம்ப வம்சத்தின் அரசு மறையவும் ஆரம்பித்துவிட்டது. அதேபோல் தாழைக்காட்டைத் தலைநகராகக்கொண்டு அரசு புரிந்துவந்த மேலைக்கங்க வம்சமும் இந்தக் காலத்திலேதான் நிறுவப்பட்டது. இந்த இரண்டு வம்சங்களுக்கும் பல்லவர்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வந்திருக்கிறது.

கி. பி. ஆறும் நூற்றாண்டின் மத்தியில், சிம்மவர்மனுடைய ஆட்சியில் அவன் மகன் சிம்மவிஷ்ணு காவிரிநதி பாயும் சோழ நாட்டைக் கைப்பற்றிப் பல்லவ சாம்ராஜ்யத்தோடு சேர்த்துக்கொண்டது முதல், இவர்களுடைய வரலாறு நமக்கு ஓரளவு தெளிவாக விளங்குகிறது. 6–ஆம் நூற்றாண்டின் மத்தியிலிருந்து 8–ஆம் நூற்றாண்டின் மத்திவரை, ஸிம்மவிஷ்ணு வம்சத்தவர்கள் அரசு புரிந்து வந்தார்கள். அது வாதாபிச் சாளுக்கியர்களின் ஆட்சிக்குச் சமகாலமாகும். அதற்குப் பிறகு இளைய பரம்பரையைச் சேர்ந்த பல்லவமல்லனும் அவன் சந்ததியாரும் இருநூற்றாண்டுகளுக்குமேல் அரசு புரிந்தனர். அது மான்யகேடத்து ராஷ்டிரகூடப் பேரரசின் ஆட்சிக் காலமாகும்.

காஞ்சியிலே சிம்மவிஷ்ணு வம்சம் பல்லவமல்லன் பரம்பரையினர் ஆகியோர் ஆண்டுவந்த காலத்தில், மதுரையிலே பாண்டியன் வம்சத்தின் அரசை மறுபடியும்

நிறுவிய கடுங்கோன் வழித் தோன்றியவர் ஆட்சி நடத்தி வந்திருக்கிறார்கள். கி. பி. 9-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தஞ்சாவூரிலிருந்து அரசு நடத்திய சோழ ராஜ்யம் தலையெடுக்க ஆரம்பித்ததும், காஞ்சிப் பல்லவர்கள் மறைய நேர்ந்தது: அதே காலத்தி லேயே மதுரைப் பாண்டியர்களும் மறைந்தனர். பல்லவர்கள் ஆட்சி புரிந்த காலத்திலே பக்கத்து நாடுகளில் நிலவிய சூழ்நிலையையும் ஓர் அளவு அறிந்துகொள்ள வேண்டும்.

பல்லவர்கள் : தோற்றமும் குலமுறையும்

பல்லவர்கள் யார், எவ்விதம் அவர்கள் காஞ்சியிலே தங்கள் அரசை நிறுவினார்கள் என்பன போன்ற விஷயங்கள் தெளிவாக இல்லை. பாரத்துவாஜ கோத்திரத்தைக் கொண்ட பல்லவ வம்சத்தைச் சேர்ந்த ஒருவன் நாக அரசன் மகளை மணந்து அரசுத் திருவையும் அடைந்தான் என்ற செய்தியே இவர்களுடைய சாசனங்களில் காணப் படுகிறது. அந்த நாகராஜன் யார், அவன் மகளை மணந்த பல்லவன் அதற்குமுன் எந்த நிலையில் இருந்தான் என்பன போன்ற விவரங்களும் நமக்குக் கிடைக்கவில்லை.

பல்லவன் என்ற பெயரைக் கொண்டும் மற்றச் சூழ்நிலையையும் கருதி, அவர்கள் யாராக இருந்திருக்க முடியும் என்பதுபற்றி ஆராய்ச்சியாளர்கள் பலவிதமாக முடிவு செய்திருக்கிறார்கள். அவற்றை இரு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம்: அவர்கள் வெளி நாட்டிலிருந்து வந்தவர்கள் என்பர் ஒரு சாரார். அதை மறுத்து நம் நாட்டவர் களிலேயே ஒருவகையினர் என்பர் மற்றொரு சாரார்.

மிகப் பழங்காலத்திலேயே காஞ்சிபுரத்தில் தொண்டைமான் அரசு புரிந்து வந்தான் என்பது பழந்தமிழ் இலக்கியங்களிலே கிடைக்கும் விவரங்களிலிருந்து தெரி கிறது. சோழ அரசனான கிள்ளி நாகலோகம் சென்று நாக கன்னிகை ஒருத்தியை மணந்து, சிறிது காலம் அங்கேயே வாழ்ந்தான். அவள் தனக்குப் பிறந்த பிள்ளைக்குத் தொண்டைக்கொடி ஒன்றை அடையாளமாகக் கட்டி, அவனைத் தந்தையான சோழ அரச னிடம் சேர்ப்பிப்பதற்குக் கப்பல் மூலம் அனுப்பிவைத்தாள். நடுக்கடலில் கப்பல் மூழ்கிய தால் கரை சேர்ந்த அந்தக் குழந்தையைத் தொண்டைக் கொடியின் அடையாளம் கொண்டு சோழ மன்னன் எடுத்து வளர்த்து, தன் இராச்சியத்தின் ஒரு பகுதிக்கு அரசனாக முடிசூட்டி வைத்தான். தொண்டைக் கொடியின் அடையாளத்தோடு இவ்விடம் வந்ததால், தொண்டைமான் என்றும், கடல்திரையால் கரை சேர்ந்தவன் ஆதலின் திரையன் என்றும், அவன் பெயர் பெற்றானாம். அவன் அரசு புரிந்த நாடு தொண்டை நாடு என வழங்கப்பெற்று வந்தது. பெரும்பாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவ னான தொண்டைமான் இளந்திரையன் காஞ்சிபுரத்திலிருந்த செய்தி அந்த நூலிலே காணப்படுகிறது. தளவானூரிலுள்ள முதலாம் மகேந்திரவர்மனுடைய தமிழ்க் கல் வெட்டிலே அவன், 'தொண்டையந்தார்வேந்தன்' என்று புகழப்பட்டிருப்பதால், பல்லவர்களும் தொண்டைமான் என்ற விருதைத் தரித்திருந்தார்கள் எனலாம். சோழன் மணந்த நாக கன்னிகையின் பெயர் பீலிவளை என்றும், அவள் வளைவணன் மகள் என்றும் மணிமேகலையில் காணப்படுகிறது. பல்லவர்கள் தமிழ்நாட்டவர்களே என்னும் கொள்கைகளுள் இதுவே முக்கியமானது.

மணிபல்லவம் என்ற ஒரு தீவைப் பற்றியும் மணிமேகலையில் குறிக்கப்பட்டுள்ளது. இலங்கையை ஒட்டிக் காரைத்தீவு என்று இப்போது வழங்கப்பெறும் தீவே மணிபல்லவம்

என்று சிலர் கருதுவர். அவ்விடத்திலிருந்து தோன்றியவர்களே பல்லவர்கள் என்ற கொள்கையை இலங்கை ஆசிரியரான திரு. இராசநாயகம் விவரித்திருக்கிறார். இந்தக் கொள்கையை ஆராய்ச்சியாளர்கள் இப்போது அதிகமாகப் பொருட்படுத்துவதில்லே.

பல்லவர்களே வெளிநாட்டவராகக் கருதும் கொள்கையின் முக்கிய அம்சங்கள் பின்வருமாறு. புராணங்களிலே பஹ்லவர், பஹ்நவர், பல்ஹவர் எனப் பல வடிவங்களில் காணப்படும் ஸம்ஸ்கிருதப் பெயரின் வடிவமே பல்லவர் என்று டாக்டர் ப்ளீட் கூறியிருக்கிறார். அவர்கள் புராணங்களிலே சக, யவனர்களுடனேயே சேர்த்துக் குறிக்கப் பட்டுள்ளார். இவற்றைக்கொண்டு இந்தியாவின் வடமேற்குப் பகுதியிலிருந்து தென்னுடு வந்தவர்களாகவே பல்லவர்களே அவர் கருதினர். பாரசீக வகுப்பினருள் ஒரு சாராரான பார்த்தவர் என்பாரின் பெயரே பஹ்லவர் அல்லது பல்ஹவர் என்ற வடிவில் மாறியது என்றும் ஆராய்ச்சியாளர்களில் சிலர் கருதினர். இப்போது மஹாராஷ்டிரம் என்று வழங்கப்படும் பிரதேசத்திலே சகர் இனத்தைச் சேர்ந்த க்ஷத்ரப மன்னர்களுடைய ஆட்சி நிலவியிருந்தது. அவர்களே வெற்றிகொண்ட சாதவாஹன மன்னனுன கௌதமீ புத்திர சாதகர்னி சக, யவனர்களோடு பல்ஹவர்களேயும் வெற்றி கொண்டான் என்று சாசனங்கள் கூறுகின்றன. கூர்ச்சர இராச்சியத்திலுள்ள (கிர்நார்) கிரி நகரத்தில் கி. பி. 150–ஆம் ஆண்டில் பொறிக்கப்பட்ட, ருத்ரதாமன் என்னும் சக–க்ஷத்ரப அரசனுடைய கல்வெட்டிலிருந்து அவனுக்குப் பஹ்லவன் ஒருவன் மந்திரியாக இருந்தானென்ற விவரம் தெரிகிறது. இவைகளேயெல்லாம் எடுத்துக்காட்டி, வடமேற்கு இந்தியாவிலிருந்து அவர்கள் எவ்விதம் தென்னுட்டை அடைந்திருக்க முடியும் என்பதை விளக்கிக் காட்டியிருக்கிறார்.

டாக்டர் துப்ராய் வேறு சில ஆதாரங்களே எடுத்துக்காட்டி, இதே கொள்கையை மேலும் வலியுறுத்தினர். கர்நாடக தேசத்திலே கதம்ப இராச்சியம் ஏற்படுவதற்கு முன்னதாக, அந்தப் பிரதேசத்தில் வைஜயந்தியான வனவாசியைத் தலைநகராகக்கொண்டு, சூட்டு குலத்து நாகவம்ச அரசர்கள் ஆண்டு வந்தனர். சாதவாகன சாம்ராஜ்யம் சிதைந்த காலத்தில், அந்தப் பிரதேசத்தை நிர்வகித்துவந்த சூட்டு குலத்தவர் தனியரசு நிறுவினர்கள். அவர்களுக்கும் மஹாராஷ்டிரப் பிரதேசத்தில் ஆண்டுவந்த சக–பஹ்லவர்களுக்கும் இடையில் நெருங்கிய உறவு நிலவிவந்தது. அந்தச் சூழ்நிலேயில் பஹ்லவன் ஒருவன் காஞ்சியின் அரசை எவ்விதம் அடைந்திருக்க முடியும் என்பதை அவர் ஊகித்துக் காட்டி விளக்கியிருக்கிறார்.

பல்லவர் கல்வெட்டுகளே வெளியிட்ட திரு. வேங்கடசுப்பையர் அக்கல்வெட்டுகளிலிருந்து அதற்கு ஓர் ஆதாரத்தைக் காட்டினர். இரண்டாம் பரமேச்வரவர்மனுக்குப் பிறகு முடிசூட்டுவதற்காக இளேய பரம்பரையிலிருந்து ஒருவனே அழைத்துவரச் சென்ற தூதுகோஷ்டி ஹிரண்யவர்ம மஹாராஜாவை அடைந்தபோது, ராஜ சின்னங்களான மகுடம் முதலியவற்றையும் அவர்கள் கூடவே கொண்டுபோயிருந்தனர்போலும். அவற்றுள், ‘ கரிய களிறின் தலே ’ போன்ற ஏதோ ஒன்றைக் கண்டு, ஹிரண்யவர்மர் அது என்னவென்று வினவினுராம். அது களிற்றின் தலேயல்ல, அரசனுக முடிசூட்டப் பெறுபவனுக்கு அணிவிக்கப்பெறும் மகுடமே அது என்று அவருக்கு விளக்கப்பட்டதாம். காஞ்சிபுரம் வைகுண்டப் பெருமாள் கோயிலில் இந்நிகழ்ச்சியைச் சித்திரித்துக் காட்டும் சிற்பங்களுக்கு விளக்கமாக எழுதப்பட்ட அடிக் குறிப்பிலிருந்து இந்த விவரம் தெரிய வருகிறது.

யானையின் தலைபோன்ற வடிவத்தில் செய்யப்பட்ட மகுடம் முன்னுளிலே நம் நாட்டில் எந்தப் பகுதியிலும் வழக்கில் இருந்ததாகத் தெரியவில்லை. எனினும், அந்த வடிவம் கொண்ட மகுடம் வேறோரிடத்திலே வழக்கில் இருந்திருக்கிறது. கி. மு. இரண்டாம் நூற்றுண்டில் வடமேற்குப் பகுதியிலே அரசு புரிந்தவனுகக் கருதப்படும் பாக்டீரிய அரசனுன டெமெட்ரியஸ் என்பவனுடைய நாணயங்களில் துதிக்கை, தந்தம் ஆகிய வற்றோடு அமைந்த யானையின் தலைபோன்ற மகுடத்தைத் தரித்திருப்பதாக அவனுடைய உருவம் பொறிக்கப்பட்டிருக்கிறது. இதைக்கொண்டு காஞ்சிபுரத்துப் பல்லவர்களுக்கும் பாக்டீரிய தேசத்து அரச பரம்பரைக்கும் ஏதோ ஒருவகையில் தொடர்பு இருந்திருக்க வேண்டுமென்பதை அவர் எடுத்துக் காட்டியிருக்கிறுர். இப்போது பெரும்பாலும் இந்தக் கொள்கையையே ஆசிரியர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறுர்கள்.

இந்தக் கொள்கை வகுக்கப்பட்ட காலத்தில், நாகார்ஜுனகொண்டத்துப் புதை பொருள் ஆராய்ச்சி நடைபெறவில்லை. அங்கே பூமிக்கு அடியிலிருந்து கிடைத்த கல் வெட்டிலிருந்து பல விஷயங்கள் நமக்குத் தெரியவருகின்றன. பல்லவர்களிலே முதல் அரசனுகக் கருதப்பெறும் சிவஸ்கந்தவர்மனுடைய ஹீரஹடகள்ளிச் செப்பேடுகளில் கண்ட தானம் முதன் முதலில் இக்ஷ்வாகு வம்சத்தின் முதல் அரசனுன சாந்தமூலனுல் வழங்கப் பெற்றதென்பதும் அதையே பின்னுல் பல்லவன் திரும்பவும் வழங்கினுன் என்பதும் தெரியவருகின்றன. தட்சிணம் முழுவதையும் ஒருகுடைக்கீழ் ஆண்டுவந்த சாதவாஹன சாம்ராஜ்யம் வீழ்ந்த பிறகு, அதன் கிழக்குப் பகுதியிலே அரசு நடத்திய வர்களே இக்ஷ்வாகு மன்னர்கள். அவர்கள் கிழக்கே அரசு நடத்திய காலத்தில், மேற்குப் பகுதியில் சக–க்ஷத்ரபர்கள் அரசு நடத்தியிருக்கிறுர்கள். உண்மையில் அவர்களுடைய ஆதிக்கம் மேலோங்கியதாலேயே சாதவாஹனர்கள் வலிகுன்றி, மேற்குப் பகுதியை இழந்து கிழக்கே வரநேரிட்டது என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுவர். இந்த அரச குடும்பங்களுக்கிடையில் நெருங்கிய உறவும் நிலவி வந்திருக்கிறது. அவர்களுடைய கல் வெட்டுகளை ஆராய்ந்தால் பழந்தமிழ் இலக்கியத்திலிருந்து தெளிவு காண முடியும். பல்லவர்கள் யார், எவ்விதம் தொண்டைநாட்டை அடைந்து அரசை நிறுவினுர்கள் என்பன போன்ற விவரங்களையும் ஓரளவு நிச்சயமாகக் கூறவும் முடியும். அதை விரிவாக ஆராய்ந்து கூற வேண்டுமாதலால், அதை மற்றோரிடத்தில் காண்போம்.

இராஜ்ய ஸ்தாபனமும் முதல் அரசர்களும்

பல்லவர்களுடைய அரசு எவ்விதம் நிறுவப்பட்டது என்பதையும், ஆரம்ப காலத்தில் அதிலே ஆட்சி புரிந்தவர்களின் விவரங்களையும் கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டின் மத்தியில் வழங்கப்பெற்ற வேலூர்ப்பாளையம் செப்பேடுகளிலேதான் முதன் முதலாகப் பல்லவ வம்சத்தில் வந்த வீரகூர்ச்சன் என்பான் நாகராஜன் மகள் ஒருத்தியை மணந்து, அவள் கைத்தலத்தோடு அரசையும் கைக்கொண்டான் என்று கூறப் பட்டுள்ளது. அடுத்த அரசனுன அவன் மகன் ஸ்கந்தசிஷ்யன் பிராம்மணர்களுடைய கடிகையைச் சத்தியசேனன் என்னும் அரசனிடமிருந்து கைப்பற்றினுன். மூன்றும் அரசனுன குமாரவிஷ்ணு காஞ்சிபுரத்தைக் கைப்பற்றினுன் என்றும், அவன் மகன் புத்தவர்மன் சோழர்களுடைய சைனியத்திற்கு வடவாக்நிபோல இருந்தான் என்றும் புகழப்பட்டிருக்கிறுர்கள். வாயலூர்க் கல்வெட்டிலும் இந்த நான்கு அரசர்களும் இதே வரிசையில் கொடுக்கப்பட்டிருப்பது (28 முதல் 31 வரை) கவனிக்கத்தக்கது.

பல்லவ சாசனங்களிலே நமக்குக் கிடைத்தவற்றுள் மிகவும் பழமையானது மயித வோலுச் செப்பேட்டுச் சாசனமேயாகும். பிராகிருத மொழியிலுள்ள அது யுவ மஹா ராஜனுன சிவகந்தவர்மனுல் அளிக்கப்பட்டது. அதற்கு அவனே ஆணத்தியாகவும் இருந் தானும். கடைசியிலே அது பத்தாம் ஆண்டில் வழங்கப்பட்டது என்ற விவரமும் காணப்படுகிறது. அந்த ஆண்டு அப்போது அரசனுக இருந்த அவன் தந்தையின் ஆட்சிக் காலமாகவே இருத்தல்வேண்டும் என்ற ஓர் அபிப்பிராயம் பொதுவாக நிலவி வருகிறது. ஆனுல், அந்தச் சாசனத்தின் முத்திரையிலே சிவஸ்கந்தவர்மன் என்ற அவன் பெயரே ஸம்ஸ்கிருதத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

சிவஸ்கந்தவர்மன் வழங்கியதாக மற்றொரு சாசனமும் கிடைத்துள்ளது. ஹீரஹட கள்ளிச் செப்பேடுகள் என்று குறிக்கப்படும் அது, அவனுடைய ஆட்சியின் எட்டாம் ஆண்டில் வழங்கப்பெற்றதாகும். அதிலே அவன் அக்நிஷ்டோமம், வாஜபேயம், அச்வ மேதம் முதலிய யாகங்கள் செய்தவனென்றும் தர்மமஹா ராஜாதிராஜன் என்ற விருதை உடையவன் என்றும் வருணிக்கப்பட்டிருக்கிறுன். அதிலிருந்து அவன் தன்னுடைய உரிமையால் அரசனுக அப்போது விளங்கிவந்தான் என்பது தெளிவாகும்.

இந்தச் சாசனத்தில் கண்ட தானம் முதலில் இக்ஷ்வாகு வம்சத்து முதல் அரசனுன ஸ்ரீ சாந்தமூலனுடைய தர்மம், ஆயுள், பலம், புகழ் ஆகியவற்றின் அபிவிருத்திக்காக, பப்பஸ்வாமி என்பவரால் முதலில் வழங்கப்பட்டதென்றும் அதையே வேறு சில உரிமை களுடன் சிவஸ்கந்தன் திரும்பவும் பின்னுல் வழங்கினுன் என்றும் அதிலே காணப்படு கிறது. அதிலிருந்து அவன் ஆட்சிக் காலம் சாந்தமூலனுடைய ஆட்சிக்கு நீண்ட நாள் தள்ளி இருந்ததற்கில்லை என்பதும் தெரியவரும்.

அவனையே பல்லவ வம்சத்தின் முதல் அரசனுக ஆராய்ச்சியாளர்கள் கருதுவர். அவ்விதமானுல் ஸ்கந்தசிஷ்யன் என்ற பெயரும் அவனையே உணர்த்துவதாகக் கொள்ள லாம். அவன் சத்தியசேனன் என்பானிடமிருந்து கடிகையைக் கைப்பற்றியிருக்கிறுன். கடிகை என்பது உயர்தர போதனை அளிக்கும் கல்விச்சாலையாகும். பல்கலைக் கழகம் என்று இப்போது வழங்கப்பெறும் நிறுவனத்துக்கு ஒரு முறையில் ஒப்பானதாகக் கொள்ளலாம். அந்தக் கடிகை எவ்விடத்தில் இருந்ததென்பது குறிக்கப்பெறவில்லை. எனினும், அந்த நாளிலே காஞ்சிபுரத்திலிருந்த கடிகை மிகவும் பிரசித்தமானது. மேலைக் கடற்கரையிலே கதம்ப வம்சத்தின் அரசை நிறுவிய மயூரசர்மன் வேதாத்யயனத்தை முடித்துக்கொண்டு, பிரவசனத்திற்காகத் தன்னுடைய ஆசிரியர் வீர–சர்மருடன் காஞ்சி புரம் கடிகைக்கு வந்து சேர்ந்தான் என்று தாளகுண்ட கல்வெட்டில் காணப்படுகிறது. அதிலிருந்து ஸ்கந்தசிஷ்யன் கைப்பற்றிய கடிகையும் காஞ்சிபுரத்தில் இருந்ததென்றே கொள்ளலாம். அவன் அந்தக் கடிகையைச் சத்தியசேனன் என்ற அரசனிடமிருந்து கைப்பற்றினுன் என்று சாசனம் கூறுகிறது. அது காஞ்சிபுரத்துக் கடிகையாக இருக்கு மானுல் காஞ்சிபுரமும் சத்தியசேனன் வசம் இருந்திருத்தல்வேண்டும். கடிகையோடு அந்த நகரத்தையும் ஸ்கந்தசிஷ்யன் கைப்பற்றியிருத்தல்வேண்டும்.

ஸ்கந்தவர்மன் வழங்கிய மயிதவோலு, ஹீரஹடகள்ளிச் சாசனங்கள் காஞ்சி புரத்திலிருந்து வழங்கப்பெற்றவை. சத்தியசேனன் யார் என்பது தெரியவில்லை. சக– க்ஷத்ரப அரசர்களுள் ஒருவனுக இருத்தல் வேண்டுமென்று டாக்டர் எஸ். கிருஷ்ண ஸ்வாமி ஐயங்கார் கருதுவர்.

ஸ்கந்தசிஷ்யன் மகனை குமாரவிஷ்ணு காஞ்சியைக் கைப்பற்றினன் என்று வேலூர்ப்பாளையம் சாசனம் கூறுகிறது. தந்தையின் ஆட்சிக் காலத்தில் நடந்த போரில் அவனே முக்கிய புருஷனாக நின்று வெற்றிகொண்டதாலேயே அவ்விதம் குறிக்கப் பட்டதா, அல்லது அவன் வெற்றி அதினின்றும் வேறானதா, என்பது தெரியவில்லை. வேறானதாயின் இடைக்காலத்திலே அந்நகரம் பல்லவர்கள் கையைவிட்டு நழுவி வேற்றூர் வசம் சென்றிருத்தல்வேண்டும். அவர்கள் யார் என்பதும் தெரியவில்லை.

புத்தவர்மன் சோழ சைனியத்திற்கு வடவாக்நியாக விளங்கினன் என்றே கூறப் பட்டுள்ளது. சோழர் என்பது தமிழ்நாட்டு முடியுடை வேந்தர் மூவருள் ஒருவரையே உணர்த்துவதாகும். ஆனால், அவன் சோழர்களை எந்த இடத்தில் எதிர்த்து வெற்றி கொண்டான் என்பது தெளிவாக இல்லை. தொண்டைமண்டலத்துக்கு வடக்கேயுள்ள சேரநாடு பிரதேசத்தில் அரசு புரிந்த தெலுங்குச் சோழர்களை உணர்த்துவதாகவே கரு தப்பட்டு வருகிறது. எனினும், இன்னும் வடக்கே சோழவாடி என்ற பிரதேசம் இருந்த தென்பது கவனிக்கத்தக்கது. ஆந்திர நாட்டின் மேற்குப் பகுதியில் கிருஷ்ணா, மூசி இந்த இரு நதிகளுக்கிடைப்பட்ட பிரதேசம், அதாவது பழைய நிஜாம் இராச்சியத்தின் நால் கொண்டா, மாபூப்நகர் ஆகிய மாவட்டங்கள் அடங்கிய பிரதேசமாகும். இக்ஷ்வாகு வம்சத்து அரசர்களுக்கு முக்கிய நகரமாக இருந்த விஜயபுரி (இப்போது நாகார்ஜுன கொண்டம்) க்கு எதிராகக் கிருஷ்ணா நதியின் இடது கரையில் அமைந்திருந்தது எனக் கொள்ளலாம். இந்த அரசர்கள் ஒருவர் பின் ஒருவராக முடி சூட்டப்பட்டு அரசாண்டு வந்தார்கள். இவர்களில் ஸ்கந்தவர்மன் கி. பி. மூன்றும் நூற்றாண்டின் பிற்பகுதியில் அரசுபுரிந்தவன் அதனால், இவர்கள் ஆட்சிக் காலம் நான்காம் நூற்றாண்டின் மத்தி யோடு முடிவடைந்ததெனக் கொள்ளலாம்.

பிராகிருத மொழியில் கிடைத்த மூன்றும் செப்பேட்டுச் சாசனம் ஒன்றும் உண்டு. ஸ்ரீ விஜயஸ்கந்தவர்மன் ஆட்சிக் காலத்திலே யுவமஹாராஜன் புத்தவர்மன் தேவியான சாருதேவி வழங்கிய குணபதேயம் சாசனம் அது. அதில் கண்ட விஜயஸ்கந்தவர்மனைப் பல்லவ வம்சத்தின் முதல் அரசனை சிவஸ்கந்தன் என்றே ஆசிரியர்களில் பலர் கருதுவர். எழுத்துகளின் வரி வடிவம், வாசக அமைப்பு முதலியவை பிற்பட்ட காலத்தை உணர்த்து வனவாக உள்ளன. அன்றி, பலசுருதி கூறும் இரண்டு சுலோகங்கள் ஸம்ஸ்கிருதத்தில் உள்ளன என்பதும் கவனிக்கத்தக்கது. இன்னும் புத்தவர்மன் யுவமஹாராஜனாக இருந் தான் என்று காணப்படுவதினின்றும் அந்த மன்னன் சிவஸ்கந்தனாக இருத்தல் முடியா தென்பதும் தெரியவரும்.

அதேபோல குண்டூர் மாவட்டத்தில் மஞ்சிகல்லு என்னுமிடத்திலிருந்து ஸிம்ஹ வர்மன் என்ற பல்லவ அரசன் வழங்கிய தானத்தைத் தெரிவிக்கும் பிராகிருதமொழிக் கல்வெட்டு ஒன்றும் கிடைத்துள்ளது. எழுத்துகளின் வடிவத்தையும் பிராகிருத மொழி யையும் கொண்டு அது பழமை வாய்ந்ததெனக் கருதுவர். ஆனால், வாயலூர்க் கல் வெட்டின்படி ஸிம்ஹவர்மன் என்ற பெயர்கொண்ட பல்லவ அரசன் யாரும் அவ்வளவு பழைய காலத்தில் இருந்ததாகத் தெரியவில்லை. ஒருகால் பல்லவர்களிலே வேறு கிளையைச் சேர்ந்தவனாக இருப்பானோ என்று எண்ணத் தோன்றுகிறது.

இடைக்காலம்

புத்தவர்மன் காலத்திற்குப் பிறகு விஷ்ணுகோபன் முதலிய அரசர்கள் ஆட்சி புரிந்து சென்றபின் நந்திவர்மன் என்ற அரசன் தோன்றினன் என்றும் சிவபெருமா

னுடைய அருளால் இவன் திருஷ்டிவிஷனை நர்த்தனம் ஆடச் செய்தான் என்றும் வேலூர்ப்பாளையம் சாசனம் கூறுகிறது. அதற்கப்பால் ஸிம்மவிஷ்ணுவின் தந்தையான ஸிம்மவர்மன் என்பான் பெயரே காணப்படுகிறது. இவ்விதம் சுமார் 350–க்கும் 550–க்கும் இடைப்பட்ட இரண்டு நூற்றுண்டுக் காலத்துக்கு அவர்களுடைய வரலாறு பற்றி அதிகமாக ஏதும் தெரியவில்லை.

விஷ்ணுகோபன் பெயர் குறிக்கப்பட்டுள்ளதே தவிர, அவன் என்ன செய்தான் என்றே, எவ்விதத்தில் சிறப்பு வாய்ந்தவன் என்றே குறிப்பிடவில்லை. எனினும் காஞ்சி மன்னனை விஷ்ணுகோபன் ஒருவனைப்பற்றி வடநாட்டுக் குப்தவம்சத்து அரசனை சமுத்திரகுப்தனுடைய அலஹாபாத் கல்வெட்டிலிருந்து தெரிகிறது. கி. பி. நாலாம் நூற்றுண்டின் பிற்பகுதியில், 380–ஆம் ஆண்டு அளவில், அது பொறிக்கப்பட்டிருக்கிறது. அதிலே சமுத்திரகுப்தனுடைய வெற்றிப்புகழ் விரிவாக வருணிக்கப்பட்டுள்ளது. அவ்விதம் வெற்றிகொண்டவர்களாகக் குறிக்கப்பட்டிருப்பவர்களுள் காஞ்சிபுரத்து விஷ்ணுகோபனும் ஒருவன். எனினும், வேலூர்ப்பாளையம் செப்பேடுகள் குறிப்பிட்டது இந்த விஷ்ணுகோபன்தானு என்பதை நாம் நிச்சயமாகச் சொல்ல முடியாது. ஏனெனில் மற்றெரு விஷ்ணுகோபனைப்பற்றியும் நாம் அறிவோம்.

இந்த இரண்டு நூற்றுண்டுகளின் வரலாறு விவரமாகத் தெரியவில்லையே தவிர, அந்தக் காலத்தைச் சேர்ந்தவையாகக் கருதப்படும் செப்பேட்டுச் சாசனங்கள் 12 நமக்குக் கிடைத்துள்ளன. அவற்றுள் ஒருபாதி யுவமஹாராஜன் விஷ்ணுகோபன் காலத்தை ஒட்டியது. அந்தச் சாசனங்கள் நெல்லூர்–குண்டூர் மாவட்டங்களிலிருந்து கிடைத்தவை. பெரும்பாலும் அவை பாலக்கட, மேன்மானூர், தசனபுரம் என்பனபோன்ற வெற்றிப்பாசறை (விஜயஸ்கந்தாவாரம்)களிலிருந்து வழங்கப்பட்டவை. அவை காஞ்சிப் பல்லவர்கள் அளித்தனவா என்பதையே சிலர் சந்தேகித்ததும் உண்டு. சமீபத்தில் கிடைத்த வேசந்தச் சாசனத்தில் அதை வழங்கிய சிம்மவர்மன் காஞ்சியிலிருந்தே உத்தரவு அளித்ததாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

உருவப்பள்ளி, நெடுங்கராய, மாங்களூர், பீகிரம், விழவட்டி, வேசந்தம் முதலிய செப்பேடுகளிலிருந்து பின்வரும் வமிசாவளி தெரிகிறது.

ஸ்கந்தவர்மன்
|
வீரவர்மன்
|
ஸ்கந்தவர்மன்
|
├── ஸிம்ஹவர்மன் ஆண்டு 19
└── யுவமஹாராஜன் விஷ்ணுகோபன்
    |
    ஸிம்ஹவர்மன்
    பீகரம் ஆண்டு 5
    மாங்களூர் 8
    விழவட்டி 12

யுவமஹாராஜனை விஷ்ணுகோபன் தன் அண்ணனை சிம்மவர்மன் ஆட்சிக் காலத்தில், உருவப்பள்ளி, நெடுங்கராயச் செப்பேட்டுச் சாசனங்களை வழங்கியிருக்கிறுன்.

அவன் தர்ம யுவ மஹாராஜன் என்றும், பட்டாரக மஹாராஜன் என்றும் சாசனங்களில் குறிக்கப்பட்டிருக்கிறான் என்பதும் கவனிக்கத்தக்கது.

உருவப்பள்ளிச் சாசனம் ஒரு விஷ்ணு ஆலயத்திற்கு வழங்கப்பெற்றது. அதை எழுப்பிய சேனாபதி விஷ்ணுவர்மனைக் கதம்ப வம்சத்து அரசனாகவே கருதலாம். அதை வலியுறுத்தப் பல ஆதாரங்களைக் காட்டலாம்.

மேலே கண்ட வம்சாவளியின் முதல் அரசனான ஸ்கந்தவர்மனை ஓங்கோடு முதல் சாசனத்திலிருந்து அச்வமேத யாகம் செய்த குமார விஷ்ணுவின் மகன் என்று கொள்ளலாம். சேந்தலூர்ச் சாசனத்தை வழங்கிய இரண்டாம் குமாரவிஷ்ணு அவனே ஆவன் என்று சிலர் கருதுவர். ஆனால், சாசன வாசக அமைப்பின் வளர்ச்சியைக் கொண்டு கவனித்தால் அது அவ்வளவு சரியாகத் தோன்றாது.

தர்சிச் சாசனத்தை வழங்கிய அரசனுடைய கொள்பாட்டன் பெயர் மட்டுமே தெரிகிறது. அவன் வீரகூர்ச்சன் எனப்படுவான். அந்தச் சாசனத்தின் எழுத்துக்களைக் கொண்டு மேலேயுள்ள வம்சாவளியின் இரண்டாம் அரசனான வீரவர்மனாகவே அவனை ஆசிரியர்களில் சிலர் கொள்வர்.

எஞ்சியுள்ள மூன்று சாசனங்களும் பிற்பட்ட காலத்து எழுத்துகளில் பொறிக்கப் பட்டவை. ஓங்கோடு இரண்டாம் சாசனம், சுராச் செப்பேடுகள் ஆகிய இரண்டும் கி. பி. ஏழு—எட்டாம் நூற்றாண்டுகளில் பொறிக்கப்பட்டவை, அவை மூல ஏடுகள் அல்லவென்றும் பின்னால் மூலத்துக்கு எடுத்த பிரதிகளே என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுவர். ஒருகால் ஏழு—எட்டாம் நூற்றாண்டுகளில் அரசு புரிந்த பல்லவ வம்சத்தில் ஒரு கிளையைச் சேர்ந்தவர்கள் வழங்கினவையாக இருக்குமோ என்றும் எண்ணலாம்.

நந்திவர்மன் வழங்கிய உதயேந்திரம் சாசனமும் மூல ஏட்டின் பிற்காலப் பிரதியே ஆயினும் முதற் பராந்தக சோழன் ஆட்சிக் காலத்தில் அதைச் சரியான ஆதாரமாக அங்கீகரித்திருக்கிறார்கள். நாமும் அவ்விதமே ஏற்கவேண்டியதுதான்.

சிம்மவிஷ்ணுவுக்கு முன்னால் அரசுபுரிந்த நந்திவர்மன் திருஷ்டிவிஷன் என்ற ஒருவனை வெற்றிகொண்ட செய்தி வேலூர்ப்பாளையம் செப்பேடுகளிலே கூறப்பட்டுள்ளது. பார்வையினாலேயே மரணத்தை விளைவிக்கக்கூடிய விஷம்கொண்ட பாம்பையே திருஷ்டிவிஷம் என்பர். ஆனால், இங்கே அது அந்தப் பெயர்கொண்ட நாகராஜன் ஒருவனையே குறிக்கும். கர்நாடகப் பிரதேசத்திலே ஆட்சிபுரிந்த ஸிந்தர் என்னும் அரச பரம்பரையினர் தங்களைத் திருஷ்டி விஷனுடைய சந்ததியாராகக் கூறிக்கொள்வர். நாக வம்சத்தைச் சேர்ந்த அம்மூலபுருஷன் இந்நாட்டின் பெருமையைக் காண நேரில் இவ்விடம் வந்தான் என்றும், இவ்விடம் தங்கியிருந்த காலத்தில் தோன்றிய அவன் சந்ததியாரே ஸிந்தர் என்றும் அவர்களுடைய சாசனங்கள் கூறுகின்றன. நந்திவர்மனால் வெல்லப்பட்டவன் அந்த வம்சத்தின் மூலபுருஷனாகவோ அவன் வழிவந்தவர்களுள் ஒருவனாகவோ இருத்தல் வேண்டும் எனலாம்.

ஸம்ஸ்கிருத சாசனங்களை வழங்கிய பல்லவர் காலத்தில் நடந்தனவாக மற்றும் சில சம்பவங்கள் வேறு ஆதாரங்களிலிருந்து தெரியவருகின்றன.

திகம்பர ஜைனர்களின் மதநூலான ‘ லோகவிபாகம் ’ என்பது சக வருஷம் 380—ல் பாணராஷ்டிரத்துப் பாடலிகையில், அதாவது பாடலிபுரம் என்று வழங்கப்பெற்றுவந்த

திருப்பாதிரிப்புலியூரில் எழுதப்பெற்றது. அந்த ஆண்டு காஞ்சிபுரத்திலிருந்து அரசு புரிந்த சிம்மவர்மன் என்னும் அரசனுடைய ஆட்சியின் 22–ஆம் ஆண்டு ஆகும் என்று அதிலே குறிக்கப்பட்டுள்ளது.

கங்கநாட்டை ஒருவர்பின் ஒருவராக ஆண்ட தந்தை மகன் ஆகிய இருவரையும் அதே காலத்தில் அரசுபுரிந்த தந்தை மகன் ஆகிய இரு பல்லவ அரசர்கள் முடிசூட்டி வைத்தார்கள். இந்தச் செய்தி பெனுகொண்டாவிலிருந்து கிடைத்த கங்க வம்சத்துச் செப்பேடுகளிலிருந்து தெரியவருகிறது. கொங்கணிவர்மன், அவன் மகன் மாதவவர்மன். அவன் மகன் ஆர்யவர்மன், அவன் மகன் மாதவவர்மன் என்னும் ஸிம்ஹவர்மன் என்று கங்க வம்ச முறை அதில் காணப்படுகிறது. பல்லவ மன்னனான ஸிம்ஹவர்மன் ஆர்யவர் மனைக் கங்க சிங்காதனத்தில் அமர்த்தி, முறைப்படி அபிஷேகம் செய்து முடிசூட்டினன். அவன் தன் மகன் மாதவவர்மனுக்குப் பேரரசன் பெயரான ஸிம்ஹவர்மன் என்பதை மறு பெயராக இட்டிருப்பது கவனிக்கத்தக்கது. அந்த மகனும் சிங்காதனம் ஏறிய காலத்தில் பல்லவ அரசனாக இருந்த விஜயஸ்கந்தவர்மனால் தந்தையைப் போலவே முடிசூட்டுவிக்கப் பெற்றான். இந்தச் செய்தி அவன் அளித்த கூடலூர் செப்பேடு களிலும் கூறப்பட்டிருப்பதிலிருந்து மேலும் உறுதியாகிறது.

கங்கமன்னர்கள் அளித்தனவாகக் காணும் எந்தச் செப்பேட்டையும் நம்பமுடியா தென்று தீவிரமாக வாதாடி உதறிவந்தார் ஆராய்ச்சியாளரான டாக்டர் பிளீட். அவற் றுள்ளும் பிற்காலத்து அரசர்கள் வழங்கியவற்றைக் காட்டிலும் பழைய அரசர்கள் வழங்கியனவாகக் காண்பது முற்றிலும் போலி என்பது அவர் வாதம். எனினும் அவரே மாதவவர்மன் வழங்கிய பெனுகொண்டாச் செப்பேடுகளை உண்மையானவை என்று ஏற்றுக்கொண்டிருக்கிறார். அந்தச் சாசனம் பொறிக்கப்பட்டிருக்கும் எழுத்து களைக் கொண்டு அது கி. பி. 475-ஆம் ஆண்டளவில் வழங்கப்பட்டதாதல் வேண்டும் என்று கருதுவர். அவ்விதமானால், அதை வழங்கிய மாதவவர்மனுடைய தந்தையான ஜயவர்மன் அல்லது ஆர்யவர்மன் கி. பி. 450-ஆம் ஆண்டளவில் வாழ்ந்தவனாதல் வேண்டும். அவனுக்கு முடிசூட்டிய பல்லவ அரசனான சிம்மவர்மனும் அதே காலத்த வனாவன். லோக விபாகத்தின்படி கி. பி. 436-437-ல் முடிசூட்டப்பெற்று இருபத்திரண்டு ஆண்டுகள், அதாவது கி. பி. 458–ஆம் ஆண்டு வரையில், காஞ்சியில் சிம்மவர்மன் என்ற அரசன் ஆட்சி புரிந்திருக்கிறான். கங்க அரசனை முடிசூட்டிய சிம்மவர்மன் அவனே என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுவர்.

பெனுகொண்டாச் செப்பேடுகளில் கண்ட ஆர்யவர்மன், மாதவ வர்மன் ஆகிய இருவருக்கும் முன்னால் கொங்கணிவர்மன், மாதவவர்மன் ஆகிய இருவரே கங்க அரசர் களாகக் குறிக்கப்பட்டிருக்கிறார்கள். கொங்கணவர்மனே அந்த வம்சத்தை நிறுவிய முதல் அரசன். அடுத்து வந்த மாதவனைத் தம்பி என்று சிலரும், மகன் என்று சிலரும் கொள்வர். இவைகளைக் கவனித்தால் கங்க வம்சத்தின் ஆட்சியே கி. பி. 400-ஆம் ஆண் டளவில் நிறுவப்பட்டதாதல் வேண்டுமெனக் கொள்ளலாம்.

கங்க அரசர்களைப் போலவே கதம்ப வம்சத்து அரசர்களில் சிலரையும் பல்லவ மன்னர்கள் முடிசூட்டி வைத்திருக்கிறார்கள். அந்த வம்சத்தின் ஆட்சியை நிறுவிய முதல் அரசனான மயூரசர்மனே, அந்தப் பதவியில் பல்லவர்களால் முடிசூட்டி அமர்த்தப் பெற்றவன் என்று தாளகுண்டத்துக் கல்வெட்டு உரைக்கிறது. அந்தப் பல்லவ அரசன்

யார் என்பது குறிக்கப்பெறவில்லே. கதம்ப வம்சத்தில் பின்னல் வந்த விஷ்ணுவர்மன் என்பானும் பல்லவ அரசனுல் முடிசூட்டப்பெற்றவன். அவனுடைய செப்பேடுகளி லிருந்து இது தெரிகிறது. அவன் வழங்கியனவாக இரண்டு செப்பேட்டுச் சாசனங்கள் கிடைத்துள்ளன. அவற்றுள் ஒன்றிலே அவன் தன் பெரியதகப்பனுரான சந்திரவர்ம னுடைய அனுமதியைப்பெற்று அந்தத் தானத்தை அளித்தான் என்று காணப்படுகிறது. மற்ருென்றிலே தன் பெரிய தந்தையான சாந்திவர்மன், இன்னும் பல்லவ அரசன் ஒருவன் ஆகிய இருவராலும் அவன் முடிசூட்டப்பெற்றவன் என்று கூறப்பட்டுள்ளது. அந்தப் பல்லவன் பெயர் குறிக்கப்பெறவில்லே. எனினும் அவன் யார் என்பதை ஊகித்து உணர முடியும். அவ்விதம் முடிசூட்டப்பெற்ற விஷ்ணுவர்மன் தன் மகனுக்குச் சிம்மவர்மன் என்று பெயர் வைத்திருக்கிருன். அதைக்கொண்டு அது பேரரசன் பெயராகுமென்றும் அவ்விதம் முடிசூட்டியவன் சிம்மவர்மனே என்றும் கொள்ளலாம்.

கதம்பர்களிலே அச்வமேதயாகம் செய்த ஒரே அரசஞன கிருஷ்ணவர்மனுடைய மூத்த மகனே விஷ்ணுவர்மன். ஆனுல் இந்த விஷ்ணுவர்மனே அவனுடைய தந்தை இள வரசனுக நியமிக்கவில்லே. இளேய மகனை தேவவர்மனே அந்தப் பதவியில் அமர்த்தி யிருந்தான். கிருஷ்ணவர்மனே தன் தந்தைக்கு மூத்த மகன் அல்லன்; சாந்திவர்மனே விஷ்ணுவர்மன் தன்னுடைய பெரியதந்தை என்று கூறுவதிலிருந்து அது விளங்கும். கிருஷ்ணவர்மன் தன் அண்ணனே விலக்கிவிட்டு ராஜ்யத்தைக் கைப்பற்றி அச்வமேத யாகம் செய்திருக்கிருன். அந்நாளிலே பல்லவர்கள் தங்களேக் கதம்பர்களின் பேரரசர் களாகவே எண்ணிவந்தார்கள். அதனுல் அவன் நிச்சயம் பல்லவர்களோடு மோதி வெற்றி கொண்டிருத்தல் வேண்டும். அதன் விளேவாகவே அவன் அச்வமேதயாகம் செய் தான் போலும். அதைப் பொறுக்காமல் பல்லவர்கள் கதம்ப ராஜ்யத்தை மீண்டும் அடிப்படுத்தி, தங்கள் ஆதிக்கத்தில் கொணர முற்பட்டிருப்பர். அவ்விதமே நடந்த தென்பதை மைசூர் ராஜ்யத்தில் உள்ள அஞ்ஜி என்னுமிடத்தில் கிடைத்த கல்வெட்டு தெரிவிக்கிறது. நணக்காசன் என்ற பல்லவ அரசன் கிருஷ்ணவர்மனேடு போரிட்டு வெற்றிகொண்டானும். அதிலே கேகய மன்னஞன சிவநந்தவர்மனுடைய ராஜ்யமும் அழிவுற்றது, எனினும், அவன் தன் மனத்தை அடக்கிக்கொண்டு, தர்ப்பை மீது அமர்ந்து தன் உயிரை விட்டானும். கிருஷ்ணவர்மன் கேகய ராஜகுமாரியை மணந்திருந் தான். அவளுக்குப் பிறந்தவனே விஷ்ணுவர்மன். அந்தச் சூழ்நிலேயைப் பின்னணியாகக் கொண்டு பார்த்தால், கேகய மன்னன் தன்னுடைய ராஜ்யம் அழிந்ததும் மன நிறைவுடன் உயிர் விட்டதன் ரகசியம் புலப்படும்.

அந்த இடைக்காலத்திலே விஷ்ணுவர்மன் பல்லவர்களுடைய ஆதரவில் வாழ்ந்துவந்தான் என்றே கொள்ளலாம். பல்லவர்களும் கதம்ப ராஜ்யத்தை மீட்டுச் சாந்திவர்மனே அரசனுக்கி, விஷ்ணுவர்மனே அதன் வட பகுதியில் அமர்த்தி முடிசூட்டி வைத்தார்கள்.

அந்த நிலே அதிக நாள் நீடிக்கவில்லே. சாந்திவர்மனுக்குப் பின்னுல் சிங்காதனம் ஏறிய அவன் மகன் மிருகேசவர்மன் கங்கர்களே வேரறுத்ததோடு, பல்லவர்களுக்கு ஊழித்தீயாக விளங்கினுன் என்று புகழப்பட்டிருக்கிருன். அவன் மகன் ரவிவர்மன் காஞ்சிபதியான பல்லவர்களுடைய கடுமையான போர்ப்படையை அழித்து, விஷ்ணு வர்மனேக் கொன்று, பலாசிகைப் பகுதியைக் கைப்பற்றியிருக்கிருன்.

கதம்ப கிருஷ்ணவர்மனுடைய சகோதரியைக் கங்க வம்சத்து அரசனுன தடங்கால மாதவவர்மன் மணந்திருந்தான். அவர்களுக்குப் பிறந்தவனே அவநீதன் ஆவன். பெனுகொண்டாச் செப்பேடுகளை வழங்கிய மாதவவர்மனுக்குப் பிறகு கங்க சிங்காதனத்தைத் தடங்கால மாதவவர்மன் அடைந்தான். தடங்கால என்னும் அடைமொழியைத் தடை என்னும் சொல்லின் அடியாகப் பிறந்ததென்று கொண்டு, அவனை வேறு கிளையிலிருந்து வந்தவனுகக் கொள்வர். தடிகைபாடி அல்லது தடிகைவழி என்று வழங்கிவந்த பிரதேசத்தில் அரசு புரிந்த பரம்பரையைச் சேர்ந்தவனே போலும் அவன். அவன் அவ்விதம் அரசுரிமை ஏற்றது, கதம்ப ராஜ்யத்தில் அவன் மைத்துனனுன கிருஷ்ணவர்மன் காலத்தில் நிகழ்ந்த சம்பவங்களின் விளைவே என்னலாம்.

கதம்ப கிருஷ்ணவர்மனுடைய மருமகனுன சங்க அவநீதனுடைய ஆட்சிக்காலத்திலே பல்லவசிம்மவிஷ்ணுவினுடைய தாய் அருகக் கடவுள் கோயில் ஒன்றை எழுப்பியிருக்கிருள். அதிலிருந்து அவர்களுடைய கால வரம்பை ஓரளவு ஊகிக்க முடியும். உதயேந்திரம் சாசனத்தை வழங்கிய முதலாம் நந்திவர்மன், சிம்ம விஷ்ணுவின் காலத்துக்கு முற்பட்டவன். ஆனுல், அவ்விருவருக்கும் உள்ள உறவு முறை நமக்குத் தெரியவில்லை. உதயேந்திரம் சாசனத்தில் காணும் அதே பரம்பரை வரிசை வாயலூர்க் கல்வெட்டிலும் காணப்படுகிறது. ஆனுல் சிம்மவிஷ்ணுவுக்குச் சில பெயர்கள் முன்னதாக உள்ளன. வாயலூர்க் கல்வெட்டில் காணும் பட்டியல் தந்தைக்குப் பின் மகன் என்ற முறையில் பெயர்களைக் கொடுக்காமல், அரசு புரிந்த முறையிலே கொடுப்பதாகவே கருதவேண்டும்.

சிம்மவிஷ்ணுவின் வம்சம்

பள்ளன்கோவில் சாசனத்தை வழங்கிய சிம்மவர்மன் வழிவந்தவர்களே பின்னுல் நானூறு ஆண்டுகளுக்குப் பல்லவ சாம்ராஜ்யத்தை அரசு புரிந்திருக்கிருர்கள். ஒன்றன் பின் ஒன்ருக வந்த இரண்டு கிளைகளைச் சேர்ந்தவர்கள் அவர்கள். தந்தையின் ஆட்சிக் காலத்திலேயே நிர்வாகத்தில் ஈடுபட்டிருந்த சிம்மவிஷ்ணுவின் சந்ததியார் ஒரு கிளை. சிம்மவிஷ்ணுவின் தம்பியான பீமவர்மனுடைய வழியில் வந்தவர்கள் மற்ருெரு கிளையினர், அவர்கள் ஆரும் தலைமுறையிலிருந்து — பல்லவமல்லன் காலத்திலிருந்து – அரசு புரிந்திருக்கிருர்கள். முதல் பரம்பரையின் ஆட்சி சிம்மவர்மன் காலத்திலிருந்தே தொடங்குவதாயினும், மேலே கண்ட காரணங்களுக்காகவும் சௌகரியத்தை உத்தேசித்தும் சிம்மவிஷ்ணுவின் வம்சம் என்றே அதைக் குறிப்பிட்டுள்ளோம்.

சிம்மவர்மன்

இவன் காலத்தனவாக இரண்டு சாசனங்கள் கிடைத்துள்ளன. பள்ளன்கோவில் செப்பேடுகள் ஒன்று. திருவள்ளூர்த் தாலுகாவில் உள்ள சிவன்வாயல் என்ற கிராமத்திலிருந்து அடியும் முடிவுமில்லாமல் சிதிலமான நிலையில் கிடைத்த ஸம்ஸ்கிருதக் கல்வெட்டு மற்ருென்று. அதிலே அவன் தசாச்வமேதம், பகுசுவர்ணம் ஆகிய யாகங்களைச் செய்தவன் என்று புகழப்பட்டுள்ளான். அவன் ஆட்சியின் ஆரம்ப காலத்திலேயே சிம்மவிஷ்ணு காவிரி பாயும் சோழ நாட்டைக் கைப்பற்றிப் பல்லவ சாம்ராஜ்யத்துடன் சேர்த்துவிட்டான்.

அவன் சிறந்த சிவபக்தன் ஆவன். ஐயடிகள் காடவர்கோன் என்ற பெயரில் சிவ ஷடியாராகச் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் திருத்தொண்டத் தொகையில் சேர்த்துப் புகழப்பட்டவன் அவனே என்னலாம்.

சிம்மவிஷ்ணு

காவிரி நதி பாயும் சோழநாட்டை வெற்றி கொண்டதே சிம்மவிஷ்ணுவின் போர்ச் செயல்களுள் மிகவும் முக்கியமானதாகும். சிம்மவிஷ்ணு என்ற அதே பெயரைக் கொண்ட வேறு ஓர் அரசனையும் அவன் வெற்றிகொண்டிருக்கிறுன். அந்த அரசன் யார் என்பது தெளிவாக இல்லை. எனினும், அதே பெயர் கொண்ட தெலுங்குச் சோழ அரசனுகவே அவன் இருக்கலாம். பழந்தமிழ் இலக்கியங்களில் செங்கணுன் என்று புகழப்பட்டிருப்பவனும் அவனே என்று எண்ணத் தோன்றுகிறது. இவற்றைப் பள்ளன் கோவில் செப்பேடுகளின் முன்னுரையில் விவரித்திருக்கிறோம்.

அவன் 'மாளவத்தையும், பிறகு களப்ர, மாளவ, சோழ, பாண்டிய மன்னர் களையும், சிங்கள மன்னனையும், கேரள அரசர்களையும் வெற்றி கொண்டான்' என்ற செய்தி கசாக்குடிச் செப்பேடுகளில் காணப்படுகிறது. மாளவம் என்ற சொல் இருமுறை ஆளப்பட்டுள்ளது. முதலில் குறிப்பிட்டதை மலயம் என்று கொண்டு மேற்குத் தொடர்ச்சி மலையின் கர்நாடகப் பிரதேசத்தை உணர்த்துவதாகவே கொள்ளலாம். அவ்விதமானுல், அப்போது அந்நாட்டிலே தலையெடுத்து வந்த வாதாபிச் சாளுக்கியர் களோடு அவன் போரிட்டான் என்று கொள்ளலாம். இரண்டாவது மாளவத்தை மழவர் என்றே கொள்வர். களப்ர, மழவ, சோழ, பாண்டிய, கேரளர்களை அவன் வெற்றி கொண்டதால், தமிழ்நாடு முழுவதையுமே அவன் அடிபடுத்தினுன் என்று ஏற்படு கிறது. இலங்கை மன்னனேடும் அவன் போரிட்டிருக்கிறுன். சிலாமேகவண்ணன் ஆட்சிக் காலத்திலும் அதை ஒட்டியும் இலங்கைத் தீவிலே பல்லவர்களுடைய செல்வாக்கு ஓங்கி யிருந்ததென்று தெரிகிறது. இவற்றைக் கசாக்குடிச் செப்பேடுகள் முன்னுரையில் நாம் விவரித்திருக்கிறோம். அவன் வெற்றிகொண்ட கேரள அரசர்கள் பன்மையில் குறிக்கப் பட்டுள்ளார்கள். அது திவாந்தரப் பிரதேசத்தில் அரசு புரிந்த கேரளரையும் சேர்த்து உணர்த்துமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

அவன் விஷ்ணுவிடம் பக்திபூண்டவன், என்று வேலூர்ப்பாளையச் சாசனம் கூறு கிறது.

பீமவர்மன்

இந்தச் சிம்மவிஷ்ணுவுக்குப் பீமவர்மன் என்ற தம்பி இருந்தான் என்றும், அவன் வழியில் ஆளும் தலைமுறையில் வந்தவனே நந்திவர்மன் பல்லவமல்லன் என்றும், கசாக் குடிச் செப்பேடுகளிலிருந்து தெரிகிறது. பீமவர்மன் தன் அண்ணனுக்குப் பிறகு அரசனுக முடிசூட்டப்பெற்றுன் என்றும், அவனுக்குப்பின் அவன் மகனுன புத்தவர்மன் பல்லவ அரசனுக விளங்கினுன் என்றும், அதே சாசனத்தில் காணப்படுகிறது. இந்தச் செய்தி வேறு எவ்விடத்திலும் காணப்பெறுதது. சிம்மவிஷ்ணுவுக்குப் பிறகு அவன் மகனுன முதலாம் மகேந்திரவர்மனே அரசுரிமை ஏற்றுன் என்று பொதுவாக நாம் கருதி வருகிறோம். பீமவர்மனும் அவன் மகனும் எந்த நாட்டில் அரசுபுரிந்தனர் என்பது தெரியவில்லை. அது தொண்டை மண்டலமாகவே இருக்குமானுல், அவர்கள் ஆட்சி

சிம்மவிஷ்ணுவுக்குப் பிறகும் மகேந்திரவர்மன் முடிசூட்டப்பெறுவதற்கு முன்பும் இருந் திருத்தல் வேண்டும். ஏறக்குறைய அதே காலத்தில் வாதாபிச் சாளுக்கிய வம்சத்திலும் மேலைக்கங்க வம்சத்திலும் நேர் முறையில் பட்டத்துக்கு உரியவர்கள் வராமல் இளைய பரம்பரையைச் சேர்ந்தவர்கள் சிங்காதனம் ஏறியிருக்கிறார்கள் என்பதைக் கவனிக்கும் போது, பல்லவர்களிடையும் அதேபோல் நடந்திருக்கக்கூடுமோ என்று எண்ணத் தோன்றுகிறது.

முதலாம் மகேந்திரவர்மன்

பல்லவர்களில் மிகவும் பெருமைவாய்ந்த முதல் அரசன் மகேந்திரவர்மனே என்றும், அவன் ஆட்சியிலே நாட்டில் வாழ்க்கை பலதுறைகளிலும் மேம்பட்டு விளங் கியது என்றும் ஆராய்ச்சியாளர் கருதுவர். ஆனால் பின்னால் வந்தவர்களுடைய சாசனங் களிலே அவன் பெருமை சம்பிரதாயமான, சாதாரண வாசகத்தாலேயே அமைந்திருப்ப தைக் காணலாம். இந்த வம்சத்து மன்னர்களின் வெற்றிச் செயல்களை விவரித்துக்கூறும் வேலூர்ப்பாளையம் சாசனம் அவன் புகழ் எதையும் கூறாமல் பெயரை மட்டும் கொடுத் துச் செல்கிறது.

அவன் புள்ளலூரில் தன் பகைவர்களை அழித்தான் என்று கசாக்குடிச் சாசனம் கூறுகிறது. புள்ளலூர் என்பது காஞ்சிபுரத்துக்குப் பக்கத்தில் உள்ளது. தலைநகரின் தலைவாசலுக்கே வந்து போரிட்ட எதிரி வாதாபிச் சாளுக்கியனான இரண்டாம் புலகேசியே என்று கொள்ளலாம். இது கி. பி. 616–ஆம் ஆண்டளவில் நிகழ்ந்திருத்தல் வேண்டுமென எண்ணத்தோன்றுகிறது. அந்த ஆண்டில் (கோதாவரி மாவட்டம் – பிட்டாபூர்) பிஷ்டபுரத்திலிருந்து புலகேசி வழங்கிய மருட்டூர்ச் செப்பேடுகளிலிருந்து இந்தச் செய்தி தெரிகிறது. தானம் வழங்கப்பட்ட கிராமம் குண்டூர் மாவட்டத்தில் உள்ளது. அதுகாறும் பல்லவர்களுடைய ஆதிக்கத்தின் கீழ் இருந்த அந்தப் பிரதேசம் அப்போது சாளுக்கியர்களின் வசமாகிய விவரம் அதிலிருந்து தெரியும். இன்னும் மேலைக்கடற்கரையிலே மங்கலபுரத்தில், இப்போதைய வழக்கில் மங்களூரில், ஆண்டு வந்த ஆளுப வம்சத்தைச் சேர்ந்த ஒருவனை அங்கிருந்து அழைத்துவந்து, கிழைக் கடற் கரையிலே புலகேசி தன் பிரதிநிதியாக அமர்த்தியிருந்தான் என்ற செய்தியும் தெரிகிறது.

ஒரே பாறையில் குடைந்து கோயிலை நிர்மாணிக்கும் பழக்கம் தமிழ் நாட்டிலே முதன் முதலில் அவனாலேதான் தோற்றுவிக்கப்பட்டது. புதுச்சேரிக்குப் பக்கத்தில் மண் டகப்பட்டில் உள்ளதே அவன் முதன் முதலில் குடைந்த கோயிலாகும். திருச்சிராப் பள்ளி, பல்லாவரம், செங்கற்பட்டுக்குப் பக்கத்திலுள்ள வல்லம், காஞ்சிபுரத்துக்குப் பக்கத்திலுள்ள மாமண்டூர், தளவனூர், சீயமங்கலம், மகேந்திரவாடி ஆகிய இடங் களிலும் அத்தகைய கோயில்கள் அவனுடைய கல்வெட்டுகளோடு இருக்கின்றன.

இலக்கியத்துறையிலும் இம்மன்னன் சிறந்து விளங்கினான். மத்தவிலாசம் என்ற பெயரில் நகைச்சுவை நாடகம் ஒன்றை அவன் ஸம்ஸ்கிருதத்தில் எழுதியிருக்கிறான். மாமண்டூரில் கிடைக்கும் அவனுடைய ஸம்ஸ்கிருதக் கல்வெட்டில் பலதுறைகளிலும் அவன் பெற்ற சாதனைகளை விரிவாகக் காணலாம். எனினும், அது மிகவும் சிதிலமாக இருப்பதால், முழு விவரங்களையும் நம்மால் அறிய முடியவில்லை.

முதலாம் நரசிம்மவர்மன்

முதலாம் மகேந்திரவர்மனுக்குப் பிறகு அவன் மகன் முதலாம் நரசிம்மவர்மன் பல்லவ சிங்காதனம் ஏறினன். அவன் ஆட்சிக் காலத்தில் இரண்டு முக்கிய சம்பவங்கள் நிகழ்ந்தன. வாதாபி கொண்டது ஒன்று, இலங்கை அரசனை மானவர்மனுக்கு உதவியது மற்றென்று. இவ்விரண்டையும் கொண்டு சாசனங்களிலே அவன் முறையே அகத்திய முனிவருக்கும் இராமபிரானுக்கும் ஒப்பிடப்பட்டிருக்கிறன். வாதாபி வெற்றியின் விளைவாக அவன் "வாதாபி கொண்ட" என்ற அடைமொழியைத் தன் பெயருக்கு முன்னல் தரித்துக்கொண்டான். வாதாபியிலேயே மல்லிகார்ஜுன தேவர் கோயிலுக்குப் பின்னல் உள்ள பாறையில் பொறிக்கப்பட்டிருக்கும் அவனுடைய ஸம்ஸ்கிருதக் கல்வெட்டாலும் அது உறுதியாகிறது. அது அவனுடைய ஆட்சியின் 13-ஆம் ஆண்டு எனக்கொள்ளலாம். அதிலிருந்து அவன் கி. பி. 630–ஆம் ஆண்டு அளவில் சிங்காதனம் ஏறினன் என்பது தெரியவரும்.

கூரம் செப்பேடுகளிலே பரியளம், மணிமங்கலம், சூரமாரம் ஆகிய இடங்களிலும் புலகேசியை நரசிம்மவர்மன் தோற்கடித்ததோடு, புறங்காட்டி ஓடும் புலகேசியின் முதுகிலே ஒவ்வொரு தடவையும் வெற்றியைத் தெரிவிக்கும் எழுத்துகளைப் பொறித்தான் என்றும் கூறப்பட்டுள்ளது. மணிமங்கலம் என்பது காஞ்சிபுரத்துக்குப் பக்கத்திலுள்ளது. அதிலிருந்து இம்முறையும் புலகேசி காஞ்சிபுரம் வரையில் வந்துவிட்டான் என்று கொள்ளலாம். பரியளம் என்பது கர்நூல் தாலூகாவில் உள்சலம் என்பதற்குப் பக்கத்திலுள்ளது. சூரமாரம் என்பது அனந்தப்பூர் மாவட்டத்திலே உள்ளது. அவ்விரண்டு ஊர்களும் கர்நாடகத்திலிருந்து காஞ்சிபுரம் வருவதற்குக் கிழக்கிலும் மேற்கிலுமாக அமைந்திருந்த இரண்டு பாதைகளின் நடுவே உள்ள ஊர்கள் என்பதைக் கவனிக்கும்போது, சாளுக்கியர் படை வந்துபோன வழிகளை நாம் ஒருவாறு ஊகிக்கலாம்.

இதிலிருந்து புலகேசி தமிழ் நாட்டின் மீது நரசிம்மவர்மன் காலத்திலும் ஒரு தடவை படையெடுத்து வந்து தோல்வியுற்றுத் திரும்பியிருக்கிறன் என்று எண்ணத் தோன்றுகிறது. அதன் விளைவாகவே நரசிம்மவர்மன் சாளுக்கியர் தலைநகரான வாதாபியைக் கைப்பற்றினன். அந்த நிகழ்ச்சியிலே பரஞ்சோதி என்பார் பல்லவன் படைக்குச் சேனுதிபதியாகச் சென்றிருந்தார். அவரே பிறகு சிறுத்தொண்டர் என்ற பெயர் பெற்றவராவர்.

நரசிம்மன் வாதாபியைக் கைப்பற்றியதற்குப் பிறகு புலகேசி நீண்ட நாள் இருந்ததாகத் தெரியவில்லை. பல்லவனும் சாளுக்கிய இராஜ்யத்தைத் தன்னுடைய நேர் ஆணுகையின்கீழ்க் கொணர்ந்ததாகத் தெரியவில்லை. புலகேசியின் மகனை முதலாம் விக்கிரமாதித்தியன் கி. பி. 654–655–ஆம் ஆண்டு திரும்பவும் வாதாபியைக் கைப்பற்றித் தன்னுடைய அரசை நிறுவியிருக்கிறன். இடைப்பட்ட 12, 13 ஆண்டுகளில் அங்கே மூன்று அரசர்கள் ஆட்சி புரிந்திருக்கிறர்கள் என்பது- விக்கிரமாதித்தியனுடைய சாசனங்களிலிருந்து தெரிகிறது. அவர்கள் பல்லவனுக்குப் பணிந்த சாளுக்கிய இராஜ குமாரர்களே போலும்.

நரசிம்மன் ஆட்சியில் நடந்த இரண்டாம் முக்கியமான சம்பவம் இலங்கை அரசனை மானவர்மனுக்கு இலங்கை அரசை அளித்தது ஆகும். அதற்கு முன்னதாக

மானவர்மன் தமிழ் நாட்டிலே ஒரு கால் நூற்றுண்டுக் காலம் இருந்திருக்கிருன். அவன் இலங்கை அரசை அடைவதற்குப் பல்லவ மன்னன் இருமுறை உதவி செய்தான். முதல் முறை வெற்றி கிட்டவில்லே. இரண்டாம் முறையே அரசனுக முடிசூட்டப்பெற்முன். அது நடந்தது மஹாவம்சத்தின் கணக்குப்படி கி. பி. 631 ஆகும்.

தந்தையைப் போலவே நரசிம்மனும் சிறந்த சிவபக்தன் என்றே தோன்றுகிறது.

இரண்டாம் மகேந்திரவர்மன்

வாதாபிகொண்ட நரசிம்மவர்மனுக்குப் பிறகு அவன் மகன் இரண்டாம் மகேந்திரவர்மன் அரசனுக முடிசூட்டப்பெற்முன். அது நடந்தது எப்போது என்பதோ, அவன் எத்தனே ஆண்டுகள் அரசுபுரிந்தான் என்பதோ நமக்குத் தெரியாது. பிற்காலத்துச் சாசனங்களிலும் அவன் ஆட்சியில் நடந்ததாக முக்கியமான சம்பவம் ஏதும் குறிக்கப்பெறவில்லே. அவன் வருணுச்ரம தர்மத்தை நிலேநிறுத்தினுன் என்றும் கடிகைகளே வளர்த்தான் என்றுமே அச்சாசனங்கள் கூறுகின்றன. சாளுக்கிய சாசனங்களில் மகேந்திரனுடைய பிரதாபத்தை விக்கிரமாதித்தியன் மறையச் செய்தான் என்ற செய்தி காணப்படுவதால், இவன் விக்கிரமாதித்தியனுடன் போரில் ஈடுபட்டு வந்தான் என்றே எண்ணத் தோன்றுகிறது.

மைசூர் சமஸ்தானத்திலே ஷிமோகா மாவட்டத்திலுள்ள கத்தமனே என்னும் ஊரில் நடுகல் ஒன்றிலே கன்னட மொழிக் கல்வெட்டு ஒன்றிருக்கிறது. அதிலிருந்து பின் வரும் விஷயம் தெரியவரும். மகேந்திரன், சீலாதித்தியன் என்ற இரு அரசர்கள் போர் புரிந்து வந்தார்கள். வட அரசன் ஒருவன் மகேந்திரனுடைய சேனுதிபதி. பெத்தணி சத்தியாங்கன் என்பவன் சீலாதித்தியனுடைய சேனுதிபதியாக இருந்தான். மகேந்திரனுடைய சேனே கலங்கும்படி மிகுந்த பராக்கிரமத்துடன் போரிட்டு அதைப் பயந்து ஓடச்செய்த பெத்தணி சத்தியாங்கன் போரிலே இறந்துபோனுன். இந்தச் சாசனத்திலே குறிக்கப்பட்ட மகேந்திரன் பல்லவ அரசனே ஆவன்.

சீலாதித்தியன் சாளுக்கியர்களின் கூர்ஜ்ஜரக் கிளேயைச் சேர்ந்த யுவராஜனுன ச்ரேயாச்ரய சீலாதித்தியனே ஆவன்.

மகேந்திரனுடைய படைத்தலேவன் பேடராய (வேடராஜ)ன் என்று குறிக்கப்பட்டிருக்கிருன். கிராதர் என்று குறிக்கப்பெறும் மக்களே இவ்விடம் வேடர் என்று கூறப்பட்டனர் போலும். கி. பி. 671—ஆம் ஆண்டில் கங்க சிங்காதனம் ஏறிய சிவமாறனுடைய ஹெல்லகரே செப்பேட்டுச் சாசனத்தில் அவன் எதிரிகளான பல்லவர்களே வெற்றிகொண்டதால், எதிரிகளின் அரண்மனேயில் வசித்த கிராதப் பெண்களுக்கு மகிழ்ச்சியை அளித்தான் என்று கூறப்பட்டிருக்கிறது. கிராதர் என்ற சொல் நம் நாட்டுக்குக் கிழக்கே தீவாந்தரப் பிரதேசத்தில் வசிக்கும் மக்களேக் குறிக்கும் பொதுப்பெயர் ஆகும். அதிலிருந்து—தீவாந்தரப் பிரதேசத்திலிருந்து—மக்கள் அந்நாளிலே தமிழ் நாட்டில் குடியேறிப் பல்லவர்களிடம் பணிபுரிந்து வந்தனர் என்பது தெரியவரும். அவர்கள் கர்நாடகத்தை ஒட்டிய எல்லேப்புறங்களில் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுவந்தனர் என்றும் தெரிகிறது. இந்தக் காலத்துக்கு அரை நூற்றுண்டுக்குப்பின் நுளம்ப பல்லவர்களின் ஆட்சியை நிறுவிய முதல் அரசன் கிராதர்களே வெற்றிகொண்டு கர்நாடகர்களின் அன்பைப் பெற்முன் என்று கூறப்பட்டுள்ளது.

இம்மகேந்திரவர்மனுக்குச் சமகாலத்தவனுன பூவிக்ரமன் என்ற கங்க அரசன் பல்லவனே வென்று நடுக்காட்டில் உள்ள ஒரு மலே உச்சியில் இருந்த கோட்டைக்கு அவனேத் துரத்திஞன் என்றும் புகழப்படுகிருன். அந்தப் போர்களிலே விளந்தம் என்னும் இடத்தில் நடந்ததே முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அது திருக்கோவ லூருக்குப் பக்கத்திலுள்ள விளந்தை என்னும் ஊரே போலும்.

முதலாம் பரமேச்வரவர்மன்

இரண்டாம் மகேந்திரவர்மனுக்குப் பிறகு அவன் மகன் முதலாம் பரமேச்வர வர்மன் பல்லவ சிங்காதனம் ஏறிஞன். அவன் அளித்தனவாக இந்தத் தொகுப்பிலே கூரம், உன்னகுரவயபாளேயம் ஆகிய இரண்டு செப்பேட்டுச் சாசனங்கள் இடம்பெற் றுள்ளன. பின்னுல் குறிக்கப்பட்ட சாசனத்தில் காணும் பஞ்சாங்கக் குறிப்புகளிலிருந்து அவன் கி. பி. 668-69-ஆம் ஆண்டில் சிங்காதனம் ஏறியிருத்தல் வேண்டுமென்று தெரிகிறது.

அவன் ஆட்சிக்காலத்திலே நடந்த முக்கியமான சம்பவம் அவன் சாளுக்கிய மன்னனுன முதலாம் விக்கிரமாதித்தியனுடன் போரிட்டு வெற்றி கொண்டது. அந்தப் போர்க்களத்தின் வருணனே கூரம் சாசனத்திலே விரிவாகக் காணப்படுகிறது. பல லட்சம் சேனேகளேயுடைய விக்கிரமாதித்தியன் ஒரு கந்தையை மட்டும் உடுத்துப் போர்க்களத்திலிருந்து ஓடவேண்டியிருந்ததாம். அந்த வெற்றி திருச்சிராப்பள்ளிக்குப் பக்கத்திலுள்ள பெருவளநல்லூரில் நிகழ்ந்தது என்று உதயேந்திரம் செப்பேடுகளி லிருந்து தெரிகிறது. சோழ நாட்டிலே காவிரியின் தென் கரையிலுள்ள உரகபுரம் (கும்பகோணத்துக்குப் பக்கத்தில் இருந்த பாம்பூர்) என்னுமிடத்தில் கி. பி. 674—ஆம் ஆண்டு சாளுக்கிய விக்கிரமாதித்தியன் தங்கியிருந்த நாளில் அளித்த செப்பேட்டுச் சாச னங்கள் கிடைத்துள்ளன. அதற்கு நான்கு ஆண்டுகள் முன்னதாகவும் அவன் காஞ்சிபுரத் துக்கு மேற்கே மல்லியூர் என்னும் ஊரில் தங்கியிருந்தான் என்பது ஹொன்னூர்ச் செப் பேடுகளிலிருந்து தெரிகிறது. விக்கிரமாதித்தியனுக்கு அவன் மகன் விநயாதித்தியனும் பெயரன் விஜயாதித்தியனும் உறுதுணேயாக நின்றிருந்தார்கள். அந்தப் போரிலே விநயாதித்தியன் காஞ்சிபுரத்தைத் தாக்கி, பல்லவனிடமிருந்து கைப்பற்றி அக்காஞ்சி யைத் தன் தந்தையினிடம் அளித்தான் என்ற விவரம் சாளுக்கிய சாசனங்களிலிருந்து தெரிகிறது. அது கி. பி. 674-க்குச் சிறிது முன்னதாகவும் பெருவளநல்லூரில் விக்கிர மாதித்தியன் தோற்று ஓடியது அதற்குப் பிறகும் நடந்தனவாதல் வேண்டும்.

வெற்றிகொண்ட பரமேச்வரவர்மன், தன் பாட்டனேப் போலவே, வாதாபியின் மீது படையெடுத்துச் சென்று அதனேக் கைப்பற்றியிருக்கிருன். 'ரணரசிகபுரத்தை அழித்த உக்கிரதண்டன்' என்று அவன் காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலில் காணும் ராஜசிம்மனுடைய கல்வெட்டில் வருணிக்கப்பட்டிருக்கிருன். ரணரசிகன் என்பது விக்கிர மாதித்தியனுடைய விருதுகளில் ஒன்று. புலகேசியின் காலத்தில் அழிந்த வாதாபியைப் புதுப்பித்தபோது அந்தப் பகுதிக்குப் பரமேச்வரன் தன் பெயரை இட்டான் போலும். அதைப் பல்லவன் அழித்தது கி. பி. 679-ஆம் ஆண்டளவில் நிகழ்ந்திருத்தல் வேண்டும். இவ்விதம் விக்கிரமாதித்தியன் தன் வாழ்நாள் முழுவதும் பல்லவர்களுடன் போரிடுவதி லேயே கழித்து அதிலேயே தன் உயிரையும் இழந்தான் எனலாம். அந்த நெருக்கடியில் அகப்பட்டுக்கொண்ட விநயாதித்தியன் இரண்டு ஆண்டுகளுக்குத் தன்னுடைய அரசை அடைய முடியாமலும் உழன்றிருக்கிருன்.

விநயாதித்தியன் தன் ராஜ்ஜியத்தை அடைந்த சிறிது காலத்திற்குள்ளாகவே பல்லவர்களை மீண்டும் வென்று தென் இந்தியா முழுமைக்கும் தனி அரசனாக விளங்கினான். கி. பி. 692–ஆம் ஆண்டில் சீன தேசத்துக்கும் அவன் தூதுவரை அனுப்பியிருந்தான். அப்போது அவன் தென்இந்திய ராஜ்ஜியத்தின் அதிபதி என்று குறிக்கப்பெற்றிருக்கிறான். அந்த வெற்றியின் காரணமாக இந்தோ–சீனாவிலுள்ள கம்போஜமும் அவனுடைய ஆளுகைக்கு உட்பட்டதாயிற்று. பல்லவர்களை வென்று பிறரால் அடக்க முடியாத வரை ராஜ்யத்தையும் சாளுக்கிய விநயாதித்தியன் அடிப்படுத்தியதால், கம்போஜ நாட்டுப் பெண்கள் மகிழ்ச்சியால் ஆடிப்பாடினர் என்ற செய்தி கி. பி. 693–ஆம் ஆண்டு அவன் வழங்கிய கொல்ஹாப்பூர்ச் செப்பேடுகளிலிருந்து தெரிகிறது. பரமேச்வர வர்மன் அச்வமேத யாகம் செய்தான் என்று அவனுடைய மகன் அளித்த ரேயூருச் சாசனம் கூறுகிறது.

இரண்டாம் நரசிம்மவர்மன்

முதலாம் பரமேச்வரவர்மனுக்குப் பிறகு அவன் மகன் இரண்டாம் நரசிம்ம வர்மன் சிங்காதனம் ஏறினான். அவனுடைய ரேயூருச் சாசனத்தில் கண்ட சந்திர கிரகணத்தைக்கொண்டு அவன் கி. பி. 700–ஆம் ஆண்டில் சிங்காதனம் ஏறியவனாக இருத்தல் வேண்டும் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அவனுடைய மற்றச் சாசனங்கள் அனைத்தும் ஸம்ஸ்கிருத கல்வெட்டுகளே. பின்னால் வந்த பல்லவ சாசனங்களிலே அவன் இரு பிறப்பாளர்களின் கடிகையை வளர்த்தான் என்றும், சிவபெருமானுக்குக் கைலாசம் போன்ற கோயில் ஒன்றை எழுப்பினான் என்றும் புகழப்பட்டிருக்கிறான். வேறு விவரம் ஒன்றும் காணப்பெறவில்லை. அவன் எழுப்பிய கோயில் காஞ்சிபுரத்திலே கைலாசநாதர் கோயில் என்று இப்போது வழங்கப்பெறுவதாகும். பூசலார்நாயனார் திருநின்ற ஊரில் சிவபெருமானுக்கு மானசிகமாகக் கோயில் எழுப்பிய காலத்தில், காஞ்சிபுரத்திலே பல்லவ மன்னன் ஒருவன் கற்றளி எழுப்பிவந்தான் என்று பெரிய புராணத்தில் குறிக்கப்பெறுவதும் இந்தக் கோயிலே ஆகும். இந்த அரசனே சுந்தர மூர்த்தி சுவாமிகளால் திருத்தொண்டத் தொகையில் சிவனடியார்களுள் கழற்சிங்கன் என்று புகழப்பட்டவன். அவன் ராஜசிம்மன் என்ற மறு பெயராலும் பிரசித்தி பெற்றவன். நாயன்மாரும் அரசனும் சமகாலத்தவர். காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயிலைத் தவிர அம்மன்னன் பனைமலை, மாமல்லபுரம் முதலிய இடங்களிலும் கற்றளி எழுப்பியிருக்கிறான். குடைவரைக் கோயில்களும் அவன் காலத்திலே அமைக்கப்பட்டு வந்தன. மாமல்லபுரம் நகரமே அவன் காலத்தில் நிர்மாணம் பெற்றதாகும். ஒரே பாறையில் குடைந்து அங்கே காணும் கோயில்களும் சிற்பங்களும் அவன் காலத்தில் செதுக்கப்பட்டனவே.

வாயலூர்க் கல்வெட்டின் கடைசிச் சுலோகத்திலிருந்து அவன் ஆட்சி தீவாந்தரப் பிரதேசத்திலும் பரவியிருந்தது தெரியவருகிறது. அதே காலத்தில் இந்தோ சீனாவிலும் ஜாவாவிலும் ராஜசிம்மன் என்ற மறுபெயரோடு ஆட்சிபுரிந்த மன்னர்கள் அரசியல் துறையிலே பல்லவர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார்கள் என்பதை நாம் வேறு ஆதாரங்களாலும் அறியலாம்.

கி. பி. 720–ஆம் ஆண்டு கொண்டதாகச் சீன தேசத்து வரலாற்றிலே காணும் குறிப்பு ஒன்று முக்கியமான செய்தியைத் தெரிவிக்கிறது. திபெத்தியர்களோடும் போர்

நடத்துவதற்காக அவன் அப்போது ஆயத்தங்கள் செய்து வந்தானும். அதற்கு உதவி அளிக்கக் கோரியும், குறைந்தபட்சம் தன் முயற்சிக்கு ஆதரவு அளிக்கவேண்டியும், அவன் சீன சக்கரவர்த்திக்குத் தூதுவனை அனுப்பியிருந்தானும். சீன வேந்தனும் அதற்குத் தன் நல் ஆசியை அளித்துப் போர்ப்படைக்குப் புதிய நாமகரணமும் செய்தானும். போரின் முடிவு என்ன ஆயிற்று, பல்லவனுக்குச் சீன தேசம் உதவியதா என்பன போன்ற விவரங்கள் ஏதும் தெரியவில்லை. அந்த வரலாற்று நூலிலே காணும் வேறு குறிப்புகளிலிருந்து சீன தேசம் போர்ப்படை அனுப்பி உதவி வந்தது என்று எண்ணத் தோன்றுகிறது.

அந்நாளிலே அரபுகள் கடலிலே கலங்களைச் செலுத்தி வேறு நாடு சென்று தங்கள் வாணிபத்தைப் பெருக்கி வந்தார்கள். கிழக்கு நாடுகளிலிருந்து ஐரோப்பாவுக்குப் பாரசிக வளைகுடாவின் மூலம் செல்லும் வாணிபத்தை அவர்கள் தடுத்துத் தங்கள் மூலமாகவே நடத்த வேண்டுமென்பதையும் வற்புறுத்தி வந்தார்கள். அதே காலத்தில் சீன தேசமும் தன்னுடைய வெளிநாட்டு வியாபாரத்தைப் பெருக்கிக்கொள்வதில் அக்கறைகொண்டது. அவ்விதம் இரு நாடுகளுக்கும் ஏற்பட்ட போட்டி தமிழ்நாட்டு மக்களின் வாணிபத்தையும் ஒரு வழியில் பாதித்தது. திபெத்தும் அந்நாளிலே பேரரசாகத் தலையெடுத்து அண்டை நாடுகளுக்குத் தலைவலியை உண்டாக்கி வந்தது. சீனச் சக்கரவர்த்தியை அவன் தலைநகரிலேயே சிறைப்பட்டதுபோல் கிடக்கும்படி அது ஆட்டிவைத்தது. இந்தோ–சீனுவில் பல்லவர் பெற்றிருந்த ஆதிக்கத்திற்கும் அது உலைவைத்தது.

இவ்விதம் திபெத்து, அரபு ஆகிய இரு நாடுகளும் சீன தேசத்திற்கு மட்டுமல்லாமல் பல்லவர்களுக்கும் விரோதமாக நடந்துவந்தன. அந்த நிலையில் அவர்களுக்கு எதிராகச் சீன தேசமும் பல்லவர் அரசும் ஒன்று சேர்ந்ததில் வியப்பு ஏதும் இல்லை. பல்லவனுக்கு அந்தப் போரில் வெற்றி கிட்டியது என்றே எண்ணத் தோன்றுகிறது. எவ்விதமாயினும் தோல்வி ஏதும் ஏற்பட்டதாகக் காணவில்லை. சீன வரலாற்றிலே கி. பி. 720–ல் நரசிங்கப் போத்தரையன் தென் இந்திய ராஜ்யத்தின் அரசனுக வருணிக்கப்பட்டிருக்கிருன். கி. பி. 692–ல் சாளுக்கிய அரசன் அம்மாதிரி குறிக்கப்பட்டிருப்பதை நாம் முன்னரே கண்டோம். அதிலிருந்து இடைக்காலத்தில் ராஜசிம்மன் சாளுக்கிய அரசனை வெற்றிகொண்டு தன்னுடைய ஆதிக்கத்தை மீண்டும் நிலைநிறுத்திஞன் என்பது விளங்கும். அவன் காலத்திலே வாதாபிச் சிங்காதனத்தில் வீற்றிருந்தவன் விஜயாதித்தியன் ஆவன். ஒருசமயம் விஜயாதித்தியன் தன்னுடைய எதிரியின் கையில் சிக்கி, சிறிது காலம் சிறைப்பட்டிருந்தான் என்று சாளுக்கிய சாசனங்களிலே காணப்படுகிறது. அவனைச் சிறையிட்டவன் சூழ்நிலையைக்கொண்டு பல்லவனே என்று நாம் கொள்ளலாம் அந்நாளிலே மதுரையில் பாண்டிய சிங்காதனத்தில் அமர்ந்திருந்தவன் ராஜசிம்மன் என்ற பெயரையே தரித்திருந்தான். சாளுக்கிய வேந்தனை வெற்றிகொண்டதன் அடையாளமாகத் தரித்துக்கொண்ட ரணஜயன் என்ற விருதைப் பல்லவனைப்போலவே பாண்டிய ராஜசிம்மனும் தரித்திருந்தான். இவற்றை நோக்கிஞல் பல்லவனுக்கும் பாண்டியனுக்குமிடையே அந்நாளிலே நல் உறவு நிலவிவந்தது என்பது தெளிவாகும்.

இம்மன்னனுக்கு ரங்கபதாகை என்ற தேவி ஒருத்தி இருந்தாள். அவள் நடனத் துறையிலே வல்லவள் என்று எண்ணத் தோன்றுகிறது. அவளைத் தவிர பேரழகு வாய்ந்த மற்ருெரு தேவியும் இருந்திருக்கிருள்,

மூன்றும் மகேந்திரவர்மன்

ராஜசிம்மனுக்கு மகேந்திரவர்மன் என்று ஒரு மகன் இருந்திருக்கிறுன். கைலாச நாதர் கோயிலில் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் எழுப்பியவையாகக் காணும் சிற்ருலயங்களில் அவனும் ஒன்றை எழுப்பியிருக்கிறுன். அதன் பெயரான ஸ்ரீ மகேந்திர வர்மேச்வரகிரகம் என்பதையேகொண்டு அவன் மற்றும் ஏதோ ஓரிடத்தில் சிவாலயம் ஒன்றை எழுப்பியிருக்கிறுன்.

தந்தைக்குப் பிறகு அவன் சிங்காதனம் ஏறவில்லை. தந்தையின் ஜீவதசையிலேயே அவன் இறந்துபட்டான்போலும். வைகுண்டப்பெருமாள் கோயிலில் காணும் வரலாற்றுச் சிற்பங்களிலிருந்து அவன் போரிலே அடிபட்டு இறந்தான் என்று எண்ணலாம்.

இரண்டாம் பரமேச்வரவர்மன்

இராஜசிம்மனுக்குப் பிறகு அவன் மகன் இரண்டாம் பரமேச்வரவர்மன் சிங்காதனம் ஏறினுன். அவன் நீண்டநாள் ஆண்டதாகத் தெரியவில்லை. அவனுடைய ஆட்சியின் மூன்றும் ஆண்டுக்கு மேற்பட்ட காலத்துச் சாசனம் ஏதும் கிடைக்கவில்லை. ராஜசிம்மன் உயிருடன் இருந்தவரையில் அடங்கியிருந்த வாதாபிச் சாளுக்கியர்கள் அவன் இறந்தவுடனே பழைய விரோதத்தைக்கொண்டு பல்லவர்மீது படையெடுத்து வந்திருக்கிருர்கள். யுவராஜனுகயிருந்த இரண்டாம் விக்கிரமாதித்தியன் காஞ்சிக்கு வந்து பரமேச்வரவர்மனிடம் திறைகொண்டு ஊர் திரும்பும் வழியில் தானம் அளித்த செய்தியைத் தெரிவிக்கும் உள்சளக் கல்வெட்டிலிருந்து இதை அறிகிருேம். அந்தப் போர் நிகழ்ச்சிக்குப் பிறகு பரமேச்வரன் அதிகநாள் ஜீவிக்கவில்லை எனலாம்.

பல்லவமல்லன் பரம்பரை

இரண்டாம் பரமேச்வரவர்மன் இறந்தபிறகு நாட்டிலே அரசியல் இரண்டு பட்டது. சிங்காதனம் ஏறுவதற்குப் பலத்த போட்டி ஏற்பட்டு, தாயாதிச் சண்டையாக மாறியது. அஃது சுமார் இருபது ஆண்டுகளுக்கு நீடித்து வந்திருக்கிறது. எனினும், அதன் போக்கு முழுவதையும் நம்மால் அறியமுடியவில்லை. நமக்குத் தெரிவதெல்லாம் அந்தப் போட்டியிலே வெற்றியடைந்து சிங்காதனத்தைக் கைப்பற்றிய கட்சியினர் உரைக்கும் பாடமேயாகும். எதிர்த் தரப்பினர் கூற்றை நம்மால் அறிய முடியவில்லை. எனினும், போட்டியிட்டவர்களைப்பற்றி நமக்குச் சில குறிப்புகள் கிடைக்கின்றன. அவைகளைக்கொண்டு அந்தச் சண்டையின் போக்கு எவ்விதம் இருந்ததென்பதை பெரும்படியாக நம்மால் நிர்ணயம் செய்ய முடியும்.

சிங்காதனம் ஏறத்தகுந்தவர் உபயகுல பரிசுத்தராக யாரும் இல்லையென்று மஹா சாமந்தரும் நாட்டின் பிரமுகர்களும் இளைய பரம்பரையைச் சேர்ந்த ஹிரண்யவர்மனை அடைந்து, அவன் மகன் பன்னிரண்டு வயதுகொண்ட பரமேச்வரனை அழைத்துவந்து நந்திவர்மன் என்றே முடிசூட்டியதாகக் காஞ்சிபுர வைகுண்டப்பெருமாள் கோயில் கல்வெட்டிலிருந்து தெரிகிறது. அப்போது நாட்டிலே அரசர் இல்லாமல் அராஜகநிலை நிலவியது என்பதைச் சிற்பங்களிலே இந்த இடத்தில் ஒரு கட்டத்தை சிற்பம் ஏதும் இல்லாமல் காலியாகவிட்டு உணர்த்தியிருக்கிருர்கள்.

சித்திரமாயனும் ஸ்கந்தசிஷ்யனும்

முடிசூட்டுவதற்காகப் பிரமுகர்கள் பன்னிரண்டு வயதுச் சிறுவனை அழைத்து வந்தபோது, காஞ்சிபுரத்திலே பல்லவ ராஜன் ஒருவன் இருந்தான் என்பதை வைகுண்டப் பெருமாள் கோயில் கல்வெட்டே உணர்த்துகிறது: பல்லவ மல்லன் வருவதைக் கேட்டு பல்லவதியரையன் மகாபலத்தோடு எதிரே சென்று போரிட்டு மறித்தான் என்று அது கூறுகிறது. அவன் பெயர் என்ன என்பது அதிலே காணப்படவில்லை. எனினும், அவன் அரசுப் பதவியை வகுத்துவந்தான் என்பதை அது உரைக்கிறது.

நந்திவர்மன் 'த்ரமிள நரபதிகளால்' நந்திபுரத்திலே முற்றுகையிடப் பட்டிருந்தான் என்றும், அதைக்கண்டு பொறுமல் அவர்களைத் தாக்கிச் சித்திரமாய பல்லவாதி ராஜன் முதலியோர்களைக் கொன்று, ராஜ்யம் முழுவதையும் உதயச்சந்திரன் என்னும் சேனபதி தன் அரசனுக்கு வழங்கினன் என்றும் உதயேந்திரம் செப்பேடுகளிலே கூறப்பட்டுள்ளது. இவ்விடத்தில் சித்திரமாயன் பல்லவ ராஜன் என்றே குறிக்கப் பட்டுள்ளான். எனினும், அவன் யார் என்பது தெரியாது. அவன் ராஜசிம்மனுடைய பெயரனேபோலும்.

பல்லவமல்லன் சிங்காதனம் ஏறிய சூட்டோடு வாதாபிச் சாளுக்கிய அரசனுன இரண்டாம் விக்கிரமாதித்தியனுடைய படையெடுப்பைச் சமாளிக்க வேண்டியிருந்தது. அவனல், அதை எதிர்த்து நிற்க முடியவில்லை. தோற்று ஓடிப்போனன். காஞ்சிபுரம் சாளுக்கியர் வசமாகியது. இது கைலாசநாதர் கோயிலில் காணும் விக்கிரமாதித்திய னுடைய கன்னடக் கல்வெட்டிலிருந்து தெரிகிறது. அவன் நகரத்தை அழிக்காமல், அந்த கோயிலுக்கு வந்து அதன் அழகைக் கண்டு மகிழ்ந்து அதற்குப் பொன்னையும் வேறு பொருளையும் அளித்தானும். அது மட்டுமல்ல. தமிழ்நாட்டுச் சிற்பிகளைக் கர்நாடகத் திற்கு அழைத்துச் சென்று பட்டடக்கல் போன்ற இடங்களில் தமிழ்நாட்டு முறைப்படி கோயில்களை நிர்மாணிக்கச் செய்திருக்கிறுன்.

இவ்விதம் தன் கைக்குவந்த பல்லவ ராஜ்ஜியத்தை அவன் எளிதில் விட்டுவிட்டு ஊர் திரும்பியிருக்கமாட்டான். அதற்கு இரண்டு மூன்று ஆண்டுகள் முன்னதாக, கி. பி. 731—ல் இரண்டாம் பரமேச்வரன் ஆட்சிக்காலத்தில், விக்கிரமாதித்தியன் யுவராஜ ஞக இருந்த சமயம் படை நடத்திவந்து பல்லவனை வெற்றிகொண்டு திறைபெற்றுத் திரும்பியிருக்கிறுன். இப்போதும் அதேபோல அவன் தனக்கு அடங்கிய ஒருவனிடம் அரசை ஒப்படைத்து வாதாபி திரும்பியிருப்பான். அவ்விதம் நாட்டைப் பெற்றவன் பல்லவ மல்லனுக இருத்தலும் சாத்தியமில்லை: மேலோங்கிவந்த சாளுக்கியர் ஆதிக் கத்தை வேரறுப்பதற்காகவே பிரமுகர்கள் நந்திவர்மனைத் தேர்ந்தெடுத்து முடிசூட்டி யிருக்கிறுர்கள். அவன் விக்கிரமாதித்தியனுக்குப் பணிந்து விடுவானுகில் அவர்கள் நோக்கம் ஈடேற வழியில்லாமல் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டதாகும். அதனல், சாளுக்கியர்களுக்கு அடங்கியவனுகப் பல்லவ அரசைப் பெற்றவன் வேருெருவனுகவே இருத்தல்வேண்டும். ராயக்கோட்டைச் சாசனத்தை வழங்கிய இரண்டாம் ஸ்கந்த சிஷ்யனே அவன் போலும். பல்லவ வம்சத்திலே அவன் எந்த இடத்தை நிரப்புகிறவன் என்பது தெரியவில்லை. எனினும், ராமராஜ்ஜியம் போன்ற நிலையை, திரும்பவும் கொணர்ந்து மக்களுக்கு நல்வாழ்வு உண்டுபண்ணுவதற்காக அவன் ஸ்கந்தசிஷ்யன் என்ற பழைய பெயரையும் தரித்திருக்கிறுன். சித்திரமாயன், ஸ்கந்தசிஷ்யன் ஆகிய இரு

பெயர்களும் ஒருவனையே குறிப்பனவா, அல்லது வேறுவேறானவர்களைக் குறிக்குமா என்பது தெளிவாக இல்லை. இருவர் எனவே இப்போதைக்குக் கொள்ளலாம்.

இரண்டாம் நந்திவர்மன்

இரண்டாம் பரமேச்வரன் இறந்த பிறகு இளைய பரம்பரையைச் சேர்ந்த பல்லவ மல்லன் என்ற பன்னிரண்டு வயதுச் சிறுவன் நந்திவர்மன் என்ற பெயருடன் எந்தச் சூழ்நிலையில் சிங்காதனம் ஏறினான் என்பதை நாம் மேலே கண்டோம். பல்லவ சேனாபதி யான உதயசந்திரன் தன் அரசனுக்காகப் பரிந்துகொண்டு, பல போர்களில் வெற்றி அடைந்து, நந்திவர்மனைச் சிங்காதனத்தில் ஸ்திரமாக அமர்த்தினான் என்ற விவரத்தையும் நாம் உதயேந்திரம் செப்பேடுகளின் முன்னுரையில் கொடுத்திருக்கிறோம்.

பன்னிரண்டு வயதில் சிங்காதனம் ஏறிய அவன் 65 ஆண்டுகளுக்குக் குறையாமல் அரசு நடத்தியிருக்கிறான். அவன் ஆட்சியில் முதல் 15, 20 ஆண்டுகள் போரிலேயே கழிந்தன. இளமைப் பருவத்திலிருந்த அவன், தந்தையான முதுகன் ஹிரண்யவர்ம மஹாராஜாவின் பராமரிப்பில் இருந்திருக்கிறான். அவன் வழங்கியனவாக ஐந்து செப் பேட்டுச் சாசனங்கள் இந்தத் தொகுப்பிலே அடங்கியுள்ளன. அவற்றுள் அவன் வெற்றிப் புகழ் பலபடியாகக் குறிக்கப்பட்டிருப்பதாயினும், தெளிவான விஷயம் ஏதும் தெரிய வில்லை. அவன் வெற்றிகொண்ட அரசர்கள் யார் யார் என்பதைக் குறிக்கும் பட்டியலே பெரும்பாலும் காணப்படுகிறது. அவற்றுள் புல்லூர்ச் சாசனத்தில் காண்பதே மிகவும் நீளமானது.

இவன் பல்லவ சிங்காதனம் ஏறிய அதே சமயம் வாதாபியில் இரண்டாம் விக்கிர மாதித்தியன் சாளுக்கிய சிங்காதனம் ஏறினான். இருவருக்கும் பிறவிப்பகை. நல்லவேளை யாக இந்தப் பல்லவ மல்லனுக்கு கூட்டு ஒன்று கிடைத்தது. ராஷ்டிரகூட வம்சத்தின் அரசை நிறுவிய தந்திதுர்க்கனே அவன். ராஷ்டிரகூட வம்சத்து அரசகுமாரியான ரேவா என்பவளை, பல்லவமல்லன் மணந்திருந்தான். அவளிடம் பிறந்த மகன் தந்தி வர்மனே அவனுக்குப்பின் பல்லவ சிங்காதனம் ஏறியவன். ரேவா என்பவள் ராஷ்டிர கூடத் தந்திதுர்க்கன் மகளே என்றும், அதனாலேயே அவள் மகன் பாட்டன் பெயரைப் பெற்றான் என்றும் கருதுவர். தந்திதுர்க்கன் நாளிலே ராஷ்டிரகூட அரசாங்கம் வடக்கே மஹி, நர்மதை, மஹாநதி ஆகிய ஆறுகள்வரை எட்டியிருந்தது. அந்த வட பகுதியிலும் அவன் பல போர்களை நடத்தியிருக்கிறான். அவனுடைய (கி. பி. 754) சமன் கார்ச் செப்பேடுகளில் உக்கிரகோபன் என்ற அங்குரன் உதவியோடு அவன் எதிரிகளை அழித்ததாகக் காணப்படுகிறது. தெள்ளாற்றெறிந்த நந்திவர்மனுக்கு உக்கிரகோபன் என்ற பெயர் உண்டு. அதனால், ராஷ்டிரகூடனுக்கு உதவிய உக்கிரகோபன் பல்லவனான நந்திவர்மன் பல்லவமல்லனே ஆவன் என்பது எளிதில் விளங்கும். பல்லவமல்லனும் கூர்ஜரநாட்டு ஸைந்தவரை வெற்றிகொண்டான் என்று புல்லூர்ச் செப்பேடுகளில் கூறப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. நிஷதபதி, சபரர் ஆகியோர் கிழக்குப் பக்கத் திலே மஹாநதியை ஒட்டியப் பிரதேசத்தில் வாழ்ந்தவராவர். எல்லோராக் கல்வெட் டில் தந்திதுர்க்கன் வெற்றிகொண்டவர்களாகக் குறிக்கப்பட்டவர்களுள் காஞ்சிசன் பெயரும் காணப்படுகிறது. அது பல்லவமல்லனைக் குறிப்பதாகாது; அவனுக்குப் போட்டியாகக் காஞ்சியைக் கைப்பற்றியிருந்த ஸ்கந்தசிஷ்யனைக் குறிப்பதாகும்.

தந்திதுர்க்கனுக்குப் பிறகு அவன் சிற்றப்பனுன முதலாம் கிருஷ்ணன் ராஷ்டிர கூட அரசனுனன். அவன் மகுடாபிஷேகம் கி. பி. 758–க்கு முன்னதாகவே நடந்திருத்தல்வேண்டும். அவன் ஆட்சி கி. பி. 772 வரையில் நீடித்திருந்தது. கிருஷ்ணனுக்குப் பிறகு அவன் மூத்த மகன் இரண்டாம் கோவிந்தன் பட்டத்துக்கு வந்தான். கோவிந்தனும் பல்லவமல்லனும் சேர்ந்து மேலைக் கங்க அரசனுன சிவமாறனை முடிசூட்டி வைத்திருக்கிருர்கள். அதுவரையில் ராஷ்டிரகூடருக்கும் பல்லவருக்கும் விரோதம் ஏதும் இல்லாமல் நெருங்கிய நல்லுறவு நீடித்து வந்தது.

அதற்குப் பிறகு இரு குடும்பங்களுக்கிடையில் விரோதம் உண்டாயிற்று. கோவிந்தன் சிற்றின்பப் பிரியன் என்று கூறி அவன் தம்பி துருவன் அவனை விலக்கி நாட்டைக் கைப்பற்றினுன். தாயாதிச் சண்டையிலே பல்லமல்லன் கோவிந்தனுக்கு உதவியாக நின்றதால் துருவனுடைய விரோதத்துக்கும் படையெடுப்புக்கும் ஆளாக நேர்ந்தது. அது கி. பி. 785–ஆம் ஆண்டளவில் நிகழ்ந்ததாகும்.

பல்லவமல்லனுல் முடிசூட்டப்பெற்ற சிவமாறன், கங்க அரசனுன ஸ்ரீ புருஷனுடைய மகனுவன். பிற்காலத்துக் கல்வெட்டு ஒன்று கங்க அரசனுன ஸ்ரீ புருஷன் வலிமைமிக்க காடுவெட்டியைக் கொன்று பெருமானடிகள் என்ற அவன் விருதையும் கைக்கொண்டான் என்று கூறுகிறது. அந்தக் காடுவெட்டி பல்லவமல்லனேஎன்று ஆசிரியர்கள் பொதுவாகக் கருதுவர். ஆனுல், பல்லவமல்லனே ஸ்ரீ புருஷன் காலத்துக்குப் பிறகும் உயிர் வாழ்ந்திருக்கிருன். அன்றி, அவனுடைய தண்டந்தோட்டம் செப்பேடுகளிலிருந்து அவன் கங்க மன்னனை வெற்றிகொண்டு அவனிடமிருந்து உக்கிரோதயம் என்ற மணிமாலையையும் பட்டவர்த்தனம் என்ற பட்டத்து யானையையும் கைப்பற்றிய செய்தி தெரிகிறது. ஆனுல், அந்த அரசன் யார் என்பது தெரியவில்லை. ஸ்ரீ புருஷன் என்றே பொதுவாகக்கொள்வர். ஆனுல், ஒன்று நிச்சயம்; ஸ்ரீபுருஷனுக்குப் பிறகு கங்க ராஜ்ஜியம் இரண்டாகப் பிரிந்தது. கிழக்குப் பகுதி பல்லவர்களுக்கும் அவர்களுக்குப் பின்னுல்வந்த சோழர்களுக்கும் அடங்கியது. மேற்குப் பகுதி துருவன் காலத்திலிருந்து ராஷ்டிரகூடர்களுக்கு அடங்கியதாகும்.

தந்திவர்மன்

தந்திவர்மன் சிங்காதனம் ஏறிய காலத்தில் ராஷ்டிரகூடருக்கும் பல்லவருக்கும் இடையே உறவு சீராக இல்லை. நந்திவர்மன் ஆட்சியின் கடைசிக்காலத்தில் துருவன் இறந்துவிட்டான். அவன் உயிருடன் இருந்தபோதே தன்னுடைய மகனுன மூன்ரும் கோவிந்தனுக்கு முடிசூட்டி வைத்துவிட்டான். அவன் மூத்தமகன் அல்லன், ஸ்தம்பன் அல்லது கம்பரசன் என்ற மூத்தமகன் தந்தையின் ஆட்சியிலேயே கங்கவாடியை இராஜப் பிரதிநிதியாக நிர்வகித்து வந்திருக்கிருன். இரண்டாம் கோவிந்தனும் பல்லவமல்லனும் சேர்ந்து முடிசூட்டிய சிவமாறன் அப்போது கங்க அரசனுக இருந்தவன். அவன் துருவன் ஆட்சியை ஏற்காததால், துருவன் அவனைச் சிறை செய்து நாட்டினின்றும் வெளியே அப்புறப்படுத்தி, தன் தலைநகரிலே காவலில் வைத்துவிட்டு, தன் மூத்த மகனுன ஸ்தம்பனை அங்கே பிரதிநிதியாக நியமித்திருந்தான். தன் தம்பியான மூன்ரும் கோவிந்தனுக்கு தந்தை முடிசூட்டியதை அவன் ஒப்பவில்லை. அண்ணன் தம்பிகளுக்குள் தாயாதிச் சண்டை மூண்டது.

முறைப்படி ஸ்தம்பனுக்கே முடிசூட்ட வேண்டுமென்பதை ஒட்டி, அவன் கட்சியிலே பல அரசர்கள் சேர்ந்தார்கள். அவர்கள் பன்னிருவர் என்று பொதுவாகக் குறிக்

கப்பெறுவர். அவர்கள் யார் யார் என்று எங்கும் விவரிக்கப் பெறவில்லே. எனினும், மூன்றும் கோவிந்தனுடைய நவசாரி செப்பேடுகளிலிருந்து (கி. பி. 805) அவர்களில் பல்லவ, பாண்டிய, சோள, கங்க, கேரள, ஆந்திர, கோசல, மௌரிய, கூர்ஜர, அவந்தி, சிங்களர் ஆகியோர் அந்தக் கூட்டிலே சேர்ந்திருந்தனர் என்று தெரிகிறது. அதற்கு முதல் ஆண்டு கோவிந்தன் வழங்கிய ராமேச்வரம் செப்பேடுகளிலிருந்து அவன் அப்போதுதான் (கி. பி. 804) பல்லவனுன தந்திவர்மனே வெற்றிகொண்டான் என்பது தெரிகிறது. மூன்றும் கோவிந்தன் கி. பி. 810-ல் வழங்கிய மண்ணேச் செப்பேடுகளில் கண்ட தானத்தை வழங்க வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டவன் பஞ்சமஹா சப்தங்களோடு சிற்றரசுப் பதவியை வகித்த தந்திவர்மனுவன். அவன் ஸ்தம்பனுக்குப் பதிலாக கங்கவாடியில் ராஷ்டிரகூடப் பிரதிநிதியாக இருந்த சாகிராஜனே முன்னிட்டுக் கொண்டே அந்த விண்ணப்பத்தைச் செய்திருக்கிறுன். அந்த தந்திவர்மன் பல்லவ அரசனே ஆவன் என்பதை ஓரளவு உறுதியாகச் சொல்ல முடியும்.

பல்லவர்மீது ராஷ்டிரகூடருடைய ஆதிக்கியம் எவ்வளவு காலம் நீடித்தது என்பது தெரியவில்லே. மூன்றும் கோவிந்தன் கி. பி. 814-ல் இறந்துவிட்டான். அவனுக்குப் பிறகு முதலாம் அமோகவர்ஷன் முடிசூட்டப்பெற்றுன். அப்போது அவன் சிறியவன். ராஜபாரத்தை நேரிலே வகிக்க முடியாதவன். அதனுல், அவனுக்குப் பதிலாக கூர்ச்சரத்துக் கிளேயைச் சேர்ந்த கர்க்கசுவர்ணவர்ஷன் நிர்வாகத்தை நடத்திவந்தான். அப்போது பல்லவ ராஜ்ஜியத்தின் நிலே எவ்வாறு இருந்ததென்பது தெரியவில்லே. எனினும், தந்திவர்மனுடைய ஆட்சியின் பிற்பகுதியிலே அவனுடைய சாசனம் ஏதும் கிடைக்கவில்லே என்பது நோக்கத்தக்கது. 23-ஆம் ஆண்டுக்குப் பிறகு 49, 51 ஆகிய ஆண்டுகளேக்கொண்ட இரண்டு கல்வெட்டுகளே கிடைத்துள்ளன. அந்த இடைக்காலத்திலே சோழநாட்டுப் பகுதியைப் பாண்டியர் கைப்பற்றி ஆண்டு வந்தார் என்று டாக்டர் துப்ராய் கருதுவர். வடக்குப் பகுதியின் நிலே என்ன என்பது தெரியவில்லே.

அந்த நாளிலே பொத்தப்பிக் குலத்துச் சோழனுன ஸ்ரீகண்டன் என்பவன் மிகுந்த வலிமைபெற்று விளங்கியிருக்கிறுன். யானேப்படைத் தலேவனும் மயிலேயின் அரசனுமான அவன் பாண்டியர்களுடன் உறவு பூண்டவன். அவன் மகள் அக்களநிம்மடியின் வயிற்றிலே பிறந்தவனே பாண்டிய அரசனுன பராந்தகவீரநாராயணன் ஆவன். அக்களநிம்மடி என்பது கன்னடப் பெயர். பல்லவ தந்திவர்மனுடைய தேவியின் பெயரும் அதுவே. அவள் வயிற்றில் பிறந்த மூன்றும் நந்திவர்மனே பின்னுல் பட்டம் ஏறியவன். அவள் கதம்ப குளத்தில் பிறந்தவள். இவைகளேக் கவனித்தால் தந்திவர்மனுக்கும் ஸ்ரீகண்டனுக்கும் நெருங்கிய உறவு இருந்திருத்தல் வேண்டுமெனலாம்.

இடைக்காலத்தில் பல்லவ ராஜ்ஜியம் வேறு யாருடைய ஆதிக்கியத்தில் இருந்ததேயாயினும் தந்திவர்மனுடைய இறுதிக் காலத்தில் திரும்பவும் அது பல்லவர்களுக்குக் கிட்டியது. அதற்கு ஸ்ரீகண்டன் பெரிதும் உதவியாக நின்றுன் எனத் தெரிகிறது.

மூன்றும் நந்திவர்மன்

மூன்றும் நந்திவர்மன் அளித்ததாக ஒரு செப்பேட்டுச் சாசனம் இந்தத் தொகுப்பிலே சேர்ந்துள்ளது. அது அவனுடைய ஆட்சியின் ஆறும் ஆண்டு வழங்கப்பட்டதாகும். பிறரால் அடைய முடியாத பல்லவ ராஜ்ஜியத்தை அவன் தன்னுடைய தோள்

வலியால் சத்துருக்களைக்கொன்று அடைந்தான் என்று அந்தச் சாசனம் (சுலோகம் 20) கூறுகிறது. அவன் போரிலே பெருவெற்றி கொண்டான் என்பது அவனுடைய மகன் நிருபதுங்கவர்மன் வழங்கிய பாகூர்ச் செப்பேடுகளிலிருந்தும் தெரிகிறது. வேலூர்ப் பாளையம் செப்பேடுகளில் முதல் சுலோகம் சிவபெருமானுக்கு வணக்கம் தெரிவிப்பதாக அமைந்துள்ளது. அடுத்த சுலோகம் உமாகாந்தனுகிய ஸ்ரீகண்டனுடைய கரங்கள் அவனை வரையும் காப்பாற்றட்டும் என்று கூறுவதாக அமைந்துள்ளது. ஸ்ரீகண்டன், கறைக் கண்டன் என்று வழங்கும் பெயர்கள் நீலகண்டனுன சிவபெருமானையே குறிப்பவை. எனினும், ஸ்ரீ கண்டன் கரங்களைப்பற்றிப் பிரஸ்தாபிக்கும் இரண்டாம் சுலோகம் தொனியினல் ஸ்ரீ கண்டன் என்ற பெயரைக்கொண்ட ஓர் அரசனுடைய தோள்வலியைப் புகழ்ந்து கூறுவதாக அமைந்திருப்பதுபோல் தோன்றுகிறது. அவன் பொத்தப்பிக் குலத்துச் சோழனுன ஸ்ரீகண்டனேயாகும்.

இந்த நந்திவர்மனும் தன் பாட்டனைப் போலவே ராஷ்டிரகூட வம்சத்து அரச குமாரியை மணந்திருந்தான். அவள் பெயர் சங்கா என்பது. அவளுக்குப் பிறந்த மகனே பின்னுல் நிருபதுங்கவர்மன் என்று சிங்காதனம் ஏறியவன். நந்திவர்மனுக்கு அடிகள் கண்டன் மாறம்பாவை என்ற மற்ருெரு தேவியும் இருந்தாள். அவள் வயிற்றில் பிறந்தவனே போலும் அபராஜித விக்கிரமவர்மன். மாற்றுந்தாய் வயிற்றில் பிறந்த அவ்விருவரும் பிற்காலத்தில் தாயாதிச் சண்டையிட்டிருக்கின்றனர்.

இவன் எவ்வளவு காலம் அரசுபுரிந்தான் என்பது தெரியவில்லை. எனினும், நீண்டகாலம் இருத்தற்கில்லை. அவனுடைய பாட்டன் (65 ஆண்டுகள்), தந்தை (51 ஆண்டுகள்), மகன் (41 ஆண்டுகள்) ஆகிய மூவரும் நீண்ட காலம் ஆட்சி நடத்தியிருப்பதால் இவன் ஆட்சி குறுகியதாகவே இருந்திருக்கும் எனலாம்.

நிருபதுங்கவர்மன்

புதுச்சேரிக்குப் பக்கத்திலுள்ள வாகூர் (பாகூர்) என்னுமிடத்தில் விளங்கிய ஒரு வித்யா ஸ்தானத்திற்கு மூன்று கிராமங்களைப் பிரம்மதேயமாக அளித்த நிருபதுங்கவர்மனுடைய செப்பேட்டுச் சாசனம் ஒன்றும் இந்தத் தொகுப்பிலே சேர்க்கப்பட்டுள்ளது. இந்தத் தொகுப்பிலுள்ள பல்லவச் சாசனங்களுள் இதுவே காலத்தாற் பிற்பட்டதாகும். இவன் ஆட்சிக்காலத்திலே ராஷ்டிரகூட சிங்காதனத்தில் அமர்ந்திருந்த அமோக வர்ஷனுக்கும் நிருபதுங்கன் என்ற பெயர் உண்டு. அதைக்கொண்டு பல்லவ நிருபதுங்கன் அமோகவர்ஷனுடைய பெயரனே என்று பொதுவான அபிப்பிராயம் நிலவி வருகிறது.

அமோகவர்ஷனைப் போலவே பல்லவ நிருபதுங்கனும் இளமைப் பருவத்திலேயே அரசியலில் ஈடுபடவேண்டியிருந்தது. அரிசிலாற்றங்கரையிலே அவன் எதிரிகளை வெற்றி கொண்டானும், அந்த எதிரிகள் யார் என்பது தெரியவில்லை. எனினும், அவனுடைய உதவியைக்கொண்டு பாண்டியர்கள் முன்னளிலே அந்த எதிரிகளை ஜயித்தனராம். இன்னும் இம்மன்னன் இலங்கையையும் வெற்றி கொண்டானும். இலங்கை அரசனுன இரண்டாம் சேனன் பாண்டியர்மீது படையெடுத்துவந்து மதுரையைக் கைப்பற்றித் தமிழகத்தின் தென் பகுதியைக் கலக்கிய காலத்தில் பல்லவர் பாண்டியருக்கு உறுதுணையாய் நின்று சேனனைத் துரத்தியடித்தார் போலும்.

இவன் காலத்திலே பாண்டிய அரசனுக இருந்தவன் வரகுணமஹாராஜன் எனப் படுவன். இவன் சிங்காதனம் ஏறிய இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள்ளாகவே அவனும் முடிசூட்டப் பெற்றவன்.

இவனுடைய ஆட்சியின் 26–ஆம் ஆண்டுக்குப் பிறகு 41–ஆம் ஆண்டு கொண்ட ஒரே சாசனம் கிடைத்துள்ளது. அதுவும் திருத்தணிக்குப் பக்கத்திலுள்ள ஒரு கிராமத்திலிருந்து இவனுடைய ஆட்சியின் 26–ஆம் ஆண்டிற்குப் பிறகு ஒன்றிரண்டு வருஷங்களுக்குள்ளாகவே திருப்புறம்பியப் போர் நடந்திருத்தல்வேண்டும். அந்தப் போரிலே பாண்டியனுன வரகுண மஹாராஜன் தோற்று ஓடினுன். பல்லவ அபராஜிதன் வெற்றிகொண்டான். அபராஜிதனுக்கு உதவியாகவந்த கங்க அரசனுன இரண்டாம் பிருதிவிபதி போரில் இறந்துபட்டான். நிருபதுங்கனுடைய ஆட்சியின் 26–ஆம் ஆண்டிலே பிருதிவிபதி அவன் கீழ்ச் சிற்றரசனுக இருந்திருக்கிறுன். அப்பால் அவன் மாறி அபராஜிதன் பக்கலில், சேர்ந்து- போரிலே வெற்றிகண்டும் இறந்து போனுன். அதன் பயனுக நிருபதுங்கன் நாட்டை இழந்தான். அபராஜிதன் நாட்டை அடைந்தான்.

அபராஜிதன் 18 ஆண்டுகள் அரசுபுரிந்திருக்கிறுன். இடையிலே நிருபதுங்கன் இழந்த நாட்டை மீண்டும் பெற முயன்றிருக்கிறுன். வெற்றி பூரணமாகக் கிட்டவில்லே. எல்லேயோரப் பகுதிக்குமேல் அவனுல் மீட்க முடியவில்லே. அப்போது தலேயெடுத்து வந்த சோழர்களுடைய ஆதரவை அபராஜிதன் பெற்றதே அதற்குக் காரணம் போலும். அபராஜிதனுக்குப் பிறகு வைரமேகன் (?) மூன்றும் நரசிம்மவர்மன், தெள்ளாற்றெறிந்த (நான்காம்) நந்திவர்மன், கம்பவர்மன் ஆகியோர் அரசு புரிந்திருக்கிறுர்கள். அவர்களுடைய சாசனம் ஏதும் இந்தத் தொகுப்பிலே சேரவில்லே.

பல்லவர் அளித்த பூதானங்களேத் தெரிவிக்கும் இந்தச் சாசனங்களில் பள்ளங்கோவில், ஹொஸக்கோட்டைஆகிய இரண்டைத்தவிர மற்றவை அனேத்தும் பிராம்மணர்களுக்கு அளிக்கப்பட்டனவே. பெரும்பாலும் அவை ஒவ்வொன்றும் இரண்டுபட்டி நிலம் என்ற விவரம் பல சாசனங்களில் காணப்படும். அதன்படி தானம்பெற்ற ஒவ்வொருவரும் அந்தந்தக் கிராமத்தில் குடியிருப்புக்கான மனே, மனேக்கட்டுத் தோட்டம், இரண்டு பட்டி (2400 குழி) விளே நிலம் ஆகியவைகளேயே பெற்றனர். இதுவே ஒரு பங்கு எனப்படும். சிற்சிலருக்கு அரைப்பங்கு கொடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அதேபோல ஓரிருவர் இரண்டு அல்லது மூன்று பங்கு பெற்றிருப்பதையும் காணலாம். இவ்விதம் பங்கு பிரிக்கப் பெறுமல் முழுக்கிராமமே ஒருவருக்குக் கொடுக்கப்பட்ட கிராமங்களில் அவர் ஒரு பகுதியைத் தமக்கு வைத்துக்கொண்டு மற்றதைப் பலருக்கும் பிரித்துக் கொடுத்து விடுவர்.

தானம் அளிக்கும்போது அந்த நிலத்தின்மீதுள்ள எல்லா உரிமைகளேயும் தானம் பெற்றவர்களே அனுபவிக்கும்படியாக அரசன் அளித்துவிடுவான். அப்பால் அந்த நிலத்தின்மீது அரசனுக்கோ அரசாங்கத்துக்கோ எந்தவிதமான உரிமையும் இல்லே. அந்த உரிமைகளேத் தானம் பெற்றவர்கள் கூட்டாக அனுபவித்து வந்தனர்.

இவ்விதம் எந்தவிதமான இறையும் இல்லாமல் பிரம்மதேயமாக வழங்கப்பெற்ற கிராமங்கள் தவிர, கோயிலுக்காகவோ வித்தியாஸ்தானத்திற்காகவோ அளிக்கப்பட்ட

நிலங்களும் உண்டு. அந்த ஸ்தாபனங்களை நடத்திச் செல்வதற்கான பொறுப்பையும் செலவையும் அந்தந்த ஊரைத் தானமாகப் பெற்றவர்கள் ஏற்றுச் செய்யவேண்டும். அவ்விதம் அவர்கள் செலவழிக்க வேண்டுவது பெரும்பாலும் மற்றக் கிராமங்களில் இறையாகச் செலுத்த வேண்டுவதற்கு மேற்பட்டிருக்காது. பட்டத்தாள் மங்கலம் செப்பேடுகளிலே தானம் பெற்றவர்கள், 'கோத்தொட்டு உண்ணப்பாலது எல்லாம் உண்ணப் பெறுதார் ஆகவும்' என்று குறிக்கப்பட்டிருப்பதிலிருந்து இது தெரியவரும். அந்த நிலம் தளிக்கோற்றங்குடியிலிருந்து பிரிக்கப்பட்டு பிரம்மதேயமாக வழங்கப்பெற்றது. அதனால் கோத்–தொட்டு உண்ணப்பாலவை அனைத்தும் அந்தத் தளிக்குச் சேர வேண்டுவதாகும். கூரம் சாசனத்திலே அவ்விதம் வழங்கப் பெற்றது 'தேவதான நிமித்தப் பிரம்மதேயம்' என்றே வழங்கப்பட்டுள்ளது. இதனை இன்னும் தெளிவாக்கும்.

இவ்விதம் பிரம்மதேயமாக வழங்கப்பெற்ற கிராமங்களில் தானம் பெற்றவர்கள் அடைந்த உரிமைகளையும் விலக்குகளையும் நன்கு ஆராய்ந்து பார்த்தால், அந்நாளிலே நாட்டில் நிலவிவந்த அரசியல் முறை, தனி மனிதன் உரிமை, சமூக வாழ்க்கையின் கட்டுக்கோப்பு முதலிய பல விவரங்களை அறிய முடியும். அந்த ஆராய்ச்சியும் சுவை நிரம்பியதாகவே இருக்கும்.

சிம்மவர்மனுடைய பள்ளன்கோவில் செப்பேடுகள்

முன்னுரை

பள்ளன்கோவில் என்பது தஞ்சாவூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டித் தாலுக்காவில் திருத்துறைப்பூண்டியிலிருந்து நான்கு மைல் தூரத்திலுள்ள ஒரு கிராமம். முப்பது ஆண்டுகளுக்கு முன் இவ்வூரிலே ஒரு மேட்டு நிலத்தைப் பயிரிடுவதற்காக அழித்தபோது, இந்தச் சாசனமும், சுந்தரசோழன் காலத்துச் சாசனம் ஒன்றன் உதிரி ஏடுகள் ஆறும் கிடைத்தனவாம். அவற்றேடு பூமியிலிருந்து வேறு என்ன பொருள்கள் கிடைத்தன என்பதுபற்றிய விவரம் ஏதும் தெரியவில்லே. அந்த ஏடுகள் இப்போது சென்னேயில் உள்ள மர்ரே கம்பெனியைச் சேர்ந்த திரு எஸ். ராஜத்தினிடம் இருக்கின்றன.

சென்னேயில் உள்ள தென் இந்தியாவின் புதைபொருள் ஆராய்ச்சிக் கழகத்து நடவடிக்கைகளின் 1958–59–ஆம் ஆண்டின் வெளியீட்டிலே 41–83–ஆம் பக்கங்களில் இந்தச் சாசனம் என்னுல் ஏற்கெனவே ஆங்கிலத்தில் பதிப்பிக்கப் பட்டுள்ளது:[1]

பல்லவ அரசனுன சிம்மவர்மன் தன்னுடைய ஆட்சியின் ஆரும் ஆண்டில் அளித்த தானத்தைத் தெரிவிக்கும் இந்தச் சாசனம் ஐந்து செப்பேடுகளில் பொறிக்கப்பட்டுள்ளது. அவ்வைந்து ஏடுகளும் இடதுபுறத்தில் துவாரம் இடப்பட்டு ஒரு செப்பு வளேயத்தில் கோக்கப்பெற்றுள்ளன. அந்த வளேயத்தின் இரு

1 Transactions of the Archaeological Society of South India, 1958-59, pp. 41-83.

முனைகளும் அடி பருத்துத் தலை சிறுத்து ஒரு மணியின் உருவத்தில் உள்ள முகப்பின் தலையிலே பொருத்தப்பட்டிருக்கின்றன. அவ்விதம் செய்திருப்பது அந்த ஏடுகளைப் பின்னால் வேறு யாரும் தனியே பிரித்தெடுத்துக் கையாள முடியாதபடி தடுத்துப் பாதுகாப்பதற்கு ஆகும்.

முகப்பின் அடிப்பாகத்தில் வட்டவடிவமான முத்திரை காணப்படுகிறது. அதன் நடுவிலே வலம் நோக்கி (அதாவது நமக்கு இடது புறமாக)ப் படுத்திருக்கும் ரிஷபத்தின் உருவம் ஒன்று புடைப்புச் சித்திரமாக உள்ளது. பக்கத்துக்கு ஒன்றாக அதன் இரு புறங்களிலும் இரண்டு குத்துவிளக்குகள் உள்ளன. தலைப்பிலே இரண்டு சாமரங்களுக்கு நடுவில் உள்ள குடை ஒன்றையும் காணலாம். அவற்றின் கீழே, ரிஷபத்தின் தலைக்குமேல் ஆரம்பித்து ஒரு கலசம் அல்லது பூர்ணகும்பம், மிருதங்கம், ஆசனம், அங்குசம், ஸ்ரீவத்ஸம் ஆகியவை ஒரு வரிசையில் உள்ளன. ரிஷபத்தின் முதுகுக்குமேல் பிறைச்சந்திரனும் நட்சத்திரமும் காணப்படுகின்றன.[2] ரிஷபத்தின் அடியில் வளைவான ஒரு கோடு காணப்படுகிறது.[3] முத்திரையின் விளிம்பை யொட்டி வட்டமாக ஒரு வரி கிரந்த எழுத்தில் எழுதப்பட்டிருக்கிறது. எழுத்துகள் ரிஷபத்தின் முகத்துக்கு நேராக ஆரம்பித்து அப்பிரதட்சிணமாகச் செல்லுகின்றன. எழுத்து முக்கால் வட்டத்துக்குத்தான் காணப்படுகிறது. பாக்கி உள்ள இடம் பிள்ளையார்சுழிபோல் சுழியும் கோடுமாக நிரப்பப்பட்டுள்ளது. முத்திரையில் காண்பது:

[illegible] [[illegible]][4]

"பாத்திரத்திலே நழுவி விழுந்து (உண்டானவரே) திரும்ப வந்து (பிறப்பவராகவும்) சாஸ்திரங்களில் (ஊன்றிய மனத்தையுடையவராக

2. முதலாம் பரமேச்வரனுடைய கூரம் செப்பேட்டுச் சாசனத்தின் முத்திரையிலும் உன்னகுரவயபாளையம் செப்பேட்டுச் சாசனத்தின் முத்திரையிலும் இதே போன்ற உருவம் காணப்படுகிறது. பழைய ஆசிரியர்கள் அவற்றை லிங்கத்தின் உருவமாகக் கொண்டிருக்கிறார்கள். ('தெ.இ.சாசனங்கள்', தொகுதி 1, பக்கம் 144; 'எபி.இந்திகா', தொகுதி 32, பக்கம் 91) சந்திரனோடு ஆசந்த்ர–தாரகம் என்று நட்சத்திரத்தை மட்டுமல்லாமல் ஆசந்த்ரார்க்கம் என்று சூரியனையும் சேர்த்துக் கூறுவதுண்டு. அதை ஒட்டி அந்த உருவத்தைச் சூரியனாகக் கருதவும் கூடும்.

3. சிம்மவர்மனுடைய விழவட்டிச் செப்பேட்டுச் சாசனத்தின் முத்திரையிலே ரிஷபத்தின் மேலே அத்தகைய கோடு காணப்படுகிறது. ('எபி.இந்திகா', தொகுதி 24, பக்கம் 296) அங்கே அந்தக் கோடு கடலைக் குறிப்பதாகவும், அதற்கு மேலே லிங்கம் போல் காணும் உருவத்தை நங்கூரமாகவும் பழைய ஆசிரியர்கள் கொண்டிருக்கிறார்கள் என்பது கவனிக்கத்தக்கது.

4. இந்திய அரசாங்கத்தின் புதைபொருள் ஆராய்ச்சித் துறையைச் சேர்ந்த சாசன இலாகாவினர் தங்களுடைய 1959–60–ஆம் ஆண்டு அறிக்கையில் (Annual Report on Indian Epigraphy 1959–60) இந்தச் சாசனத்தையும் சேர்த்து விமர்சனம் செய்திருக்கிறார்கள். அதிலே, முத்திரை வாசகத்தின் கடைசியில் இருதலைப்பகரத்திற்குள் காணும் பகுதி தெளிவாக இல்லையென்று வாசிக்காமல் புள்ளியிட்டு நிரப்பியிருக்கிறார்கள். இன்னும் நடுவேயுள்ள பகுதியில்

வும்) கொண்ட (குலத்தைச் சேர்ந்த) ஸ்ரீ ஸிம்ஹவர்மனுடைய (முத்திரை)" என்று இது பொருள்படும். அதிலிருந்து சாசனம் வழங்கிய காலத்தில் அரசனுக இருந்தவன் சிம்மவர்மனே என்பது தெளிவாகும்.

முத்திரையின் வாசகத்திலே அரசன் பிறந்த குலம் "பாத்திரத்திலே நழுவி விழுந்து (உண்டானவரே) திரும்பவும் வந்து (பிறந்தவராக உள்ள குலம்)" என்று வருணிக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. இது வேறு எந்த இடத்திலும் காணுதது.பாத்திரத்தில் நழுவி விழுந்து தோன்றினவரைக் குல முதல் வராகக் கொண்டவர்கள் என்றும் அவரே திரும்பத் திரும்ப அந்தக் குலத்தில் பிறந்து வந்தார் என்றும் பல்லவர்கள் தங்களைப்பற்றிக் கூறிக்கொண்டனர் என்பது அதிலிருந்து தெரியவரும். அவர் யார் என்பது தெளிவாகக் குறிக்கப் பெறவில்லை. எனினும் அதை எளிதில் அறிய முடியும். அவர்கள் தங்கள் வம்ச பரம்பரையை விஷ்ணுவின் நாபிக்கமலத்திலிருந்து தோன்றிய பிரம்மாவினிடமிருந்து அங்கிரஸ், பிரகஸ்பதி, சம்யு, பரத்வாஜர், துரோணர், அசுவத்தாமன், பல்லவன் என்ற வரிசையிலேயே கூறிக்கொள்வர். அவர்களுடைய சாசனங்கள் பலவற்றிலும் இந்த வரன்முறையே காணப்படுவது. இவ்விதம் அசுவத்தாமன் வரையில் காணும் புராண புருஷர்களிலே துரோணர் ஒரு பாத்திரத்திலே பிறந்தவர் என்று புராண வரலாறு கூறுகிறது. துரோணம் என்ற யாக பாத்திரத்தில் பிறந்ததால் அவருக்குத் துரோணர் என்ற பெயர் ஏற்பட்டதாம்.

அவர் பரத்வாஜ முனிவருக்கு மகனுகப் பிறந்தவர். ஒரு சமயம் அந்த முனிவர் ஒரு யாகத்தைச் செய்து கொண்டிருந்தார். அப்போது அவர் மகரிஷிகள் பலரோடு நீராடுவதற்காகக் கங்கைக்குச் சென்றுர். அங்கே கிருதாசி என்ற அப்ஸரஸ்திரீ ஒருத்தி கங்கையில் நீராடிவிட்டுக் கரையேறிக் கொண்டிருந்தாள். அப்போது அவளுடைய ஆடை நழுவியது. அதைக் கண்ட

ஆகாரக் குறியான காலைச் சேர்த்து, 'பாத்ராஸ்கலித வ்ருத்தீநாம்' என்றும் திருத்தியிருக்கிறுர்கள். அதன்படி, பல்லவர்கள் 'பாத்திரத்திலிருந்து நழுவாத விருத்தியைக் கொண்டவர்கள்' என்று ஆகும்: அதாவது நேர்மையான வழியிலிருந்து சிறிதும் பிறழாத வாழ்க்கை முறையைப் பின்பற்றுகிறவர்கள் என்பதை உணர்த்துவதாகும். அவ்விதமானுல் பாத்ரம் என்ற சொல்லுக்கு நன்னெறி, சீரிய முறை என்பன போன்ற பொருளைக் கொள்ளவேண்டும். அதற்கு அத்தகைய பொருள் உண்டு என்பது உண்மையே; ஆயினும் இப்போது நம்மிடையே வழங்குவதுபோலக் கொள்கலம் என்பதே அதன் முதன்மைப் பொருள். பின்னுல் அது விரிந்து ஸத்பாத்ரம், நாடகபாத்ரம் என்பன போன்ற பொருள்களையும் உணர்த்தலாயிற்று. மந்திரி என்ற பொருளும் உண்டு. எனினும் தாங்கள் தர்மத்தினின்றும் பிறழாத வாழ்க்கையைக் கடைப்பிடிப்பவர்கள் என்பதைப் பல்லவர்கள் உணர்த்த விரும்பியிருந்தால் அதை அவர்கள் தெளிவாகவே கூறியிருப்பார்கள்; இவ்விதம் மயக்கத்தைக் கொடுக்கும் தொடரை ஆண்டிருப்பார்களா என்பது சந்தேகம். எல்லாவற்றுக்கும் மேலாக, முத்திரை வாசகத்தின் பாடத்தை நாம் திருத்தலாமா என்பதையும் யோசிக்க வேண்டியது அவசியம்.

தும் முனிவருக்கு அவளிடம் மோகம் ஏற்பட்டது. அதனுல் வெளிப்பட்ட ரேதஸ் வீணுகக்கூடாதென்று அதை அவர் துரோணம் என்ற யாக பாத்திரத்தில் ஏந்தி வைத்தார். அதிலிருந்து தோன்றி வளர்ந்தவராம் துரோணர்[5]. அவர் பிராமணரே ஆயினும் போர்த் தொழிலில் பயிற்சி பெற்று அதில் ஈடுபட்டிருந்தார். பல்லவர்களும் அதே போலத் தங்களைப் பிரம்ம-க்ஷத்திரியர் என்று கூறிக்கொண்டனர் இது கசாக்குடிச் செப்பேடுகளாலும் (சுலோகம் 18) வேறு கல்வெட்டுகளாலும்[6] அறியப்படுவது. புல்லூரச் செப்பேடுகளில் பல்லவ வம்ச பரம்பரை பிரம்மாவிடமிருந்தோ, விஷ்ணுவிடமிருந்தோ ஆரம்பிக்கப் பெருமல் துரோணரைக் கொண்டே ஆரம்பிக்கிறதென்பதும் கவனிக்கத்தக்கது. துரோணரிடமிருந்தே பல்லவ வம்சம் தோன்றி வளர்ந்ததென்பதையும், அந்த வம்சத்தவர் பிராம்மணர்களாயினும் க்ஷத்திரிய தர்மத்தை மேற்கொண்டிருந்தபடியால் ஒவ்வொருவரும் துரோணருடைய அவதாரமே என்பதையும் உணர்த்துவதற்காகவே இந்தச் சாசனத்தின் முத்திரையில் "பாத்ர ஸ்கலித வ்ருத்திநாம்" என்ற தொடர் ஆளப்பட்டது போலும்![7]

முதல் ஏடும் கடைசி ஏடும் உட்புறத்தில் மட்டுமே எழுதப்பட்டுள்ளன; வெளிப்புறம் எழுதாமல் காலியாக உள்ளது. மற்ற மூன்று ஏடுகளும் இருபுறங்களிலும் எழுதப்பட்டுள்ளன. அவ்விதம் மொத்தம் எட்டுப் பக்கங்களில் பக்கத்திற்கு எட்டு வரியாக அறுபத்து நான்கு வரிகளில் சாசனம் எழுதப்பட்டுள்ளது.

சாதாரணமாகச் சாசன ஏடுகளில் விளிம்பு சிறிது தடித்திருக்கும். ஏடுகள் தேய்ந்து எழுத்துகள் சிதைந்து போகாமல் இருப்பதற்கு அது ஒரு பாதுகாப்பாக அமையும். இந்தச் சாசனத்திலே ஏட்டின் விளிம்பு தடித்தில்லாமல் காண்பதால் ஏடுகளின் ஓரம் களிம்பேறிச் சிதைந்துள்ளது.

முதல் ஏடு இரண்டாக ஒடிந்து, வளையத்தில் கோக்கப்பெற்ற இடது பாதியே கிடைத்துள்ளது. வலது பாதி கிடைக்கவில்லை. அதனுல் சாசனத்தின் முதல் எட்டு வரிகளில் முன்பாதியே காணப்படுகிறது.

5 மகாபாரதம், ஆதிபர்வம்:— அகத்திய முனிவர் ஒரு குடத்தில் பிறந்தவராம். அதனுல் அவரைக் கும்பமுனி என்றும், கலசயோனி என்றும் சொல்லுவர். அதேபோல, துரோணரும் கசாக்குடிச் செப்பேடுகளில் (சுலோகம் 15) குறிக்கப்பெற்றிருக்கிருர். மேலே குறித்ததையே அது உணர்த்துவது போலும்.

6 தென்னிந்திய சாசனங்கள், தொகுதி 12. சாசனம் 48.

7 வ்ருத்தி என்ற சொல் திரும்புதல் என்ற பொருளோடு தொழில், ஆசாரம், வாழ்க்கை முறை என்பவற்றையும் உணர்த்தும். பல்லவர்களில் ஒவ்வொருவரும் துரோணருடைய வாழ்க்கைமுறையைப் பின்பற்றி வந்தனர் என்பதைக் குறிப்பதாகவும் அந்தத் தொடரைக் கொள்ளலாம்.

தமிழ்நாட்டிலே கிடைக்கும் மற்றச் செப்பேட்டுச் சாசனங்களில் காணப் படுவதுபோலவே இந்தச் சாசனமும் ஸம்ஸ்கிருதம், தமிழ் ஆகிய இரு பகுதி களைக் கொண்டது. ஸம்ஸ்கிருதப் பகுதி சுலோக உருவில் அமைந்து கிரந்த எழுத்துகளில் இருபத்தாறு வரி கொண்டது. தமிழ்ப் பகுதி அதைத் தொடர்ந்து தமிழ் எழுத்திலே உரைநடையில் பொறிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு பகுதியி லும் தான விவரம் முழுமையும் காணப்படுகிறது; எனினும் ஒன்றையொன்று பூர்த்தி செய்வதாகவே உள்ளது.

இந்தச் சாசனம் பல வகையிலும் முக்கியமானது. அரசன் உத்தரவைத் தமிழிலே கொண்டு தமிழ்நாட்டிலிருந்து கிடைக்கும் செப்பேட்டுச் சாசனங் களுள் இதுவே காலத்தால் முற்பட்டது. அதேபோல் சமணர்களுக்குத் தானம் அளிக்கப்பெற்ற செய்தியைத் தெரிவிக்கும் சாசனங்களுள்ளும் இதுவே முதன்மை யானது. தமிழ்நாட்டில் கிடைக்கும் பல்லவ சாசனங்கள் முதலாம் மகேந்திர வர்மனுடைய காலத்துக்கு முற்பட்டதாக இதுவரையில் ஏதும் கிடைக்கவில்லை. இந்தச் சாசனம் மகேந்திரவர்மனுடைய பாட்டன் காலத்தைச் சேர்ந்ததாகும்.

சாசனம் பொறிக்கப்பட்டுள்ள கிரந்தம், தமிழ் ஆகிய இருவகை எழுத்து களுக்கும் தலைக்கட்டு காணப்படுகிறது. கூர்மையான பாகத்தைக் கீழே வைத் துத் தலைகீழாக எழுதப்பட்ட ஒரு முக்கோணத்தைப் போல் அந்தத் தலைக்கட்டு உள்ளது. அந்த வகையை ஆராய்ச்சி முறையிலே "ஆணித்தலை எழுத்து" (Nail headed Script) என்று குறிப்பிடுவது வழக்கம். அதிலே எழுதப்பெற்ற சாச னங்கள் மிகக் குறைவு. அத்தகைய சாசனங்கள் தட்சிணத்திலும் மத்திய இந்தியா விலும் தான் கிடைத்துள்ளன. பெட்டி போன்று சதுரமான தலைக்கட்டை யுடைய "பெட்டித்தலை எழுத்தின்" (Box-headed Script) ஒரு வகையே இது என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுவர். சில சாசனங்களிலே இந்த இரு வகை எழுத்துகள் விரவி வந்திருப்பதையும் காணலாம். பெட்டித்தலை வகையிலே உண்மை, போலி என்ற இரு வகை உண்டு. தலைக்கட்டு சதுரமாகவோ நீண்ட சதுரமாகவோ நான்கு கோடுகளைக் கொண்டது ஒரு பிரிவு. அதிலே அந்த நான்கு கோடுகளுக்கும் உட்பட்ட பாகம் அப்படியே விடப்பட்டிருக்கும். மற் றொரு பிரிவிலோ கோடுகளுக்குள் அகப்பட்ட பாகம் பள்ளமாகத் தோண்டி யெடுக்கப்பட்டிருக்கும். ஆணித்தலை எழுத்துகளிலும் இந்த இரு வகைகள் காணப் படுகின்றன. இந்தச் சாசனத்திலே இந்த இரு வகைகளும் கலந்தே காணப்படுகின் றன. சாசனம் பொறிக்கப்பட்ட காலத்தை நிர்ணயிக்க இது ஓரளவு பயன்படும்.

இந்தச் சாசனம் பொறிக்கப்பட்ட கிரந்தம், தமிழ் ஆகிய இரு வகை எழுத்துகளும் முதலாம் பரமேச்வரவர்மனுடைய கூரம் செப்பேடுகளில் காணும் வகையையே பெரிதும் ஒத்திருக்கின்றன. எனினும் கிரந்தத்திலே "ஷ"

(வரி 25, இன்னும் வரி 13-ல் உள்ள "ஷு" போன்ற உயிர் மெய்யெழுத்திலும், "ஞு" போன்ற கூட்டெழுத்திலும் காணும் வடிவம்), "க்ஷ" (வரிகள் 7, 16), "ண" (வரிகள் 9, 24) போன்றவைகளும், தமிழிலே "ண" (வரிகள் 29, 64) "று" (வரிகள் 33, 59) போன்றனவும் கூரம் சாசனத்தில் காணும் வடிவங்களை விடப் பழமையானவையாக உள்ளன. இதைக் கொண்டு பார்த்தாலே இந்தச் சாசனம் கூரம் சாசன காலத்திற்கு ஒரு நூற்றாண்டாவது முற்பட்டதாக இருத்தல் வேண்டும் என்பது தெளிவாகும்.

அரசன் உத்தரவைக் கொண்டனவாக நம் நாட்டில் கிடைக்கும் சாசனங்களெல்லாம் **ஸ்வஸ்திஸ்ரீ** என்ற மங்கல வாக்கியத்துடனே தான் ஆரம்பமாகும். ஆனால் இந்தச் சாசனம் அதற்கு விலக்கு; எனினும் ஆரம்பத்திலே மங்கலச் சொல் இல்லாமலில்லை. ஸம்ஸ்கிருதப் பகுதி **ஸ்வர்கக** என்று ஆரம்பிக்கிறது. தமிழ்ப் பகுதி **கோ** அல்லது **கோவிசைய** என்ற சொல்லுடன் ஆரம்பமாகிறது.

ஸம்ஸ்கிருதப் பகுதியிலே ரகர ஒற்றுக்குப் பின்னால் வரும் மெய்யெழுத்துகள் இரட்டித்திருப்பதைக் காணலாம். [illegible] (வரி - 4), [illegible] (வரி - 10) ஆகியவற்றை உதாரணங்களாகக் காட்டலாம். அவ்விதம் வரும்போது, வர்க்கத்தின் நான்காவது எழுத்து வரும் இடங்களில் மூன்றாவது எழுத்தை இரட்டிப்பின் பாகமாக அமைத்து ஆள்வர். (உ - ம்) ஸ்ரீ [illegible] (வரி - 17). இம்மாதிரியே வர்க்கத்தின் இரண்டாவது எழுத்து வரும் இடங்களில் வர்க்கத்தின் முதல் எழுத்து இரட்டிப்பின் பாகமாக ஆளப்படும். (உ - ம்) [illegible] (வரி - 17). இம்முறை அந்தக் காலத்திய சாசனங்கள் எல்லாவற்றிலும் காணப்படுகிறது.

கிரந்த எழுத்திலே அநுஸ்வாரம் பெரும்பாலும் சிறு வட்டமாக வரியிலே உரிய இடத்தில் தனியாகக் கொடுக்கப்பட்டிருக்கும். சிற்சில சமயங்களில் அது வரிக்குமேலே மற்றோர் எழுத்தின் தலையிலே, கூட்டெழுத்துப் போலவே—எனினும் தனியாக—காணப்படுவதும் உண்டு. இந்தச் சாசனத்திலே இந்த இரு முறைகளும் ஆளப்பட்டுள்ளன. 4–ஆம் வரியில் [illegible] என்பதிலும், 6-ஆம் வரியில் [illegible] என்பதிலும் அநுஸ்வாரம் அந்த வரியிலேயே தனி எழுத்தாக எழுதப்பட்டிருப்பதைக் காணலாம். 10, 11-ஆம் வரிகளிலே ஸி॰ஹ என்ற பெயர்ப்பகுதியில் அது எழுத்தின் தலையிலே கொடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அந்த இடங்களிலே ஸிஹ என்று எழுதப்பட்டு, அநுஸ்வாரம் சுழியின் வடிவிலே பின்னால்வரும் எழுத்தான ஹகரத்தின் தலையிலே இடப்பட்டுள்ளது. வேறு சாசனங்களிலும் சில இடங்களில் இதே முறை ஆளப்பட்டு வந்துள்ளது. உதாரணமாக, முதலாம் பரமேச்வர வர்மனுடைய

உன்னகுரவயபாளேயம் செப்பேடுகளிலே 5-ஆம் வரியில் வரும் "ஸ்ரீ நரஸிம்ஹ வர்ம்ம" என்ற பெயரிலும் இதேபோலத்தான் எழுதப்பட்டுள்ளது. அதை எபி கிராபியா இந்திகாவில் பதிப்பித்த டாக்டர் ஸர்க்கார் "ஸிஹம்" என்றே வாசித்து, அடிக்குறிப்பில் "ஸிம்ஹ" என்று திருத்தியிருக்கிறார்.[8] நாகர எழுத்திலே அநுஸ்வாரம் முன் எழுத்தின் தலையில் இடப்படும் முறையை ஒட்டியே அவ்விதம் வாசித்திருக்கிறார்கள் எனலாம். கிரந்த எழுத்திலே அவ்விதம் வாசிக்கக் கூடாது. அநுஸ்வாரம் நடுவரியிலே உரிய இடத்தில் தனி எழுத்தாக இல்லாமல் வேறோர் எழுத்தின் தலையில் இடப்பெறும்போது அது ஒரு கூட்டெழுத்தின் நிலையையே அடைகிறது. மகர ஒற்று இருக்கவேண்டிய இடத்தில் அது எழுதப்பட்டிருக்கிறது. கூட்டெழுத்திலே ஒற்றாக உள்ளதை மேலாகவும் அடுத்து வரும் உயிர்மெய்யின் மெய்யெழுத்தை அதன் அடியிலும் எழுதி உயிர்க்குறியை இரண்டு மெய்களையும் ஒன்றாகக் கொண்ட உருவத்தின் தலையிலே இடுவது வழக்கம். அந்த முறையை ஒட்டியே மகர ஒற்றுக்குப் பதிலாக அநுஸ்வாரத்தை எழுதும்போது அது பின்னால் வரும் உயிர்மெய்யின் தலையிலேதான் அமையும். அந்த விதமாக இவ்விடத்தில் "ஸிம்ஹ" என்றே வாசிக்கவேண்டும். அதே முறைதான் இந்தப் பதிப்பிலே பின்பற்றப்பட்டுள்ளது.

தமிழ்ப் பகுதியிலே ஒற்றெழுத்துகள் புள்ளியிடப்பட்டே உள்ளன. அந்தப் புள்ளி பெரும்பாலும் ஒரு செங்குத்தான கோடாகவும், சில இடங்களில் சிறிய நெளியுடன் கூடியதாகவும் காணப்படுகிறது.

அந்தக் காலத்து வழக்கில் அமைந்த "விடுதக" (வரி - 33), "விடுந்த" (வரி - 35) போன்ற சொற்களும் கவனிக்கத்தக்கவை. இன்னும் "முள்ளெறிபா [க்க]த் தெல்லை" (வரி - 58) என்னுமிடத்திலே ககரம் இரட்டித்த எழுத்துகள் விடப்பட்டுள்ளன. இதே முறை கூரம் செப்பேடுகளிலும் இரண்டு இடங்களில் காணப்படுவதை நோக்கும்போது இது அந்தக் காலத்து வழக்காக இருக்குமோ என்று சந்தேகிக்கத் தோன்றுகிறது.

ஸம்ஸ்கிருதப் பகுதி ஜிநேந்திரர், முநீந்திரர், தேவேந்திரர் ஆகிய மூன்று வகைக் கூட்டத்தார்க்கும் வணக்கம் கூறும் சுலோகத்தோடு ஆரம்பிக்கிறது. அப்பால் பல்லவ வம்சத்தின் புரான வரலாற்று வழியைக் கூறுவதாக உள்ளது. எனினும் ஏட்டின் முன்பாதியே உள்ளதால் அந்தப் பெயர்களுள் சிலவே காணப்படுகின்றன. அம்புஜநாபர் (விஷ்ணு), கீர்வாணேசர் (இந்திரனுடைய) (குருவான பிரகஸ்பதி), சம்யு, பரத்வாஜர், துரோணர், (சிவன்) அம்சமாகப் பிறந்த (அசுவத்தாமன்) பல்லவன் ஆகிய பெயர்கள் காணப்படுகின்றன. பிற சாசனங்

8 எபிகிராபியா இந்திகா, தொகுதி 32, பக்கம் 96.

களிலே அவர்களுடைய வம்சவழி விஷ்ணு, அவருடைய நாபிக்கமலத்திலே தோன்றிய பிரம்மா, அங்கிரஸ், பிரகஸ்பதி, சம்யு, பரத்வாஜர், துரோணர், அசுவத்தாமன், பல்லவன் என்ற முறையில்தான் காணப்படுகிறது. அதைக் கொண்டு பார்த்தால் பல்லவர்களுடைய புராண வம்ச பரம்பரையே இதில் கொடுக்கப்பட்டிருக்கிறது எனலாம். இவ்விதம் முறையே வந்த பல்லவ வம்சத்தில் சிம்மவர்மன் பிறந்தான். அவனுடைய பாதங்களைப் பல அரசர்கள் வணங்கினர்கள். அவனுக்குச் சிம்மவிஷ்ணு மகனுகப் பிறந்தான். அந்தச் சிம்ம விஷ்ணு "ஜிதஸிம்ஹவிஷ்ணு" என்று புகழப்பட்டிருக்கிருன். இதிலிருந்து ஸிம்ஹ விஷ்ணு என்ற அதே பெயரைக் கொண்ட வேருெருவனை இவன் வெற்றி கொண்டான் என்பது புலப்படும்.

இவன் பல போர்களிலே வெற்றி கொண்டவன். கரும்பு வயல், நெல் வயல் ஆகியவைகளை ஆடையாகவும், கமுகுத் தோட்டம், வாழைத் தோட்டம் ஆகியவைகளை மேகலையாகவும் கவேரன் மகளான காவேரி நதியை மாலையாகவும் கொண்ட சோழ நாட்டையும் கைப்பற்றினன். ஸ்ரீவர்த்தமாநேச்வர தர்ம தீர்த்தத்தில் நந்தி சங்கத்தைச் சேர்ந்த வஜ்ரநந்தி என்னும் பெரியாருக்கு ஜிநேந்திரர், ஜைநேந்திரர், முநீந்திரர் ஆகிய கூட்டத்தாரைப் பூஜிப்பதற்காகச் சிரமணுச்ரமம் என்ற கிராமத்தை அரசன் அளித்தான். அதற்கு ஆக்ஞப்தி (ஆணத்தி அல்லது நிறைவேற்றுபவன்) நரபயன் என்ற மந்திரி ஆவன். எல்லாச் சாஸ்திரங்களை அறிந்தவரும் அறிவில் பிரகஸ்பதியை ஒத்தவருமான மேதாவி என்பார் அந்தச் சாசனத்தின் பிரசஸ்தியை இயற்றினர்.

தமிழ்ப் பகுதியிலே விசையஸிம்ஹவர்மன் என்னும் அரசன் தன்னுடைய ஆட்சியின் ஆரும் ஆண்டிலே வெண்குன்றக் கோட்டத்துப் பெருநகர நாட்டு அமண்சேர்க்கை என்னும் கிராமத்தைப் பருத்திக்குன்றில் வஜ்ரநந்தி எனும் குரவர்க்குப் பள்ளிச்சந்தமாக அளித்த செய்தி காணப்படுகிறது. அவ்விதம் அளிக்கப்பட்ட கிராமத்தின் நான்கெல்லைகளும் விவரமாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் தாமர் என்னும் கிராமத்தில் பதினறரைப்பட்டி நிலம் அதே வஜ்ரநந்திக் குரவர்க்குப் பள்ளிச்சந்தமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நரபயன் ஆணத்தியால் பரதத்தி சென்றது என்று கூறுவதோடு சாசனம் பூர்த்தியாகிறது. முடிவிலே ஸி என்ற கிரந்த எழுத்தைப் போன்ற உருவம் காணப்படுகிறது. ஸித்தம் என்பதன் சுருக்கமே போலும்.

பல்லவர்களிலே சிம்மவிஷ்ணு என்று பெயர் கொண்டவன் ஒருவனைப் பற்றியே நாம் அறிவோம். அவனே முதலாம் மகேந்திரவர்மனுடைய தந்தை. அவனே காவிரி பாயும் சோழ நாட்டை முதன்முதலாக வென்று பல்லவ ஸாம்ராஜ்யத்தின் கீழ்க் கொணர்ந்தான் என்று மூன்றும் நந்திவர்மனுடைய வேலூர்ப்

பாளையம் செப்பேடுகளிலே கூறப்பட்டுள்ளது (சுலோகம் 10). அதே செய்தி இந்த இரண்டு சாசனங்களிலும் ஒரேவிதமான வாசகத்தால் கூறப்பட்டிருக்கிறது. அதிலிருந்து இந்தச் சாசனத்தை வழங்கிய சிம்மவர்மன் மகனை சிம்ம விஷ்ணு முதலாம் மகேந்திரவர்மனுடைய தந்தையே என்பது தெளிவாகும்.


கி. பி. ஏழாம் நூற்றுண்டின் முதல் பாதத்தையே முதலாம் மகேந்திர வர்மனுடைய ஆட்சிக் காலமாக ஆராய்ச்சியாளர்கள் கருதுவர். அவன் மகனை வாதாபிகொண்ட நரசிம்மவர்மன் மேலைச் சாளுக்கிய அரசனை முதலாம் புல கேசியை வென்று அந்த நாட்டை அடிப்படுத்தியவன். அந்த நிகழ்ச்சி கி. பி. 642-ஆம் ஆண்டளவில் நடந்தது. இதை எடுத்துக் காட்டுவதாக வாதாபியில் கிடைக்கும் பல்லவ நரசிம்மவர்மனுடைய கல்வெட்டு அவனுடைய ஆட்சியின் பதின்மூன்றும் ஆண்டிலே பொறிக்கப்பட்டதாகும்.[9] அதனல் அவன் ஆட்சி கி. பி. 630-ஆம் ஆண்டளவில் ஏற்பட்டதெனக் கொள்ளலாம். அவன் தந்தை யான முதலாம் மகேந்திரவர்மன் தமிழ்நாட்டிலே கல்லில் குடைவித்து உண் டாக்கிய கோவில்கள் பலவற்றையும் அவற்றினுள் காணும் சிற்ப வளர்ச்சியை யும் கவனிக்கும்போது அவனுடைய ஆட்சி நீண்ட காலம், சுமார் ஐம்பது ஆண்டுகள், நடைபெற்றிருத்தல் கூடும் எனக் கருதலாம். அது ஏறக் குறைய கி. பி. 575-க்கும் 630-க்கும் இடைப்பட்டதாகும். அவ்விதமானல் அவன் தந்தை யான சிம்மவிஷ்ணுவின் ஆட்சிக் காலம் கி. பி. ஆறும் நூற்றுண்டின் மூன்றும் பாதம் (550–575) எனவும், இந்தச் சாசனத்தை வழங்கிய சிம்மவர்மன் ஆட்சிக் காலம் அதற்கும் முற்பட்டது, அதாவது இரண்டாம் பாதம் (525–550), எனவும் கொள்ளலாம். இதிலே சிறிது முன்பின்னுக இருந்தாலும் தானம் வழங்கப்பட்ட சிம்மவர்மனுடைய ஆட்சியின் ஆறும் ஆண்டு கி. பி. 550-ஆம் ஆண்டளவில் இருக்கலாம் என்று கொள்வது தவருகாது.

சாசனம் இவ்வளவு பழமையானதாக இருக்கக்கூடுமா என்று சிலர் சந் தேகிக்கலாம். முக்கியமாக, பல்லவ வம்சத்தின் முன்னேர்களாகப் புராண புரு ஷர்களைக் கொண்டு அமைக்கப்பட்ட வம்ச பரம்பரை இந்தச் சாசனத்திலே காண்பதை ஓர் ஆட்சேபமாகக் காட்டலாம். அத்தகைய பழக்கம் கி. பி. 11-ஆம் நூற்றுண்டுக்குப் பிறகே ஏற்பட்டதென்ற ஓர் அபிப்பிராயம் பொதுவாக நிலவி வருகிறது.[10] அதை அவ்வளவு உறுதியாகக் கொள்ள முடியாது. அதற்கு முற்பட்ட காலத்துச் சாசனங்களிலும் அந்த முறை காணப்படு கிறது. அவற்றை எடுத்துக்காட்டுவதற்கு முன்னதாக இந்தோ–சீனவிலிருந்து கிடைத்த ஒரு கல்வெட்டில் காணும் சுலோகம் ஒன்றைக் கவனிக்கவேண்டியது அவசியம். இப்போது வியட்நாம் ராஜ்யத்தில் அடங்கியதான பழைய அன்னும் ராஜ்யத்தில் “குவாங்-நம்” மாகாணத்தில் “மி-சோன்” என்னும் இடத்திற்குப் பன்னிரண்டு மைல் தூரத்திலுள்ள “தோங்-துவாங்” (Dong-Duang) என்னும்

9 தெ. இ. சாசனங்கள், தொகுதி 11, சாசனம் 1; முன்னுரை முதற்பக்கத்தையும் பார்க்க.

10 பிளீட் (J. F. Fleet) எழுதிய “கன்னட ஜில்லாக்களின் (அரச) வம்சங்கள்” (Dynasties of the Kanarese Districts) பம்பாய் கெஜட்டியர், தொகுதி 1, பாகம் 2, பக்கம் 342,

ஊரிலிருந்து கிடைத்த அந்தக் கல்வெட்டு சகாப்தம் 797–, அதாவது கி. பி. 875-ஆம் ஆண்டில், சம்பா தேசத்து அரசனுன இந்திரவர்மனுல் வழங்கப்பட்டதாகும்.[11] அது பின்வருமாறு—



"சில இடங்களில் இந்திரன் வழித்தோன்றலோ, பிரம்மாவின் வழித்தோன்றலோ, விஷ்ணுவின் வழித்தோன்றலோ, மற்றும் சில இடங்களில் நாகராஜனிடமிருந்தோ, இன்னும் சில இடங்களில் சங்கரனிடமிருந்தோ, வேறு சில இடங்களில் முனிவர், சூரியன், சந்திரன், வருணன், அக்னி, என்பவர்களின் உருவமாகவோ, சில இடங்களில் அபயதர் (புத்தர் பெருமான்) உருவமாகவோ உண்டானவன், பிராணிகளின் விடுதலை காரணமாகத் தோன்றினுன்."

இந்தச் சுலோகத்திலிருந்து அந்நாளிலேயே இராச குடும்பங்கள் பலவற்றில் ஒவ்வொன்றும் ஏதோ ஒரு புராண புருஷரிடமிருந்து தோன்றியதாக வம்சவழி நன்கு அமைந்திருந்தது என்பதும், அவற்றை உண்மையென்றே பூரணமாக அனைவரும் கொண்டிருந்தார்கள் என்பதும், அவை நம் நாட்டில் மட்டுமல்லாமல் கடல் கடந்த தீவாந்தரப் பிரதேசங்களிலும் வழக்கில் இருந்து வந்தன என்பதும் தெளிவாக விளங்கும். பல்லவர்கள் பற்றிய வரையில் முதலாம் பரமேச்வரவர்மனுடைய கூரம் செப்பேட்டுச் சாசனத்திலும் இந்தப் புராண வம்சாவளி காணப்படுகிறது. பள்ளன்கோவில் சாசனம் அல்லாமல், இதுகாறும் கிடைத்துள்ள பல்லவ செப்பேட்டுச் சாசனங்களுள் கூரம் சாசனமே காலத்தால் பழமையானது. அது சுமார் கி. பி. 680-ஆம் ஆண்டில் வழங்கப்பட்டதாகும். அவனுடைய மகனுன இராஜசிம்மன் என்னும் இரண்டாம் நரசிம்மவர்மனுடைய கல்வெட்டுகளிலும் இந்த வரன்முறை காணப்படுகிறது. பனைமலைக் கோயில்,[12] காஞ்சிபுரம் கைலாசநாதர் கோயில்,[13] வாயலூர்க்கோயில்–தூண்[14] ஆகியவற்றில் காணும் கல்வெட்டுகளை எடுத்துக் காட்டலாம். இவற்றிலிருந்து, கி. பி. ஏழாம் நூற்றுண்டின் பிற்பகுதியிலேயே புராண புருஷர்களை முன்னோர்களாகக் கொண்ட வமிச பரம்பரை பல்லவர்களுக்கு வழக்கில் இருந்ததென்பது

11. பிரெஞ்சு தூரக்கிழக்குக் கல்லூரியின் பத்திரிகை, தொகுதி 4 (Bulletin de l'Ecole Francaise d'Extreme-Orient, Tome IV) பக்கம் 88 இன்னும் டாக்டர் ஆர். ஸி. மஜூம்தார் எழுதிய சம்பா (Ancient Indian Colonies in the Far East, Vol. I Champa by Dr. R. C. Majumdar) என்ற நூலின் மூன்றும் பாகமான "சம்பா சாசனங்கள்", எண் 31, கல்லின் இரண்டாம் பக்கம் (Face B) சுலோகம் 7. பழைய ஆசிரியர்கள் அதன் பொருளைச் சரியாக உணரவில்லை என்றே தோன்றுகிறது.

12. எபி. எபி. இந்திகா, தொகுதி 19, பக்கங்கள் 113–114.

13. தெ. இ. சாசனங்கள், தொகுதி 1, எண் 24, பக்கம் 12.

14. எபி. இந்திகா, தொகுதி 18, பக்கங்கள் 150–151.

தெளிவாகும். அதற்கு முன்னதாக எவ்வளவு காலமாக அது வழக்கில் இருந்து வந்ததென்பதோ, எப்போது முதலில் ஏற்பட்டதென்பதோ தெரியவில்லை. பள்ளன்கோயில் சாசனம் அதற்கு ஒரு நூற்ருண்டே முற்பட்டதென்பதை நோக்கினுல், அது அளிக்கப்பெற்ற ஆரும் நூற்ருண்டிலே அந்த வழக்கு இருந்து வந்ததென்று கொள்வது முறையே என்னலாம். [15]

சாசனத்தை வழங்கிய அரசனுன சிம்மவர்மனுடைய பாதங்களை அநேக அரசர் பணிந்தனர் என்பதைத் தவிர, அவனுடைய வீரச் செயல் வேறு ஏதும் குறிக்கப்படவில்லை. ஆனுல் அவனுடைய மகன் சிம்மவிஷ்ணு பலபடியாகப் புகழப்பட்டிருக்கின்ருன். அவன் அப்போது பட்டத்து இளவரசனே. தந்தை வழங்கிய சாசனத்தில் மகன் புகழப்பட்டிருப்பது அபூர்வமானது; வேறு இடங்களில் காணக்கிடைக்காதது. அவ்விதம் செய்திருப்பதற்குத் தகுந்த காரணம் இருத்தல் வேண்டும். தந்தை முதுமையினுல் பெயரளவிலே அரசனுயிருக்க, மகன் முன்னின்று எல்லாக் காரியங்களையும் நிர்வகித்து வந்தான் என்று கொள்ளலாம்; அல்லது சாசனத்திலே கண்ட தானம் வழங்கப்பட்டதற்கு அவனும் ஓரளவு பொறுப்பாளியாக இருந்தான் எனக் கொள்ளலாம். ஒருகால் இரண்டுமே பொருந்தியிருத்தல் கூடும். சிம்மவிஷ்ணுவின் விஷயத்திலும் அவ்விதமே போலும்.

மைசூர் ராஜ்யத்தில் உள்ள ஹொஸக்கோட்டை என்னுமிடத்திலிருந்து கிடைத்த மேலைக் கங்க அரசனுன அவிநீதன் ஆட்சியின் பன்னிரண்டாம் ஆண்டிலே அளிக்கப்பட்ட செப்பேட்டுச் சாசனம் ஒன்று கவனிக்கத்தக்கது. பல்லவ ராஜகுமாரனுன சிம்மவிஷ்ணுவின் தாய் தன் கணவனுடைய குலத்தின் கீர்த்தி பெருகுவதற்கும் தன்னுடைய தர்மம் (புண்ணியம்) பெருகுவதற்குமாக எழுப்பிய அருகக்கடவுள் ஆலயத்தின் பராமரிப்புக்காக ஜைனர்களின் யாவநிக சங்கத்

15. புறநானூற்றில் தொகுக்கப்பெற்ற பாடல் ஒன்றிலே (201) இருங்கோவேள் என்ற குறுநில மன்னன்,

வடபான் முனிவன் தடவினுள் தோன்றி,
செம்பு புனைந்து இயற்றிய சேண் நெடும் புரிசை
உவரா ஈகைத் துவரை யாண்டு
நாற்பத்தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே!

என்று கபிலரால் பாடப் பெற்றிருக்கிருன். அந்தக் காலத்திலேயே தமிழ்நாட்டுக் குறுநில மன்னர்களில் சிலர் புராண புருஷர்களான வடநாட்டு முனிவர்களைத் தங்கள் முன்னேரராகக் கருதி வந்தனர் என்பது அதனுல் நன்கு விளங்கும்.

தடவு என்ற சொல்லுக்கு ஓமகுண்டம் என்று பழைய உரையாசிரியர் உரை கண்டிருக்கின்றனர். அதற்கு ஆதாரம் தெரியவில்லை. பாத்திரம் என்றும் பொருள் கொள்ள முடியும். தடா தடவு; விழா—விழவு; கனு—கனவு ஒப்பு நோக்குக).

திற்கு நிலம் அளித்த செய்தியை அது தெரிவிக்கிறது. அந்தச் சாசனத்திலே கோயிலை எழுப்பிய அவள் பெயரோ, அதன் கீர்த்தியை அடைய வேண்டிய அவளுடைய கணவனான பல்லவ அரசன் பெயரோ காணப்படவில்லை. அவள் மகனான சிம்மவிஷ்ணுவின் பெயர் மட்டுமே காணப்படுகிறது. அவன் பல்லவாதிராஜன் என்றும், பலவகை ஆகமங்களான நீரால் கழுவப்பட்டுத் தூய்மை அடைந்த அறிவை உடையவன் என்றும், சகல மந்திர தந்திரங்களில் நுழைந்து உள்ளுறை பொருளை அறிந்தவன் என்றும், குடிமக்களை ஆண்டுவருபவன்'' என்றும் புகழப்பட்டிருக்கிறான்.

இந்தப் பள்ளன்கோயில் சாசனத்திலே சிம்மவிஷ்ணு அதே பெயரைக் கொண்ட வேறு ஓர் அரசனை வெற்றிகொண்டான் என்று காணப்படுகிறது. கசாக்குடிச் செப்பேடுகளிலே பல்லவ சிம்மவிஷ்ணுவைப் பற்றிக் கூறுமிடத்தில் "அவநிஸிம்ஹ: ஸிம்மர்வ்விஜிஷ்ணு:'' (வரிகள் 50, 51) என்று காணப்படுகிறது. பதிப்பாசிரியர் அதை, "வெற்றி வீரனான ஸிம்ஹவிஷ்ணுவான அவநிஸிம்ஹன்'' என்று கொண்டிருக்கிறார். வேறொரு சிம்மவிஷ்ணுவை இவன் வெற்றிகொண்டான் என்பது அப்போது தெரியாததால், அவ்விதம் பொருள் கூறினர் போலும். எனினும் சிம்மன் அல்லது சிம்மவிஷ்ணு என்ற வேறொருவனை அவன் ஜயித்தான் என்ற செய்தி இப்போது நமக்குத் தெரிவதைக் கொண்டு பார்த்தால், அது அந்தச் சாசனத்திலும் குறிக்கப்பட்டிருப்பதாகவே கொள்ளலாம்.

பல்லவ சிம்மவிஷ்ணுவைத் தவிர, அதே பெயரைக் கொண்டவனாகத் தெலுங்குச் சோழர்கள் என்று குறிக்கப்பெறும் சோழர்களின் கிளை வம்சத்து அரசன் ஒருவனைத்தான் நாம் அறிவோம். அவனும் ஏறக்குறைய அதே காலத்தில் வாழ்ந்தவனெனக் கொள்ளலாம். தெலுங்குச் சோழர்கள் வம்சாவளியைப்பற்றி அந்த வம்சத்தைச் சேர்ந்த புண்ணியகுமாரனுடைய செப்பேடுகளிலேதான் முதல் முதலாகக் குறிக்கப்பட்டுக் காண்கிறது; அதுவும் புண்ணியகுமாரனுடைய முப்பாட்டனான நந்திவர்மனிடமிருந்தே தொடங்குகிறது. நந்திவர்மனுக்குச் சிம்மவிஷ்ணு, சுந்தரநந்தன், தனஞ்சயன் என்ற மூன்று பிள்ளைகள் இருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே ஒவ்வொரு ராச்சியத்துக்கு அரசராக ஆனார்களாம். பின் இருவர்களின் வழிவந்தவர்களைப் பற்றி நாம் அறிவோம். சிம்மவிஷ்ணுவின் வழித்தோன்றியவர்களைப் பற்றி நமக்கு எதுவும் தெரியாது. சென்னைப் பொருட்காட்சிச்சாலையில் உள்ள செப்பேட்டுச் சாசனத்தை வழங்கிய ஸ்ரீகண்ட சோழாதிராஜன் சுந்தரநந்தனுடைய வழித்தோன்றல் ஆவன். தனஞ்சயனுக்கு மகேந்திரவிக்கிரமவர்மன் என்று ஒரு மகன் இருந்தான். சோழ மகாராஜன் என்ற விருதை அவன் நன்கு அடைந்தான் (பரி

ப்ராப்த சோழமஹாராஜ சப்த:). அவனுக்கு 'முதிதசிலாக்ஷர' (கல்லெழுத்தில் ஆசை கொண்டவன்), நவராமன் போன்ற விருதுகள் உண்டு. அவனுக்குக் குணமுதிதன் என்பவனும் அவன் தம்பி புண்ணியகுமாரனுமாகிய இரண்டு பிள்ளைகள் உண்டு. புண்ணியகுமாரனுக்குப் போர்முகராமன், புருஷசார் தூலன், மார்த்தவசித்தன், மதனவிலாஸன் போன்ற விருதுகள் உண்டு. அவற்றுள் பின்னல் கூறப்பட்ட இரண்டும் பல்லவமகேந்திரனுடைய மத்த விலாஸன், விசித்ரசித்தன் என்ற விருதுகளை ஒத்திருப்பவை. புண்ணியகுமார னுடைய சாசன எழுத்துகளையும் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் மத்தியைச் சார்ந்தனவாகக் கொள்ளலாம். பள்ளன்கோயில் சாசனத்தை வழங்கிய சிம்ம வர்மனுக்கு முன்னல் நந்திவர்மன் என்பானே பல்லவ அரசனாக விளங்கினான் என்று ஆராய்ச்சியாளர் கொள்வர். சோழன் நந்திவர்மனை அதே பெயரைக் கொண்ட பல்லவ அரசன் காலத்தில் வாழ்ந்தவனாகவே கருதலாம். அவ்வித மானல், சோழ அரசனான சிம்மவிஷ்ணு பல்லவ சிம்மவிஷ்ணுவின் காலத்தைச் சேர்ந்தவனாகவே இருக்கலாம்.

சோழ மன்னனான சிம்மவிஷ்ணுவைப் பற்றி வேறு இடங்களிலிருந்து ஏதும் தெரியவில்லை. எனினும் விஷ்ணுவினுடைய நரசிம்ம அவதாரத்தின் பெயரைத் தரித்தவனாகச் சோழ மன்னன் ஒருவனை நாம் கொள்ளமுடியும்.

புறநானூற்றுப் பாடல் (74) ஒன்றன் முடிவிலே, "சேரமான் கணைக்கால் இரும்பொறை, சோழன் செங்கணானோடு திருப்போர்ப்புறத்துப் பொருது, பற்றுக்கோட்பட்டு, குடவாயில் கோட்டத்துச் சிறையில் கிடந்து, 'தண்ணீர்தா' என்று பெறாது, பெயர்த்துப் பெற்று, கைக்கொண்டிருந்து உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு" என்று கூறுகிறது. பதினெண் கீழ்க் கணக்கில் அடங்கிய 'களவழி நாற்பது' என்னும் நூலின் இறுதியில், "சோழன் செங்கணானும் சேரமான் கணைக்கால் இரும்பொறையும் (திருப்)போர்ப் புறத்துப் பொருது, உடைந்துழி, சேரமான் கணைக்கால் இரும்பொறையைப் பற்றிக்கொண்டு சோழன் சிறைவைத்துழி, பொய்கையார் களம்பாடி, வீடு கொண்ட களவழி நாற்பது" என்னும் குறிப்பு உள்ளது. பொய்கையார் சேரன் பொருட்டுச் சோழனைப் புகழ்ந்து களவழி பாடிய செய்தி மூவர் உலாவிலும், கலிங்கத்துப்பரணியிலும், பாட்டுடைத் தலைவர்களான சோழ மன்னர்களுடைய இராசபாரம்பரியம் கூறும் இடங்களிலே உரைக்கப்பட்டிருப்பதைக் காணலாம். வேறு சில தனிப்பாடல்களும் உண்டு. அவை யாவும் ஒரே சம்பவத் தைக் குறிப்பனவாகவே ஆசிரியர்கள் பொதுவாகக் கருதுவார்கள். நுணுகிக் கவனித்தால், சில்லறை விவரங்களுள் அவற்றிலே சில வேறுபாடுகள் காணலாம். அவைகளைச் சமரசப்படுத்தி இணைத்து நிகழ்ச்சியை விவரிக்க முடியும். அதை வேறோர் இடத்தில் காண்போம்.

களவழி நாற்பதிலே. "காவிரிநாடன் கழுமலம் கொண்ட நாள்" (பாடல் 36) குறிக்கப்பட்டுள்ளது. "கணையன் அகப்படக் கழுமலம் தந்த" சோழன் ஒருவனைப் பற்றி அகநானூற்றுப் பாடல் ஒன்றும் (44) குறிப்பிடுகிறது. குடவாயிற் கீரத்தனார் என்பார் பாடியதாகக் காணும் அந்தப் பாடலில்,

"நன்னன், ஏற்றை, நறும்பூண் அத்தி,
துன் அருங் கடுந் திறற் கங்கன், கட்டி,
பொன்அணி வல்வில் புன்றுறை என்று ஆங்கு
அன்று அவர் குழீஇய அளப்பு அருங் கட்டூர்ப்
பருந்து படப் பண்ணி, பழையன் பட்டென,
கண்டது நோனானாகி. திண்தேர்க்
கணையன் அகப்பட, கழுமலம் தந்த
பிணையல் அம்கண்ணிப் பெரும்பூட் சென்னி"

என்ற பகுதி உள்ளது. இதற்குப் பழைய உரை ஒன்று உண்டு. அது "நன்னன் முதலாயினார் சேரன் படைத்தலைவர்; கணையன் சேரன் படை முதலி, முன் சொன்னவர்க்குப் பிரதானி; கழுமலம் ஓர் ஊர்" என்று குறித்துள்ளது. இந்தப் பாடலிலே சேரன் படைத்தலைவர்களாக அறுவர் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். அவர்களுள் ஏற்றை, கங்கன், கட்டி ஆகிய மூவர் வரலாற்றிலே பிரதானமான இடம் பெற்றவர்கள். கங்கன் என்பது மைசூர் ராச்சியத்திலே தழைக்காட்டைத் தலைநகராகக் கொண்டு அரசு புரிந்த மேலைக் கங்க வம்சத்தவரில் ஒருவரையே குறிப்பதாகும். கங்க ராச்சியத்தை ஒட்டி அதன் வடக்கே வாதாபியைத் தலைநகராகக் கொண்டு அரசு புரிந்த மேலைச் சாளுக்கிய வம்சத்தில் பிறந்தவர்கள் சிலர் 'கத்தி அரசர்' என்ற பெயரைத் தரித்திருக்கிறார்கள். அந்த வம்சத்தை நிறுவிய முதலாம் புலகேசியின் மகனும் அந்த அரசு ஊன்றி நிற்பதற்குக் காரணமாக விளங்கியவனுமான முதலாம் கீர்த்திவர்மனே "கத்தியரசன்" என்று வர்ணிக்கப் பட்டிருக்கிறான்.[16] அது கட்டி அரசர் என்பதன் வேறு வடிவமே. ஏற்றை என்பது ஏறு. அதாவது காளையை அடையாளமாகக் கொண்டவர்களையே குறிக்கும். பல்லவ மன்னர்களுக்கு ரிஷபம் இலச்சினை என்பதை நாம் அறிவோம். இவற்றைக் கவனித்தால் செங்கணான் நடத்திய போரிலே தமிழ் நாட்டின் வடக்கு எல்லைப்புறத்திலிருந்த அரசுகள் பலவும் அவனுக்கு எதிராக ஒன்றுபட்டு இணைந்து நின்றன எனக் கொள்ளலாம்.

செங்கணான் பெயர் களவழியிலே செங்கண் மால் (பாடல்கள் 4, 5, 11) செங்கண் சினமால் (பாடல்கள் 15. 21, 29, 30, 40) என்ற வடிவங்களில் குறிக்கப்

16. எபி. இந்திகா, தொகுதி 28, பக்கம் 60 (Godachi plates of Katti Arasa).

பட்டிருக்கின்றன. இந்தச் சொற்கள் திருமாலேயும் குறிக்கும். அவற்றுள் இரண்டாவதாக உள்ளதே திருமாலின் நரசிம்ம அவதாரத்தை உணர்த்துவதாகக் கொள்ளலாம். அப்படியானுல் அது சிம்மவிஷ்ணு என்ற பெயரை உணர்த்துவதாக இருக்குமோ?

செங்கணுன், பழங்கதைகளில் காணும் ஒரு சோழ மன்னனுக மட்டும் அல்லாமல், தமிழ் நாட்டின் வரலாற்றில் சரித்திர காலத்திலே இடம் பெற்ற ஒருவனும் ஆவன். இராஜராஜ சோழனுடைய தந்தையான இரண்டாம் பராந்தகன் என்னும் சுந்தரசோழன் ஆட்சிக் காலத்திலே வழங்கப்பெற்ற அன்பில் செப்பேடுகளில் [17] இராசபாரம்பரியம் கூறுமிடத்திலே, கரிகாலனுக்குப் பிறகு நீண்ட நாள் கழித்துச் செங்கணுன் அரசு புரிந்தான் என்று கூறப்பட்டுள்ளது. அப்பால் அவன் மகன் நல்லடிக்கோன் பெயர் காணப்படுகிறது. அவனுக்கும், தஞ்சையில் அரசை நிறுவிய விசயாலயனுக்கும் இடையில் சோழருடைய பொதுப் பெயர்களுள் ஒன்ருன வளவன் என்பதைத் தவிர, ஸ்ரீகண்டன் என்ற ஒரு பெயரே உள்ளது. அந்த ஸ்ரீகண்டன் பொத்தப்பிக் குலச் சோழனுவான், விசயாலயனுக்கு ஒன்றிரண்டு தலேமுறைகளுக்கு முன்னுல் இருந்தவனுதல் வேண்டும். நல்லடிக்கோன் பெயர் வேறு இடங்களிலிருந்து தெரியவில்லே. எனினும் அவன் சரித்திர புருஷனே. அவன் தொண்டை நாட்டுப் பகுதியிலே அரசனுக விளங்கியது உறுதி. செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள புதுப்பாக்கம் கிராமத்திலிருந்து கிடைத்த சோழன் இராஜகேசரிவர்மனுடைய ஆட்சியின் இருபத்து மூன்ரும் ஆண்டு கொண்ட கல்வெட்டு ஒன்று மணயிற் கோட்டத்து மேல்பழுகூர் நாட்டு நல்லடிமங்கலத்துச் சபையார் படாரி கோயிலுக்கு இறையிலி நிலம் வழங்கிய செய்தியைத் தெரிவிக்கிறது. [18] அதிலிருந்து நல்லடிமங்கலம் என்ற அந்தப் பிரம்மதேயக் கிராமம் நல்லடிக்கோன் பெயராலேயே ஏற்பட்டிருத்தல் வேண்டும் என்பது விளங்கும். அன்றி, அவன் ஆட்சி காஞ்சிபுரத்தைச் சுற்றிய பிரதேசத்தில் நடைபெற்று வந்ததென்பதும் ஏற்படும். மாமல்லபுரத்திற்குச் சிறிது வடக்கேயுள்ள திருவிடவெந்தைக் கிராமத்தை ஒட்டிச் செங்கண்மாலீச்சுரம் என்ற ஊர் இருப்பதும் கவனிக்கத்தக்கது. அவ்விதமானுல், செங்கணுன், நல்லடிக்கோன் முதலியோர் தொண்டை நாட்டுப் பகுதியிலே காஞ்சிபுரத்தை ஒட்டிய பிரதேசத்தில் அரசு புரிந்து வந்தனர் என்பதும் தெரியவரும். இவற்றைக் கவனித்தால், பல்லவ சிம்மவிஷ்ணு வெற்றி

17. எபி. இந்திகா, தொகுதி 15, பக்கம் 68, சுலோகம் 13.

18. 1923–ஆம் ஆண்டின் என் 61 கொண்ட கல்வெட்டு, திரு. க. அ. நீலகண்ட சாஸ்திரி ஆங்கிலத்தில் எழுதிய "சோழர்கள்" (முதற் பதிப்பு), முதல் பாகம், பக்கம் 382. இதுவே தெ. இ. சா. தொகுதி 13, என் 303ம் ஆகும். அங்கே ஊரின் பெயர் "நல்லியமங்கலம்" என்று காணப்படுகிறது.

கொண்ட மற்றெரு சிம்மவிஷ்ணு சோழ அரசனே எனவும், செங்கணன் என்ப வனும் அவனே எனவும் கொள்ளலாம்.

சோழனுக்கு எதிரிகள் சிலர் கூட்டுச் சேர்ந்திருந்தது போலவே, சோழன் பக்கலிலும் சிலர் உதவியாக நின்றனர் என்றே தெரிகிறது. அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரும், இருக்குவேள் குலத்துக் குறுநிலமன்னருமான கொடும்பாளூர் வேள் இடங்கழி நாயனரைப் பற்றி நம்பியாண்டார் நம்பி தம் முடைய திருத்தொண்டர் திரு அந்தாதியிலே,

> "சிங்கத் துருவனைச் செற்றவன் சிற்றம்பலமுகடு
> கொங்கிற் கனகமணிந்த ஆதித்தன் குலமுதலோன்"

என்று பாடுகிருர். அதிலிருந்து இடங்கழியார் முதலாம் ஆதித்திய சோழனுக்கும் ஒரு வழியில் முன்னேர் என்பதும், சிங்கத்து உருவனை வேற்றரசன் ஒருவனைப் போரில் புறங்கண்டார் என்பதும் தெரியவரும். சிங்கத்து உருவன் என்பதைச் சிம்மவிஷ்ணுவைக் குறிப்பதாகவே கொள்ளலாம்.

சிம்மவிஷ்ணு ப்ராஜி (ஸ்ராஜி) வம்சத்தை அலங்கரித்தான் என்று சாசனம் (வரி 12) கூறுகிறது. அதிலிருந்து பல்லவர்கள் "ப்ராஜி" வம்சத்தைச் சேர்ந்த வர்கள் என்று கொள்ளலாம். ஆனல் அவ்விதம் வேறு எந்த இடத்திலும் காணப் பெறவில்லை. 'ப்ராஜி வம்சம்' என்ற குலத்தைப் பற்றியும் கேட்டதில்லை. அந்தத் தொடர் அந்தச் சுலோகத்தின் மூன்றும் பாதத்தில் வருகிறது. அது ஓர் அக்ஷரம் குறைவாக உள்ளது. அந்தச் சுலோகத்தின் மோனையை மனத்தில் கொண்டால், அதை "ப்ராஜிஷ்ணு (ஸ்ராஜிஷ்ணு) வம்சம்" என்றே கொள்ளவேண்டிவரும். ப்ராஜிஷ்ணு என்ற சொல் 'ஒளி விசுவது' என்ற பொருளோடு சிவன், விஷ்ணு ஆகிய இருவரையும் உணர்த்தும்.

பல்லவர்கள் விஷ்ணுவின் நாபிக்கமலத்தில் தோன்றிய பிரம்மா வினின்றும் உண்டானவர்களென்று தங்கள் வம்ச பரம்பரையைக் கூறிக் கொள்வர். காஞ்சிபுரம் வைகுண்டப் பெருமாள் கோயில் சுவர்களில் சிற்பங் களால் சித்திரிக்கப்பட்டுள்ள அந்த வம்சத்தின் வரலாற்றில் விஷ்ணுவின் உருவமே முதலாவதாக உள்ளது. எனினும் தங்களை எந்த இடத்திலும் விஷ்ணுவின் வம்சம் என்று அவர்கள் கூறிக்கொண்டதில்லை. தங்களைப் பிரம்ம—க்ஷத்திரிய குலம் என்றே அவர்கள் கூறிக்கொள்வர். சொல்லப்போனல் பாண்டியர், ராஷ்டிரகூடர் போன்ற வேறு பல ராஜ வம்சத்தவர்களும் தங்கள் பரம்பரையை விஷ்ணுவினிடமிருந்தே ஆரம்பித்துக் கூறிக்கொள்வதைக் காண லாம். எனினும் அவர்கள் தங்களைச் சந்திர வம்சம் என்பது போலவே

கூறிக்கொள்வர். இவைகளைக் கவனிக்கும்போது ப்ராஜிஷ்ணு என்ற சொல் விஷ்ணு என்ற பொருளைக் கொடுப்பதாகக் கொள்ள முடியாது.

பிற்காலத்தில் தோன்றிய பல்லவ வம்சத்து மன்னர்கள் தங்களை முக்கண்டிக் காடுவெட்டி அல்லது திரிநயன பல்லவன் என்பவன் வழி வந்தவர்களாகவே கூறிக்கொள்வர். அதனுல் முதல் அரசன் மூன்று கண்களையுடையவன் என்பதாகும். பல்லவர்களிலே ஒரு கிளையினர் என்று கூறிக்கொண்டு கர்நாடகப் பிரதேசத்திலே 8–ஆம் நூற்ருண்டின் மத்தியிலிருந்து 10–ஆம் நூற்ருண்டு முடிய ஆண்டு வந்த நுளம்பர் அல்லது நுளம்பப் பல்லவர் என்பார் தங்களைக் காஞ்சிபுரத்துப் பல்லவ அரசனுன திரிநயனன் (முக்கண்ணன்) வழி வந்த ஈச்வர வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறிக்கொண்டனர். அதைக்கொண்டு பார்க்கும்போது, திரிநயன பல்லவன் என்பது சிவபெருமானைக் குறிப்பதாகவே அவர்கள் கொண்டனர் எனக் கருதவும் முடியும். எவ்விதமாயினும் இதுகாறும் கிடைத்த பல்லவ சாசனங்களிலே எந்த இடத்திலும் காஞ்சிபுரத்துப் பல்லவர்கள் தங்களைச் சிவபெருமானிடமிருந்து தோன்றிய வம்சத்தவர்கள் என்று கூறிக்கொண்டதே இல்லை.

அவ்விதமானுல், "ப்ராஜிஷ்ணு வம்சம் ஸ்வம் அலங்கரிஷ்ணு:" (𑌭𑍍𑌰𑌾𑌜𑌿𑌷𑍍𑌣𑍁 𑌵𑌂𑌶𑌂 𑌸𑍍𑌵𑌂 𑌅𑌲𑌂𑌕𑌰𑌿𑌷𑍍𑌣𑍁𑌃) என்ற தொடருக்குத் "தான் பிறந்ததாலே ஒளிக்குலத்தை அலங்கரித்தவன்" என்றே பொருள் கொள்ள வேண்டிவரும். ப்ராஜிஷ்ணு வம்சம் என்பது ஒளி வீசும் குலம் அல்லது ஒளிக்குலம் என்றே பொருள்படும். பழைய தமிழ் இலக்கியங்களிலே ஒளியர் என்னும் வகையாரைப் பற்றிச் சில குறிப்புகள் காணப்படுகின்றன.

சோழன் கரிகாற் பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங்கண்ணனுர் பாடியதாகப் பத்துப்பாட்டில் சேர்ந்துள்ள பட்டினப்பாலையிலே பாட்டுடைத் தலைவன் ஆற்றலை விவரிக்குமிடத்தில்,

"பல் ஒளியர் பணிபு ஒடுங்கத்
தொல் அருவாளர் தொழில் கேட்ப,
வடவர் வாடக் குடவர் கூம்பத்
தென்னவன் திறல் கெட" (வரிகள் 274–77)

அவன் சிறினுன் என்று காணப்படுகிறது. அதிலிருந்து அவன் காலத்திலே ஒளியர் பலர் அங்கங்கே அரசு புரிந்து வந்தனர் என்பது பெறப்படும். ஒளியர் என்பார் நாகர்கள் ஆவர். இது செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள மாமல்லபுரத்திலிருந்து இரண்டாம் இராஜேந்திர சோழனுடைய ஆட்சியின் ஒன்பதாம் ஆண்டு

கொண்டதாகக் கிடைக்கும் தமிழ்க் கல்வெட்டு ஒன்றிலிருந்து தெரிகிறது.[19] நகரம் மாமல்லபுரம் ஸ்ரீபரமேச்வர மஹாவராஹ விஷ்ணுக்ரஹத் தாழ்வாருக்கு நிலம் அளித்த செய்தியை அறிவிக்கும் அந்தச் சாசனத்துக்குக் கையெழுத்திட்ட அதிகாரிகளுள் ஒளிநாகன் மாதையன் அழகிய சோழ ஆமூர் நாட்டு மூவேந்த வேளான், ஒளிநாகன் நாராயணன் என்பார் போன்றோர் காணப்படுகிறார்கள்.

முதல் பல்லவ அரசனை வீரகூர்ச்சன் (ஹணிடுஜஸா-கா) நாகராஜன் மகளை மணந்து அரசையும் கைப்பற்றினன் என்று மூன்றும் நந்திவர்மனுடைய வேலூர்ப்பாளையம் செப்பேடுகளிலே (சுலோகம் 6) காணப்படுகிறது. அதே போல, இரண்டாம் ஸ்கந்தசிஷ்யனுடைய ராயக்கோட்டைச் செப்பேடுகளிலும் அந்தப் பெயரைக் கொண்ட முதல் அரசன் நாகமகளின் மைந்தன் என்பது குறிக் கப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து தாய்மார்கள் நாக வம்சத்தைச் சேர்ந்தவர்கள் என்பதைப் பல்லவர்கள் பெருமையுடன் கூறிக்கொண்டனர் என்பது விளங்கும். அதையேதான் மேலே கண்டபடி இந்தச் சாசனத் தொடரும் தெரிவிப்பதாகக் கொள்ளலாம். இன்னும் நாகர்களிலே பல்லவர்கள் ஒளியர் வகையைச் சேர்ந்த வர் என்பதும் இதிலிருந்து தெரியவரும்.

தானம் அளிக்கப்பட்ட நிலம் குடி நீக்கி, கோவும் பொறியும் மாற்றி, பள்ளிச்சந்தமாக வழங்கப்பட்டதென்று சாசனம் கூறுகிறது. கடைசியிலே அது பரதத்தி என்றும் குறிக்கப்பட்டிருக்கிறது. குடி என்னும் சொல் குடும்பி என்ற பொருளில் நிலத்திற்கு உரிமை பூண்டு வாழும் குடிமக்களையே குறிப்பதாகும், யாரும் தமக்கு உரிமையான ஒன்றையே பிறருக்கு வழங்க முடியும். அதனால் பூதானம் அளிக்கும் ஒருவன் அந்த நிலத்துக்கு உரியவனாக இருத்தல் வேண்டும். அவ்விதம் இல்லாத காலங்களில், அந்த நிலத்தின் சொந்தக்காரரிடம் அதற்கு உரிய தொகையைக் கொடுத்து, அதை முதலில் தன்னுடையதாக்கிக் கொண்ட பிறகே தானம் செய்ய முற்படுவான். இது கூரம் சாசனத்திலே தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது. வித்தியா விநீத பல்லவ அரசன் அங்கே சிவபெருமானுக் குக் கோயில் எடுக்க விரும்பியபோது, அதற்கென ஐந்தேகால் பட்டி நிலம் விலை கொடுத்து வாங்கினனும். அதேபோல அமண்சேர்க்கையை வஜ்ர நந்திக்குத் தானம் செய்வதற்கு முன், அதன் பழைய சொந்தக்காரர்களுக்குப் பணம் கொடுத்து அதை விலைக்கு வாங்கியதையே 'குடிநீக்கி' என்ற தொடர் உணர்த்து வதாகும். அது வேறு சாசனங்களிலே 'முன் பெற்றுரை மாற்றி' என்று உணர்த் தப்படுவதும் உண்டு.

19. தெ. இ. சாசனங்கள், தொகுதி 4, எண் 377.

பிராம்மணர்களுக்குத் தானம் செய்யப்பெறும் நிலம் பிரம்மதேயம் எனவும், இந்துக் கோயில்களுக்கு அளிக்கப்பெறும் நிலம் தேவபோகம் அல்லது தேவதானம் எனவும் குறிக்கப்பெறுவதே போல், புறச் சமயிகளுடைய ஆலயங் களுக்கும், அவற்றைச் சார்ந்த ஸ்தாபனங்களுக்கும் வழங்கப்பெறும் நிலம் 'பள்ளிச்சந்தம்' என்று வழங்கப்பெறும். தேவதானம், பிரம்மதேயம் முதலிய கிராமங்கள் எவ்விதமான வரியும் செலுத்தவேண்டியதில்லை. அவ்விதம் தானம் பெற்றவர்கள் எந்த எந்தப் பரிகாரங்களை அடைந்தனர் என்பது சில சமயங் களில் விவரிக்கப்பட்டிருப்பதும் உண்டு. மற்றும் சில சாசனங்களில் 'ப்ரஹ்ம தேயமர்யாதயா' அதாவது பிரம்மதேயத்தின் அளவில் வழங்கப்பட்டது என்று பொதுவாகக் காணப்படுவதும் உண்டு. அதிலிருந்து பிரம்மதேயம் என்றாலே, அதற்குத் தனியாகச் சில உரிமைகளும் பரிகாரங்களும் இருந்துவந்தன என்பது தெளிவாகும். அதேபோலப் பள்ளிச்சந்தத்துக்கும் இருந்திருத்தல் வேண்டும். அதனாலேயே போலும் இந்தச் சாசனத்தில் பள்ளிச்சந்தமாகக் கொடுக்கப் பட்டதென்று சுருக்கமாகப் பரிகாரங்கள் எதையும் குறிக்காமல் கூறப்பட்டிருக் கிறது எனலாம்.

'பரதத்தி' என்ற சொல்லைப் பொதுவாகத் தானம் என்ற பொருளிலேயே இப்போது கொள்வர். ஆனால், அது ஒரு குறிப்பிட்ட வகையை உணர்த்து வதாகத் தெரிகிறது. 'பரதத்தி' என்ற சொல்லைப் 'பிறனுக்குக் கொடுக்கப் பட்டது' அல்லது 'பிறனால் கொடுக்கப்பட்டது' என்று இருவிதமான பொருளில் கொள்ளலாம். தானமே பிறனுக்குக் கொடுக்கப்படுவதுதான் ஆகும். ஆகவே அதைத் தனியாகப் பிறனுக்குக் கொடுக்கப்பட்டது என்று கூறவேண்டிய அவசிய மில்லை. "தான் அளித்ததோ, பிறன் அளித்ததோ, எதுவாயினும், பூமியை அபகரிப் பவன் அறுபதினாயிரம் ஆண்டுகள் புழுவாகக் கிடந்து உழல்வான்" என்றும், "தான் அளிப்பதைக் காட்டிலும் பிறன் அளித்ததைப் பாதுகாப்பது இரு மடங்கு புண்ணியத்தைக் கொடுக்கும்; பிறன் அளித்ததை அபகரித்தாலோ தான் அளித்தது பயனற்றதாகிவிடும்" என்றும் உள்ள இரண்டு சுலோகங்கள் பெரும் பாலான சாசனங்களின் முடிவில் வருவதைக் காணலாம். அவற்றுள் தான் அளித்தது, பிறன் அளித்தது என்பவை "ஸ்வதத்தம்", "பரதத்தம்" என்ற சொற் களாலேயே உணர்த்தப்பட்டிருப்பதைக் காணலாம். அதைக்கொண்டு பார்த்தால், பரதத்தி என்பது பிறன் அளித்த தானத்தையே உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

இதை வலியுறுத்த மற்றொன்றையும் எடுத்துக்காட்டலாம். அத்தகைய சாசனங்கள் பெரும்பாலும் யாரோ ஒருவன் விண்ணப்பத்தால் வேறு ஒருவனை ஆணத்தியாகக் கொண்டு அரசன் தானத்தை வழங்கினான் என்ற செய்தியைக்

கூறுவனவாகவே இருக்கும். விண்ணப்பம் செய்தவன் அநேகமாக ஒரு சிற்றரசனுகவே இருப்பான். அவன் தன்னுடைய ஆட்சிக்கு உட்பட்ட பிரதேசத்திலே அந்தப் பூதானத்தைச் செய்திருப்பான். அந்த நிலத்துக்கான வரி விலக்கையும் இதர உரிமைகளையும் உறுதியாக்க அரசன் கட்டளை தேவை. அரசன் கட்டளையை நிறைவேற்றி வைப்பவனே ஆணத்தியாவன். அரசன் அந்த விண்ணப்பத்தை ஏற்றுக் கட்டளையிடும்போது, அதை நிறைவேற்றி வைக்க வேண்டிய ஆணத்தியையும் நியமித்துவிடுவான். அவன் அரசாங்க அதிகாரியாகவே இருப்பான். இந்தச் சாசனத்திலே அவ்விதம் ஆணத்தியாக நியமிக்கப்பட்டவன் நரபயன் என்ற மந்திரி ஆவன். ஆனுல் விண்ணப்பம் செய்தவன் யார் என்பது காணப்படவில்லை.

இந்தச் சாசனத்தில் கண்ட தானம் அளிக்கப்பட்ட செய்தியைத் தெரிவிக்கும் அரசன் உத்தரவு முதலில் வெண்குன்றக்கோட்டத்துப் பெருநகர நாட்டு நாட்டார்க்கு அனுப்பிவைக்கப்பட்டது. நாட்டாரே தான பூமியின் படாகை நடந்து எல்லை நிர்ணயித்துக் கல்லும் கள்ளியும் நாட்டி அறையோலை (விளம்பரம்) செய்தனர் என்று சாசனம் கூறுகிறது.

இதே செய்தி ஸம்ஸ்கிருதப் பகுதியில் "க்ராமம் ஸமக்ரம் ப்ர–விபக்த ஸீமம்" 𑌗𑍍𑌰𑌾𑌮𑌂 𑌸𑌮𑌗𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌵𑌿𑌭𑌕𑍍𑌤𑌸𑍀𑌮𑌂 என்று கொடுக்கப்பட்டுள்ளது. "கிராமம் முழுவதும் நன்ருகப் பிரிக்கப்பட்ட எல்லைகள் கொண்டது" என்று அது பொருள்படும். ஸீம என்ற சொல் எல்லை என்ற பொருளோடு நாடு என்ற பொருளையும் கொண்டது. முன்னுளிலே அவ்விதம் இருந்ததா என்பது நிச்சயமாகத் தெரியாது. எனினும் பிற்காலத்திலே இருந்திருக்கிறது. அப்படியானுல், 'கிராமம் முழுவதும் சிமையிலிருந்து நன்ருகப் பிரிக்கப்பட்டது' என்றும் அதற்குப் பொருள் கூற முடியும். வேலூர்ப்பாளையம் செப்பேடுகளிலே திருக்காட்டுப்பள்ளிக் கிராமத்தை அவ்வூர்ச் சிவபெருமானுக்குத் தானம் அளிக்கப்பெற்ற செய்தியைக் குறிக்குமிடத்தில், அது, "நாட்டு நீங்கலாய் உட்புரவாய்[த்] தேவர் தானமாக" அளிக்கப்பட்டதென்று காணப்படுகிறது. அதிலிருந்து அந்தக் கிராமம் நாட்டின் நிர்வாகத்திலிருந்து பிரிக்கப்பட்டு, தானம் பெற்றவர்களே முழு உரிமைகளையும் அனுபவிக்கக்கூடியதாக அளிக்கப்பெற்றதென்பது விளங்கும். "கோவும் பொறியும் மாற்றி" அரசன் தானத்தை அளித்தான் என்று இந்தப் பள்ளன்கோவில் சாசனம் கூறுவதும் அதையே உணர்த்தும். பட்டத்தாள்மங்கலம் செப்பேடுகளிலும், புல்லூர்ச் செப்பேடுகளிலும், "கோவும் பொறியும் தீர்ந்து" என்ற தொடர் காணப்படுகிறது. "தீர்தலும், தீர்த்தலும் விடல் பொருட்டு ஆகும்" என்பது தொல்காப்பிய சூத்திரம்.[20] அதனுல் தீர்ந்து

20. தொல்காப்பியம், சொல்லதிகாரம், உரியியல், சூத்திரம் என் 20.

என்பது கைவிட்டு, துறந்து என்பன போன்ற பொருளைக் கொடுக்கும். அம்மாதிரியே இந்தச் சாசனத்திலே வரும் "மாற்றி" என்ற சொல் "தன்னிடமிருந்து பிறருக்கு மாற்றி" என்று பொருள்படும். கோ என்னும் சொல் அரசன், அரசுரிமை, ஆட்சி என்ற பொருளிலும், பொறி என்பது எழுத்து, முத்திரை, விதி, இலச்சினை என்ற பொருளிலும் வரும். ஆகவே "கோவும் பொறியும் மாற்றி" என்ற தொடருக்கு அரசன் "தனக்குள்ள அரசுரிமையையும் இலச்சினையையும் பிறருக்கு மாற்றிக் கொடுத்தான்" என்றே பொருள் கொள்ளவேண்டும். அதன்படி அந்த நிலத்தின்மீது தனக்குள்ள உரிமை முழுவதையும் அரசன் துறந்து அதைத் தானம் பெற்றவருக்கு வழங்கிவிட்டான் என்பதே பொருளாகும். அவ்விதமே தான் கொள்ளவேண்டுமென்பது வேறு சாசனங்களில் காணும் வாசகத்தாலும் தெரியவரும்.[21]

தானம் பெற்றவர் அந்தக் கிராமத்தின் எல்லைக்குள் அடங்கிய நிலம் முழுவதையும் அனுபவிக்கலாம் என்பதைக் கூறும் இடத்தில், இந்தச் சாசனம் "இவ்விசைத்த பெருநான்கெல்லை யகத்தும் அகப்பட்ட நிலம் நீர் நிலமும் புன்செய்யும் களரும் கன்றுமேய்பாழும் காடும் பீடிலிகையும் கிடங்கும் கேணியும் மனையும் மனைப்படப்பும் உடும்போடி ஆமை தவழ்ந்ததெல்லாம் உண்ணிலனொழிவின்றி" என்று விரித்துக் கூறுகிறது. இவ்விதம் விவரிக்கப்பட்ட நில வகைகளுள் பீடிலிகை எதைக் குறிப்பதென்பது தெரியவில்லை. பல்லவ அரசனான இரண்டாம் ஸ்கந்தசிஷ்யனுடைய ராயக்கோட்டைச் செப்பேடுகளிலும், சோழ மன்னனான முதலாம் இராஜேந்திரன் ஆட்சிக் காலத்தில் வழங்கப் பெற்ற பெரிய லெய்டன் பட்டயத்திலும்[22] இந்தச் சொல் காணப்படுகிறது. அவ்விடங்களிலும் இதே போலத் தானம் வழங்கப்பெற்ற கிராமத்தின் நில வகைகளை விவரிக்கும் இடத்திலேதான் இது காணப்படுகிறது. தஞ்சாவூருக்குப் பக்கத்திலுள்ள (கருந்தட்டான்குடி) கருந்திட்டைக்குடியிலிருந்து முதலாம் இராஜேந்திர சோழனுடைய ஆட்சியின் ஐந்தாம் ஆண்டு கொண்டதாகக் கிடைக்கும் தமிழ்க் கல்வெட்டு ஒன்று[23] அதற்கு முன் ஆண்டு வரையில் பீடிலிகை வாரி முதலிய பல வகைகளாலும் சேர்ந்த பொன்னைக் கொண்டு எம்பெருமா

21. ஆய் குல மன்னனான விக்கிரமாதித்த வரகுணன் அளித்த செப்பேட்டுச் சாசனம் ஒன்றிலே இதே செய்தி "கோ நீக்கி" என்ற தொடரால் உணர்த்தப்பட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது. (திருவாங்கூர் ஆர்க்கியலாஜிகல் ஸீரீஸ், முதல் தொகுதி, பாகம் 2).

22. எபி. இந்திகா, தொகுதி 22, பக்கம் 262, மூலபாடம், வரி 171.

23. தெ. இ. சாசனங்கள். தொகுதி 5, எண் 1413. "பீடிலிகைவாரியால் கூடின பொன்னும் ஆகப் பலவகையாலும் கூடின."

னுக்குப் பொன்னுலான மகுடம் ஒன்றைச் செய்து அணிவித்த செய்தியை அறிவிக்கிறது. பீடிலிகைவாரியால்,அதாவது பீடிலிகையில் சேர்ந்த பொருள்களை அப்புறப் படுத்தி விலைப்படுத்தியதால் பொன் கிடைத்த செய்தி அந்தக் கல்வெட்டிலிருந்து வெளியாகிறது. அதனுல் பீடிலிகை என்பது கோயிலுக்குச் சம்பந்தமான ஏதோ ஒன்றைக் குறிப்பதாகும் என்பது தெரியவரும். நெல்லூர் மாவட்டம், கூடூர்த் தாலூகாவில் உள்ள மல்லம் என்ற ஊரிலிருந்து பல்லவ அரசனுன கம்பவர்ம னுடைய ஆட்சியின் இருபதாம் ஆண்டு கொண்டதாகக் கிடைத்த ஒரு கல்வெட்டிலும்[24] இந்தச் சொல் ஆளப்பட்டுள்ளது. சாசனம் பொறிக்கப்பட்ட அந்தக் கல்லிலே பிடாரி என்னும் துர்க்கைக்குத் தலைப்பலி கொடுத்த ஒருவன் உருவம் புடைப்புச் சிற்பமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. வலது கையிலே வாளை ஏந்திக்கொண்டிருக்கும் அவன், கழுத்திலிருந்து துண்டாக வெட்டி எடுக்கப்பட்ட தன்னுடைய தலையைத் தலைமயிரால் இடது கையிலே பிடித்துக்கொண்டிருக்கும் கோலத்திலே காட்சி அளிக்கிறுன். அவன் தலைப்பலியிட்ட செய்தி "படாரிக்கு நவக்கண்டம் கொடுத்து குன்றுகத் தலை அறுத்துப் பீடிலிகை மேல் வைத்தானுக்கு" என்று சாசனத்திலே வருணிக்கப்பட்டு இருப்பதிலிருந்து விளங்கும். அதைக் கவனித்தால் பீடிலிகை என்பது பலிபீடத்தை உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

முன்னுளிலே அசோக மரத்தின் குளிர் நிழலில் அமைக்கப்பட்ட சிலா தலங்களைச் சமணர் வழிபட்டு வந்தனர் என்ற செய்தி சிலப்பதிகாரத்திலிருந்து தெரிகிறது. மாதவியிடமிருந்து பிரிந்த கோவலன் தன் மனைவி கண்ணகியுடன் காவிரிப்பூம்பட்டினத்தைத் துறந்து மதுரைக்குப் புறப்பட்ட சமயம், புகார் நகரத்தின் பல கோயில்களிலும் வழிபட்டபோது, சிலாதலத்தையும் வழி பட்டான் என்ற செய்தி பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது.

"புலவு ஊன் துறந்து, பொய்யா விரதத்து,
அவலம் நீத்து, அறிந்து, அடங்கிய கொள்கை
மெய்வகை உணர்ந்த விழுமியோர் குழீஇய
ஐவகை நின்ற அருகத் தானத்துச்
சந்தி ஐந்தும் தம்முடன் கூடி
வந்து, தலைமயங்கிய வான்பெரு மன்றத்து,
பொலம் பூம் பிண்டி நலம் கிளர் கொழு நிழல்,
நீர் அணி விழவினும், நெடுந்தேர் விழவினும்,
சாரணர் வரூஉம் தகுதி உண்டாம் என,
உலக நோன்பிகள் ஒருங்குடன் இட்ட
இலகு ஒளிச் சிலாதலம் தொழுது, வலம் கொண்டு"

(நாடு காண் காதை; வரிகள் 15–25)

24. தெ தொகுதி 12, எண் 106.

பெருமன்றம் ஒன்றிலே அமைந்திருந்த அந்தச் சிலாதலம் உலக நோன்பிகள் அதாவது இல்லறத்தில் வாழும் ஜைனர்களால் நிறுவப்பெற்றதாம். புலால் உணவை விடுத்து, பொய்யாமையை விரதமாகக்கொண்டு, பாபங்களைப் போக்கி, உண்மையான வழியை அறிந்து உணர்ந்து, தங்கள் புலன்களை அடக்கிய பெரியோர்கள் அவ்விடத்திலே கூடி இருந்தனராம். அங்கே பொன் மயமான மலர்களைக் கொண்ட அசோக மரத்தின் குளிர் நிழலில், பேரொளி வீசும் அந்தச் சிலாதலம் அழகுற அமைக்கப்பட்டிருந்ததாம். (காவிரி நதியில்) புது வெள்ளம் வருவதையொட்டி நடக்கும் திருவிழாக் காலத்திலும், தேர் விழாக் காலத்திலும், சாரணர் வந்து தங்கும் தகுதியைக் கொண்டிருந்ததாம் அது. கோவலனும் கண்ணகியும் அதைத் தொழுது வலம் கொண்டு சென்றூர்களாம்.

இதேபோன்ற சிலாதலத்தின் வருணனை ஒன்று, பிராகிருத மொழியிலே எழுதப்பெற்ற ஜைனர்களுடைய சமய நூலான ஔபபாதிக சூத்திரத்திலும் காணப்படுகிறது. பூர்ணபத்திரன் (புண்ணபத்த) என்ற யக்ஷனுடைய (சேஇய) சைத்திய ஆலயத்தின் வருணனையாக அமைந்த அது மிகவும் நீண்டது. அதன் முக்கியமான பகுதி பின்வருமாறு: [25]

"சம்பா (நகரத்து)க்குப் பக்கத்திலே புண்ணபத்தே என்ற பெயர் கொண்ட ஆலயம் இருந்தது. அது புராதனமாகத் தோன்றியது; பழங்காலத்துப் பெரியோர்களால் சொல்லப்பட்டது; தொன்மையானது; செல்வம் நிரம்பியது; புகழ் வாய்ந்தது; பிரசித்தமானது; குடைகள், துவஜங்கள், மணிகள் ஆகியவை களையும் அடைந்து இருந்தது. கொடிகள் ஒன்றன் மேல் ஒன்ருக அடுக்கப்பட்டு அழகுற விளங்கின. சாமரங்களும்[26] நிரம்பி இருந்தன.

"அதிலே மேடைகள் கட்டப்பட்டிருந்தன. பக்தியுடன் சாணமெழுக்கிட்டு உலர்ந்து அழகுடன் விளங்கிய அதிலே, கோசீர்ஷ சந்தனம், புதுமையான செஞ்சந்தனம், தர்தர சந்தனம், ஆகியவற்ருல் வரையப்பெற்ற, ஐந்து விரல்களோடு கூடிய கையின் உருவமும் இருந்தது. அங்கே பூஜா கலசங்கள் நிறைந்திருந்தன. வாசற்படியிலே (மேலே அல்லது பக்கத்திலே) வந்தனகடங்களும், பாங்குற அமைந்த தோரணங்களும் நிரம்பியிருந்தன. ஐந்து வகை வர்ணங்களில் நறுமணம் வீசும் புதுமலர்க் கொத்துகள் பரந்தும், உருண்டும், நீண்டும் இங்கும்

25. "யக்ஷர்" என்ற தலைப்பில் ஆனந்த குமாரஸ்வாமி ஆங்கிலத்தில் எழுதிய நூலின் முதல் பாகத்தில் மேற்கோள் காட்டப்பெற்ற ஆங்கில மொழிபெயர்ப்பின் தமிழாக்கம்.

26. மூலத்தில் "லோமஹட்ட" என்ற சொல் ஆளப்பட்டு இருக்கிறதென்றும் அது "பார்த்தவரைப் பரவசமாக்கும்" அல்லது "கவரிமான் மயிராலான சாமரம்" எனப் பொருள் படுமென்றும் கூறப்பட்டுள்ளது.

அங்கும் நிறைந்து காட்சி அளித்தன. (அகில் போன்ற தூப வகைகளான) காலா குருவிலிருந்தும் சிறந்த குந்துருக்கத்திலிருந்தும் துருக்கத்திலிருந்தும் எழுந்து நெளிந்து கரைந்த நறும்புகையின் மென்மணம் மனத்துக்கு இனிமையான உயர்ந்த சிறந்த வாசங்களை வீசியது; தூபக்காலே போலத் திகழ்ந்தது அந்த இடம். நடிகர், நடனமாடுவோர், கயிற்றில் ஆடுவோர், மல்லர், குஸ்தி போடுவோர், விதூஷகர், துள்ளி ஆடுவோர், பிரவசனம் செய்வோர், கிராமியப் பாடல்களைப் பாடுவோர், கதை சொல்லுவோர், கம்பங்கூத்தாடியர், படங்களைக் காட்டுவோர் (மங்கர்), நாயனம் வாசிப்போர், குழலூதுவோர், பாணர் முதலிய பலரும் அங்கு அவ்வப்போது கூடித் தங்குவது வழக்கம்.................... அந்த ஆலயத்தைச் சுற்றிச் சிறிது தூரத்திற்கு உபவனம் ஒன்று உண்டு. அந்த உபவனத்தின் மத்தியில் விசாலமான நடுவெளியில் பெரிய அழகிய அசோக மரம் ஒன்று இருந்தது என்பர். அதன் அடிப்பிரதேசம் குசம் (தர்ப்பை), விகுசம் ஆகிய புற்களால் பவித்திரமாக்கப்பட்டது............... அழகிய அந்த அசோக மரத்தின் அடியிலே மரத்தை ஒட்டி விசாலமான புடவி சிலாதலம் ஒன்று இருந்ததென்பர். அதன் நீளம், அகலம், உயரம் ஆகியவை முறைப்படி அமைந்து கருமை நிறம் வாய்ந்து.......கனமாகவும், வழவழப்பாகவும், முகம் பார்க்கும் கண்ணாடி போலவும், எட்டு மூலை கொண்டதாகவும், மனோரம்யமாகவும்.........(மனிதர், மிருகம், பறவை, செடி கொடி முதலியவற்றின்) உருவங்கள் வரையப்பட்டு........ எழில் வாய்ந்து அது விளங்கியது............ அது சிங்காதனம் போல் அமைந்து சுகமாகவும் வனப்புடனும் விளங்கியது."

மேலே கண்ட இரண்டு வருணனைகளுக்கும் ஒற்றுமை இருப்பதையும், ஒன்றில் விளங்காத பகுதி மற்றொன்றினால் விளங்குவதையும் காணலாம்.

புடவி சிலாதலம் (ப்ருதிவி சிலாதலம் [27]) என்று ஜைனர்களுடைய சமய நூலில் குறிக்கப்பட்டிருப்பதே சிலப்பதிகாரத்தில் கண்ட சிலாதலம் என்பது எளிதில் விளங்கும்.

இவற்றைக் கவனித்தால் இச்சாசனத்தில் கண்ட பீடிலிகை என்பது அந்தச் சிலாதலத்தையும் அது அமைந்துள்ள பூமியையும் உணர்த்துவதாகும் எனக் கொள்ளலாம்.

ஸம்ஸ்கிருதப் பகுதியிலே அது பிரசஸ்தி என்று குறிக்கப்பட்டிருக்கிறது. அதை எழுதியவன் மேதாவி என்பான். அவன் தன்னை, "எல்லாச் சாஸ்திரங்களிலும் மூழ்கியவன் (கற்றறிந்தவன்), கவுரவத்திற்கு உரியவன், அறிவிலே (பிரகஸ்பதி)திஷணனுக்குச் சமமானவன்" என்று அதிலே புகழ்ந்துகொள்கிறான். மேதாவி

27. ப்ருதிவி சிலாதலம் என்பது மண்ணால் செய்யப்பெற்ற சிலாதலம் என்பதாகுமா?

என்றுலே கூரிய புத்தியுடையவன் என்று பொருள்படும். அதுவே அவனுக்குப் பெயராகவும் அமைந்திருந்தது. பல்லவமல்லனுன இரண்டாம் நந்திவர்மனுடைய உதயேந்திரம் செப்பேடுகளிலே அதன் பிரசஸ்தியை எழுதின கவி பரமேச்வரன் என்றும், ஸ்ரீசந்திரதேவன் மகன் என்றும், மேதாவி குலத்தில் பிறந்தவன் என்றும் விவரிக்கப்பட்டிருக்கிருன். மேதாவி குலத்திலே பிறந்தவன் என்று அவன் தன்னைப் புகழ்ந்து கொள்வதைக் கவனித்தால், குல முதல்வனுன மேதாவி சிறந்த வித்துவானுக இருத்தல் வேண்டும் என்பதும், அவனைப்போலவே அந்த வம்சத்தில் பிறந்தவர்களும் புகழ் பெற்று வாழ்ந்தவர்கள் என்பதும், அந்தக் குல முதல்வன் பரமேச்வர கவிக்குச் சில தலைமுறைகள் முற்பட்ட மூதாதையனுக இருத்தல் வேண்டும் என்பதும் விளங்கும். ஆகவே இந்தச் சாசனத்தின் பிரசஸ்தியை எழுதிய மேதாவியே உதயேந்திரம் சாசனத்தின் பிரசஸ்தியை எழுதிய பரமேச்வர கவியின் முன்னேன் எனக்கொள்ளலாம்.

ஸ்ரீவர்த்தமாநேச்வர தர்ம்ம தீர்த்தம் என்று ஸம்ஸ்கிருதப் பகுதியில் காண்பதும், திருப்பருத்திக்குன்றில் என்று தமிழ்ப் பகுதியில் காண்பதும் ஒரே இடத்தைக் குறிக்கும். அது இப்போது காஞ்சிபுரத்துக்குப் பக்கத்திலுள்ள திருப் பருத்திக்குன்றம் என்னும் இடமே ஆகும். முன்னுளிலே அது ஜினகாஞ்சி என்றும் வழங்கப்பட்டு வந்தது. திகம்பர ஜைனர்களின் ஆசாரிய பீடங்கள் நான்கில் அது ஒன்றுக விளங்கியது. அந்த மடம் இப்போது தென் ஆர்க்காடு மாவட்டத்தில் திண்டிவனத்துக்கு மேற்கேயுள்ள சித்தாமூரில் அமைந்திருக்கிறது.

திருப்பருத்திக்குன்றத்தில் இப்போது வர்த்தமானருக்கு ஓர் ஆலயம் இருக்கிறது. இப்போதுள்ள நிலையில் அது காலத்தாற் பிற்பட்டது என்றும், அதே இடத்தில் உள்ள சந்திரபிரபா தேவரின் ஆலயமே பழமையானது என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுவர்.[28] எனினும் மிகப்பழங்காலத்திலிருந்தே வர்த்த மானருக்கு அவ்விடத்தில் ஓர் ஆலயம் இருந்திருக்க வேண்டுமென்பது இந்தச் சாசனத்திலிருந்து தெரிகிறது.

பருத்திக்குன்றில் என்ற அதன் பெயர் மிகப்பழங்காலத்திலிருந்தே வழங்கி வந்திருக்கிறது. ஜைன மதத்தின் கடைசித் தீர்த்தங்கரரான ஸ்ரீவர்த்தமான மஹாவீரருடைய வாழ்க்கையில் நிகழ்ந்த ஏதோ ஒரு சம்பவத்தை அடிப்படை யாகக் கொண்டே அந்தப் பெயர் ஏற்பட்டது போலும்.

கழுகுமலை, கழுக்குன்றம் என்ற பெயர்கள் க்ரித்ரகூடம் என்னும் வட மொழிச் சொல்லின் தமிழ் வடிவங்களே. புத்தர்பிரானின் வாழ்க்கையோடு

28. திரு. டி. என். ராமசந்திரன் ஆங்கிலத்தில் எழுதிய "திருப்பருத்திக்குன்றமும் அதன் கோயில்களும்" என்ற நூலில் காண்க. ('Tirupparuttikkunram And Its Temples' by T. N. Ramachandran. p. 10)

சம்பந்தப்பட்ட க்ரித்ரகூடத்தின் நினைவாகவே அவை தமிழ்நாட்டில் ஏற்பட்டன போலும். அம்மாதிரியே ஜைனப் பெரியார் வாழ்க்கையின் ஏதோ ஒரு நிகழ்ச்சியைக் கொண்டு இந்தப் பெயர் எழுந்ததாகவே இருத்தல் வேண்டும் என்னலாம். தமிழ் நாட்டில் பருத்தியூர், பருத்திக்குடி, பருத்திப்பட்டு என்பன போன்ற பெயர்களையுடைய கிராமங்கள் அங்கங்கே இருப்பதை நாம் அறிவோம். அந்தச் சம்பவம் எது என்பதுதான் இப்போது நமக்கு விளங்கவில்லை.

தானம் அளிக்கப்பட்ட நிலம் இரண்டு இடங்களில் இருந்தன. ஒன்று தாமர் என்ற கிராமம். அங்கே 16½ பட்டி நிலம் அளிக்கப்பட்டது. அந்த ஊர் காஞ்சிபுரம் தாலூகாவில் இப்போது தாமல் என்று வழங்கும் ஊரே என்னலாம். மற்றொன்று வெண்குன்றக்கோட்டத்துப் பெருநகர நாட்டு அமண் சேர்க்கை என்ற முழுக் கிராமம் ஆகும். பெருநகர நாடு என்பது உத்தர மேரூருக்கு மேற்கே எட்டு மைல் தூரத்தில், இப்போது பெருநகர் என்று வழங்கப் பெறும் ஊரை நடுவாகக் கொண்ட பிரதேசமாகுமானால், அமண்சேர்க்கை என்பது அந்தப் பக்கத்திலே இருத்தல் வேண்டும். எது என்பது விளங்கவில்லை. எனினும் வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள வாலாஜாநகரத்தின் உள்ளிடையாக அம்மணம்பாக்கம் என்ற பிரதேசம் இருப்பதாகவும், அதற்கு நான்கைந்து மைல் தூரத்தில் பெண்ணகரம் (பெருநகரம்) என்ற ஊர் ஒன்று இருப்பதாகவும், அவ்விரண்டுக்கும் தூரமாக இல்லாமலேயே வெண்குன்றம் இருப்பதாகவும் குறிப்பிட்டு, அவற்றையே சாசனத்தில் கண்ட ஊர்களாகக் கொள்ளலாம் என்றும் சிலர் கூறுவர். அமண்சேர்க்கையின் மேல் எல்லையாக ஆறு குறிக்கப்பட்டிருப்பது பாலாற்றை உணர்த்துவதாகவே அமையும்.

சாசன பாடம்[29]

முதல் ஏடு—பின்புறம்[30]

1. [illegible] ....
2. [illegible] [।*] [illegible] ....
3. [illegible] [illegible]31 [illegible] ....
4. [illegible] ....

29. மூல ஏடு, மசிப்படம், புகைப்படம் ஆகியவற்றிலிருந்து வாசித்துப் பெயர்த்து எழுதப்பட்டது.

30. ஏட்டின் இடதுபாதி மட்டுமே கிடைத்துள்ளது. அதனால் முதல் எட்டு வரிகளில் பின்பகுதி இல்லை.

31. அநுஸ்வாரம் மகரவொற்றின் மேற்பாதிபோலக் காணப்படுகிறது.

5. [illegible][32] [।*] [illegible]...............................
6. [illegible][33][illegible] [illegible]...............................
7. [illegible][34][illegible]। [2*] [illegible]...............................
8. [illegible]...................................

இரண்டாம் ஏடு—முன்புறம்

9. [illegible] [।*] [illegible]
10. [illegible] [6*]
11. [illegible]
12. [illegible] [।*] [illegible]
13. [illegible] ॥ [*] [illegible][35]
14. [illegible]
15. [illegible] [।*] [illegible]
16. [illegible][36][illegible]

இரண்டாம் ஏடு—பின்புறம்

17. [illegible] ॥ [*] [illegible]
18. [illegible] [।*] [illegible]
19. [illegible] ॥ [*]
20. [illegible]

32. [illegible] என்று கொள்ளவேண்டும். [illegible] என்பது முன்வரியின் கடைசியில் இருந்திருத்தல் வேண்டும்.

33. [illegible] என்பதன் முதல் எழுத்து முன்வரியின் கடைசியில் இருந்து கிடைக்கவில்லை என்னலாம்.

34. [illegible] என்பதற்கு முன்னால் ஒரு கொம்பையும் சேர்த்து [illegible] என்று கொள்ளவும் கூடும்.

35. மகரம் முதலில் லகரமாக எழுதப்பட்டுப் பின்னால் திருத்தப்பட்டது.

36. ஆகார உயிர் மெய்க்குறி முதலில் வேறு ஏதோ ஓர் எழுத்தாக இருந்து பின்னால் திருத்தப்பட்டது.

21. [illegible] [।*] [illegible]
22. [illegible] ॥ [எ*] [illegible]
23. [illegible] [। *] [illegible]
24. [illegible] [illegible*] [illegible] ॥ [அ*] [illegible]

மூன்ரும் ஏடு—முன்புறம்

25. [illegible] [। *] [illegible]
26. [illegible] [கூ*][37]
27. கொ விசைய ஸிம்ஹவர்மற்கு யாண்டாருவது வெண்
28. குன்றக் கொட்டத்துப் பெருநகர நாட்டு நாட்டார்.
29. காண்க [।*] தந்நாட்டு அமண் செர்க்கை பருத்தி
30. க்குன்றில் வஜ்ரநந்திக்குரவர்க்குப் பள்ளிச்சந்தமா
31. கக் கொடுத்தொந் தாங்களும்[38] படாகை நடந்து கல்
32. லுங் கள்ளியுந் நாட்டி அறையொலே செய்து கொ

மூன்ரும் ஏடு—பின்புறம்

33. டுத்து விடுதக வென்று நாட்டார்க்குத் திருமுகம் விட நாட்டா
34. ருந் திருமுகம் கண்டு தொழுது தலேக்கு வைத்து படா
35. கை நட[ந்*]து கல்லுங் கள்ளியு நாட்டி நாட்டார் விடுந்த
36. அறையொலேப்படிக் கெல்லே[। *] கீழ்பா
37. லெல்லே எந்த லெரியின் கீழைக்கடற்றி
38. ன் மெற்குமொமைக் கொல்லே எல்லே இன்னு
39. ம் தென்பாலெல்லே வெள்வடுகன் கெணியி
40. ன் வடக்கும் கடற்றினெல்லே இன்னுந் நிலபாடி

நான்காம் ஏடு—முன்புறம்

41. எல்லே இன்னும் விலாடன் குற்றெத்தத் தெல்லே
42. இன்னும் மெல்பாலெல்லே மாவெத்தத்து

37. எழுத்து முக்கால் வரிக்கே உள்ளது. பாக்கியுள்ள இடம் ॥ —என்பது போல் ஐந்து உருவங்கள் எழுதிப் பூர்த்தி செய்யப்பட்டிருக்கிறது.

38. "கொடுத்தொம் தாங்களும்" என்று சந்தி பிரித்து வாசிக்கவும்.

43. வதியின் கிழக்கும் மும்மூலை எத்தத் தெல்லை
44. இன்னு மாற்றெல்லை [39] இன்னும் வடபாலெல்
45. லை பெருங் கொல்லையின் றெற்கு இன்னும்
46. பாண்டியன் கயத்தெல்லை இன்னும் [40] முருக்கங்
47. கெணி எல்லை [। *] இவ்விசைத்த பெருநான்கெல்
48. லையகத்து மகப்பட்ட நிலம் நீர் நிலமும்

நான்காம் ஏடு—பின்புறம்

49. புன்செய்யும் களரும் கன்று மெய் பாழும் காடு
50. ம் பீடிலிகையும் கிடங்குங் கெணியும் மனை
51. யும் மனைப்படப்பும் உடும்பொடி ஆமை தவ
52. ழ்ந்ததெல்லாம் உண்ணிலனொழிவின்றி
53. கொவும் பொறியும் மாற்றி குடிநீக்கி இவ்வூர்
54. பெற்ற வஜ்ரநந்திக்குரவர்க்கெ பள்ளிச்சந்தமாக தா
55. மரிலும் பதினறரைப்பட்டி நிலங்கொடுத்
56. தொம் [। *] இந்நிலத்திற் கெல்லை கீழ் பாலெ

ஐந்தாம் ஏடு—முன்புறம்

57. ல்லை புலிகிழார் பட்டியின் மெற்கும் தென்பா
58. லெல்லை முல்ளெறிபா[க்க*]த்தெல்லையின் வட
59. க்கும் மெல்பாலெல்லை பொக்குவாய்ச் செறு
60. வின் கிழக்கும் வடபாலெல்லை பல்லாங்கு
61. ழிக்காவின் தெற்கும் இந்நான் கெல்லை
62. யகத்தும் அக[ப்*]பட்ட ஸர்வஸ்வமும் பருத்திக்குன்றி
63. ல் வஜ்ரநந்திக்குரவர்க்கெ பள்ளிச்சந்தமாக வாரத்
64. த்தீ சென்றது நாராயண ஞைத்தியால் । ஸ்வஸ்தி ॥

மொழி பெயர்ப்பு

(சுலோகம் 1) இன்ப நிலை (சுவர்க்கம்), விடுதலை (அபவர்க்கம், மோக்ஷம்), (முதலியவற்றின்) உயர்குணங்களின் தலையாய........ஜிநேந்திரர், முநீந்திரர், தேவேந்திரர்......ஆகிய கூட்டங்களால் வந்தனம் செய்யப்பெறுவர்.

39. நகரமும் றெகரமும் திருத்தப்பெற்றுள்ளன.

40. மகரவொற்று முதலில் முகரமாக எழுதப்பெற்றுப் பின்னால் திருத்தப்பெற்றுள்ளது.

(சுலோகம் 2) அம்புஜநாபர் (உந்தித்தாமரை கொண்டவர் அதாவது விஷ்ணு) இருந்தார்......அங்கிரஸ், கீர்வாணேச...(தேவர்களின் தலைவன், அதாவது (இந்திரனுடைய குருவான பிரஹஸ்பதி)......சம்யு பரத்வாஜர், துரோணர், புரம் [41] என்பதை வென்றவன் (அதாவது சிவன்) அம்சத்தையுடையவன், (அதாவது அச்வத்தாமன்) பிறகு பல்லவன் ஸ்ரீ... ...பூமியாகிய பெண்ணுக்குக் கணவன்.[42]

(சுலோகம் 3) பிறகு...சோகம் அடைந்தவனுக்கு அசோகம் ...(இன்பம்)[43] பல்லவர்களிடையே (வந்த) முறையில் வரிசையாக வணங்கும் அரசர்களுடைய தலைகளிலே அணிந்த மகுடங்களின் சிவந்த இரத்தினங்களின் ஒளிக்கதிர்களுடைய உஷ்ணத்தினால் மலர்ந்த தாமரை போன்ற திருவடிகளையுடைய அரசனான ஸிம்ஹவர்மனிடமிருந்து பிறந்தான்.

(சுலோகம் 4) (அவன்) ஸ்ரீ ஸிம்ஹவிஷ்ணு; ஸிம்ஹவிஷ்ணு என்ற மற்றோர் அரசனை வென்றவன், (ஜிதஸிம்ஹவிஷ்ணு:), பலத்தில் ஜிஷ்ணு (வெற்றி வீரன். அதாவது அர்ச்சுனன்); வில் வித்தையிலும் ஜிஷ்ணு; ப்ராஜி(ஷ்ணு) வம்சத்தை (ஒளிக்குலத்தை)த் தன்னுடைய பிறப்பினால் அலங்கரிப்பவன்; போரிலே எதிரிகளை வெற்றி கொள்வதில் சமர்த்தன் (ஆவன்).

(சுலோகம் 5) உண்மை, தியாகம், வணக்கம் போன்ற பரிசுத்தமான நற்குணங்களின் கூட்டம் யாரை உறைவிடமாகக் கொண்டனவோ, வீரர்களின் (க்ஷாத்ர) குணங்கள் மிகவும் உயர்ந்த நிலையில் பெருகி (வேறு) எவரிடமும்

41. "மு" என்னும் எழுத்தை முன்னால் கூட்டி "முராரிபு" என்று கொண்டால் அவன் விஷ்ணுவின் அம்சத்தைக் கொண்டவன் என ஆகும். எனினும் பாகூர்ச் செப்பேடுகள் போன்ற வேறு சாசனங்களில் அச்வத்தாமன் சிவனுடைய அம்சமாகப் பிறந்தான் என்று காணப்படுவதால் "புராரிபு" என்றே கொள்ளப்பட்டது.

42. "லா" என்ற எழுத்துக்குக் கொம்பைச் சேர்த்தால் 'க்ஷ்மாவல்லபோ வல்லப:' என்று ஆகும். அவ்விதமானால் "பூமி, வல்லமை இரண்டையும் கொண்டவன்" என்று பொருள் படும். க்ஷ்மாவல்லப: என்பதும் ப்ருதிவீவல்லப: என்பதும் ஒரே பொருளைக் கொடுப்பவை. வாதாபியைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட சாளுக்கியர்கள் ப்ருதிவீவல்லப: என்ற சிறப்புப் பெயரைத் தரித்திருந்தார்கள். அவர்களை வென்றதாலே பல்லவர்கள் அவர்களுடைய விருதையும் கைப்பற்றினர்களோ என்று தொனிக்கும்படியும் அமைவதைக் காணலாம்.

43. "அசோக" என்ற சொல்லை ஏதோ சிலேடையாக ஆண்டிருக்கிறார் கவி. பல்லவர்களிலே அசோக வர்மன் என்ற பெயர் கொண்ட அரசன் ஒருவனும் ஆண்டிருந்தான் என்று அவர்களுடைய பரம்பரை மன்னர்களைக் கூறும் வேறு சாசனங்களில் காணப்படுகிறது. அவனைப்பற்றிக் குறிப்பிடுவதாகவே இருக்கும் போலும்.

அடையாமல் யாரை அடைந்தனவோ (அந்த ஸிம்ஹவிஷ்ணு) கவேரன் மகளான காவிரி நதியை மாலேயாகவும், நெல் வயல்கள், செழுமையான கரும்பு வயல்கள் ஆகியவற்றை ஆடையாகவும், கமுகுத் தோட்டம், வாழைத் தோட்டம் ஆகியவை களே ஒட்டியாணமாகவும் கொண்ட சோழர் பூமியைக் கைப்பற்றினன்.

(சுலோகம் 6) "ஸ்ரீவர்த்தமாநேச்வர தர்ம தீர்த்தம்" என்ற க்ஷேத்திரத் தில் எண்ணற்ற குணங்களேயுடைய கணங்களின் 44 (கூட்டங்களின்) தலைவர்கள் நிறைந்த நந்தி சங்கத்தில் சகல சாஸ்திரங்களிலும் நிரம்பிய ஞானமுள்ளவரும் ஆசார்யருமான வஜ்ரநந்தி தோன்றினர்.

(சுலோகம் 7) ஜிநேந்திரர், ஜைநேந்திரர் ஆகிய கூட்டங்களின் வழிபாட் டுக்காக "ச்ரமணுச்ரமம்" என்ற கிராமம் முழுவதையும் நன்கு வகுக்கப்பட்ட எல்லேகளேயுடையதாக 45 அந்தத் தவச் சிரேஷ்டருக்கு அந்த அரசன் அளித் தான்.

(சுலோகம் 8) வணக்கம், பொறுமை முதலியவைகளின் இருப்பிடமானவ னும், நல்ல அறிவு நிறைந்தவனும், (குடி) மக்களின் பயத்தைப் போக்குகிறவனு மான நரபயன் 46 என்னும் மந்திரி இதற்கு ஆக்ஞப்தி (நிறைவேற்றி வைப் பவன்) ஆனன்.

(சுலோகம் 9) எல்லாச் சாஸ்திரங்களிலும் மூழ்கியவனும் கௌரவத்துக்கு உரியவனும், அறிவிலே பிரகஸ்பதிக்குச் சமமானவனுமான மேதாவி இந்தப் பிரசஸ்தியை இயற்றினன்.

தமிழ்ப் பகுதி

'கோ விசைய சிம்ஹவர்மற்கு யாண்டு ஆருவது, வெண்குன்றக் கோட்டத்துப் பெரு நகர நாட்டு நாட்டார் காண்க. தம் நாட்டு அமண் சேர்க்கை 47 பருத்திக் குன்றில் வஜ்ர நந்திக் குரவர்க்குப் பள்ளிச்சந்தமாகக் கொடுத்தோம்; தாங்களும் படாகை நடந்து, கல்லும் கள்ளியும் நாட்டி, அறையோலே செய்து கொடுத்து,

44. குணி, கணி என்ற சொற்கள் ஜைன மதத்தின் பரிபாஷையிலே சிறப்பான பொருள்கள் சிலவற்றையும் அறிவிப்பன. இவ்விடத்தில் கவி அவ்விதமே ஆண்டிருக்கிருர்.

45. நாடு என்பதிலிருந்து பிரிக்கப்பட்டதாகவும் பொருள் கொள்ள முடியும்.

46. "நரபயன்" அதாவது மனிதனுக்குப் பயத்தைக் கொடுப்பவன் என்ற பெயர் பெற்றிருந் தாலும் அவன் குடி மக்களுக்கு அபயம் அளித்து வந்தான் என்று கவி சமத்காரமாகக் கூறுகிருர்.

47. அமண்சொக்கை அல்லது அமண்சோக்கை என்றும் படிக்கமுடியும். அவ்விதமானல் ஊரின் பெயர் அமண்சோடு என்று ஆகும்.

விடுதக என்று நாட்டார்க்குத் திருமுகம் விட—நாட்டாரும் திருமுகம் கண்டு தொழுது, தலைக்கு வைத்து படாகை நடந்து, கல்லும் கள்ளியும் நாட்டி, நாட்டார் விடுந்த அறையோலைப் படிக்கு எல்லை; கிழ்பால் எல்லை ஏந்தலேரியின் சிழைக் கடற்றின் மேற்கும், ஒமைக் கொல்லை எல்லை; இன்னும் தென்பால் எல்லை வேள்வடுகன் கேணியின் வடக்கும், கடற்றின் எல்லை, இன்னும் நீலபாடி எல்லை. இன்னும் விலாடன் குற்றேத்தத்து எல்லை; இன்னும் மேல்பால் எல்லை மாவேத்தத்துவதியின் கிழக்கும், மும்மூலை ஏத்தத்து எல்லை, இன்னும் ஆற்றெல்லை, இன்னும் வடபால் எல்லை பெருங்கொல்லையின் தெற்கு, இன்னும் பாண்டியன் கயத்து எல்லை, இன்னும் முருக்கங்கேணி எல்லை. இவ்விசைத்த பெருநான்கு எல்லை யகத்தும் அகப்பட்ட நிலம்: நீர் நிலமும் புன்செய்யும், களரும் கன்று மேய் பாழும், காடும் பிடிலிகையும், கிடங்கும் கேணியும், மனையும் மனைப் படப்பும், உடும்போடி ஆமை தவழ்ந்தது எல்லாம். உண்ணிலன் ஒழிவின்றி, கோவும் பொறியும் மாற்றி, குடி நீக்கி, இவ்வூர் பெற்ற வஜ்ர நந்திக் குரவர்க்கே பள்ளிச்சந்தமாக தாமரிலும் பதிறைரைப் பட்டி நிலம் கொடுத்தோம். இந் நிலத்திற்கு எல்லை; கிழ்பால் எல்லை புலிகிழார் பட்டியின் மேற்கும், தென்பால் எல்லை முள்ளெறி பாக்கத்தெல்லையின் வடக்கும், மேல்பால் எல்லை போக்கு வாய்ச் செறுவின் கிழக்கும், வடபால் எல்லை பல்லாங்குழிக்காவின் தெற்க்கும், இந்நான்கு எல்லையகத்தும் அகப்பட்ட பூமியும் பருத்திக்குன்றில் வஜ்ர நந்திக் குரவர்க்கே பள்ளிச்சந்தமாக பரதத்தி சென்றது. நரபயன் ஆணத்தியால், ஸித்தம்.

முதலாம் பரமேச்வர வர்மனுடைய கூரம் செப்பேடுகள்

முன்னுரை

சென்னைப் பொருட்காட்சிச்சாலையில் வைக்கப்பட்டுள்ள இந்தச் செப்பேட்டுச் சாசனம், சென்ற நூற்றாண்டின் கடைசியில் காஞ்சிபுரத்திற்குப் பக்கத்திலுள்ள கூரம் கிராமத்தின் கோயில் தர்மகர்த்தாவிடமிருந்து, விலைக்கு வாங்கப்பட்டது. ஒரு வளையத்தில் கோக்கப்பெற்ற ஏழு மெல்லிய ஏடுகளைக் கொண்டது இந்தச் சாசனம். கடைசி ஏட்டிலே ஒரு பாதியே நமக்குக் கிடைத்துள்ளது. இன்னும் முதல் ஏடும், ஐந்தாம் ஆறாம் ஏடுகளும், பாசி பிடித்துப் பழுது அடைந்திருக்கின்றன. அதனாலே சில பகுதிகளைச் சரியாக வாசிக்க முடியவில்லை.

அந்த ஏடுகளைக் கோத்திருந்த வளையத்தின் முத்திரை[1] சுமார் 2½ அங்குலம் குறுக்களவு கொண்ட வட்ட வடிவமான முகப்பைக் கொண்டது. அதிலே இடது புறம் நோக்கி ஓர் ஆசனத்திலே படுத்திருக்கும் ரிஷபத்தின் உருவம் காணப்படுகிறது. "அதன் மேலே பிறைச்சந்திரனும் லிங்கமும் காணப்படுகின்றன. முத்திரையின் விளிம்பைச் சுற்றி வட்டமாக எழுத்துகளும் பொறிக்கப்பட்டுள்ளன. அவை மிகவும் தேய்ந்து போனபடியால், அவற்றை வாசிக்க முடியவில்லை" என்று கூறுகிறார் அந்த முத்திரையைச் சோதித்த டாக்டர் ஹூல்ஷ்.

இந்தச் சாசனம் "தென்னிந்தியச் சாசனங்கள்" முதல் தொகுதியிலே 144–155–ஆம் பக்கங்களில் டாக்டர் ஹூல்ஷ் என்பவரால் வெளியிடப்பட்டுள்

1 இந்த முத்திரையின் படம் தெ. இ. சாசனங்கள், தொகுதி 12–ல் வெளியாகியுள்ளது. (பிளேட் 7)

ளது. அதன் மூன்றும் நான்காம் ஏடுகளிலுள்ள பகுதி "எபிகிராபியா இந்திகா" பதினேழாம் தொகுதியில், *340-344* ஆம் பக்கங்களில் அவரால் மறுபடியும் திருத்திப் பதிப்பிக்கப்பட்டது.

சாசனம் தமிழ், ஸம்ஸ்கிருதம் ஆகிய இரு பகுதிகளையும் கொண்டது.

ஸம்ஸ்கிருதப் பகுதியைக் கிரந்த எழுத்தில் எழுதும்போது, ஆரம்ப நாளில் க்ஷ என்ற எழுத்தை க் ஷ ஆகிய இரண்டும் சேர்ந்த கூட்டு எழுத்தாக எழுதி வந்திருக்கிறார்கள். ஆனால் சிறிது காலம் சென்ற பிறகு, அது த் ஷ ஆகிய இரண்டும் சேர்ந்த கூட்டு எழுத்துப் போன்ற உருவத்தில் எழுதப்பட்டு வந்திருக்கிறது. இந்த மாற்றம் இந்தச் செப்பேடுகளிலேயே காணப்படுகிறது. சாசனங்களைப் பதிப்பிக்கும்போது, அந்த எழுத்தை த் ஷ என்றே வாசித்துப் பிறகு, அதை க்ஷ என்று திருத்துவது சம்பிரதாயம். அந்தத் திருத்தம் பக்கத்திலேயே இரண்டு வளைவுகளுக்குள்ளாகவோ அல்லது அடிக்குறிப்பாகவோ காணப்படும். இந்த வெளியீட்டிலே அந்த முறை பின்பற்றப்படவில்லை. அந்த எழுத்து க்ஷ என்றே வாசிக்கப்பட்டு, கொடுக்கப்பட்டுள்ளது. சாசனத்திலே அந்த எழுத்துக்கு, த் ஷ போன்ற உருவம் இருந்தாலும், அதை எழுதியவர் அந்த இடத்திலே க்ஷ என்ற எழுத்தையே அமைத்திருக்கிறார் என்பது வெளிப்படை. அதனால் செப்பேட்டிலோ, கல்வெட்டிலோ காணும் உருவம் க்ஷகரத்திற்கென்று தனியாகச் சிருஷ்டிக்கப்பட்ட உருவமென்றே கொள்ளவேண்டும்.

க்ஷகரம் ஒரு தனியெழுத்து இல்லை என்பது உண்மை தான். அது கூட்டெழுத்தே. எனினும் தமிழ்நாடு சம்பந்தப்பட்ட வரையில் கிரந்த நெடுங்கணக்கிலே அது ஒரு தனி எழுத்தாகவே கருதப்பட்டு வந்திருக்கிறது. சிறுவர்களுக்குக் கிரந்த எழுத்தைக் கற்பிக்கும் பாலபாடத்திலே க்ஷகரம் மெய்யெழுத்துகளில் கடைசி எழுத்தாகக் கொடுக்கப்பட்டிருக்கும். ஸம்ஸ்கிருத நெடுங்கணக்கு எழுத்துகளை மொத்தமாகக் குறிக்கும்போது "அகாராதி க்ஷகாராந்தம்" (அகரம் முதல் க்ஷகரம் முடிய) என்று குறிப்பிடுவது வழக்கம். அதிலிருந்து க்ஷகரம் கிரந்த நெடுங்கணக்கின் கடைசி எழுத்து என்பது தெளிவாகும். எழுத்தைக் குறிக்கும் அக்ஷரம் என்னும் ஸம்ஸ்கிருதச் சொல்லும் அவ்விதம் அமைந்ததே என்றும் கூறலாம். அவ்விதமானால் அதற்குத் தனி உருவம் வேண்டுமல்லவா? அதுவேதான் இவ்விடம் காணப்படுவது போலும்.[2]

2. உயிரும் மெய்யுமாக ஸம்ஸ்கிருத நெடுங்கணக்கு மொத்தம் நாற்பத்தொன்பது எழுத்துகளைக் கொண்டது என்பர். ஆனால் தமிழ் நாட்டிலோ அதிகப்படியான எழுத்துகளைக் கொண்டு 51 எனவும், 52 எனவும் இருவிதமாகக் கொள்ளப்படுகிறது. நாற்பத்தொன்பதுடன் ள, க்ஷ ஆகிய இரண்டையும் சேர்த்து ஐம்பத்தொன்றாகக் கருதுவர். "ஷ்ப" என்ற எழுத்தையும் சேர்த்து ஐம்பத்திரண்டாகவும் கருதுவர்.

ஸம்ஸ்கிருதப் பகுதி சிவபெருமானுக்கு வணக்கம் கூறும் இரண்டு சுலோ கங்களைக் கடவுள் வாழ்த்தாகக்கொண்டு ஆரம்பமாகிறது. அடுத்த சுலோகம் பல்லவ வம்சத்தின் புகழ் பாடுகிறது. அப்பால் அந்த வம்சத்தின் வரன்முறை காணப்படுகிறது. பிரம்மா, அங்கிரஸ், பிரகஸ்பதி, பரத்வாஜர், துரோணர், அசுவத்தாமன், பல்லவன் என்ற முறையில் அது கொடுக்கப்பட்டுள்ளது. பல்லவ னிடமிருந்து தோன்றிய அந்த வம்சத்தின் புகழ் மறுபடியும் ஒரு சுலோகத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

அப்பால், வரலாற்றில் இடம்பெற்ற மூவரைப்பற்றிச் சாசனம் உரைக்கிறது. அவர்கள், சாசனத்தில் கண்ட தானம் வழங்கிய (முதலாம்) பரமேச்வர வர்மன், அவன் தந்தை (இரண்டாம்) மகேந்திர வர்மன், பாட்டன் (முதலாம்) நரசிம்ம வர்மன் ஆகிய மூவருமே ஆவர்.[3] இந்த ஸம்ஸ்கிருதப் பகுதியின் முக்கிய அம்சம். தானத்தை வழங்கிய பரமேச்வர வர்மன் சாளுக்கிய அரசனை முதலாம் விக்கிர மாதித்தியனோடு போரிட்டு வெற்றி கொண்ட களத்தின் வருணனையே ஆகும். அந்த விக்கிரமாதித்தியனுடைய ஆட்சியின் கடைசிக் காலத்திலே வழங்கப்பட்ட சாசனங்களில் அவன், நரசிம்ம வர்மன், மகேந்திர வர்மன், பரமேச்வர வர்மன் ஆகிய மூன்று பல்லவ அரசர்களையும் வெற்றி கொண்ட செய்தி முக்கியமான தாகக் கூறப்பட்டுள்ளது. அத்தகைய புகழ்வாய்ந்த விக்கிரமாதித்தியன் கடைசி யிலே பரமேச்வர வர்மனிடம் தோற்று ஓடிப்போனனென இந்தச் சாசனம் கூறுகிறது. இவற்றைக் கவனிக்கும்போது, விக்கிரமாதித்தியன் கூறிக்கொண்ட தற்கு எதிரடியாகவே பரமேச்வர வர்மன் இச்சாசனத்தில் இம்மூவரின் புகழை மட்டும் கூறியுள்ளானே என எண்ணத் தோன்றுகிறது.

சரித்திர புருஷர்களில் முதலில் குறிக்கப்பெற்றிருப்பவன் முதலாம் நரசிம்ம வர்மன் ஆவான். அவன் உதயகிரியிலிருந்து தோன்றும் (ஸோமாதித்தியர்) சூரிய சந்திரருக்கு உவமிக்கப்பட்டிருக்கிறன். ஸோமாதித்தியன் என்பது அவன் பெய ராகவே இருக்குமோவெனச் சந்தேகிக்கத் தோன்றுகிறது. செஞ்சிக்குப் பக்கத் திலுள்ள மேலைச்சேரியின் குடைவரைக் கோயிலைச் சந்திராதித்தியன் என்பான்

3. ஆந்திரப் பிரதேசத்துக் குண்டூர்–நெல்லூர் ஜில்லாப்பகுதியிலிருந்து கிடைத்த பல்லவ சாசனங்களில், தானம் வழங்கியவனுடைய தந்தை, பாட்டன், முப்பாட்டன் ஆகிய மூவர் பெயர்களும் கொடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அந்த முறை இந்தச் சாசனத்திலே கொள்ளப்பெறவில்லை. வம்சத்தின் பழைய வரலாறு புராண புருஷர்களிலிருந்து ஆரம்பித்துக் கூறப்படுகிறது. எனினும் சரித்திரகால புருஷர்களில் இம்மூவர்மட்டுமே குறிக்கப்பட்டிருக்கிறார் கள். வாதாபி கொண்ட நரசிம்மவர்மனுக்கு முன் அரசு புரிந்த அவன் தந்தை முதலாம் மகேந்திர வர்மன், பாட்டன் சிம்மவிஷ்ணு போன்றவர்கள் பேரரசர்களேயாயினும், இச்சாசனத்தில் அவர் களுடைய பெயர்கள் குறிக்கப் பெருமை கவனிக்கத்தக்கது.

குடைவித்ததாக அதிலே காணும் கல்வெட்டு ஒன்று கூறுகிறது. "ஸிம்ஹபுரத்தில் சிவனுக்கு இருப்பிடமாக ஸ்ரீசிகரி பல்லவேச்வரம் என்ற இது (கோயில்) (ஸர்வநாதன்) எல்லோருக்குந் தலைவனை சந்திராதித்தியன் என்னும் அரசனால் செய்விக்கப்பெற்றது". என்று பொருள்படும் அந்தச் சாசனம்[4] பொறிக்கப்பட்ட எழுத்துகள் முதலாம் நரசிம்ம வர்மனுடைய காலத்தில் வழங்கிய எழுத்துகளை ஒத்திருக்கின்றன என்றும், அந்தக் கோயில் அமைக்கப்பட்ட விதமும், அவன் காலத்தில் வழங்கிய சிற்ப முறையையே ஒத்திருக்கின்றது என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுவர்.[5] எனினும், அவனுக்குச் சந்திராதித்தியன் என்ற பெயர் வழங்கி வந்ததென்பது வேறு வகையால் தெரியாமையால், அவன் யார் என்பதை நிர்ணயிக்க முடியாமல் விட்டு வந்திருக்கிறார்கள். இச் சாசனத்தில் காண்பதைக் கொண்டு அந்தப் பெயர் முதலாம் நரசிம்ம வர்மனையே உணர்த்தும் என்பதை இப்போது உறுதியாகக் கொள்ளலாம்.

அடுத்தபடியாக, அவன் "அவிநதன் முதலிய அரசர்களுடைய தலைகளின் கூட்டங்களுக்கு வச்சிராயுதம் போன்றவன்" என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறான். அவிநதன் என்னும் சொல் விநயமற்றவன் எனப் பொருள்படும். மேலைக் கங்க வம்சத்து அரசர்களிடையே அவிநீதன், துர்விநீதன், நிர்விநீதன் முதலிய அரசர்கள் இருந்திருக்கிறார்கள். அந்தப் பெயர்களும் அதே பொருளைக் கொடுப்பனவே. அவர்களுள் அவிநீதன் என்பவன் ஆட்சியிலேதான் சிம்மவிஷ்ணுவின் தாயார் அருகக் கடவுளுக்கு ஒரு கோயில் எழுப்பியிருந்தாள் என்பதை நாம் முன்னரே குறிப்பிட்டிருக்கிறோம். அவனுடைய மகன் துர்விநீதன் என்பான். அவன் ஸம்ஸ்கிருதத்திலே சிறந்த வித்வான். "சப்தாவதாரம்" என்ற நூலையும், "வட்டகதா" என்னும் பெருங்கதையின் மொழிபெயர்ப்பையும், "கிராதார்ஜுநீய"த்தின் பதினைந்தாம் சருக்கத்துக்கு விருத்தியையும் எழுதியவனும். அவந்திசுந்தரி கதையிலிருந்து, பல்லவ சிம்மவிஷ்ணு, சாளுக்கிய விஷ்ணுவர்த்தனன் ஆகியவர்களோடு அவன் சமகாலத்தில் இருந்தவன் எனத் தெரிகிறது. அந்தக் காவியத்தை எழுதிய தண்டியின் முப்பாட்டனை தாமோதரன் விஷ்ணுவர்த்தனனுக்கு உற்ற நண்பனாக இருந்து, பின்னால் தீர்த்த யாத்திரையின்போது, துர்விநீதன் சபையில் வந்து தங்கியிருந்தானும். அப்பால் அவன் பல்லவ மன்னனின் ஆதரவு பெற்றுக் காஞ்சிபுரம் வந்து, ஒரு பெண்ணை மணந்து நிரந்தரமாக அங்கேயே தங்கிவிட்டானும்.[6] இவற்றைக் கவனித்தால், துர்விநீதன், விஷ்ணுவர்த்தனன், சிம்மவிஷ்ணு ஆகிய

4. "தெ. இ. சாசனங்கள்". தொகுதி 12-115 என்.

5. டாக்டர் ழுவோ-துப்ராய் எழுதிய Paliava Antiquities "பல்லவர் புராதனச் சின்னங்கள்", முதல் பாகம், பக்கம் 66.

6. 'அவந்தி சுந்தரி கதாசாரம்' முதல் பரிச்சேதம். சுலோகங்கள் 27-36.

மூவரும் சமகாலத்தவர்களாக இருந்தாலும், சிம்மவிஷ்ணு அப்போது முதுமை யடைந்தவனாக இருத்தல் வேண்டுமெனக் கொள்ளலாம். பிற்காலத்தில் எழுதப் பட்டு, ஹூம்சா என்னுமிடத்திலிருந்து கிடைக்கும் கன்னடக் கல்வெட்டு ஒன் றிலே துர்விநீதனைப்பற்றிக் கூறுமிடத்திலே, இராவணனுடைய பிரதிமை போல் விளங்கிய காடுவெட்டியை அவன் போர்க்களத்தில் வெற்றிக்கொண்டானென் றும், ஜயசிம்ம வல்லபனுடைய ராஜ்யத்திலே தன்னுடைய பெண் வயிற்றுப் பெய ரனை அரசனாக மகுடாபிஷேகம் செய்து வைத்தானென்றும் அவன் புகழப்பெற் றிருக்கிறான். [7] ஜயசிம்மனுடைய ராஜ்யமென்று சாசனத்தில் குறிக்கப்பட்டிருப் பது வாதாபிச் சாளுக்கியர்களின் அரசேயாகும். அதனால் துர்விநீதன், ராஜ் யத்தை இழந்திருந்த தன் பெயரனுக்காகப் பரிந்து கொண்டு பல்லவர்களுடன் போரிட்டு, சாளுக்கிய ராஜ்யத்தை மீட்டு, தன் பெயரனை அங்கே முடிசூட்டி வைத்தான் என்பது தெளிவு. ஆனால் அந்தப் பெயரன் யார் என்பதுதான் தெரிய வில்லை.

துர்விநீதன் ஆட்சிக் காலத்தைக் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் முற்பகுதி யாகவே ஆராய்ச்சியாளர்கள் கருதுவர். [8] அவன் 40 ஆண்டுகளுக்குக் குறையா மல் ஆட்சி புரிந்திருக்கிறான். [9] அந்தக் காலத்திலே சாளுக்கிய அரசைப்பெற்ற இரண்டாம் புலகேசி, அவன் மகன் முதலாம் விக்கிரமாதித்தியன் ஆகிய இரு வருமே சிங்காதனத்துக்குப் போரிட்டு வெற்றிகொண்டே ராஜ்யத்தை அடைந் திருக்கிறார்கள். துர்விநீதனால் முடிசூட்டப்பட்டவன் புலகேசி என்று சிலரும், விக்கிரமாதித்தியன் என்று வேறு சிலரும் கொள்வர். எனினும் அவன் விக்கிர மாதித்தியனேயாவான் என்ற பொதுவான கருத்து இப்போது நிலவி வருகிறது. [10]

அவர்கள் அவ்விதம் கருதுவதற்குக் காரணம் சாளுக்கிய விக்கிரமாதித்தி யன் தன் ஆட்சியின் இருபதாம் ஆண்டிலே பல்லவ ராஜ்யத்தின்மீது படையெடுத்து வந்து, சோழ நாட்டில் காவிரியின் தென் கரையில் உரகபுரத்தில்

7. எபிகிராபியா கர்நாடிகா தொகுதி. 8, (நகர் 35)

8. Dr. G. ழுவோ–துப்ராய் : Ancient History of the Deccan, p. 106; also Mysore Archaeological Report, 1921, p. 28.

9. கும்மிரெட்டிபுரம் செப்பேடுகள், மைசூர் ஆர்க்கியலாஜிகல் ரிபோர்ட்டு, 1912 பாராக் கள் 85–89.

10. சென்னை கிறிஸ்தவக் கல்லூரிப் பத்திரிகை, (Madras Christian College Magazine) 1925; "துர்விநீதனும் விக்கிரமாதித்தியனும்" என்ற பெயரில் டாக்டர் என். வேங்கடரமணய்யா எழுதிய ஆங்கிலக் கட்டுரை.

தங்கியிருந்த காலத்தில் வழங்கிய கத்வால் செப்பேடுகளிலே"[11] அந்தத் தானம் கங்க மஹா தேவியின் விருப்பத்திற்கிணங்க அளிக்கப்பட்டது என்று காணப்படுவதே ஆகும். கங்க மஹாதேவியை விக்கிரமாதித்தியனுடைய தாயாகவே ஆசிரியர்கள் கொண்டார்கள். கத்வால் சாசனம் வழங்கப்பட்ட காலத்தில் விக்கிரமாதித்தியன் பட்டத்திற்கு வந்து இருபது ஆண்டுகள் ஆகிவிட்டன. அவன் பட்டத்திற்கு வந்தபோதே வயது முதிர்ந்தவன். அவன் ஆட்சிக் காலத்திலே அவன் மகன் விநயாதித்தியனும், பெயரன் விஜயாதித்தியனும் அரசாங்கக் காரியங்களை நிர்வகித்தும், போர்களில் ஈடுபட்டு நடத்தியும் வந்திருக்கிறார்கள். அதனால் விக்கிரமாதித்தியனே அந்தக் காலத்தில் மிகவும் வயதானவனாக இருத்தல் வேண்டும் எனவும், அவன் தாயார் தொண்டு கிழவியாக இருந்திருப்பாள் எனவும் கொள்ளலாம். அதற்கு நான்கு ஆண்டுகளுக்குமுன் விக்கிரமாதித்தியன் வழங்கிய தானத்தைத் தெரிவிக்கும் ஹொன்னூரர்ச் செப்பேடுகளிலே[12] அவனுடைய அண்ணன் ரணராக வர்மன் மகளும் கங்க வமிசத்துக் கலியங்கன் மகனான மாதவன் தேவியுமான அரசகுமாரியின் விண்ணப்பத்தால் அது அளிக்கப்பட்டது என்ற செய்தி காணப்படுகிறது. கங்க மஹாதேவி என்று கத்வால் சாசனம் குறிப்பிடுவது அவளே ஆவாள் எனலாம்.

கங்க வம்சத்திலே துர்விநீதன் என்ற பெயர் கொண்ட வேறு சிலரும் இருந்திருக்கிறார்கள். உதாரணமாக, மேலைச்சாளுக்கிய அரசனான விஜயாதித்தியனுடைய ஆட்சியின் 35-ஆம் ஆண்டு (கி. பி.731) கொண்டதாக ஆந்திரப் பிரதேசத்துக் கர்நூல் தாலூகாவில் உள்ள உள்சளம் என்ற இடத்திலிருந்து கிடைத்த கன்னடக் கல்வெட்டில்[13] யுவமகாராஜனான விக்கிரமாதித்தியன் காஞ்சியின் மீது படையெடுத்துச் சென்று, பல்லவ பரமேச்வர வர்மனிடம் திறைபெற்றுத் திரும்பும் வழியில், உள்சலு, பரியலு ஆகிய இரு கிராமங்களையும் கங்கனான துர்விநீத எற்றப்பனுக்கு அளித்த செய்தி கூறப்பட்டிருப்பதைக் காட்டலாம்.

நிர்விநீதன் என்ற பெயரும் கங்கர்களுடைய சாசனங்களில் இரண்டிலே காணப்படுகிறது. சிரகுண்டா[14] என்னுமிடத்தில் கிடைத்த கன்னடக் கல்வெட்டிலே, "நிர்விநீதனின் சிறிய மகன் காடுவெட்டியாலும், வல்லப அரசனாலும் கொங்கணிப் பட்டம் சூட்டப்பெற்றபோது, அவனுடைய தம்பி கோபித்

11. எபி. இந்திகா, தொகுதி 10, பக்கம் 101.

12. மைசூர் ஆர்க்கியலாஜிகல் ரிபோர்ட்டு, 1939, பக்கங்கள் 129–37, (சாசன எண் 30)

13. சாசன இலாகாவின் 1942–ஆம் வருஷத்து ஆண்டறிக்கை, 22–ஆம் கல்வெட்டு E பிற்சேர்க்கை.

14. எபிகிராபியா கர்நாடிகா. தொகுதி 6, சிக்மகளூர் 50.

துக்கொள்ள, நந்தியால மக்கள் அவனுக்குப் படைவயலில் அம்சம் வழங்கினுர்கள்'' என்ற செய்தி காணப்படுகிறது. தகரே என்னும் இடத்திலிருந்து கிடைத்த பொலவீரனுடைய செப்பேட்டுச் சாசனத்திலே[15] அவனுடைய தந்தையின் பெயர் நிர்விநீதன் என்றே குறிக்கப்பட்டுள்ளது. எனினும் ஆராய்ச்சியாளர்கள் பொலவீரனைத் துர்விநீதனின் மகனுகவே கருதுவார்கள்.

இவைகளைக் கவனித்தால், கங்க வம்சத்தவர்கள் அந்நாளிலே இரண்டு பிரிவாகப் பிரிந்து, ஒருவர் வாதாபிச் சாளுக்கியர்களையும், மற்றவர் காஞ்சிபுரத்துப் பல்லவர்களையும் சார்ந்து நின்றுர்கள் எனக் கொள்ளலாம். எவ்விதமாயினும், வாதாபி கொண்ட நரசிம்ம வர்மன் காலத்திலே, பல்லவர்களுக்கும், கங்க வம்சத்தவர்களுக்கும் விரோத பாவம் இருந்து வந்தது என்பது தெளிவாகும். அவ்விதம் அவனேடு போரிட்டுத் தோல்வியுற்றதாக இந்தச் செப்பேட்டுச் சாசனத்திலே குறிக்கப்படும் அவிநதன் யார் என்பதை நிர்ணயிக்க, அந்தக் காலத்திய கங்க வம்சத்தின் சரித்திரத்தை விரிவாக ஆராய வேண்டியது அவசியம். அதை மற்றோர் இடம் காண்போம். எனினும் தற்காலத்துக்கு அவனைத் துர்விநீதன் என்றே கொள்ளலாம்.

அடுத்தபடியாக, நரசிம்ம வர்மன் சோழ, சேர, களப்ர, பாண்டியர்களைத் திரும்பத் திரும்ப முறியடித்தான் என்றும், பரியளம், மணிமங்கலம், சூரமாரம் முதலிய இடங்களில் புலகேசியைப் புறமுதுகிட்டு ஓடச்செய்து ஒவ்வொரு தடவையும் அவன் முதுகான பட்டயத்திலே வெற்றியைக் குறிக்கும் எழுத்துகளை எழுதினுன் என்றும், வாதாபியை அழித்தான் என்றும், இந்தச் சாசனம் விவரித்துக் கூறுகிறது. மணிமங்கலம் என்பது ஸ்ரீபெரும்பூதூர் தாலுக்காவில் உள்ளது. பரியளம் என்பதை மேலே குறிப்பிட்ட கர்நூல் தாலுக்காவில் உள்சளத்துக்குப் பக்கத்திலுள்ள பரியளு என்னும் ஊராகவே கொள்ளலாம். சூரமாரம் என்பது அனந்தபூர் ஜில்லாவில் உள்ளது. இரண்டு ஊர்களுமே வாதாபியிலிருந்து தமிழ்நாட்டுக்கு வரும் இரண்டு ராஜபாட்டைகளில் அமைந்திருந்தன என்பது தெளிவாகும். பரியளம் என்பது கிழக்குப் பக்கமாக வரும் நெடுஞ்சாலையிலும் சூரமாரம் என்பது மேற்குப்பக்கம் வருவதிலும் இருந்தன.

வாதாபியை அவன் கைப்பற்றியது, "வாதாபிகொண்டவன்" என்று அவன் தரித்துக்கொண்ட விருதிலிருந்தே விளங்கும். இன்னும் அவனுடைய ஆட்சியின் பதின்மூன்றும் ஆண்டு கொண்ட கல்வெட்டு ஒன்று[16] வாதாபியில் கிடைத்திருப்பதும் இதனை வலியுறுத்தும்.

நரசிம்ம வர்மன் மகனும் பரமேச்வர வர்மன் தந்தையுமான (இரண்டாம்) மகேந்திர வர்மனைப் பற்றிய சரித்திர நிகழ்ச்சி ஏதும் காணப்படவில்லை. அடுத்த

15. மைசூர் ஆர்க்கியலாஜிகல் ரிபோர்ட்டு, 1918, பக்கம் 41.
16. தெ. இ. சாசனங்கள், தொகுதி 11 (பம்பாய்-கர்நாடகக் கல்வெட்டுகள்), என் 1.

படியாகச் சாசனம் வழங்கிய பரமேச்வர வர்மன் மேலைச்சாளுக்கிய மன்னனை (முதலாம்) விக்கிரமாதித்தியனோடு நடத்திய போர் சுமார் இருபது சுலோகங்களில் வருணிக்கப்பட்டு இருக்கிறது. அந்தப் போரின் முடிவிலே பல லட்சம் சேனையைக் கொண்ட விக்கிரமாதித்தியன் ஒரு கந்தையால் தன்னை மறைத்துக் கொண்டு ஓட நேர்ந்ததாம். பரமேச்வரனுடைய யானைக்கு மகிவாரணம்[17] என்று பெயர், அதாவது இந்திரனுடைய யானையான ஐராவதம் என்பதே போலும். குதிரைக்கு அதிசயம் என்று பெயர். ஊற்றுக்காட்டுக் கோட்டத்தில், நீர்வேளூர் என்ற அவாந்தர ராஷ்டிரத்தில், கூரம் என்ற கிராமத்தில் வித்யாவிநீத பல்லவாதிராஜன், தன் பெயரால் எழுப்பிய வித்யாவிநீத பல்லவ பரமேச்வர கிருகத்தில் எழுந்தருளுவித்த சிவபெருமானாகிய பிநாகபாணியின் பூஜை முதலியவற்றிற்கும், பாரதம் வாசிப்பதற்கும், மணயிற் கோட்டத்துப் பன்மா அவாந்தர ராஷ்டிரத்தில் பரமேச்வரமங்கலம் என்னும் கிராமத்தைத் தேவதான நிமித்தம் பிரம்மதேயமாக வழங்கினான். உத்தரகாரணிகனை மகாசேநதத்தன் அதற்கு ஆக்ஞப்தி. வித்யாவிநீத பல்லவ பரமேச்வர கிருகத்தின் பூஜை முதலிய தேவ காரியத்தை நடத்துவதற்குக் கூரத்தாசாரியர் மகன் அனந்தசிவாசாரியரும், இன்னும் புல்லசர்மனும், இவ்விருவருடைய புத்திர பௌத்திரர்களும், கட்டளையிடப் பட்ட செய்தியைத் தெரிவிப்பதோடு ஸம்ஸ்கிருதப் பகுதி முடிவடைகிறது.

தமிழ்ப் பகுதியில் இரண்டு நிகழ்ச்சிகள் காணப்படுகின்றன. கூரத்தில் சிவாலயம் எடுத்தது ஒன்று; பரமேச்வரமங்கலம் கிராமத்தைப் பிரம்மதேயமாக்கியது மற்றொன்று. விச்சாவிநீத பல்லவ அரசன் கோயில் ஒன்று எழுப்புவதற்கும் அதற்கு வேண்டிய செங்கல்-சூளை எடுப்பதற்குமாக மொத்தம் ஐந்தேகால்பட்டி நிலம் விலை கொடுத்து வாங்கினான். ஒரு பட்டி நிலம் ஆயிரத்து இருநூறு குழிகள் கொண்டது. ஆகவே அவன் விலைக்கு வாங்கிய நிலம் மொத்தம் 6300 குழி. சூளை போடுவதற்காக வாங்கிய நிலம் ஊருக்கு வெளியே தலைப்பாடகத்தில் சூளை–மேட்டுப்பட்டி என்பது. மண்டகம், அதாவது கோயில், ஊருள் எழுப்பப் பெற்றது. அந்த ஐந்தேகால் பட்டி நிலத்திலே அவன் கோயில் எடுத்தான், ஏரி தோண்டினான், கோயிலிலே வழிபாடு செய்பவர்கள் இருப்பதற்கான மனையும் தோட்டமும் வகுத்தான்; மீதி நிலத்தை விளைநிலமாக்கி அவர்களுடைய அநுபோகத்துக்கு அளித்தான்.

மணயிற் கோட்டத்துப் பன்மாநாட்டுப் பரமேச்வர மங்கலத்து எல்லைக்குள் அகப்பட்ட நிலம் முழுவதையும் இருபத்தைந்து பங்காக்கி, இருபது பங்குகளைப் பிராம்மணர்களுக்குப் பிரம்மதேயமாக அளித்தான். மீதி உள்ள ஐந்து

17. பழைய ஆசிரியர் அதை அரிவாரணம் என்று கொள்வர். இதைப் பின்னால் விளக்கியிருக்கிறோம்.

பங்கில் மூன்று பங்கைக் கூரத்தில் எழுப்பிய சிவன் கோயில் பூசைத் திருப்பணிக் காகவும், மற்றும் ஒரு பங்கு கூரத்து மண்டகத்தில் நீர் நெருப்புக்காகவும், மற் றும் ஒரு பங்கு பாரதம் வாசிப்பதற்கும் ஒதுக்கப்பட்டன. கோயில் திருப்பணிக் காக ஒதுக்கப்பட்ட மூன்று பங்குகளை அனந்தசிவாசாரியார், புல்லசர்மர் ஆகிய இருவரும் சமபாகமாக மக்கள் வழியே அனுபவித்துக் கோயில் வழிபாடு நடத்திவர வேண்டுமென்பதும் நிர்ணயிக்கப்பட்டது.

வழக்கமாகப் பலசுருதி சுலோகங்கள் காணும் இடத்தில் நான்கு சுலோ கங்கள் காணப்படுகின்றன. அந்த இடத்திலே இந்தப் பிரசஸ்தியை இயற்றியவ னைப் பற்றிய ஏதோ ஒரு விவரம் இருந்திருக்க வேண்டுமெனத் தெரிகிறது. சந் திரனும் அவனுடன் இருப்பவனும் சிநேகனும் பந்துவுமான மற்றொருவனுமாக இருவர் குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் பிரசஸ்தி பாடியவர் களாகவோ அல்லது அதற்குக் காரணமாய் இருந்தவர்களாகவோ இருத்தல் வேண்டும் போலும். இன்னும் யுத்த காலத்தைப் பற்றிய பிரஸ்தாபம் ஒன்றும் காணப்படுகிறது. கடைசியிலே உள்ள சுலோகம் பலசுருதி பற்றியது. பலசுருதி சுலோகம் மற்றச் சாசனங்களிலும் காணப்படுவதேயாகும்.

சாசனத்தை வழங்கிய முதலாம் பரமேச்வர வர்மன் புகழைக் கூறும் சுலோகம் ஒன்று பழைய ஆசிரியர்களால் பின்வருமாறு மொழிபெயர்க்கப் பட்டிருப்பது கவனிக்கத்தக்கது.

(சுலோகம் 5.) "பரதன் போல எல்லாவற்றையும் அடக்கியவன் (ஸர்வத மனன்). தன் பிள்ளையான அஸமஞ்சனைக் கைவிட்ட சகரன் போல அஸமஞ்சர் களை (முட்டாள்களை)த் துறந்தவன். அங்க தேசத்து அரசனான கர்ணன் போல் நிறைந்த அங்கங்கள் (தேக உறுப்புகள்) கொண்டவன். கவி குலத்தில் பிறந்த உஷணஸ் என்ற தன் மாமனாரான காவியனிடம் பிரியம் கொண்ட யயாதியைப் போல் கவிகளிடம் பிரியம் கொண்டவன்."

இந்தச் சுலோகத்திலே அவன் பரதன், சகரன், கர்ணன், யயாதி ஆகிய நான்கு அரசர்களோடு ஒப்பிடப்பட்டு இருக்கிறான். அவ்விதம் உவமித்துக் கூறும்போது ஆளப்பட்டுள்ள சொல் இருவகையிலும் பொருள் கொடுக்கக் கூடியது. யயாதியோடு ஒப்பிடுமிடத்தில் கவிப்பிரியன் என்பதைக் கவிகளுடைய சிருஷ்டிகளான காவியங்களிடத்தில் பிரியம் கொண்டவன் என்று அரசனைப் பற்றிக் கூறும்போது பொருள் கொள்ளப்பட்டு வருகிறது. ஆனால் யயாதியைப் பற்றிக் கூறும்போது கவிப்பிரியன் என்பதற்கு வேறு விதமான பொருள் கூற வேண்டும். கவி குலத்தில், அதாவது பிருகு வம்சத்தில், பிறந்த சுக்கிராசாரியரு

டைய மகளை யயாதி மணந்திருந்தான். அவளிடம் யயாதிக்கு அதிகமான மோகம். அதனால் போலும் யயாதி தன் மாமனாரிடமும் அதிகப் பிரியம் கொண்டிருந்தான். பிரசஸ்தி எழுதியவர் அதையே இவ்விடம் குறிப்பாகக் கொள்ளுவர். இவ்விதமே மற்றவர்களோடு உவமித்துக் கூறும் இடங்களிலும் ஆளப்பட்டுள்ள சொற்களுக்குப் பல்லவ அரசனைப் பற்றிக் கூறும்போது ஒருவிதமாகவும், மற்றவர்களைப் பற்றிக் கூறும்போது வேறுவிதமாகவும் பொருள் கண்டிருக்கிறார்கள். அவ்விதம் கொள்ளுவதால் சுலோகம் சிலேடையாக மட்டுமே அமையும். அப்படி இல்லாமல் இருவரையும் உவமித்துக் கூறுவதாகக் கொண்டு இருவரைப் பற்றிக் கூறும்போதும் அந்த அந்தச் சொற்களுக்கு ஒரே வகையான பொருளைக் கொள்ளவும் முடியும்.

பிருகு வம்சத்தில் பிறந்தவனிடம் பிரியம் வைத்திருந்ததால் யயாதி கவிப்பிரியன் ஆனது போலவே, முதலாம் பரமேச்வர வர்மனும் ஆகியிருத்தல் கூடும். திருக்கோவலூரைத் தலைநகராகக்கொண்டு அரசு புரிந்த குறுநில மன்னர்களான மலையமான்கள் பிருகு வம்சத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் தங்களைச் சுக்ராந்வயத்தர் என்றும் பார்க்கவ குலத்தர் என்றும் கூறிக்கொள்கிறார்கள். சங்க நூல்களிலும் அவர்களைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. சோழர்கள் ஆட்சிக் காலத்திலும் அவர்கள் செல்வாக்குடன் வாழ்ந்திருக்கிறார்கள். இடைக்காலத்திலும் அவர்கள் அங்கேயே இருந்து ஆட்சி புரிந்து, நல்ல செல்வாக்குடன் விளங்கினார்கள் என்று கொள்ளலாம்.

தவிர, கூரம் சாசனம் வழங்கப்பெற்ற அதேசமயம், இந்தோ-சீனாவிலும் இப்போதுள்ள தெற்கு வியட்நாம் என்று வழங்கப்பெற்றுவரும் அன்னம் பகுதியில் விளங்கிய சம்பா தேசத்தில் பிருகு வம்சத்து மன்னர்கள் ஆட்சி புரிந்து இருக்கிறார்கள். அவர்கள் தமிழ்நாட்டு மலையமான்களுடைய குலத்தவர்கள் என்று சொல்ல முடியும்.[18] பரமேச்வர வர்மன் ஆட்சிக் காலத்திலே மலையமான்கள் ஆட்சி புரிந்த நடுநாடு பல்லவ சாம்ராஜ்யத்தினுள் அடங்கியிருந்தது என்பதையும் நாம் அறிவோம். அதனால் மலையமான் மகளை அவன் மணந்திருத்தலும் சாத்தியமே. அவ்விதமானால் சுலோகத்தில் அந்தப் பகுதி முற்றுவமையாகவே அமைவதைக் காணலாம்.

அடுத்தபடியாகப் பல்லவ மன்னன் கர்ணனோடு உவமிக்கப்பட்டிருப்பதைப் பார்ப்போம். கர்ணன் அங்க தேசத்து அரசனாவான். பல்லவ மன்னனைப் பற்றிக்

18 "கலைக்களஞ்சியமும் தமிழ்நாடும்" என்ற தொடரில் ஐந்தாம் பாகமான "தென்கிழக்கு ஆசியாவில் கேரளரும் மலையாளரும்" என்ற நூலில் "பார்க்கவ குலம்" என்ற கட்டுரையில் இதை நான் விளக்கியிருக்கிறேன்.

கூறுமிடத்திலே அங்கம் என்ற சொல் உடலின் உறுப்புகளைக் குறிப்பதாகவே கொள்வர். எனினும், அது அங்க தேசத்தையே குறிப்பதாக இருக்குமோ என்பதும் கவனிக்கத்தக்கது. பல்லவர்களிலே தெள்ளாற்றெறிந்த நந்திவர்மனை அங்க நாடன் என்று அவன் மீது பாடப்பெற்றுள்ள "நந்திக் கலம்பகம்" கூறுகிறது (பாடல் 39). அங்க நாடென்பது வடக்கே பாகல்பூரைச் சுற்றிய பிரதேசமே ஆகும். அதிலிருந்து அங்க நாட்டிற்கும் பல்லவ நாட்டிற்கும் ஏதோ ஒரு வகையில் தொடர்பு இருந்தது எனவும், நந்திவர்மனைப் போலவே பரமேச்வர வர்மனும் அங்க நாடனாக விளங்கினானே எனவும், எண்ணலாம். இந்தப் பின்னணியில், வங்காளத்துச் சந்தால் பர்கானாவில் உள்ள தேவ்கர் என்னும் இடத்து வைத்திய நாதர் ஆலயத்திலிருந்து கிடைத்த சாசனப் பகுதி கவனிக்கத்தக்கது. அடியும் முடிவும் இல்லாத துண்டாகக் காணும் அந்தக் கல்வெட்டு பதினாறும் நூற்றாண்டைச் சேர்ந்த எழுத்துகளிலே பொறிக்கப்பட்டுக் காண்கிறது. இன்னும் அது பொறிக்கப்பட்டுள்ள கல் வேறு ஏதோ ஓர் இடத்திலிருந்து அவ்விடத்திற்குக் கொணரப்பட்டு இருத்தல் வேண்டுமென ஆராய்ச்சியாளர் கருதுவர். அது பாகல்பூர் ஜில்லாவிலுள்ள மந்தாரமலைப் பிரதேசத்திலிருந்து வந்ததாகவே இருத்தல் வேண்டுமென்றும் கருதுவர். அதிலே ஆதித்தியசேனன் என்ற அரசன் ஒருவன் சோழ நகரத்திலிருந்து திரும்பிய செய்தி (ஸோலபுராதாகெதஃ) குறிக்கப்பட்டு இருப்பதே முக்கியமானது. அவன் கிருதயுகத்திலே அரசு புரிந்தான் என்று அதிலே காணப்படுகிறது. அது ஏதோ ஒரு புராணக்கதை போலவே தோற்றமளிப்பதாகும். இப்போதுள்ள வடிவில் கல்வெட்டின் முடிவிலே "இதி மந்தாரகிரி ப்ரகரணம்" (உதி மந்தாரகிரி ப்ரகரணம் இவ்விதம் மந்தாரகிரி அத்தியாயம் முடிவடைகிறது) என்று காணப்படுவதும் அது ஏதோ ஒரு புராணத்தின் பாகமே என்பதை உறுதிப்படுத்தும். அவ்விதமானால் கல்வெட்டிலே காணப்படும் செய்தி கர்ணபரம்பரையாக அவ்விடம் வழங்கி வந்த ஒன்றைத் தெரிவிப்பது என்னும் அளவுக்கே கொள்ளக்கூடியது. எனினும் சாசன எழுத்துகளின் காலமான 16-ஆம் நூற்றாண்டிலே சோழர்கள் ஆட்சி முடிந்து நீண்டகாலமாகியிருந்தது. தமிழ்நாட்டிலேயே மறைந்துவிட்ட அவர்கள் பெயர் வெகு தூரத்திற்கு அப்பால் உள்ள வங்காளத்திலே நினைவிலிருந்திருப்பதற்கில்லை. ஆனால் அதில் காணும் கர்ணபரம்பரைச் செய்தி மேலும் நம் பக்கூடியதாக ஆகிறது. அதில் காணும் ஆதித்தியசேனன் என்ற அரசனை மகத நாட்டிலே அரசு புரிந்த பிற்காலக் குப்தர் வம்சத்தைச் சேர்ந்தவனாகவே ஆராய்ச்சியாளர்கள் கருதுவர். கல்வெட்டில் காணும் வேறோர் விவரமும் அதை உறுதிப்படுத்துகிறது. புராணக் கல்வெட்டிலே ஆதித்தியசேனனுடைய அரசி கோஷதேவி என்று குறிக்கப்பட்டு இருக்கிறாள். குப்தர்களின் பிற்காலப் பரம்பரையில் வந்து, மகத நாட்டை ஆண்ட ஆதித்தியசேனனுடைய மஹிஷி

கோண தேவி என்ற பெயர் கொண்டவள். பாகல்பூர் மாவட்டத்தில் உள்ள மந்தாரகிரியில் காணும் கல்வெட்டுகளிலே அவள் அவ்விதம் குறிக்கப்பட்டு இருக்கிறள். கோண தேவி என்பதைச் சரியாகப் படிக்க முடியாமல் பிற்காலத்தில் கோஷ தேவி என்று தவருகப் படித்து எழுதியிருத்தல் வேண்டுமென்று ஆசிரியர்கள் கருதுவர். அம்மன்னன் மகத நாட்டிலே கி. பி. 672-3 ஆம் ஆண்டில் அரசுபுரிந்து வந்திருக்கிறன் என்பதை நாம் அறிவோம். அடுத்த ஆண்டில் அதாவது கி. பி. 674–ல்தான் வாதாபி வேந்தனை முதலாம் விக்கிரமாதித்தியன் பெரும் படையோடு படையெடுத்து வந்து, சோழ நாட்டிலே காவிரியின் தென்கரையில் உரகபுரம் என்ற பாம்பூரிலே பாடி இறங்கியிருந்தான் என்பதையும், வடவேந்தர் வேறு பலரும் அவனுக்கு உதவியாக வந்திருந்தார்கள் என்பதையும் நாம் அறிவோம். மேலே குறித்த தேவ்கர் கல்வெட்டிலே ஆதித்தியசேனன் சோழ நகரத்தினின்றும் திரும்பியதாகக் குறிக்கப்பட்டு இருப்பது உரகபுரத்துப் படையெடுப்பின் முடிவில் சோழ நாட்டிலிருந்து அவன் ஊர் திரும்பியதையே குறிப்பதாகக் கொள்ளலாம். விக்கிரமாதித்தியனுக்கு அந்தப் படையெடுப்பிலே வெற்றி கிட்டவில்லே; அவன் தோல்வியுற்று ஓடினன் என்பதைக் கூரம் செப்பேடுகள் காவிய நடையில் விஸ்தாரமாக வருணித்துள்ளன. அதனல் அந்தப் போரிலே ஈடுபட்டிருந்த மகத நாட்டு மன்னனை ஆதித்தியசேனனும் தோல்வியுற்று ஓடியிருத்தல் வேண்டும். பாகல்பூர் பிரதேசமான அங்க நாடும் அந்நாளிலே மகத சாம்ராஜ்யத்திற்கு உட்பட்டிருந்தது. இவற்றைக் கவனித்தால், பல்லவ அரசனை முதலாம் பரமேச்வர வர்மன் அங்க நாட்டை வெற்றிகொண்டதாகவும் கொள்ளலாம்.[19]

மூன்ருவதாக, அஸமஞ்சனேத் துறந்த சகரராஜனேடு பல்லவன் உவமிக்கப்பட்டிருக்கிறன். சகரமன்னன் தன் மகனை அஸமஞ்சனேத் துறந்தான். அஸமஞ்சன் என்பான் இக்ஷ்வாகு வம்சத்துச் சகர மன்னன் மகன். அவன் தெருவிலே விளேயாடும் சிறுவர்களேக் கடத்திச் சென்று ஆற்றிலே மூழ்கடித்துக் கொன்று வந்தாளும். அதனல் கொதித்தெழுந்த நாட்டு மக்கள் அரசனிடம் முறையிட்டார்களாம். எவ்வளவு புத்திமதி கூறியும் ராஜகுமாரன் என்னவோ திருந்துவதாக இல்லே. கடைசியாக மேலும் பொறுக்க முடியாமல் அரசன் தன் மகனேயே நாட்டைவிட்டுத் துரத்திவிட்டானும். ஆனல் பல்லவர்களேப் பற்றிக் கூறும்

19 *பிளீட் பதிப்பித்த "குப்தர் சாசனங்கள்"* (J. F. Fleet: Gupta Inscriptions) *பக்கங்கள் 212--213.*

இன்னும் ஏழாவது அகில இந்தியக் கீழ்த்திசை ஆராய்ச்சியாளர் மகாநாட்டிற்கு "உரக புரம் பற்றிய ஒரு குறிப்பு" (A Note on Uragapura) *என்ற பெயரில் நான் எழுதியனுப்பிய கட்டுரையில் இதை விரிவாக விவாதித்திருக்கிறேன்.* (Proceedings of the Seventh all India Oriental Conference)

போது முட்டாள் என்றே பொதுவாகக் கொள்கிறேம். வாசகத்தின் போக்கை ஊன்றிக் கவனித்தால், பல்லவனும் தன் மகன் ஒருவனையோ அல்லது அவனைப் போன்ற நெருங்கிய உறவினன் ஒருவனையோ துறந்தான் எனக் கொள்ளலாமோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அது வெறும் சந்தேகமே. எனினும் பல்லவ--சாளுக்கியப் போர் வேகம் தணியாமல் இருபது இருபத்தைந்து ஆண்டுகளுக்கு இழுத்துக்கொண்டு வந்த காலப்போக்கையும் சூழ்நிலையையும் கவனித்தால், உள்ளுக்குள்ளேயே துரோகியோ சுயநலக்காரனே என்று கருதுவதற்கு இடம் அளிக்கக்கூடிய யாராவது இருந்திருத்தல் கூடும் என்றே தோன்றுகிறது. ஓயாமல் நடக்கும் போர் இரு நாடுகளுக்கும் பெருங்கேடுகளை விளைப்பதுடன் இரு நாட்டு மக்களின் வாழ்க்கையையும் சீர்குலைத்துவிடும். அதைக் கருத்தில் கொண்ட அரசகுமாரன் யாரேனும் ஒருவன் சில விஷயங்களில் விட்டுக்கொடுத்தாவது போரை முடிவுக்குக் கொணரலாமென்று அரசனிடம் கூறியிருக்கக் கூடும். அரசன் அதை ஏற்க விரும்பாவிட்டால், நிச்சயம் அவனைத் துரோகியாகவே கருதி நாட்டைவிட்டு வெளியேற்றி இருப்பான். அடுத்த நூற்றுண்டில் கர்நாடகப் பிரதேசத்தில் விளங்கிய நுளம்ப–பல்லவர்கள் தங்களை "ஈச்வர வம்சம்" என்றும் கூறிக்கொள்வர். பரமேச்வர வர்மன் வழிவந்தவர்களே அவர்கள் என்பதைத்தான் அத்தொடர் குறிப்பிடுகிறதா?

நிலம் வழங்கப்பெற்ற கூரம், பரமேச்வரமங்கலம் ஆகிய இரண்டு ஊர்களில் கூரம் என்பது காஞ்சிபுரத்துக்குப் பக்கத்தில் உள்ளது. சாசனம் அங்கே இருந்துதான் கிடைத்தது. பரமேச்வரமங்கலம் என்பது மதுராந்தகம் தாலுக்காவில் கிழக்குப் பகுதியில் பாலாற்றின் தெற்கில், கடற்கரைப் பக்கத்தில் இருப்பதாகும். அவ்விடத்திலும் சிவனுக்கு ஒரு கற்றளி உள்ளது. சைலேச்வரம் என்று முன்னுளில் வழங்கப்பெற்றது. அதிலே பல்லவர் கல்வெட்டுகளும் [20] கிடைத்துள்ளன.

சாசன பாடம் [1]

முதல் ஏடு—பின்புறம்

1. [illegible]
2. [illegible]
3. [illegible]

20. தெ. இ. சாசனங்கள், தொகுதி 12, சாசனங்கள் 68, 69.

1. தெ. இ. சாசனங்கள், இரண்டாம் தொகுதியிலும், எபி. இந்திகா. பதினேழாம் தொகுதியிலும் வெளியான படங்களிலிருந்தும் மூல ஏட்டிலிருந்தும் பெயர்த்து எழுதப்பட்டது.

4. ஷூாபதாο விஜ்ஹஉஙி [ஃ*] ॥ [க*] கா[யூஷவூஹை] கஙாகஜஉஷூ
[வாஉவெூாஉா]ஃஜத [ஜெூாதிஷொ வி]

5. ஊநூாநஷஅரு.ஜகாநூவதிதா உஙூஷநீ பஷூாοப[வஃ] [।*] [ஹஙதாநாο
ஊஜ] ஒ.வெ[ஷு அாந]ய

இரண்டாம் ஏடு—முன்புறம்

6. தி யஃ பக்ஷீο கிஜபாஷாயநீο ஜுபாதூா[2] வாஜெபூாஷூ ஜயதி
ஜெஜுொகூஷஙஸாஉணி[ஃ] ॥ [உ*] ஸ-

7. ஸ்ஹூணூ உஷொஉபாயஉபயா ஞஷூாநஒஙொஒூஉழ ஙியூாஒாநூஉஒாந-
பஙாஉ-

8. நஜதவூாஹாஙஜிஹூாநநழ [।*] ஜாதο யதூ நஷெபூாநூ ஞுணாஷொ[3]
யஹெூஷு வா விக்ஷு[வழ]

9. நிவீஷூாஃ[4] வஜய்வீநீரிதிஉவதாநூதஙுவாநாο கஙுழ ॥ [ந*]
ஸ்ஹூணாοபிஙாஜூ[ஜொ] வஜஹை-

10. ஷூதி[ஃ] தஷூாஹூஙஹூாஜஃ தஜதா ஜொணஃ [ஜொ] ணாஒவஙிஉித-
தெஜாயாஉா[பூதூா]உா

11. தஜதா நிஙாகஜத [ா*]கஙாவஙூவஃ வஙூவஃ பதஷூகஙுஷுவந-
வஙூஷ(ஃ) வஙூவகஙுழ [॥*]

இரண்டாம் ஏடு - பின்புறம்

12. ஷெயாதுதஙுவகஙுழ யதூ ஜாதஜஜெபூாஃ[5] [।*] ஸஸ்ஹூணூஃ
ஒாதாஙூ[6] பஙநூாநபஞஉ [*ச]த

13. [ஒ]ஒய[7] யஙணியஙஷொஉாஒிதூஷூாவிநதஉவ(ஃ) நஜவதிஉஙீஷ
அஜொபஜெந[8] ஞூதிபநீ[9] ஙாஜமஜ

2. தஜபூாதூா என்று இருத்தல் வேண்டும்.
3. பஜணாஜொ என்று வாசிக்கவும்.
4. நிவீஷூ என்று இருத்தல் வேண்டும்.
5. ஜஜெநபூாο என்று வாசிக்கவும்.
6. இரண்டு இடங்களிலும் மகரம் இரட்டிக்கப் பெற்றிருக்கிறது.
7. முதலில் தஒஙய என்று எழுதிப் பின்னல் தஒஒய என்று திருத்தப் பெற்றதாகக் காண்கிறது.
8. உஙயஷ நிவபாஜெநஃ என்று கொள்ளலாம். டாக்டர் ஹுல்ஷ் உஙீஷ வஙஸாஉொஃ என இருக்கலாமோ என்று சந்தேகித்தார்.
9. ஞூதூஙிஷ என்று வாசிக்கவும்.

14. 𑌯𑌶𑌸𑍍𑌸𑌿𑌂𑌹𑌸𑍍𑌯 𑌨𑌰𑌸𑌿𑌂𑌹𑌵𑌰𑍍𑌮𑌣𑌃 𑌸𑍍𑌵𑌯𑌮𑌿𑌵 𑌭𑌗𑌵𑌤𑍋 𑌨𑍃𑌪𑌤𑌿
𑌰𑍂𑌪𑌾𑌵𑌤𑍀𑌰𑍍𑌣𑍍𑌣𑌸𑍍𑌯 𑌨𑌰𑌸𑌿𑌂𑌹-

15. 𑌸𑍍𑌯 𑌮𑍁𑌹𑍁𑌰𑌵𑌜𑌿𑌤𑌚𑍋𑌲𑌕𑍇𑌰𑌲𑌕𑌲𑌭𑍍𑌰𑌪𑌾𑌣𑍍𑌡𑍍𑌯𑌸𑍍𑌯 𑌸𑌹𑌸𑍍𑌰-
𑌬𑌾𑌹𑍋𑌰𑌿𑌵 𑌸𑌮𑌰𑌶𑌤𑌨𑌿-

16. 𑌰𑍍𑌵𑌿𑌷𑍍𑌟𑌸𑌹𑌸𑍍𑌰𑌬𑌾𑌹𑍁[10]𑌕𑌰𑍍𑌮𑌣𑌃 𑌪𑌰𑌿𑌯𑌲𑌮𑌣𑌿𑌮𑌙𑍍𑌗𑌲𑌶𑍂𑌰𑌮𑌾𑌰𑌾-
𑌦𑍍𑌯𑌨𑍇𑌕𑌰𑌣𑌵𑌿𑌦𑌰𑍍𑌶𑌿𑌤𑌪𑍁𑌲-

17. 𑌕𑍇𑌶𑌿𑌪𑍃𑌷𑍍𑌠𑌪𑌟𑍍𑌟𑌲𑌿𑌖𑌿𑌤𑌵𑌿𑌜𑌯𑌾𑌕𑍍𑌷𑌰𑌸𑍍𑌯 𑌕𑍁𑌮𑍍𑌭𑌯𑍋𑌨𑍇𑌰𑌿𑌵 𑌵𑌿𑌜𑌿𑌤-
𑌵𑌾𑌤𑌾𑌪𑍇𑌃 𑌪𑍌𑌤𑍍𑌰𑌃 𑌸-

18. 𑌮𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌸𑍍𑌯𑍇𑌵 𑌸𑍁𑌰𑌪𑌤𑌿𑌸𑌂𑌪𑌦𑍋 𑌮𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌰𑍍𑌮𑌣𑌃 𑌸𑍂𑌨𑍁𑌰𑍍𑌗𑍁𑌣𑌿𑌤-
𑌵𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌰𑌮𑌧𑌰𑍍𑌮𑌸𑍍𑌯 𑌪𑌾𑌤𑌾[ः]

மூன்றும் ஏடு—முன்புறம்.

19. 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰 𑌇𑌵 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕𑌾𑌧𑌿𑌕𑌾𑌰𑌃[11] 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌵𑌰𑍍𑌮𑌾 [॥*]
𑌹𑌰𑌿𑌤 𑌇𑌵 𑌸𑌰𑍍𑌵𑌾𑌧𑌾𑌰[ः*] 𑌸𑌾𑌗𑌰 𑌇𑌵 𑌗𑌮𑍍𑌭𑍀-

20. 𑌸𑌰𑌸𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌮𑌃 [।*] 𑌕𑌰𑍍𑌣𑍍𑌣 𑌇𑌵 𑌪𑌾𑌣𑍍𑌡𑌵𑌾𑌨𑍍𑌮𑍋 𑌯𑌃 𑌪𑍍𑌰𑌿𑌯𑌕[𑌰*]𑌸𑍍𑌤𑍍𑌰-
𑌯𑌾𑌤𑌿𑌰𑌿𑌵 [॥*௩] 𑌅𑌨𑌾𑌪𑌨𑌤𑌾𑌨𑌾𑌂 𑌰𑌾𑌜𑍍𑌞𑌾[𑌂*]

21. 𑌯𑌸𑍍𑌯𑌾𑌜𑍍𑌞𑌾 𑌭𑌵𑌤𑌿 𑌸𑌰𑍍𑌵𑌦𑌾𑌵𑌨𑌾[12] [।*]𑌸𑍈𑌵 𑌸𑌾𑌮𑍍𑌰𑌾𑌜𑍍𑌯𑌦𑍀𑌕𑍍𑌷𑌿𑌤
𑌸𑌾𑌵𑌪𑍋𑌹𑌾[𑌂*] 𑌕𑌰𑍍𑌣𑍍𑌣𑍇𑌵𑌾𑌨𑍍𑌤𑌯𑌾 [॥ ௪ *] 𑌅𑌤𑌾𑌰𑌃 𑌕𑍍𑌷𑍋-

22. 𑌵𑌿𑌕𑍍𑌷𑍋[𑌭𑍈] 𑌨𑌿𑌯𑌤𑌂 𑌯𑌶𑍍𑌶𑌾𑌲𑌿𑌨𑍋[13] 𑌭𑌵𑌤𑍍𑌯𑌨𑌂𑌗𑌸𑍍𑌯 [। *] 𑌅𑌨𑍍𑌤-
𑌮𑌾𑌨𑍍𑌤𑍍𑌯 𑌭𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌿𑌯𑍇 𑌅𑌨𑍍𑌤𑌮𑌾𑌨 𑌸𑌵

23. 𑌵𑌨𑌿𑌤𑌾[𑌨𑌾]𑌦[॥௫*]𑌅𑌮𑌣𑌿𑌤𑌨𑌰𑌸𑌪𑌕𑌰𑌿𑌕𑌾𑌰𑍍𑌵𑌿𑌸𑌰𑍍𑌜𑌨𑌿𑌤𑍇𑌨 𑌪𑌰𑌾-
𑌤𑌾𑌪𑌿𑌤𑍇𑌨 [।*] 𑌕𑍂𑌰𑍋𑌪𑌿𑌤𑌪-

24. 𑌪𑌿𑌸𑍍𑌣𑍁𑌕𑍍𑌷𑍋𑌦𑌯𑌸𑍍𑌯 𑌸𑌹𑌸𑍍𑌰𑌕𑌰𑌬𑌿𑌂𑌬𑍈 [॥ ௬ *] 𑌪𑌟𑌹𑌰𑌵𑌮𑌜𑍍𑌜𑌿-
𑌤𑍋𑌮𑍇𑌰𑍍 𑌵𑌿𑌕𑍋𑌪𑌪𑌨𑌿𑌷𑍍𑌤𑍍𑌰𑌂𑌪(𑌕)𑌵𑌿-

10. 𑌬𑌾𑌹𑍁 என்பதில் 𑌬 என்னும் எழுத்து முதலில் ஜ என்று எழுதிப் பின்னல் திருத்தப்பட்டது.

11. 𑌪 கரம முதலில் 𑌪𑌿 என்று எழுதப்பெற்றுப் பிறகு திருத்தப்பட்டதாகக் காண்கிறது.

12. 𑌦𑍀𑌯 என்று படிக்கவும்.

13. 𑌯𑌶𑍍𑌶𑌾𑌲𑌿𑌨𑍋 என்று படிக்கவும்.

25. [illegible] [| *] [illegible]
[illegible] [|| *] [illegible]-

மூன்றும் ஏடு—பின்புறம்

26. [illegible] [14] [| *] [illegible]
[illegible] [|| [illegible] *] [illegible]-

27. [illegible] [| *] [illegible]-
[illegible]-

28. [illegible] [|| [illegible] *] [illegible] [15] [illegible]
[illegible] [16] [| *] [illegible]-

29. [illegible] [[illegible] *] [illegible] [|| [illegible] *] [illegible]-
[illegible] [17] [illegible]-

30. [illegible] [| *] [illegible]-
[illegible] [|| [illegible] *] [illegible]-

31. [illegible] [18] [| *] [illegible]-
[illegible] [19] [|| [illegible] *] [illegible]-

32. [illegible] [[illegible] *] [illegible] [| *] [illegible]-
[illegible] [[illegible]] [illegible]-

நான்காம் ஏடு—முன்புறம்

33. [illegible] [20] [[illegible] *] [illegible] [[illegible]] [illegible]
[[illegible]] [illegible] [| *] [illegible]

14. [illegible] என்று வாசிக்கவும்.

15. [illegible] என்று படிக்கவும்.

16. [illegible] என்று வாசிக்க.

17. [illegible] என்று வாசிக்கவும்.

18. [illegible] அல்லது [illegible] அல்லது என்று படிக்கவும்.

19. [illegible] என்று வாசிக்கவும்.

20. [illegible] என்று வாசிக்கவும்.

34. [illegible][21] [||கூ *] [illegible][22] [illegible]

35. [illegible][23][illegible] [। *] [illegible] [யி]-[illegible][24] [illegible] [|| கள *] [illegible]

36. [illegible][25][illegible] [ஃ *] [। *] [illegible] [ஃ *] [illegible]

37. [illegible] [illegible][26] [illegible] (அ) [|| கஅ *] [illegible] [ஃ *] [illegible][27][illegible]

38. [illegible] [। *] [illegible] [ா *] [illegible] [|| கக *] [illegible]

39. [illegible] [illegible] [। *] [illegible]

40. [illegible][28] [|| உ0 *] [illegible] [illegible] [illegible] [9।*] [illegible] [-ஃ*] [illegible]

நான்காம் ஏடு—பின்புறம

41. [illegible] [ா[29]] [|| உக *] [illegible][30] [illegible] [೦ *] [illegible][31] [illegible]

21. [illegible] என்று கொள்ளவேண்டும் போலும்.

22. [illegible] என்று வாசிக்கவும்.

23. [illegible] என்று வாசிக்கவும்

24. [illegible] என்று வாசிக்கவும்.

25. [illegible] என்று வாசிக்கவும்

26. [illegible] என்று வாசிக்கவும்

27. [illegible] என்று வாசிக்கவும்

28. [illegible] என்று வாசிக்கவும்.

29. [illegible] என்று வாசிக்கவும்.

30. [illegible] என்று வாசிக்கவும்.

31. [illegible] என்று வாசிக்கவும். டாக்டர் ஹுல்ஷ் அந்தப் பெயரை "அரிவாரணம்" என்று கொண்டார். அது வேறு எந்த இடத்திலும் கிடைக்கவில்லை.

32. [illegible] என்று வாசிக்கவும்.

42. [illegible] [। *] [illegible] 32 [illegible] 33 [॥ உஉ *]

43. [illegible] 34 [illegible] 35 [illegible] [। *] [illegible]

44. [illegible] 36 [illegible] 37 [illegible] [॥ உ௩ *] [illegible]

45. [illegible] 38 [। *] [illegible] 39 [illegible] 40 [illegible]

46. [illegible] [। உ௪ *] [illegible] 41 [। *] [illegible]

47. [illegible] 42 [॥ உரு *] [illegible] [[illegible] * 43] [illegible]

48. [illegible] 44 [illegible] [। *] [illegible] [*] [illegible]

33. [illegible] என்று வாசிக்கவும்.

34. [illegible] என்று இருக்கவேண்டும் போலும். [illegible] என்று டாக்டர் ஹூல்ஷ் திருத்தியிருக்கிறார். அது அவசியமாகத் தோன்றவில்லை.

35. [illegible] என்று டாக்டர் ஹூல்ஷ் திருத்தியிருக்கிறார். இது அவசியமாகத் தோன்றவில்லை.

36. [illegible] என்று வாசிக்கவும்.

37. [illegible] என்று வாசிக்கவும்.

38. [illegible] என்று வாசிக்கவும்.

39. [illegible] என்று வாசிக்கவும்.

40. [illegible] என்று வாசிக்கவும்.

41. [illegible] என்று வாசிக்கவும்.

42. [illegible] என்று வாசிக்கவும்.

43. இம்மூன்று எழுத்துகளும் விட்டுப்போய் உள்ளன. இதை டாக்டர் ஹூல்ஷ் குறிப்பிட்டு இடத்தைப் பூர்த்தி செய்யாமல் விட்டுவிட்டார். செய்யுள் அமைதியை ஒட்டி இம்மூன்று எழுத்துகளும் இட்டு நிரப்பப்பெற்றன.

44. உபத்மானீயத்தை மகர ஒற்றாக வாசித்துப் பிறகு உபத்மானீயமாகத் திருத்தியிருக்கிறார்கள்.

ஐந்தாம் ஏடு—முன் புறம்

49. 𑌤𑍇 𑌵𑍀𑌰𑌕𑌰𑍍𑌤𑍍𑌤𑌾 [॥ ௨௯ *] 𑌤𑍇𑌨 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑍇𑌣 ஊற்றுக் காட்டுக்
கொட்ட 𑌵𑌿𑌷𑌯𑍇 நீர்வேளூர் 𑌨𑌾𑌮𑌕𑌨𑍍𑌯𑌵𑌨𑍍𑌤[45] 𑌰𑌾𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌮𑌧𑍍𑌯

50. 𑌤𑌤𑍍𑌵𑌤𑌾𑌦𑍍𑌵𑍇𑌦𑌿 [46] 𑌕𑌾𑌯𑌸𑌹𑍍𑌯𑌕𑍂𑌕𑍂𑌰𑌗𑍍𑌰𑌾𑌮𑌕𑍇𑌷𑍍𑌯 [47] 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌿𑌨𑍀𑌤-
𑌪𑌲𑍍𑌲𑌵 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰 𑌗𑍃𑌹𑌂 𑌪𑍍𑌰𑌤𑌿𑌷𑍍𑌠𑌾𑌪𑍍𑌯

51. 𑌤𑌸𑍍𑌯 𑌭𑌗𑌵𑌤𑌃 𑌪𑌰𑌮𑍇𑌷𑍍𑌠𑌿𑌨 [ः *] 𑌪𑌿𑌨𑌾𑌕𑌪𑌾𑌣𑍇 [ः *] 𑌪𑌶𑍁𑌪𑌤𑍇
𑌷𑍍𑌟[𑌾]𑌪𑌨[48] 𑌕𑌾𑌲𑌾𑌸-𑌗𑌨𑍍𑌧-𑌧𑍂𑌪-𑌦𑍀𑌪-𑌹𑌵𑌿𑌰𑍍𑌬𑌲𑌿-

52. 𑌹𑌾𑌰𑌪𑌤𑍍𑌰 𑌶𑌂𑌖𑌪𑌟𑌹[𑌾]𑌹𑌾𑌤𑌿 𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌨𑌾𑌰𑍍𑌤𑍍𑌥𑌂 𑌸𑌤𑍍𑌰𑌵 𑌉𑌦𑌕𑌮𑌣𑍍𑌡
𑌹𑌾𑌰 𑌤𑌮𑌾𑌵𑌸𑍍𑌥𑌾𑌨[49] 𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌾𑌯𑌞𑍍𑌚

53. 𑌮𑌣𑌿𑌕𑍍𑌕𑍇 [ச *] 𑌟𑍇𑌮𑌗𑍍𑌯𑍇 𑌪𑌤𑍍𑌤𑌾𑌨𑌾𑌮𑌕𑌨𑍍𑌯𑌵𑌾𑌞𑍍𑌚𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰
𑌮𑌂𑌗𑌲𑌨𑌾𑌮 𑌗𑍍𑌰𑌾𑌮[ः *] 𑌦𑍇𑌵𑌦𑌾𑌨[50]

54. 𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌦𑍇𑌯 [ஂ *] 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌿𑌨𑍀𑌤𑌪𑌲𑍍𑌲𑌵𑌾𑌧𑌿𑌰𑌾𑌜𑌵𑌿𑌜𑍍𑌞𑌪𑍍𑌤𑍍𑌯𑌾
𑌸𑌰𑍍𑌵𑌦𑌿𑌤𑍍𑌤 𑌪𑌰𑌿𑌹𑌾𑌰𑍇 𑌦𑌿𑌤𑍍𑌤(ः) 𑌸𑌰𑍍𑌵𑌦𑌿

55. 𑌤𑍍𑌤 𑌪𑌰𑌿𑌹𑌾𑌰𑍇𑌦𑌿𑌤𑍍𑌤 𑌇𑌤𑌿 [॥ *] 𑌅𑌤𑍍𑌰𑌾𑌜𑍍𑌞𑌪𑍍𑌤𑌿𑌃 𑌉𑌤𑍍𑌤𑌰𑌕𑌾𑌰𑌣𑌿𑌕𑌾 𑌮𑌹𑌾
𑌸𑍇𑌨𑌦𑌿𑌤𑍍𑌤 [ः *] 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌵𑌿𑌨𑍀

56. 𑌤 𑌪𑌲𑍍𑌲𑌵 𑌪𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑌗𑍃𑌹 𑌇𑌹 𑌅 𑌦𑍇𑌵𑌕𑌜𑌿[𑌨]𑌵 [𑌕 *] 𑌜𑌿
𑌕𑌰𑍍𑌤𑍍𑌤𑌾𑌅𑌾𑌯𑌸𑍍𑌯 𑌪𑌾𑌤𑍍𑌰 𑌅𑌨𑌨𑍍𑌤

ஐந்தாம் ஏடு—பின்புறம்

57. 𑌶𑌿𑌵 𑌸𑍂𑌵𑌾𑌯𑌿[ः *] [𑌦𑌿𑌤𑍍𑌤] 𑌇𑌤𑌿 [𑌹𑌾]𑌲𑌶𑌜𑌿[𑌾 *] 𑌶𑍈𑌲 𑌪𑌾𑌤𑍍𑌰
[𑌪𑍈𑌳𑌤𑍍𑌰𑌾] 𑌸𑍂𑌜𑍍𑌞𑌪𑍍𑌤𑍍𑌯𑌾𑌃[51] ॥ ஊற்றுக் காட்டுக் கொ–

58. ட்டத்து நீர்வேளூர் நாட்டுக் கூரமும் ஞெம்மனம்பாக்கமு. ....
[ஞங்கணத] ...[ட] விச்சாவிநீ–

45. 𑌨𑌾𑌮𑌨𑌿 𑌅𑌵𑌾𑌨𑍍𑌤𑌰𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑍇 என்று கொள்ளவேண்டும் போலும்.

46. 𑌅𑌷𑍍𑌟𑌪𑌤 𑌅𑌤𑌾𑌦𑍍𑌵𑍇𑌦𑌿 என்று வாசிக்கவும்

47. 𑌕𑍂𑌰 𑌨𑌾𑌮 𑌗𑍍𑌰𑌾𑌮𑌕𑍇𑌷𑍍𑌯 என்று வாசிக்கவும்

48. 𑌪𑌶𑍁𑌜𑌾𑌸𑍍𑌥𑌾𑌪𑌨 என்று வாசிக்கவும்

49. 𑌉𑌦𑌕𑌾𑌮𑌣𑍍𑌡𑌹𑌾𑌰𑌤𑌾𑌵𑌸𑍍𑌥𑌾𑌨 என்று வாசிக்கவும்.

50. 𑌦𑍇𑌵𑌦𑌾𑌨 என்று வாசிக்கவும்

51. 𑌸𑍂𑌜𑍍𑌞𑌪𑍍𑌤𑍍𑌯𑌾𑌃 என்று வாசிக்கவும்

59. தப் பல்லவரசன் விலைக்காணங் கெயிக் கொடுத்து[ச் சி]...[ெ]ண [52]
செயிது ஆயிரத்தி[ரு]நூ–

60. ற்றுக்குழிப்படியால் விற்றுக்கொண்ட நிலம் த[ளி] எடுப்பதற்கு ஒடு
சுடக்கொண்ட நி

61. லம் தலெப்பாடகத்துள் சூளைமெட்டுப்பட்டியும் ஊருள் மண்டகம்
எடுத்த நில–

62. த்தொடுங்கூட அயிந்தெ கால் பட்டி நிலமும் விற்று கொண்டு விச்சாவி
நீத பல்லவ பரமெச்சு

63. ரகரம் எடுத்து எரி தொண்டி இத்தளி வழிபாடு செயிவார்க்கு இருக்கும்
மனையும் மனைப்ப

64. டப்பும் வகுத்து இதநுள் மிக்க நிலம் ஒழுக்கவிக்கு வி[ளை] நிலமா[க]வும்
[।*] இன் நிலத்துக்கு

ஆரும் ஏடு—முன்புறம்

65. [கீழ்பா]லெல்லை முதுகாட்டு வழியின் மெற்கும் தென்பாெ[லல்லைஊ]ர்
புகு [வழியின் வடக்கு]

66. ம் மெல்பாலெல்லை ஊர் புகு வழி நின்றும் வடக்கு நொக்கி நாட்டுக்கா
லு[க்]கெ பொன வ[ழி]–

67. யின் கிழக்கும் வடபாலெல்லை நாட்டுக்காலிந் தெற்கும் [।*] இன்
நான் கெல்லெ அகத்து[ம்]

68. தளி[யு]ம் எரியும் வழிபாடு செயிவார்[க்*]கு மனையும் மனைப்
படப்புன் நீக்கி மிக்–

69. க நிலமும் சூளைமெட்டுப்பட்டியும் ஒழுக்கவிக்கு விளை நிலமாக கொடுத்
[த*]து [।*]இத்

70 தளிக்கு வெண்டுந் தெவகரும நவகருமஞ் செயிவதற்கும் இருபதின்மர்
சதுர்ப்பெதிக–

71. ளுக்குப் பிரமதெயங் கொடுப்பதற்கும் மணயிற் கொட்டத்துப் பன்மா
நாட்டுப் பர–

72. மெச்சுரமங்கலத்துள் அகப்பட்ட வளெயில் சுற்று நிலம் அத்தனையும்
இருப[த்]–

ஆரும் ஏடு—பின்புறம்

73. தையிந்து பங்காயி இதனுள் மூன்று பங்கும் கூரத்துத் தளிக்கு [தெ]
வ[கரும] நவகருமஞ்[செய்]–

52. சிராவணை என்று அந்தச் சொல்லைப் பூர்த்தி செய்யலாம்.

74. வதாகவும் கூரத்து மண்டக[த்து*]க்கு தண்ணீர்[க்*]குந் நீக்கும் ஒரு பங்காகவும் இம்மண்டகத்தெ பா

75. ரதம் வாசிப்பதற்கு ஒரு பங்காகவும் நின்ற இருபது பங்கும் இருபதின்மர் சதுர்ப்பெதிக

76. ளுக்கு பிரமதெயமாக கொடுதுது [53] [।*] இவ்வூர் மனையும் மனைப்படப்பும் ஊராள்ச்சியும் செக்–

77. கும் தறி[யும்] கூலமும், தரமும் கத்திக்காணமும் மற்றும் பொதுவிநால் லுள்ளதெல்லாம் இ[ப்]—

78. பங்கு இருபத்தைன்தின் வழியாலெ பங்கிட்டுண்பா(ர்)ராகவும் [।*] இவ்வூர் பரமச்சுர தடாகத்–

79. துக்கு பாலாற்று நின்றும் தொண்டின பெரும்பிடுகு காலி[ந்]ழுதி பாடும் நீ(ர்)ரீன்த வழியா[லெ]

80. [தலை]வாயும் தலெப்பெழையும் ஊ[ற்*]று[க்*] காலும் தொண் [டின நில]மெல்லாம் [பரமெசு]–

ஏழாம் ஏடு—முன்புறம்

81. வரமங்கலத்து நி[ல]மாக இக்காலுள் குற்றெ[த்த].........
82. மையும் நாட[ா]ழ்ச்சியு[ன்] நாட்டுப்பண்ணிக்கெயு[ம்]......
83. தானங் கொடுத்த முன்று பங்குநுளும் [ஒ]ன்றரைப் பங்[கு]......
84. நார் [அ]னந்தசிவ ஆசாரியர் மக்கள் மக்கள் ம[ரு]மக்க[ள்]......
85. ப்புற[ம]க் கொண்டு வழிபாடு செயி[து பலி]பொ[சன]......
86. ம் கொண்டு பு[ல்ல]ச[ரு]மர் மக்க[ள் மக்கள்]
87. வகருமமும் இவ்விருவர் மக்கள் மக்கள்......
88. தெவதஊகா நின்ற ஸவூஹடாஜ கருங்கா......

ஏழாம் ஏடு—பின்புறம்

89. க்காத்து கொடுக்க ॥ ஃஸஷூா[ஃ*] ஏூபஸூஜவ[தா].....................
90. ஸொஊஸூ யஸஷூாஸூஹவாஸ ஸஙூஷூ[ய]...............................
91. ஷூஃசூஜு ஷியா ஹகூஜு வாதூ யஃ [।*] ஊஜீஜஜ..........................
92. வூஷா[கி] வாஹநாகி ஊஷீவதெ [।*] யூஜுகாமெ.......................
93. தெவஸூஜூ[ா*]ஷூணஸூஜு ஜொபெகொவஹிநஸூ ய [ஃ।*]...........
94. ஜீஷெஷ ந ஜீவகி ॥ ஹஒஃாநாதூஜநூாநழ ந ஹஒதொ ந ஹவி [ஷூகி।*]
95. ஹஒதொ ந ஹவிஷூகி ॥ ०॥...........................

53. கொடுத்தது என்று கொள்ளவும்.

மொழிபெயர்ப்பு

மங்களம் உண்டாகட்டும்

சுலோகம் 1—ஐந்து முகங்களையுடையவரும், பயங்கரமான (முப்பதில் பாதி) பதினைந்து கண்களையுடையவரும் சந்திரனைத் தலையில் கொண்டவரும், மூன்று இலைகள் கொண்ட சூலாயுதத்தை ஏந்தியவரும், பயங்கரமான பாம்பைப் பூணூலாக உடையவரும், உழலைத்தடி போன்ற வலிமைமிக்க பத்துக் கைகளையுடையவரும் தத்துவங்கள், தந்மாத்ரைகள்,[54] ஆத்மா ஆகியவற்றையே உருவமாகக் கொண்டவரும், தேவஸ்வரூபமானவரும், முகுந்தன் (விஷ்ணு) முதலிய தேவர்களால் தேவனைப் பார்க்க (அதாவது தேவதேவனை வணங்க)த் தக்கவரும், சிருஷ்டிகர்த்தாவும், மந்திரத்தினால் சித்திக்கக்கூடியவரும், காரியங்களை நடத்துபவரும், வித்தைகளே உருவானவரும், யமனைச் சத்துருவாக உடையவரும் (அல்லது சிறந்த புலனடக்கம் உடையவரும்) உலகமே உருவாக இருப்பவரும் (ஆன சிவபெருமான்) நம்மைக் காப்பாற்றட்டும்.

சுலோகம் 2—மூன்று உலகத்திற்கும் சூடாமணி போன்றவரும், வேதஸ்வரூபமானவரும், காரியசாதகமான சக்தியைப் பிராணிகளின் இதயத்தில் கொணர்கிறவரும், உயர்ந்த ஆகாயத்தில்[55] (விளங்கும்) சந்திரனும், கலைகளின் (அம்சங்களின்) வரிசையால் (உண்டாக்கப்படும்) காரியக்கூட்டங்களையுடையவரும், ஞானியின் மனமாகிய சந்திரகாந்தக் கல்லில் விழுந்ததால் (சந்திரன் ஒளிபட்டால் சந்திரகாந்தக் கல்லில் தண்மை வருவது போல்) அதிகமாகிற அம்சங்களை உண்டாக்குபவருமான பரமேச்வரன் (சிவபெருமான்) வெற்றியடைகிறார்.

சுலோகம் 3—எந்த வம்சத்தில் பிறந்தவர்களில் பிரம்மண்யம் இல்லாதவனோ, சோம யாகம் செய்யாதவனோ, முறையற்ற வகையில் சேனையை உபயோகிப்பவனோ (அல்லது தண்டனை அளிப்பவனோ), புலனை அடக்கியதாக வேஷம் போடுகிறவனோ, தானசூரன்[56] அல்லாதவனோ, பொய் பேசும் நாவை உடையவனோ, யுத்தத்தைக் கண்டு பயப்படுகிறவனோ இருந்ததாகக் கேள்விப்பட்டதில்லையோ அத்தகைய பல்லவ குலமானது துன்பங்களினின்றும் விடுபட்டுள்ளதாக இந்தப் பூமியைத் தடையேதுமில்லால் காப்பாற்றட்டும்.

வரி 9—பிரம்மாவிடமிருந்து அங்கிரஸ் தோன்றினார். அவரிடமிருந்து பிரசஸ்பதி. அவரிடமிருந்து பரத்வாஜர், அவரிடமிருந்து துரோணர், துரோணரிட

54. இது சாங்கியத்தை ஒட்டியது. இந்தத் தொடருக்கு தத்துவம், அதாவது பேருண்மை ஒன்றே ஆன ஆத்மாக்களை உருவமாகப் பெற்றவர் எனவும் பொருள் சொல்ல முடியும். அவ்விதமே டாக்டர் ஹுல்ஷ் எழுதியிருக்கிறார்.

55. "பரமவ்யோம—பரமன் இருக்கும் ஆகாயம். பூமிக்குச் சந்திரன்போல் அந்த ஆகாயத்திற்கு அவர் சந்திரனாக விளங்குகிறார்.

56. தானசூரன்—தானத்தில் வல்லமையுள்ளவன்.

மிருந்து அளவிட முடியாத பராக்கிரமத்தையுடைய அசுவத்தாமன், அவரிடமிருந்து (மக்களுக்கு) கலக்கமோ ஆபத்தோ ஒரு சிறிதும் இல்லாமல் விலக்கியவனுன பல்லவன் தோன்றினுன். அவனிடமிருந்து எல்லா உலகத்திற்கும் வல்லவர்களான (பிரியமானவர்களான) பல்லவர்களுடைய குலம் உண்டாயிற்று.

சுலோகம் 4—எந்த வம்சத்தில் பிரம்மண்யம் இல்லாதவனே, கொடை இல்லாதவனே, வீரம் இல்லாதவனே, பிறந்ததாகக் கேள்விப்பட்டதில்லையோ அத்தகைய பல்லவ குலம் நிலைத்து நிற்கட்டும்.

வரி 12—இந்த வம்சத்தில் உதயகிரியிலிருந்து (அதாவது கிழக்கு மலையிலிருந்து) சூரிய சந்திரர் தோன்றுவது போலப் பிறந்தவனும், அவிநதன் முதலிய அரசர்களுடைய தலைகளின் கூட்டங்களுக்கு வச்சிராயுதம் போன்றவனும்[57] எதிரி மன்னர்களாகிய யானைக் கூட்டங்களுக்குச் சிங்கம் போன்றவனும், நரசிம்ம பகவான் தாமே அரசன் உருவத்தில் பூலோகத்திற்கு வந்தவரே போன்றவனும், திரும்பத் திரும்பச் சோழ, கேரள, களப்ர, பாண்டியர்களை வெற்றிகொண்டவனும், ஆயிரம் கைகளைக் கொண்டவன் (கார்த்தவீரியன்) போல் நூற்றுக்கணக்கான போர்களில் ஆயிரங் கைகளால் செய்யக்கூடிய காரியங்களை நடத்திப் புகழ் கொண்டவனும், பரியளம், மணிமங்கலம், சூரமாரம் முதலிய போர்க்களங்களில் (ஒவ்வொன்றிலும்) புறமுதுகுகாட்டி ஓடியதால் தோற்றமளித்த புலகேசியின் முதுகான பட்டயத்திலே வெற்றியைக் குறிக்கும் எழுத்துகளை எழுதியவனும், கலசத்திலே தோன்றிய (அகத்திய முனிவரைப்) போல [58]வாதாபியை அழித்தவனுமான நரசிம்ம வர்மனுடைய பெயரனும்;

வரி 17—தேவர்கள் மீது (ஸுர-சித) மகேந்திரர் பொழியும் செல்வத்தைப் போல நன்ருகச் செய்யப்பட்ட (ஸு–ரசித) செல்வத்தை உடையவனும், வர்ணச்ரம தர்மங்களை நன்ருகக் கடைப்பிடித்தவனுமான மகேந்திர வர்மனுடைய மகனும், எல்லோரைக்காட்டிலும் அதிகமான (மூன்று) கண்களையுடைய பரமேச்வரனைப் போல அதிகமான அழகுகொண்ட[59] பரமேச்வர வர்மன் ஆவன்.

57. மூலத்தின் இந்தப் பகுதிக்கு வேறு சில திருத்தங்கள் செய்து "தலைவணங்காத அரசர்களின் கூட்டங்களின் தலையில் உள்ள சூடாமணி போன்றவனும்" என்று மொழிபெயர்த்திருக்கிருர் டாக்டர் ஹுல்ஷ்.

58. அகத்தியர் வாதாபி என்ற அசுரனை அழித்தார். இம்மன்னன் வாதாபி என்ற நகரை அழித்தான்.

59. சாஸ்திரங்களைப் பயின்றவன் என்றும் பொருள் கொள்ளலாம். தர்சனம் என்ற சொல் சிலேடையாக ஆளப்பட்டுள்ளது.

சுலோகம் 5—(அவன்) பரதன்[60] போல எல்லாவற்றையும் அடக்கியவன். சகரன் போல முட்டாள்களைத் துறந்தவன். கர்ணன் போல் செழுமையான அங்கத்தையுடையவன். யயாதியைப் போலக் கவி குலத்தில் பிறந்தவரின் அன்பைப் பெற்றவன்.

சுலோகம் 6—(கீழ்ப்படியாத) வேற்று அரசர்களுக்கு அவனுடைய ஆணை எப்போதும் (ஆபீடா) தலைப்பாரமாகவே இருந்து பீடிக்கும். ஆனால் அந்த ஆணையே அவனுடைய நண்பர்களுக்கு முகத்துக்கு அழகைக் கொடுக்கும். (கர்ண பூரம்)[61] காதணி போல் கேட்பதற்கு இன்பமாக இருக்கும்.

சுலோகம் 7—கலைகளிலே சமர்த்தன்; மன்மத விலாசத்தில் எப்போதும் ஆசை கொண்டவன்; எனினும் தன் உள்ளத்திலே கெட்ட குணங்களை விட்டுவிட்டவன் (முக்தாகுணம்): ஆனால் அதே சமயத்தில் தன் தேவியரின் மார்பிலே முத்துக்களின் மாலை (குணம் - கயிறு) தொங்கும்படி செய்தவன்.

(இதற்குமேல்வரும் சுலோகங்களில் அரசன் சாளுக்கிய விக்கிரமாதித்தியனுடன் நடத்திய போர் விவரிக்கப்பட்டுள்ளது.)

சுலோகம் 8—(அந்தப் போர்க்களத்தில்) எண்ணற்ற காலாட்கள், குதிரைகள், யானைகள் ஆகியவற்றின் கூட்டங்கள் மிதிப்பதால் எழும்பிய தூசிகளால் பனிப்படலம் போல மறைக்கப்பட்ட சூரியபிம்பம் சந்திர மண்டலம் போல் தோன்றியது.

சுலோகம் 9—முரசொலி இடிபோல முழங்கிப் பயத்தை உண்டாக்கியது. உறை நீக்கப்பட்ட கத்தி மின்னற்கொடி போல வளைந்து ஒளிர்ந்தது. யானைகளின் சஞ்சாரம் மேகக்கூட்டம் செல்வது போல் தோன்றியது. இவ்விதம் அகாலத்தில் தோன்றிய மாரி போல அது இருந்தது.

[இந்தச் சுலோகங்களில் போர்க்களம் மழைக்காலத்தின் பல்வேறு தோற்றங்களுக்கு உவமிக்கப்பட்டிருக்கிறது.]

சுலோகம் 10—உயர்ந்த குதிரைகள் தாவின. (அல்லது நிமிர்ந்த அலைகள் வீசின.) யானைகள் செல்லும் வழி மேடுபள்ளமாயிற்று. (நீர்யானை, முதலை ஆகியவற்றால் நீர்ச்சுழல்கள் தோன்றின).சங்கு இடைவிடாமல் ஒலித்தது.(வெளிப்பட்டது.) இவ்விதம் அது சமுத்திரத்தை ஒத்திருந்தது.

60. துஷ்யந்தனுக்கும் சகுந்தலைக்கும் பிறந்த மகனுக்கு ஸர்வதமனன் (எல்லாவற்றையும் அடக்கியவன்) என்று பெயர்.

61. கர்ணபூரம் என்பது காதணியோடு காது நிறைந்தது என்ற பொருளையும் கொடுக்கும். அதே போல ஆபீடா என்பது ருத்திராக்ஷ மாலையையும் குறிக்கும். பலவந்தமாகத் தலையில் ஏற்றிய பாரம் ஆகும். கவிஞர் இந்தச் சொற்களைச் சிலேடையாக ஆண்டிருக்கிறார்.

சுலோகம் 11—கொடிபோல வளைந்த கத்தி, கேடயம் (ஆவரணம்) ஆகியவை நிரம்பி இருந்தன. (காண்டாமிருகம், கொடி, யானை முதலியவை நிறைந்து காணப்பட்டன.) வலிமைமிக்க யானைகளின் மீது அமர்ந்தபடி வில்லேந்திய வீரர்கள் நிரம்பியது (நாணற்புல் அஸன, நாக திலக புன்னை மரங்கள் நெருக்கமாக உள்ளது.) மதம் கொண்டவர்களின் கலகல என்ற சப்தம் எழுந்து ஒலிப்பது. (உரத்துக் கூச்சல் நிரம்பியது). இவ்விதம் பெரும் வேகத்தோடு கூடிய காற்றினுல் அலைக்கப்பட்ட காட்டைப்போல அது விளங்கியது.

சுலோகம் 12—அங்கே யுத்த வீரர்கள் வில்லை வளைத்தனர். காற்றின் வழியே குறுக்கும் நெடுக்குமாகப் பாய்ந்த அம்புகளால் வானவெளி அடைபட்டது. தோமரம், சக்தி, பிராசம், கதை, கணயம், கார்ப்பணம், சக்கரம் முதலிய ஆயுதங்கள் எடுத்து வீசப்பட்டன.

சுலோகம் 13—மதம் பிடித்த யானைக்கூட்டங்கள் வஜ்ராயுதம் போன்ற தந்தங்களால் ஒன்றுக்கொன்று முகத்தைத் துளைக்கும்படி தாக்கிக் குத்தி நின்றன. ஒருவருக்கொருவர் வீசிய கத்தியினுல் குத்துண்டு கத்தியிலே தொங்கும் தலைகளோடு கூடிய குதிரைவீரர்களால் நிரம்பியது.

சுலோகம் 14—போர்வீரர்கள் ஒருவரை ஒருவர் சமமாக எண்ணி அவமானப்படுத்த விரும்பினர். ஆயுதத்தோடு ஆயுதம், குடுமியோடு குடுமி, தடியோடு தடி ஒன்ருேடொன்று மோதி உராய்ந்தன.

சுலோகம் 15—வீரர்களுடைய கை கழுத்து முழங்கால் தொடை பல் முதலியவை துண்டிக்கப்பட்டுப் பெரிய சேனைகள் விழுந்து கிடந்தன. கஸ்தூரியோடு கூடிய குங்குமக் கலவையைப் பூசிக் கொண்டதைப் போல் சிவந்து விளங்கியது போர்க்களம்.

சுலோகம் 16—இருதரத்தாரும் ஒருவரை ஒருவர் தாக்கும்போது உடைந்தனர்; நெருக்கினர்; ஓடினர்; தரையில் விழுந்தனர்; சந்தேகம் என்னும் ஊஞ்சலிலே உட்கார்ந்து ஆடிய வெற்றித் திருவின் போக்கினுல் வெற்றி–தோல்வியை அறிய முடியாமல் பரஸ்பரம் தவித்தனர்.

சுலோகம் 17—இரத்த வெள்ளத்திற்குப் பாலம் போல வரிசையாகக் கீழே விழுந்து கிடக்கின்ற யானைகளின் முதுகின்மீது போர்வீரர்கள் சஞ்சரித்தனர். ஒருவருக்கொருவர் தாக்கும்போது, அடி விழுவதற்கு இடமில்லாமல் நெருக்கமாக இருந்தபடியால், அந்த வீரர்கள் அசைவற்று உயர்த்திய கை அப்படியே நிலைக்க நின்றனர்.

சுலோகம் 18—தூக்கிய கைகளிலே ஆயுதங்களும், கடித்த உதடுகளும், பரபரப்போடு ஆத்திரத்தால் சிவந்த கண்ணுமாக, எதிரி அரசர் கூட்டங்களால்

சிதற அடிக்கப்பட்ட போர் வீரர்கள் குற்றுயிராகவும் உயிரற்றும் இங்குமங்கும் சிதறிக் கிடந்தனர்.

சுலோகம் 19—கொடி, குடை, உடைந்து சிதறின. கீழே விழுந்த யானைகள் விடும் பெருமூச்சினுல் சாமரங்கள் அசைக்கப்பட்டன. கிரீடம், ஹாரம், கைவளை, காதணி முதலியவை துண்டிக்கப்பட்டும், மிதிக்கப்பட்டும், பொடிக்கப்பட்டும் சிதறின.

சுலோகம் 20—இரத்தத்தை மதுவாகக் கொண்டு குடித்துக் கொழுத்து வெறி கொண்ட கூஷ்மாண்ட, ரா்க்ஷஸ, பிசாசுகள் உரக்கப் பாடின. தலையற்ற முண்டங்கள் அதற்கேற்பத் தாளம் போட்டுப் பயங்கரமாக நடனம் ஆடின.

சுலோகம் 21—போர் முனையில் அநேக லட்சம் வீரர்கள் நிறைந்த சேனையைக் கொண்ட விக்கிரமாதித்தனை ஒரு கந்தையை மாத்திரம் உடுத்துத் தனியாக ஓடச் செய்தான், (பரமேச்வர வர்மன்).

சுலோகம் 22—ரத்தின காந்தியால் பொன்மயமான அம்பாரியை உடையதும், எப்போதும் மதஜலம் பெருகி வழிவதால் (இன்றைக்கும் வெள்ளப்பெருக்குக் குறையாததும்) இந்திரன் யானையான ஐராவதம் என்ற பெயர்கொண்ட யானை, ஆயிரம் யானைகள் தொடர, கம்பீரமாகச் சென்றது, நீரோடைகள் கொண்ட சரிவுகளுடன் கூடிய மலையரசனுகிய இமயம் செல்வது போலத் தோன்றியது.

சுலோகம் 23—இந்திரனுடைய குதிரையைப் போல மங்களகரமான நடையை உடையதும், கம்பீரமான சலன கதியைக் கொண்டு நல்ல ஜாதிக் குதிரை என்று விளங்குவதும், ரத்தினம் இழைத்த சேணம் பூண்டதும், அதிசயம் என்ற பெயர் கொண்டதுமான அவன் குதிரை, காதுகளிலே சாமரங்கள் தொங்கும் வேறு குதிரைகள் அநேகம் (லட்சம்) பின்தொடரக் கம்பீரமாகச் சென்றது.

சுலோகம் 24—யுத்தத்தில் நேரிடும் சிரமத்திற்குத் தகுந்ததாக மணிகள் வைத்து இழைத்ததும், இணையற்ற பெரிய ரத்தினங்களின் வரிசை இணைக்கப் பெற்றதும், மாணிக்க மரகதக் கற்கள் இழைக்கப் பெற்றதும், ஒப்புவமையற்றதுமான, சிறந்த வளைந்த உடைவாளை இடையில் சொருகிக் கொண்டும்,

சுலோகம் 25—வழுவழுப்பான தன்மை கொண்டதும், பிரகாசிக்கும் சூரியன் போல ஒளிவிசும் பெரிய மாணிக்கத்தை நுனியில் உடையதும், காந்தியுள்ள மணிகளால் இழைக்கப்பட்ட சரடுகளைக் கொண்டதுமான நல்ல அரைஞாணையும் பூண்டு,

சுலோகம் 26—அவன் எதிரிகளை அழித்து, வேற்றரசர்களின் மனத்தில் பயத்தையும் கவலையையும் போக்குவித்து, எல்லாத் திக்குகளிலும் தன்னுடைய புகழாகிய மலர்மாலையைப் பரப்பி, வீரத்தின் விளைவு நன்ருகத் தோற்றமளிக்கும் தன்

உடலிலே எல்லா ஆபரணங்களையும் பூண்டு அலங்கரிக்கப்பட்ட அவனைத் திரு மகள் (சக்தலட்சுமி) நன்றாகத் தழுவிக்கொண்டாள்.

வரி 49—அந்தப் பரமேச்வரனால் ஊற்றுக்காட்டுக் கோட்டத்தினுள் நீர் வேளூர் என்ற அவாந்திர ராஷ்டிரத்தில் நூற்றெட்டு நாலு வேத (சதுர் வேத) குலப் பிராம்மணர்கள் நிறைந்த கூரம் என்னும் கிராமத்தின் மத்தியில் வித்யாவி நீத பல்லவ பரமேச்வரனுடைய கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்ட பகவான் பரமேஷ்டியான பினகபாணியினுடைய பூஜை, நீராட்டுதல், புஷ்பம், சந்தனம், தூபம், தீபம், ஹவிஸ், உபஹாரம் பலி (முதலியவை அளித்தல்) சங்கம் படகம் முதலியன (ஒலித்தல்) ஆகியவற்றுக்காகவும்; இங்கேயே தண்ணீர், நெருப்பு வைத்திருத்தல், பாரதம் படித்தல் காரணமாகவும், மணயிற் கோட்டத்தினுள் பத்ம என்ற பெயர் கொண்ட அவாந்திர ராஷ்டிரத்தில் பரமேச்வரமங்கலம் என்ற கிராமம் தேவதானம் காரணமான பிரம்மதேயமாக வித்யாவிநீதன் என்ற பல்லவ அரசனுடைய விண்ணப்பத்தால் சர்வதத்த பரிஹாரமாக அளிக்கப்பட்டது. இவ்விதம் சர்வதத்த பரிஹாரமாக அளிக்கப்பட்டது.[62] இதன் ஆணத்தி உத்தர காரணீகனன மகாசேன தத்தன் (ஆவன்). வித்யாவிநீத பல்லவ பரமேச்வரனுடைய கோயிலிலும் இங்கேயும் தேவகர்மத்திற்கும் நவகர்மத்திற்கும்[63] கூரத்தாச்சாரியன் மகன் அனந்தசிவாச்சாரியருக்குக் கொடுக்கப்பட்டது. இன்னும் இரண்டாவதாகப் புல்லசர்மனுக்கும் (இவ்விருவருடைய) புத்திர பௌத்திரர்களுக்குமாகக் கட்டளையிடப்பட்டது.

தமிழ்ப் பகுதி

ஊற்றுக்காட்டுக் கோட்டத்து நீர்வேளூர் நாட்டுக் கூரமும் ஞம்மனம் பாக்கமு...[ஞங்கணத்]...[ட] விச்சாவிநீதப் பல்லவரசன் விலைக்காணம் கைக் கொடுத்து[ச் சி]ராவணை செய்து ஆயிரத்திருநூற்றுக் குழிப்படியால் விற்றுக்கொண்ட நிலம்: தளி எடுப்பதற்கு ஓடு சுடக்கொண்ட நிலம் தலைப் பாடகத்துள் சூளைமேட்டுப்பட்டியும் ஊருள் மண்டகம் எடுத்த நிலத்தோடுங் கூட ஐந்தேகால் பட்டி நிலமும் விற்று கொண்டு விச்சாவிநீத பல்லவ பரமேச் சுரகரம் எடுத்து ஏரி தோண்டி இத்தளி வழிபாடு செய்வோர்க்கு இருக்கும் மனை

62. முதலில் கூறியதை வலியுறுத்துவதற்காக இது திரும்பவும் கூறப்பட்டது போலும்.

63. நவகர்மம் என்பது புதிய சிருஷ்டி என்று பொருள்படும். பௌத்த மத நூல்களிலே மத சம்பந்தமான கட்டிடம் என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது. (எபிகிராபியா இந்திகா தொகுதி 20. பக்கம் 30). எனினும், "திருப்பணி" என்று பிற்காலத்தில் வழங்கி வந்ததையே குறிப்பதாகக் கொள்ளலாம். "தேவகர்மத்துக்கும் நவகர்மத்துக்கும்" என்று இங்கே காணப்படுவது பிற்காலத்துச் சாசனங்களில் "பூசைக்கும் திருப்பணிக்கும்" என்று காண்பதையே உணர்த்துவதாகக் கொள்ளலாம்.

யும் மனைப்படப்பும் வகுத்து இதனுள் மிக்க நிலம் ஒழுக்கவிக்கு விளைநிலமாக வும். இந் நிலத்துக்குக் கீழ்பாலெல்லை முதுகாட்டு வழியின் மேற்கும், தென்பா லெல்லை ஊர் புகு வழியின் வடக்கும், மேல் பாலெல்லை ஊர்புகு வழி நின்றும் வடக்கு நோக்கி நாட்டுக்காலுக்கே போன வழியின் கிழக்கும், வடபாலெல்லை நாட்டுக்காலின் தெற்கும்; இந்நான்கெல்லை அகத்தும் தனியும் ஏரியும் வழி பாடு செய்வார்க்கு மனையும் மனைப்படப்பும் நீக்கி மிக்க நிலமும் சூளமெட்டுப் பட்டியும் ஒழுக்கவிக்கு விளைநிலமாகக் கொடுத்தது. இத்தளிக்கு வெண்டும் தேவகரும நவகருமஞ் செய்வதற்கும் இருபதின்மர் சதுர்வெதிகளுக்குப் பிரம்மதெயம் கொடுப்பதற்கும் மனயிற்கோட்டத்துப் பன்மா நாட்டுப் பரமேச்சுரமங்கலத்துள் அகப்பட்ட வளையில் சுற்று நிலம் அத் தனையும் இருபத்தைந்து பங்காய், இதனுள் மூன்று பங்கும் கூரத்துத் தளிக்குத் தெவகரும நவகருமம் செய்வதாகவும்; கூரத்து மண்ட கத்துக்குத் தண்ணிர்க்கும் தீக்கும் ஒரு பங்காகவும்; இம் மண்ட கத்தே பாரதம் வாசிப்பதற்கு ஒரு பங்காகவும்; நின்ற இருபது பங்கும் இருபதின் மர் சதுர்வேதிகளுக்குப் பிரம்மதேயமாகக் கொடுத்தது. இவ்வூர் மனையும் மனைப்படப்பும் ஊராட்சியும் செக்கும் தறியும் கூலமும் தரகும் கத்திக்காணமும் மற்றும் பொதுவினல் உள்ளதெல்லாம் இப்பங்கு இருபத்தைந்தின் வழியாலே பங்கிட்டு உண்பாராகவும், இவ்வூர் பரமேச்சுர தடாகத்துக்குப் பாலாற்று நின் றும் தோண்டின பெரும்பிடுகு காலின் புகுதிபாடும் நீர்ஈந்த வழியாலே தலை வாயும் தலைப்பேழையும் ஊற்றுக்காலும் தோண்டின நிலமெல்லாம் பரமெசு வரமங்கலத்து நிலமாக. இக்காலுள் குற்றேத்த...மையும் நாடாட்சியும் நாட்டுப் பணிக்கையும்...தானங்கொடுத்த மூன்று பங்கினுள்ளும் ஒன்றரைப் பங்கு... நார் அனந்தசிவ ஆசாரியார் மக்கள் மக்கள் மருமக்கள்...ப்புறக் கொண்டு வழிபாடு செய்து பலி போசன......ம் கொண்டு புல்லசர்மர் மக்கள் மக்கள்...... வகருமமும் இவ்விருவர் மக்கள் மக்கள்...தேவதமாகாநின்ற பப்ப-பட்டார கரும் கா......க்காத்துக் கொடுக்க.

வரி 90—சந்திரனும் அவனுக்கு பந்துவும் உடன் இருக்கும் சிநேகனும்...

91—(பிராமண)னுக்கு கொடுத்ததும் இருவித பக்தியும் அவன் காக்கட்டும் ...என் தலை...

92—புஷ்டியான வாகனங்கள்...அரசனுடைய...யுத்தகாலத்தில்...

93—தேவஸ்வம் பிராம்மணஸ்வம் பேராசையால் எவன் எடுக்கிறானே

94—மிருதியினல் ஜீவிக்கிறான். பூமிதானத்திலும் உயர்ந்த தானம் இருந்த தில்லை. இருக்கப்போவதுமில்லை.

முதலாம் பரமேச்வர வர்மனுடைய உன்னகுரவயபாளையம் செப்பேடுகள்

★

முன்னுரை

ஆந்திரப் பிரதேசம் நெல்லூர் மாவட்டம் பொதிலி தாலூகாவில் உன்னகுரவயபாளையம் என்ற கிராமம் இருக்கிறது. அதன் பெயரை உன்னகுரவ பாளையம், வுன்னகுரவயபாலேம், உன்னகுரவையபாலம் என்பன போன்ற வடிவங்களிலும் எழுதுவர். அவ்வூரிலே கிடைத்தது இந்தச் செப்பேட்டுச் சாசனம். திரு பி. சேஷாத்ரி சாஸ்திரியார் எடுத்த புகைப்படத்தையும், பெயர்த்து எழுதிய பிரதியையும் ஆதாரமாகக்கொண்டு இந்தச் சாசனம், டாக்டர் தினேஷ் சந்திர சர்க்காருடன் கூட்டாக, அவரால் எபிகிராபியா இந்திகா, 32-ஆம் தொகுதி 91-92 பக்கங்களில்[1] வெளியிடப்பெற்றது.[2]

தமிழ்நாட்டிலிருந்து கிடைக்கும் பல்லவ செப்பேட்டுச் சாசனங்களி னின்றும் இது அமைப்பு, வாசகம் முதலியவற்றில் வேறுபட்டுக் காண்கிறது. தமிழ்நாட்டில் கிடைக்கும் சாசனங்களில் தமிழ், ஸம்ஸ்கிருதம் ஆகிய இரு பகுதி களும் முறையே தமிழ் கிரந்தம் ஆகிய எழுத்துகளில் எழுதப்பெற்று இருக்கும். அவற்றுள் தமிழில் உள்ள பாகமே அதிகாரபூர்வமானதாக முதலில் தயாரிக்கப் படுவது. பின்னுல் அதை ஒட்டி ஸம்ஸ்கிருதப் பகுதி தனியாக இயற்றப்படும். பெரும்பாலும் அது செய்யுள் உருவில் அமைந்திருக்கும். அதனுல் ஸம்ஸ்கிருதப் பகுதி ஒவ்வொரு சாசனத்துக்கும் தனித்தனியாக அமைந்திருக்கும்; தானம் அளித்தவரையும் தானம் வாங்குவோரையும் விவரிப்பதோடு கடவுள் வாழ்த்தும்

1. Epigraphia Indica, Vol. XXXII pp, 91-99.

2. இந்த ஏடுகளின் மசிப்படம் ஒன்று பின்னுல் "ஹிந்து" பத்திரிகையில் 16-6-1957-ல் வெளிவந்து இருக்கிறது.

கொண்டு வெவ்வேருகக் காணப்படும். தானம் வழங்கிய அரசன் புகழை மட்டு மல்லாமல், அவனுடைய முன்னேர்கள் பலரைப்பற்றிய விவரமும், வம்சத்தின் தோற்றத்திலிருந்து குறிக்கப்பெற்றிருப்பதைக் காணலாம். ஆனல் இந்தச் சாச னத்தின் வாசகம் அவ்விதம் அமைந்ததல்ல. ஸம்ஸ்கிருதப் பகுதி ஒன்றுமட்டுமே பழைய தெலுங்கு-கன்னட எழுத்துக்களில் எழுதப்பெற்றுக் காணப்படும். 'ஜிதம் பகவதா' என்று ஆரம்பித்து, தானத்தை வழங்கிய அரசனுடைய முப்பாட்டன், பாட்டன், தந்தை ஆகிய மூவரையும் சேர்த்து நான்கு தலை முறைகளைப் பற்றியே கொடுக்கப்பட்டிருக்கும். அவர்களுடைய புகழும் ஒரேமுறையில் குறிப்பிட்ட சில சொற்ருெடர்களைக் கொண்டு அமைந்திருக்கும். கடைசியிலே காணும் பலசுருதி சுலோகங் களைத் தவிர மற்றப் பகுதி உரைநடையாகவே காணப்படும். அதை நோக்கினல், முன்னதாகவே அமைக்கப்பட்ட ஒரு வாசகத்தில் சந்தர்ப்பத்தையொட்டி, அரச னுடைய பெயரையும் அவன் முன்னேர்களுடைய பெயரையும் அந்தந்த இடங் களில் இட்டு நிரப்பி அதைப் பூர்த்திசெய்து எழுதப்பட்டது என்பது தெளிவாக விளங்கும். ஆந்திரப் பிரதேசத்தின் நெல்லூர்–குண்டூர் மாவட்டப் பகுதியி லிருந்து கிடைத்த பல்லவர்களுடைய செப்பேட்டுச் சாசனங்கள் பலவும் இதேவகையில் அமைந்தவை. அவற்றுள் இந்தச் சாசனமும், இதை வழங்கிய அரசனை பரமேச்வர வர்மனுடைய மகன் இரண்டாம் நரசிம்மவர்மன் வழங்கிய ரேயூருச் சாசனமும் தவிர, மற்றவை காலத்தால் முற்பட்டவை; அதாவது கி. பி. 5, 6–ஆம் நூற்ருண்டுகளைச் சேர்ந்தவை. அவை தனியே பின்னல் கொடுக் கப்பட்டுள்ளன. சாசன வாசகத்தையும் அமைப்பையும் ஒட்டி இவ்விரண்டையும் அவற்ருேடு சேர்த்தே கொடுக்கவேண்டும் எனினும், காலமுறையை ஒட்டி இவ் விரண்டையும் இங்கே கொடுத்திருக்கிருேம்.

இதேபோன்ற வேறுபாடு சாசனத்தின் முத்திரையிலும் காணப்படும். பள்ளன்கோவில், கூரம் சாசனங்களின் முத்திரையை நாம் மேலே விவரித்திருக் கிருேம். அவற்றிலே படுத்திருக்கும் ரிஷபத்தின் உருவத்தைத் தவிர, குடை, சாமரம், குத்துவிளக்கு முதலிய அஷ்டமங்கலத்தின் உருவங்களும் சூர்ய சந்திரர் உருவங்களும் புடைப்புச் சித்திரமாகக் காணப்படும். அவ்வுருவங்களைச் சுற்றி, விளிம்பின் உட்புறமாக அரசனுடைய முத்திரை வாசகம் ஒரு வரி எழுதப் பட்டு இருக்கும். ஆனல் இந்தவகைச் சாசனங்களின் முத்திரையில் அஷ்டமங் கலங்களின் உருவம் காணப்படவில்லை. ரிஷபத்தைத் தவிர, பிறைச் சந்திரன், சூரியன் அல்லது நட்சத்திரம், ஸ்ரீவத்ஸம் போன்ற உருவம் இவை பெரும்பாலும் காணப்படும். பல சமயங்களில் தானத்தை வழங்கிய அரசன் பெயர் கொடுக்கப் பட்டிராது. பெயர் பொறிக்கப்பட்டிருக்கும் இடங்களிலும், அது நடுவிலே ஒரு வரியில் அரசன் பெயரை மட்டுமே கொண்டதாக இருக்கும்.

இந்தச் சாசனம் மூன்று ஏடுகளில் எழுதப்பட்டு இருக்கிறது. அந்த ஏடுகளைக் கோத்திருந்த வளையத்தின் இருமுனைகளும் ஒரு முத்திரையின் தலையிலே பொருத்தப்பட்டிருந்தன. வட்டமான முத்திரையின் முகப்பிலே படுத்திருக்கும் ரிஷபத்தின் உருவம் புடைப்புச் சித்திரமாகக் காணப்படுகிறது. ரிஷபம் இடது புறம் நோக்கி—அதாவது வாசகர்களுக்கு வலதுபுறம் நோக்கி—படுத்திருக்கிறது. முத்திரையிலே களிம்பேறி அரிக்கப்பட்டுவிட்டதால், உருவங்கள் தெளிவாக இல்லை. ரிஷபத்தின் முகம் லேசாகத் திரும்பி வாசகரைப் பார்ப்பதுபோல் அமைந்திருக்கிறது. "அதன் தலைமீது பிறைச் சந்திரனும் லிங்க உருவமும் காணப்படுகின்றன" என்று அந்த சாசனத்தை வெளியிட்ட ஆசிரியர்கள் கூறுவர். அவற்றைச் சந்திர சூரியர்களுடைய உருவங்களாகவே கொள்ளலாம்.[3] ரிஷபத்தின் முதுகுப் பக்கத்தில், மேலே ஓர் உருவம் காணப்படுகிறது. சிங்காதனத்தில் அமர்ந்திருக்கும் ஒரு தெய்வத்தின் அடியில் மூன்று எழுத்துக்கள் புடைப்பாகவே காணப்படுகின்றன. அவற்றை ஸ்ரீணதீ என்று வாசித்து, ஸ்ரீநதீ என்பதன் பிராகிருத வடிவம் எனக் கொண்டிருக்கிறார்கள் பழைய பதிப்பாசிரியர்கள். அது அரசனுடைய விருதுகளுள் ஒன்றாகவே இருத்தல் வேண்டுமென்றும் கருதுவர். அவனுக்கு அத்தகைய விருது இருந்தது என்பது வேறு எந்த இடத்திலிருந்தும் தெரியவில்லை. ஆனால் அவனுக்கு ஸ்ரீநிதி (ஸ்ரீநிதி) என்ற விருது இருந்ததாகத் தெரிகிறது. ஒருகால் முத்திரையின் வாசகத்தை ஸ்ரீநிதி என்றே கொள்ள வேண்டுமோ என்றும் எண்ணலாம்.

முதலாம் பரமேச்வர வர்மன் தன்னுடைய ஆட்சியின் பத்தொன்பதாம் ஆண்டில், பௌஷ்ய மாதம் சுக்கிலபக்ஷத் திரயோதசி கொண்ட ஞாயிற்றுக் கிழமை உத்தராயண நிமித்தம் குபுணூரு என்ற கிராமத்தைத் தேவசர்மன் என்னும் பிராமணனுக்குத் தானம் அளித்த செய்தியை இந்தச் செப்பேடு தெரிவிக்கிறது. அதிலே காணும் பஞ்சாங்கக் குறிப்புகளைக்கொண்டு, அந்த நாள் கி. பி. 687–ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம், 22–ஆம் தேதி என்று நிர்ணயம் செய்து இருக்கிறார்கள். உத்தராயண சங்கராந்தி முதல் நாள் 21–ஆம் தேதியன்று நிகழ்ந்திருக்கிறது. அதன்படி அம்மன்னன் கி. பி. 668–டிசம்பர் மாதத்திற்கும் 669–டிசம்பர் மாதத்திற்கும் இடையிலே சிங்காதனம் ஏறியவனாக இருத்தல்வேண்டும்.

சாசனத்திலே தானம் அளித்த முதலாம் பரமேச்வர வர்மன், முதலாம் மகேந்திர வர்மனுடைய கொள்பெயரன் என்றும், நரசிம்ம வர்மனுடைய பெயரன் என்றும், (இரண்டாம்) மகேந்திர வர்மனுடைய மகன் என்றும் குறிக்கப்பட்

3. இதைப்பற்றி முன்னரே பள்ளன்கோவில் செப்பேடுகளின் முன்னுரையில் விளக்கப்பட்டு இருக்கிறது.

டிருக்கிறுன். தானம் வழங்கப்பட்ட கிராமம், முவுவட்டிய மார்க்கத்தில் முசுண நதியின் தென் கரையில் இருந்தது என்று கொடுக்கப்பட்டு இருக்கிறது. நெல்லூர் மாவட்டத்தின் கந்துகூரு தாலூகாவிற்கும் குண்டூர் மாவட்டத்தின் ஓங்கோல் தாலூகாவிற்கும் இடையில் ஓடி வங்காளக்குடாக் கடலில் கலக்கும் முசி நதியே அந்த ஆறுகும். அதனுல் அந்தக் கிராமம் நெல்லூர் மாவட்டத்தில் அடங்கி யிருத்தல் வேண்டும்.

தாகி பல்லவன் மகனும் நந்தகுற்றத்து அதிபனுமான குளவர்மன் இந்தச் சாசனத்திற்கு ஆணத்தியாவன். நெல்லூர் மாவட்டத்திலே உதயகிரி தாலூகாவில் உள்ள நந்தவரம் என்பது அந்த இடம் என்பர். இராஜசிம்மனுடைய ரேயூருச் செப்பேடுகளின் ஆணத்தியும் அதே நந்தகுற்றத்தைப் பரிலாலித்துவந்த இராஜாதித்தியன் என்பது இங்கே கவனிக்கத்தக்கது. இவற்ருல் அவர்கள் பல்லவர்களின் கிழ், சிற்றரசர்களாக அரசு புரிந்தவர்கள் என்பது தெளிவாகும்.

இந்தச் சாசனம் வழங்கப்பட்ட காலத்தில் வாதாபியிலே சாளுக்கிய அரசனுக விளங்கியவன் விநயாதித்தியன் ஆவான். அவனுடைய ஆட்சியின் ஆரம்பக் காலம் இரண்டுவிதமாகக் கணக்கிடப்படுகிறது. [4] கி. பி. 678–அக்டோபர் 18-ஆம் தேதிக்கும், கி. பி. 679-ஜூலை 2-ஆம் தேதிக்கும் இடைப்பட்ட காலத்தில் ஏதோ ஒருநாளில் ஆரம்பமாவதாகக் கொடுப்பது ஒன்று. கி.பி. 681-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 2–ஆம் தேதிக்கும், ஜூலை மாதம் 4–ஆம் தேதிக்கும் இடைப்பட்ட ஏதோ ஒரு நாள் எனக் கொடுப்பது மற்றென்று. இவ்விதம் ஆட்சியின் ஆரம்ப காலத்தை வெவ்வேறு நாளாகக்கொண்டு கணக்கிடுவதை வேறு சில அரசர்களின் சாசனங்களிலும் காணலாம். அத்தகைய சந்தர்ப்பங்களில், காலத்தால் முற்பட்ட நாளிலே கிரமப்படி அவன் ஆட்சிக்கு உரிமைபெற்றுன் என்றும், பின்னுல் உள்ள நாளிலேதான் முறைப்படி அவன் அபிஷேகம் செய்யப்பட்டான் என்றே, அரசியலை அடைந்தான் என்றே கொள்வதும் வழக்கம். பெரும்பாலும் இடைப்பட்ட காலத்தில் அவன் அரசை அனுபவிக்க முடியாமல், ஏதோ ஒருவிதமான தடை இருந்திருக்கலாம். விநயாதித்தியன் விஷயத்திலும் அவ்விதமே இருந்திருத்தல் வேண்டும்.

விநயாதித்தியனுக்கு முன்னர், அவன் தந்தை முதலாம் விக்கிரமாதித்தியன் வாதாபிச் சிங்காதனத்தில் அமர்ந்திருந்தான். அவன் ஆட்சியின் ஆரம்பக் காலம் கி. பி. 654–655 ஆகும். பல்லவ பரமேச்வர வர்மன் அவனேடும் போர் புரிந்திருக்கிறுன். அத்தகைய யுத்தங்களில் ஒன்றன் போர்க்களமே கூரம் செப்பேடுகளில் வருணிக்கப்பட்டு இருக்கிறது. பெருவளநல்லூர் என்னும் இடத்திலே

4. எபிகிராபியா இந்திகா, தொகுதி 22, பக்கங்கள் 25–26.

பரமேச்வர வர்மன் சாளுக்கிய அரசனைத் தோற்கடித்தான் என்ற செய்தி பல்லவ மல்லனுடைய உதயேந்திரம் செப்பேடுகளிலே காணப்படுகிறது. பெருவளநல்லூர் என்பது திருச்சிராப்பள்ளிக்குப் பத்து மைல் தூரத்தில் உள்ளது.

சாளுக்கிய விக்கிரமாதித்தியன் சோழநாட்டிலே காவிரியின் தென்கரையில் உரகபுரம் என்னுமிடத்தில் தன்னுடைய ஆட்சியின் இருபதாம் ஆண்டில் (கி. பி. 674) பாடி இறங்கியிருந்தான் என்பதை முன்னரே குறிப்பிட்டிருக்கிறோம். அவன் பாடி இறங்கியிருந்த உரகபுரத்தை உறையூர் என்று ஆராய்ச்சியாளர் கருதுவர். [5] இரண்டும் வெவ்வேறாகும். உரகபுரம் என்பது பாம்பூர் என்னும் தமிழ்ப் பெயரின் ஸமஸ்கிருத வடிவமாகும். கும்பகோணத்திற்குக் கிழக்கே இப்போது திருநாகேச்வரம் என்று வழங்கப்படும் இடமே அதுவாகும். [6] இந்தப் படையெடுப்புக்கான ஏற்பாடுகளையும் அவன் பல வருடங்களாகவே செய்து வந்திருக்கிறான். அதற்கு நான்கு வருடங்களுக்கு முன்னதாக, அவனுடைய ஆட்சியின் பதினாறும் ஆண்டிலே (சகாப்தம்–592) காஞ்சிபுரத்திற்கு மேற்குப் பக்கத்தில் இருக்கின்ற மல்லியூர் என்னும் கிராமத்தில் தங்கியிருந்த காலத்தில், அவன் வழங்கிய சாசனம் ஒன்று நமக்குக் கிடைத்திருக்கிறது. ஹொன்னூர்ச் செப்பேடுகள் என வழங்கப்பெறும் அந்தச் சாசனத்திலிருந்து கி. பி. 670–ஆம் ஆண்டிலும் அவன் தமிழ் நாட்டுப் பிரதேசத்திலேதான் தங்கியிருந்தான் என்பது தெரிய வரும். [7]

இந்தக் காலத்துக்குப் பிறகு வழங்கப்பெற்ற அவனுடைய செப்பேட்டுச் சாசனங்கள் சிலவற்றில் நான்கு சுலோகங்கள் புதிதாக எழுதிச் சேர்க்கப்பட்டுக் காண்கின்றன [8]. அவற்றுள் முதலாவது:

ம்ருதித நரஸிம்ஹ யஶஸா விஹிதமஹேந்த்ரப்ரதாபவிலயேந ।
நயநவிஜிதேஶ்வரேண ப்ரபுணா ஶ்ரீவல்லபேந ஜிதம் ॥

"நரசிம்மன் புகழை நசுக்கியும், மகேந்திரனுடைய பிரதாபத்தை மறையச் செய்தும், கண்களால் ஈசுவரனை வெற்றிகொண்டும், பிரபுவான ஸ்ரீவல்லபன் வெற்றியடைந்தான்."

5. டாக்டர் துப்ராய் ஆங்கிலத்தில் எழுதியுள்ள "பல்லவர் வரலாறு" பக்கம் 43.

6. பரோடாவில் நடைபெற்ற ஏழாவது அகில இந்திய கீழ்த்திசை ஆராய்ச்சியாளர்களின் மகாநாட்டு நடவடிக்கைகளில் "உரகபுரத்தைப் பற்றிய ஒரு குறிப்பு" என்னும் ஆங்கிலக் கட்டுரை.

7. மைசூர் ஆர்க்கியலாஜிகல் ரிபோர்ட், 1939, பக்கங்கள் 129-137. மல்லியூர் என்பது வந்தவாசித் தாலூகாவில் உள்ள மலையூர் என்பார் திரு. க. அ. நீலகண்ட சாஸ்திரிகள்.

8. எபிகிராபியா இந்திகா, தொகுதி 10. கத்வால் செப்பேடுகளிலும் காணலாம்.

இங்கே குறிக்கப்பட்டுள்ள நரசிம்மன், மகேந்திரன், ஈச்வரன் ஆகிய மூவரும் ஒருவர்பின் ஒருவராகப் பல்லவ சிங்காதனம் ஏறிய அரசர்கள் என்பது வெளிப்படை.[9] அந்த மூன்று மன்னர்களையும் வெற்றிகொண்டதாலே, அந்த மூன்று அரசர்களின் பெயர்கொண்ட தெய்வங்களைக் காட்டிலும் விக்கிரமாதித்தியன் மேம்பட்டவனாக விளங்கினான் எனக் கவி சமத்காரமாக சொல்லாமல் சொல்கிறார்.[10] இந்தச் சுலோகத்தைக் கவனித்தால், சாளுக்கிய விக்கிரமாதித்தியன் பல்லவ அரசனை முதலாம் நரசிம்ம வர்மனோடும் போரிட்டிருக்கிறான் என்பது தெளிவாகும். அவ்விதமானால் சாளுக்கிய ராச்சியத்தை நரசிம்மவர்மனிடமிருந்தே அவன் கைப்பற்றியிருத்தல் வேண்டும் என்றும் கொள்ளலாம்.

கி. பி. 654–655–ஆம் ஆண்டிலேதான் விக்கிரமாதித்தியன் வாதாபி அரசனாக முடிசூட்டப்பட்டான். அதனால் நரசிம்மவர்மன் அப்போது அரசனாக இருந்திருத்தல் வேண்டும். அதற்குப்பிறகு அவன் எவ்வளவு காலம் அரசு புரிந்தான் என்பது தெரியாது. எவ்விதமாயினும், அவனுக்குப் பின் சிங்காதனம் ஏறிய இரண்டாம் மகேந்திரவர்மன் ஒரு பத்து ஆண்டுகளாவது அரசு புரிந்திருத்தல் கூடும்.

விக்கிரமாதித்தியன் கி. பி. 674-ஆம் ஆண்டிலே காவேரியின் தென்கரையில் தங்கியிருந்தான். அவன் பல்லவ பரமேச்வர வர்மனிடம் பெருவளநல்லூரில் உதைப்பட்டு ஓடியது அதற்குப் பிறகு நிகழ்ந்திருத்தல் வேண்டும். ஆனால் எப்போது என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியாது. காஞ்சிபுரம் கைலாச

9. விக்கிரமாதித்தியன் சாளுக்கிய நாட்டைப் பல்லவர்களிடமிருந்து மீட்டுத் தன்னுடைய அரசை நிறுவியது அவனுடைய சாசனங்களில் ஆரம்ப நாளிலிருநதே விவரிக்கப்பட்டுள்ளது. சித்ரகண்டம் (அழகிய கழுத்தையுடையது) என்ற பெயர் கொண்ட பட்டத்துக் குதிரையின் மீது ஏறி, ஒவ்வொரு திசையிலும் போரிட்டு எதிரிகளை வெற்றிகொண்டு, "மூன்று அரசர்களால் மறைக்கப்பட்டிருந்த (அவநிபதி.த்ருதயாந்தரிதம்) தன் தந்தையின் இராஜ்யலக்ஷ்மியை அடைந்தான்" என்றும் அவர்களுடைய ஆட்சியில் சோர்ந்துபோன தர்மங்களை மீண்டும் நிலைநிறுத்தினான் என்றும் அவற்றில் காணப்படுகிறது. அங்கே குறிக்கப்பட்ட மூன்று அரசர்கள் முதலாம் நரசிம்ம வர்மன், இரண்டாம் மகேந்திரவர்மன், முதலாம் பரமேச்வர வர்மன் ஆகிய மூவருமே யாவர் என்று ஆரம்ப காலத்தில் கருதப்பட்டு வந்தது. சாளுக்கிய சாசனங்களிலேயே விக்கிரமாதித்தியன், அவன் மகன் விநயாதித்தியன் ஆகிய இருவரும் "த்ரை ராஜ்ய பல்லவ" பலத்தை ஒடுக்கினார்கள் என்று புகழப்பட்டு இருக்கிறார்கள். இவ்விடம் குறிக்கப்பட்ட "த்ரை ராஜ்ய பல்லவர்" என்பாரும் அவர்களே என்று கருதி வந்தனர். மூவகைத் தொடர்களும் வெவ்வேறானவர்களைக் குறிக்கும். "த்ரை ராஜ்யம்" என்பது மேலே அடுத்தபடியாக விவரிக்கப்பட்டுள்ளது. அவநிபதி மூவர், புலகேசிக்கும் விக்கிரமாதித்தியனுக்கும் இடையில் சாளுக்கிய நாட்டை ஆண்ட மூவராவர்.

10. சென்னை, கிறிஸ்தவக் கல்லூரிப் பத்திரிகை, 1927, அக்டோபர், பக்கம் 241.

நாதர் கோயிலில் கிடைக்கும் இராஜசிம்மனுன இரண்டாம் நரசிம்ம வர்ம னுடைய கல்வெட்டில்[11] அவன், தன் தந்தையான முதலாம் பரமேச்வர வர்மனை "உக்ரதண்டன்" எனவும், "ரணரசிகபுரத்தை அழித்தவன்" எனவும் கூறிக்கொள்கிறுன். ரணரசிகன் என்பது வாதாபி – சாளுக்கிய அரசனுன முதலாம் விக்கிரமாதித்தியனுடைய விருதுகளில் ஒன்ருகும்.[12] அதனுல் முதலாம் பரமேச்வர வர்மனும் தன் பாட்டனைப்போலக் கர்நாடக தேசத்தின்மீது படை யெடுத்துச் சென்று, விக்கிரமாதித்தியன் தலைநகரை அழித்திருத்தல் வேண்டும் எனக் கொள்ளலாம். அந்தச் சமயத்திலேதான் விக்கிரமாதித்தியன் ஆட்சி முடிந்து, விநயாதித்தியன் ஆட்சி ஆரம்பமானதுபோலும். பல்லவர் குறுக்கீட் டால்தான் அவன் சுமார் இரண்டு ஆண்டுகள் சாளுக்கிய சிங்காதனத்தை அடைய முடியாமல், போரில் ஈடுபட்டு உழன்று வந்தான் எனக் கொள்ளலாம்.

தானக் கிராமம் அடங்கியிருந்த முவுவட்டிய மார்க்கம் என்பது "முவுவட் டியத்துக்கு செல்லும் பாதை" அல்லது "முவுவட்டியம்என்னும் பிரதேசம்" என்று பொருள்படும். மார்க்கம் என்பது வழி என்று பொருள்கொண்டு பதம் என்பதை உணர்த்தும். ஆந்திரப்பிரதேசத்திற்கு முன்னுளில் வழங்கிவந்த "ஆந்திராபதம்" என்ற பெயர் "வடுக வழி" என்று தமிழில் வழங்கி வந்தது. அவ்விதமானுல், "முவுவட்டிய மார்க்கம்" என்பது "முக்காவல் நாடு" என்று தமிழில் வழங்கிய பிரதேசத்தின் தெலுங்குப் பெயராக அமையும்.

பழந்தமிழ் இலக்கியத்திலே "முக்காவல் நாடு" என்ற ஒரு நாட்டைப் பற்றிய குறிப்பும் காணப்படுகிறது. புறநானூற்றுப் பாடல் ஒன்றுக்கு (90), "சோழன் போர்வைக் கோ பெருநற்கிள்ளி முக்காவனுட்டு ஆமூர் மல்லனைப் பொருது அட்டு நின்ருனைச் சாத்தந்தையார் பாடியது" என்ற குறிப்பு உள்ளது. அதிலே காணும் முக்காவல் நாடு எதை உணர்த்துவது என்பது நிச்சயிக்கப்பெற வில்லை. காவல் என்ற சொல்லுக்கு ராச்சியம் என்ற பொருளும் உண்டு. அதனுல் முக்காவல் நாடு என்பது "த்ரைராஜ்ய ராஜ்யம்" என்பதன் மொழிபெயர்ப் பாகவே அமையும்.

சாளுக்கிய அரசனுன விநயாதித்தியன் பல்லவர்களை வெற்றிகொண்ட தாகக் கூறுமிடத்திலே, சாளுக்கிய சாசனங்களில் அவன், "த்ரை ராஜ்ய பல்லவ பலத்தை ஒடுக்கினுன்" என்ற தொடர் ஆளப்படுவதை நாம் மேலே கண்டிருக் கிறேம். அது, "த்ரை ராஜ்ய காஞ்சிபதிபலம்" என்றும் சில இடங்களில் காணப் பெறும். ஆரம்பகாலத்திலே அந்தத் தொடருக்கு 'மூன்று பாகங்களாக அமைந்த

11. தெ. இ. சாஸனங்கள், முதல் தொகுதி, பக்கம் 22.
12. ஆதாரம்: கத்வாய் செப்பேடுகள்.

நாட்டையுடைய பல்லவன்' என்றே பொருள் கொண்டார்கள்.[13] பின்னுல் மூவரசர்களோடு, அதாவது சேர, சோழ, பாண்டியர்களோடு கூடிய பல்லவன் என்று பொருள் கொண்டார்கள்.[14] சமீபத்தில் முதுராஜன், ராஜன், யுவ ராஜன் ஆகிய மூன்று பதவிகளை வகித்து ஒரே காலத்தில் நிர்வாகத்தை நடத்தி வந்த நாட்டையே த்ரை ராஜ்யம் என்ற தொடர் குறித்ததாகும் எனச் சில ஆசிரி யர்கள் கருதினுர்கள்.[15]

"த்ரை ராஜ்யம்" என்ற சொல் குறிப்பிட்ட ஒரு பிரதேசத்தை உணர்த்து வதாக வேறு சில சாசனங்களிலிருந்து தெரிகிறது. சாளுக்கியர்களிலே கூர்ச்ச ரத்துக் கிளையைச் சேர்ந்த தராச்ரய ஜயசிம்மனுடைய மகனுன யுவராஜன் ச்ரேயாச்ரய சிலாதித்தியன் அளித்த ஓஸம்பளச் செப்பேடுகளிலே[16] அவ னுடைய பெரிய தந்தையான முதலாம் விக்கிரமாதித்தியனை, "காஞ்சிபுரீச பல்ல வாந்வயப்ரமாதி, பரிக்ருஹீத த்ரை ராஜ்ய ராஜ்ய:" என்று குறிப்பிட்டிருக்கிறுன். அவை "காஞ்சிபுரத்தில் அரசுபுரிந்த பல்லவ வம்சத்தை அழித்தவன். த்ரை ராஜ் யம் என்ற ராஜ்யத்தைக் கைப்பற்றியவன்" என்று முறையே பொருள்படும். அதிலிருந்து த்ரை ராஜ்யம் என்பது ஒரு தனி நாட்டின் பெயர்தான் என்பது தெளி வாகும். கி. பி. 693-ஆம் ஆண்டு விநயாதித்தியன் வழங்கிய மற்றொரு செப்பேட்டு சாசனத்தாலும் இது உறுதியாகிறது.[17] "அதுகாறும் வேறு யாராலும் அடிப்படுத்த முடியாத பல்லவ வம்சத்தின் ராஜ்ய லட்சுமியை அவன் கைப்பற்றி னுன்" என்ற செய்தியோடு, வேறு சாசனங்களில் காணப்பெருத சில விவரங் களையும் அது அறிவிக்கிறது. யார் யாரிடமிருந்து கப்பம் வந்திருக்கிறது என்ற செய்தியை அரசனுக்கு நியுக்தர்கள் அறிவிப்பதேபோல அமைந்துள்ள சுலோகம் ஒன்றும் அதிலே காணப்படுகிறது: "இது மூஷக அரசனிடமிருந்து பெறப்பட் டது; இது செழுமை நிரம்பிய லாட தேசத்திலிருந்து வந்தது; இது ஸ்திரீ ராச்சி

13. "இந்தியன் ஆண்டிருவரி" (Indian Antiquary) தொகுதி 7. பக்கம் 301. விநயாதித்தியனுடைய ஹரிஹர் செப்பேடுகள். டாக்டர் ப்ளீட் பதிப்பித்தது. இன்னும் சென்னை கிறிஸ்தவக் கல்லூரிப் பத்திரிகை, ஜனவரி 1929, பக்கங்கள் 6–8; ஜர்னல் ஆப் ஓரியண்டல் ரிஸர்ச் (Journal of Oriental Research) சென்னை. தொகுதி 10, பக்கங்கள் 32–41.

14. எபி. இந்திகா, தொகுதி 22, பக்கங்கள் 26–28; ஜர்னல் ஆப் ஓரியண்டல் ரிஸர்ச், தொகுதி 11, பக்கங்கள் 169–174.

15. எபி. இந்திகா, தொகுதி 27, பக்கம் 249.

16. International Orientalists' Congress, Vienna (1886) Vol I. page 225, line 10 (கீழ்த்திசை பற்றிய ஆராய்ச்சியாளர்களின் சர்வதேச காங்கிரஸ். 1886–ஆம் ஆண்டில் வியன்ன நகரத்தில் நடந்தது. முதல் தொகுதி. பக்கம் 225.)

17. Digest of Annual Report on Kannada Research in Bombay Province for the year 1940-41, pp 9-10. also Karnataka Inscriptions, Vol. II. No. 3. Kolhapur plates.

யத்தின் அரசியால் அனுப்பப்பெற்றது; இது த்ரை ராஜ்யத்தின் அரசர் அளித்தது. இது பல்லவேந்திரனிடமிருந்து வந்தது." அதே சாசனத்தில் உரைநடையில் உள்ள மற்ருெரு வாக்கியமும் புதிதாகக் காணப்படுகிறது. த்ரை ராஜ்யத்தை வெற்றிகொண்டதான அவனுடைய அரிய சாதனையினுல் அவன் புகழ் எண் திசையிலும் பரவியதோடு, கமேர நாட்டு மங்கையர்களே அந்த மகிழ்ச்சியினுல் பாடிக் களிநடம்புரியச் செய்ததாம். அதிலிருந்து "த்ரை ராஜ்யம்" என்ற நாடு மற்றவர்களால் எளிதில் கைப்பற்ற முடியாதது என்பதும், விநயாதித்தியன் அதைக் கைப்பற்றியது இந்தோ–சீனுவிலுள்ள கம்புஜ (காம்போஜ) தேசத்து மக்களே மகிழச் செய்தது என்பதும் பெறப்படும்.

'த்ரை ராஜ்யம்' என்ற சொல் வேறு சந்தர்ப்பங்களிலும் ஆளப்பட்டுள்ளது. தெலுங்குச் சோழ அரசனுன புண்ணியகுமாரனுடைய செப்பேடுகளிலே அந்த வம்சத்தின் முதல்வனுன கரிகாலன் "த்ரை ராஜ்ய ஸ்திதியைத் தன்னுடையதாக்கிக் கொண்டான்" என்று கூறப்பட்டுள்ளது. (த்ரை ராஜ்ய ஸ்திதிம் ஆத்மஸாத்க்ருத வத:)[18]

வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள பிரம்மதேசப் பிரதேசத்திலிருந்து கிடைக்கும் ஒரு கல்வெட்டிலே "த்ரை ராஜ்ய கடிக மத்யஸ்தன்" ஒருவனேப் பற்றிய பிரஸ்தாபம் வருகிறது.[19] அவற்றைக்கொண்டு பார்த்தால், த்ரை ராஜ்யம் அல்லது முக்காவல் நாடு என்ற பிரதேசம் தொண்டை மண்டலத்தை அல்லது தமிழ்நாட்டின் வட எல்லேயை ஒட்டியதாக இருத்தல் வேண்டுமெனலாம்.

மாமூலனுர் எழுதியதாக அகநானூற்றிலேதொகுக்கப்பெற்றுள்ள பாடல் ஒன்றிலே (31) "தமிழ்கெழு மூவர் காக்கும் மொழி பெயர்தேயம்"[20] குறிக்கப்பட்டுள்ளது. மொழிபெயர்தேயம் என்பது நாம் பேசும் மொழி மாறி வேற்று

18. எபி. இந்திகா, தொகுதி 11, பக்கம் 341; தொகுதி 27, பக்கம் 274.

19. சாசன இலாகாவின் ஆண்டறிக்கை 1916, இரண்டாம் பாகம், பாரா 8.

20. தமிழர் என்ற சொல் முன்னுளிலே பல்லவர்களேயே உணர்த்தி வந்தது என்பதை நாம் மேலே கண்டோம். அதைக் கொண்டு பார்த்தால், தமிழ் கெழு மூவர் காக்கும் மொழி பெயர் தேயம்" என்பதற்குப் பல்லவ மன்னர் மூவரால் காக்கப்பெறும் நாடு எனவும் பொருள் கொள்ள முடியும். கதம்ப வம்சத்தை நிறுவிய மயூர சர்மன் பல்லவர்களுடைய ஊழியத்தில் அமர்ந்து கதம்ப ராச்சியத்தின் அரசனுக முடிசூட்டப் பெறுவதற்கு முன், அவனுடைய பாரம் பர்யத்தையும் வீரத்தையும் பற்றிப் பல்லவ மன்னர்கள் திருப்தியடைந்தனர் என்று—அதாவது அவைகளே நன்கு விசாரித்துத் திருப்தியடைந்த பிறகே அவனேச் சிற்றரசுப் பதவியில் முடி சூட்டினர் என்று—தாளகுண்டாக் கல்வெட்டு கூறுகிறது. (எபி. இந்திகா, தொகுதி8. பக்கம் 31) அவ்விடத்திலே பல்லவேந்திரர் என்ற சொல் பன்மையில் ஆளப்பட்டுள்ளது. ஸம்ஸ்கிருதத்திலே

மொழி பேசப்படும் நாட்டை உணர்த்தும். அதே தொகுப்பிலுள்ள வேறு சில பாடல்களிலிருந்தும் (67, 211, 295) மொழிபெயர்தேயம் வேங்கடத்திற்கு வடக்கே உள்ளது என்பதும், வடுகர் போர் புரியும் போர்க் களங்களைக் கொண்டது என்பதும், வீரர்களுடைய நடுகற்கள் நிரம்பியது என்பதும் தெரிகின்றன.

மூன்றையும் அதற்கு மேற்பட்டவைகளையுமே பன்மையில் குறிப்பர். கர்ண பரம்பரையிலே பல்லவ வமிசத்தின் முதல் அரசனைக் குறிக்கப் பெறும் "முக்கண்டிக் காடுவெட்டி" என்பான் பெயர் "மூன்று கண்களைக்கொண்ட காடுவெட்டி என்ற பொருளில் "த்ரிலோசன பல்லவன்" அல்லது "த்ரிநயன பல்லவன்" என்று மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. மூன்று பாகங்களைக் கொண்ட, அதாவது மூன்று கண்டங்களைக் கொண்ட, காடுவெட்டி (முக்கண்ட காடுவெட்டி) என்ற தொடரே அவ்விதம் திரிந்ததோ என்று எண்ணத் தோன்றுகிறது. வேங்கியை ஆண்ட சாலங்காயன மன்னர்கள் பல்லவர்களோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் எனலாம். பல்லவர்கள் பாரத்வாஜ கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள்; ஆங்கிரஸ, பார்ஹஸ்பத்ய, பாரத்வாஜ என்று மூன்று ரிஷிகளைக் கொண்டது, அந்தக் கோத்திரம். அந்த மூவரோடு வேறு இருவரையும் சேர்த்து ஐந்து ரிஷிகளின் பிரவரத்தைக் கொண்டது சாலங்காயன கோத்திரம். (டாக்டர் திநேச சந்திர சர்க்கார் ஆங்கிலத்தில், சாதவாகனருக்குப் பின்னால் வந்த அரசுகள் Successors of the Satavahanas என்று எழுதிய நூல், பக்கம் 83) பல்லவர்களைப்போலவே அவர்களும் ரிஷபத்தையே இலச்சினையாகக் கொண்டிருந்தார்கள்; அம்மாதிரியே போத்தன் (போத்தரையன்) என்ற சிறப்புப் பெயரையும் தாங்கியிருந்தார்கள். (எபி இந்திகா தொகுதி 31, பக்கங்கள் I-2) ஒன்றை ஒன்று அடுத்துள்ள இருபிரதேசங்களில் அரசு புரிபவர் அவ்விதம் இருந்தது வேறு எங்கும் காணக் கிடைக்காதது. ஆகவே சாலங்காயனர்களைப் பல்லவர்களில் ஒரு கிளையினராகக் கொள்ளுவது சாத்தியமே. சமுத்திர குப்தனுடைய திக்கு விஜயத்திலே காஞ்சிபுரத்து அரசனை விஷ்ணுகோபனோடு பாலக்கத்து அரசன் ஒருவனையும் அவன் வெற்றிகொண்டான் என்ற செய்தி அவனுடைய வெற்றித்தூண் கல்வெட்டில் காணப்படுகிறது. (டாக்டர் ப்ளீட் பதிப்பித்த "குப்தர் சாசனங்கள்", முதற் சாசனம்) அந்த இடம் நெல்லூர் மாவட்டத்தில் இருந்ததாகக் கருதப்படுகிற "பலக்கட" என்னும் ஊராக இருக்கலாமென்று கருதப்பட்டு வருகிறது. அந்த இடத்திலிருந்து பல்லவ மன்னர்களில் சிலர் சாசனங்களை வழங்கியிருக்கிறார்கள். அவ்விதம் நெல்லூர்–குண்டூர்ப் பகுதியில் கிடைத்த சாசனங்கள் பின்னால் தனியாகப் பதிப்பிக்கப்பட்டு உள்ளன. அவற்றிலே காணும் அரசர்களில் சிலர் காஞ்சிபுரத்திலிருந்து அரசு புரிந்த பல்லவ மன்னர்களின் வரிசையிலே எந்த இடத்தைப் பெற்றிருந்தார்கள் என்பது சரியாக விளங்கவில்லை. அதேபோல, அந்தப் பிரதேசத்தில் கிடைத்த கல்வெட்டுக்களில் பல்லவ அரசர்களாகக் குறிக்கப்பட்டிருப்போர் காஞ்சிபுரத்திலிருந்து அரசு புரிந்தவர்களாக வாயலூர்க் கல்வெட்டில் கொடுக்கப்பட்டிருக்கும் மன்னர்களின் பட்டியலில் இடம் பெறவில்லை. இவற்றை நாம் முன்னுரையில் வரலாற்றுச் சுருக்கம் கூறுமிடத்தில் விளக்கியிருக்கிறோம். இவைகளைக் கவனித்தால், பல்லவர்களிலே மூன்று கிளைகள் இருந்து, ஒவ்வொரு கிளையினரும் ஒரு தனிப் பிரதேசத்தில் அரசு புரிந்து வந்தவராக இருக்குமா என்று எண்ணத் தோன்றுகிறது. இப்போதுள்ள நிலையில் அதை நாம் உறுதியாகச் சொல்ல முடியாது. எவ்விதமாயினும் "த்ரை ராஜ்யம்" அல்லது "முக்காவல் நாடு" என்ற பிரதேசம் தொண்டை மண்டலத்துக்கும் வடுகர்நாட்டுக்கும் இடைப்பட்டதாக இருந்தது எனக் கொள்ளலாம்,

அதிலிருந்து தமிழ்நாட்டுக்கு வடக்கே தட்சிணப் பீடபூமியின் தென் பகுதியாக அமைந்துள்ள பிரதேசத்தையே முக்காவல் நாடாகக் கொள்ள வேண்டுமென்பது பெறப்படும். தமிழ்நாட்டு முடியுடை வேந்தர் மூவரும் ஆட்சி புரிந்ததற்கான அடையாளங்கள் அந்தப் பிரதேசத்திலே இன்றைக்கும் காணக் கிடக்கின்றன.

சாசன மூலபாடம்[21]

முதல் ஏடு—பின்புறம்

1. [illegible] [। *] [illegible][22] [। *] [illegible] [०] [illegible]
2. [illegible]
3. [illegible]
4. [illegible]
5. [illegible] [-*] [illegible][23] [illegible]
6. [illegible]

இரண்டாம் ஏடு—முன்புறம்

7. [illegible]
8. [illegible] [० *] [illegible]
9. [illegible]
10. [illegible] [illegible][24]

21. எபி இந்திகா, தொகுதி 32–ல் வெளியான புகைப்படப் பிரதியை கொண்டு பெயர்த்து எழுதப்பட்டது.

22. 'ஜிதம் பகவதா'' என்ற தொடர் ஒரு சுலோகத்தின் ஆரம்பமாகும். இது பின்னல் நெல்லூர்-குண்டூர்ப் பகுதிகளில் கிடைத்த சாசனங்கள் பதிப்பிக்கப்பெற்ற இடத்தில் விளக்கப் பட்டிருக்கிறது.

23. '[illegible]' என்பது [illegible] என்பது போல, அநுஸ்வாரம் பின்வரும் எழுத்தின் தலையிலே எழுதப்பட்டுள்ளது. இந்த நிலை வேறு சில செப்பேடுகளிலும் காணப்படுகிறது.

24. இந்த இடம் புகைப்படத்தில் தெளிவாக இல்லை. சாசனத்தின் முன்னுரையில் பழைய ஆசிரியர்கள் இதை ''முவு'' என்றே கொடுத்திருக்கிறார்கள். வுகரம் அடுத்த வரியில் உள்ளது.

11. [illegible] [*] [illegible] [*] [illegible]

12. [illegible] [। *] [illegible]

இரண்டாம் ஏடு—பின்புறம்

13. [illegible] [*] [illegible] [25]

14. [illegible] [*] [illegible]

15. [illegible] [26] [illegible]

16. [illegible]

17. [illegible] [।*] [illegible]

18. [illegible] (०) [illegible]

மூன்றும் ஏடு—முன்புறம்

19. [illegible] [। *] [illegible] [27] [illegible] [। *] [illegible] । [illegible]

20. [illegible] [28] [। *] [illegible] [॥ *] [illegible]-

21. [illegible] [। *] [illegible] [॥ *] [illegible] [?]

ஆகவே இந்த வரியின் கடைசியில் உள்ள லகர ஒற்று எவ்விதம் கொடுக்கப்பட்டதென்பது தெரியவில்லை. ஹிந்துப் பத்திரிகையில் வெளியான மசிப் படத்தின் பிரதியைப் பார்த்தால்தான் தெளிவாகும்.

25. [illegible] என்று வாசிக்க.

26. [illegible] என்று கொள்ளவேண்டும்.

27. [illegible] எனக் கொள்க.

28. [illegible] என்று திருத்தவும்.

22. ரி வல்லவ ஸம்ஹவிதோ நந்திவர்ம நரபதேஷ்வு: [।*] ஸூக்தாநி [:*] க்ஷம வஜ்ரேரஸ்ய ஶாஸநஸ்ய ச

23. ஸாயபா: [||*] ப்ரவர்த்தமாந விஜயராஜ்ய ஸம்வத்ஸரே ஏகாந்ந விம்ஶத்யாம் வைஶாக்யாமெ

24. பாண்டு ய க்ஷ த்ரபொதஶ்யாம் ஸூர்யக்ரஹணே வக்ஷ்மாநாய ப்ரமேஶ்வேத

25. விஶேஷ விதிதே ந[ஷ்டி*] விதமிதம் [||*] ஸ்வஸ்த்யஸ்து மொ ப்ராஹ்மணேப்ய: ||

மொழி பெயர்ப்பு

மங்கலம் உண்டாகட்டும். பகவானுல் ஜயிக்கப்பட்டது.

அழகும் திருவும் நிறைந்த காஞ்சிபுரத்திலிருந்து பாரத்வாஜ ஸகோத்ரத்தைச் சேர்ந்தவர்களும் சாஸ்திர முறைப்படி அச்வமேதம் முதலிய அநேக யாகங்களைச் செய்தவர்களுமான பல்லவர்களது வம்சத்தைச் சேர்ந்தவனும்,

தன்னுடைய வீரத்தால் ராஜ்யத்தை அடைந்தவனும், அரசர் கூட்டத்தை வணங்கச் செய்யும் பிரதாபத்தையுடையவனும், நடு உலகமான இப்பூமண்டலத்தைக் காப்பவனும்,[29] லோக பாலர்களில் ஐந்தாமவனுமான மஹேந்திர வர்மனுடைய கொள்பெயரனும்;

பல போர்களில் அடைந்த புகழினுல் ஒளிர்பவனும், சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட வரையறைகள் அனைத்தையும் கொண்டவனும், பூவுலகில் ஒப்பற்ற தனி வீரனுமான ஸ்ரீ நரசிம்ம வர்மனுடைய பெயரனும்;

தேவர், பிராம்மணர், குரு, முதியோர் ஆகியவர்களை உபசரிப்பவனும், மிக்க வணக்கத்தை யுடையவனும், அநேகம் பசு, பொன், பூமி முதலியவற்றைக் கொடுப்பதனுல் நாள்தோறும் வளரும் தர்மக்கூட்டங்களை உடையவனுமான மஹேந்திரவிக்கிரம வர்மனுடைய மகனும்,

குடி மக்களை மிக்க சந்தோஷமாக வைத்துப் பரிபாலனம் செய்வதையே தினமும் கருத்தாகக் கொண்டவனும், கலியுக தோஷத்தினுல் கீழே விழுந்த தருமத்தை உயர்த்தி நிலைநிறுத்துவதற்கு எப்போதும் தயாராக இருப்பவனும், மகேசுவர பக்தியில் சிறந்தவனும், பிரம்மத்தை அறிந்தவர்களில் சிறந்தவனும், பப்ப-பட்டாரகர் திருவடிகளில் பக்தி பூண்டவனுமான ஸ்ரீ பரமேச்வர வர்மன்.

29. "நடுவில் உள்ள லோகபாலனும்" என்றும் பொருள் கொள்ள முடியும். கிழக்கு (இந்திரன்), தெற்கு (யமன்); மேற்கு (வருணன்), வடக்கு(குபேரன்),என்று திக்குக்கு ஒருவராக லோகபாலர்கள் நால்வர். அவர்களுக்கு நடுவில் உள்ள பூமியைக் காக்கும் இந்த அரசன் ஐந்தாம் லோகபாலன் ஆவான்.

பூமி ராஷ்டிரத்தில் முவுவட்ய மார்க்கத்தில் முஸுண நதிக்குத் தென் கரையில் (உள்ள) குபுணூரு என்ற கிராமத்தில், கிராம வாசிகளுக்கு இவ்வாறு கட்டளையிடுகிறான்:

இந்தக் கிராமம் எல்லா வரிகளினின்றும் விலக்கப்பட்டு, பிரம்மதேய மாகச் செய்யப்பெற்று, அயனம் காரணமாக உர்ப்புட்டூரு கிராமத்தில் வசிப்ப வரும், மௌத்கல்யாயன கோத்திரத்தைச் சேர்ந்தவரும், ஆபஸ்தம்ப சர ணத்தை அனுசரிப்பவரும்; வேதம் வேதாங்கம், இதிகாசம், புராணம் இவை களின் தத்துவத்தை அறிந்தவரான ஸ்வாமி சர்மரின் பெயரரும், யமம், நியமம், அத்யயனம் ஆகியவைகளையே கடமையாகக் கொண்டவரும், எல்லாச் சாஸ்திரங்களின் தத்துவம் உணர்ந்த [30] தோணசர்மருடைய மகனும், நற்சுற்றம், வித்தை, நடத்தை ஆகியவை நிறைந்தவரும், எப்போதும் உண்மை விரதம் பூண்டவரும் அறுதொழிலை ஊக்கத்துடன் புரிபவருமான தேவசர்ம ருக்கு எம்முடைய ஆயுள் ஆரோக்கியம் ஆகியவற்றின் அபிவிருத்திக்காக என் னால் கொடுக்கப்பட்டது. இவ்வாறு அறிந்த அதிகரணர், நியுக்தர், ராஜவல்ல பர், சஞ்சரந்தர் ஆகியோர் அனைவரும், எல்லா வரி விலக்குகளையும் கொண்டு, இறையிலி ஆக்கச் செய்யவும், பிறராலும் விலக்கும்படி செய்யவும், இந்த என் கட் டளையை எவன் மீறுகிறானோ அந்தப் பாவி சரீர தண்டனை அடையத்தக்கவன்.

[இந்த வகையில் சுலோகங்கள் உள்ளனவே:—]

பலர் பூதானம் செய்திருக்கிறார்கள். பலர் பரிபாலித்திருக்கிறார்கள். யார், யார் எந்த அளவுக்குப் பூமியோ அவர் அவர்களுக்கு அந்த அளவுக்குப் பயன்.

பூதானத்திலும் மிகுந்த தானம் இருந்ததில்லை. இருக்கப்போவதுமில்லை. அதை அபகரிப்பதிலும் (மிகுந்த) பாபம் இருந்ததுமில்லை. இருக்கப்போவது மில்லை.

தாகி பல்லவ குலத்தைச் சேர்ந்தவனும், நந்த [31] குற்றத்து அதிப னும், பெரும் புகழ்பெற்றவனுமான குள வர்மன் இந்தச் சாசனத்துக்கு ஆக் ஞப்தி (ஆணத்தி) ஆவன். மேன்மையுற்றுவரும் வெற்றியாட்சியின் பத்தொன்ப தாம் ஆண்டு தை மாதம் (பௌஷ்ய மாதம்) சுக்கில பக்ஷம் திரயோதசி, ஞாயிற் றுக்கிழமை கனஸ்கந்த வம்சத்தில் பிறந்த விசேஷ-விதிதன் [32] என்பவனால் இது எழுதப்பட்டது. பசுக்கள், பிராமணர்கள் மங்கலமாக இருக்கட்டும்.

30. த்ரோண சர்மன் என்று இருத்தல் வேண்டும்.

31. கூற்றம் என்பதே போலும்.

32. சிறப்பான அறிவு கொண்டவன் என்று அது பொருள்படும்.

இரண்டாம் நரசிம்மவர்மனுடைய ரேயூருச் செப்பேடுகள்

முன்னுரை

ஐந்து ஏடுகளைக் கொண்ட இந்தச் சாசனம், ஆந்திரப் பிரதேசத்தில் சித்தூர் மாவட்டத்திலுள்ள காளஹஸ்தி ராஜாவுக்குச் சொந்தமாக, அவருடைய தஸ்தாவேஜுகளுடன் இருந்துவந்திருக்கிறது. அது எங்கே கிடைத்தது, எவ்விதம் அங்கே வந்தது என்பன போன்ற விவரங்கள் எதுவும் நமக்குத் தெரியவில்லை. இப்போது திருப்பதியிலுள்ள ஸ்ரீ வேங்கடேச்வரர் கீழ்த்திசை ஆராய்ச்சிக் கழகத்தில் காட்சிப் பொருளாக இருக்கிறது. இது முதலிலே திருப்பதி ஸ்ரீ வேங்கடேச்வரர் கீழ்த்திசை ஆராய்ச்சிக் கழகத்தின் பத்திரிகையில், காலஞ்சென்ற வேட்டூரி பிரபாகர சாஸ்திரியால் தெலுங்கிலே வெளியிடப்பட்டது. [1]

பின்னால் எபிகிராபியா இந்திகாவில் திரு. பி. பி. தேசாயினாலும் பதிப்பிக்கப்பட்டுள்ளது. [2]

ஐந்து ஏடுகளைக் கொண்டிருந்தாலும், சாசனம் மூன்று ஏடுகளிலேதான் பொறிக்கப்பட்டுள்ளது ; முதல் ஏட்டின் உட்புறத்திலும், அடுத்த இரண்டு ஏடுகளின் இருபுறங்களிலுமாக, பக்கத்திற்கு ஐந்து வரிகள் வீதம் மொத்தம் இருபத்தைந்து வரிகள் கொண்டது. பின்னால் உள்ள இரண்டு ஏடுகள் ஏதும்

1. Journal of Sri Venkateswara Oriental Institute, Vol. VIII pp 82-96; Vol. IX, pp 25-30
2. Epigraphia Indica. Vol. XXIX, pp 88-97

பொறிக்கப்படாமல் எதற்காக அந்த வளையத்திலே கோக்கப்பட்டிருந்தன என்பது விளங்கவில்லை. [3]

ஏடுகளைக் கோத்திருந்த வளையத்தில் காணும் முத்திரையின் முகப்பு சுமார் ஒன்றரை அங்குலம் குறுக்களவு கொண்ட வட்டமாக உள்ளது. அதிலே பின்கண்ட உருவங்கள் புடைப்புச் சித்திரமாகக் காணப்படுகின்றன.

அடியிலே ஐந்து இதழ்களைக் கொண்ட மலர்ந்த தாமரையின் உருவம் சித்திரிக்கப்பட்டுள்ளது. அதன் மேலே, பருத்த திமிலுடன் படுத்திருக்கும் ரிஷபத்தின் உருவம் ஒன்றுள்ளது. வலதுபுறமாகப் படுத்திருக்கும் அதன் முகம் நேர்ப்பார்வையாக அமைந்துள்ளது. [4] அதன் இருபுறங்களிலும், பக்கத்திற்கு ஒன்றாக, இரண்டு குஞ்சங்களுடன் கூடிய சாமரங்கள் இரண்டு உள்ளன. ரிஷபத்தின் முதுகிற்கு மேலே, வட்டத்தின் உச்சியில் பிறைச் சந்திரன் ஒன்றும் காணப்படுகிறது. இவை தவிர எழுத்து ஏதும் அதிலே காணப்படவில்லை.

பல்லவ அரசனான இரண்டாம் நரசிம்மவர்மன், தன்னுடைய ஆட்சியின் பன்னிரண்டாம் ஆண்டு, வைசாக மாதத்தின் பௌர்ணமி நாள் ஏற்பட்ட சந்திர கிரகண காலத்தில், தன்னுடைய ஆயுள், பலம், வெற்றி, செல்வம் ஆகியவற்றின் அபிவிருத்திக்காக, மேல்முண்ட ராஷ்டிரத்தைச் சேர்ந்த அசிதார புரத்தின் வடக்கில் உள்ள ரேயூரு என்ற கிராமத்தைக் குமாரமண்ட சர்மனுக்குத் தானம் அளித்த செய்தியைத் தெரிவிக்கிறது இந்தச் சாசனம். அதிலே, தானம் அளித்த அரசன் (இரண்டாம்) மகேந்திர விக்கிரம வர்மனுடைய பெயரன் என்றும், (முதலாம்) பரமேச்வர வர்மனுடைய மகன் என்றும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. தானம் பெற்ற அந்தணர், குரவஸ்ரீ என்ற இடத்தில் வசித்தவர். ராதிதர கோத்திரத்தைச் சேர்ந்தவர், ஆபஸ்தம்ப சூத்திரத்தைச் சேர்ந்தவர். இரண்டு வேதங்களில் கரைகண்டவர், சோமயாகம் செய்தவர் என்று விவரிக்கப்பட்டுள்ளார். இவர் கூளசர்மனுடைய பெயரனும் குமார சர்மன் மகனும் ஆவர். இவரைப் போலவே தந்தை, பாட்டன், இருவருமே இரண்டு வேதங்களைக் கரைகண்டவர்கள். இன்னும் பாட்டன் வேதம் வேதாங்கம், இதிகாசம், புராணம் ஆகியவற்றின் தத்துவங்களை அறிந்தவன்.

இந்தச் சாசனத்தை, நந்தகுற்றத்து அதிபனும், சோமாதித்தியன் மகனுமான இராஜாதித்தியன் ஆணத்தியாக இருந்து நிறைவேற்றி வைத்தான் என்பதும்

3. அவ்விரண்டு ஏடுகளுள் ஒன்றிலே பிற்காலத்து எழுத்தில் ஏதோ இரண்டு வரி எழுதப்பட்டுக் காண்பதாகக் கூறுவர். அதன் முழு விவரம் தெரியவில்லை.

4. உள்ளகுரவயபாளையம் செப்பேடுகளின் முத்திரையில் காணும் ரிஷபத்தின் முகம் 'லேசாக' வாசகர் பக்கம் திரும்பியுள்ளதும் கவனிக்கத்தக்கது.

கொடுக்கப்பட்டுள்ளது. இன்னும் இந்தத் தானத்திற்குக் கேடு விளைப்பவர் எவ்விதம் கேடுறுவர் என்பதைத் தெரிவிக்கும் சுலோகங்களோடு சாசனம் பூர்த்தியாகிறது.

இரண்டாம் நரசிம்மவர்மன் அளித்த சாசனங்களில் பல இதுகாறும் நமக்குக் கிடைத்துள்ளன. அவை அனைத்தும் கல்வெட்டுகளே. செப்பேட்டுச் சாசனமாகக் கிடைத்தது இது ஒன்றே. அன்றியும் அவன் ஆட்சியின் ஆண்டைக் குறிப்பதாக உள்ள சாசனமும் இது ஒன்றே. இந்தச் சாசனம் அவனுடைய ஆட்சியின் பன்னிரண்டாம் ஆண்டு, வைசாக பூர்ணிமையில் பிடித்த சந்திர கிரகணத்தின்போது அளித்த தானத்தைத் தெரிவிப்பது. அது எந்த வருஷம் என்பதை நிச்சயமாகக் கணிப்பதற்கு வேண்டிய பஞ்சாங்கக் குறிப்புகள் இல்லை என்பது உண்மையே. எனினும், இப்போது உள்ள நிலையிலும் அது ஓரளவுக்கு முக்கியமானதே.

வாதாபிச் சாளுக்கிய அரசனான முதலாம் விக்கிரமாதித்தியன் கி. பி. 674-ஆம் ஆண்டில் கத்வால் சாசனத்தை வழங்கிய சமயம், பல்லவர்களின் மீது படையெடுத்து வந்து சோழ நாட்டிலே, காவிரியின் தென்கரையில் கும்பகோணத்திற்குப் பக்கத்திலே உள்ள (பாம்பூர்) உரகபுரத்தில் தங்கியிருந்தான் என்பதையும் அப்போது முதலாம் பரமேச்வரவர்மன் பல்லவ அரசனாக ஆட்சி நடத்தி வந்தான் என்பதையும் நாம் அறிவோம். இரண்டாம் நரசிம்மவர்மனுடைய ஆட்சி அதற்குப் பிறகே தொடங்கியிருத்தல் வேண்டும். சீன சரித்திர நூல்களிலிருந்து கி. பி. 720-ஆம் ஆண்டில் நரசிங்கப் போத்தவர்மன் தமிழ் நாட்டிலே அரசனாக இருந்தான் என்பது உறுதியாகிறது.[5] கி.பி. 730–731-ஆம் ஆண்டில் நரசிம்மவர்மனுடைய மகனான இரண்டாம் பரமேச்வரவர்மன் பல்லவ சிம்மாசனத்தில் அமர்ந்திருந்தான் என்பது உள்சலக் கல்வெட்டிலிருந்து தெரிய வருகிறது.[6] ஆகவே இந்தச்சாசனத்தில் கண்ட,தானம் வழங்கப்பட்ட காலமான வைசாக பூர்ணிமையில் பிடித்த சந்திர கிரகணம், இவற்றுக்கு இடைப்பட்ட காலத்திலேதான் நேரிட்டிருத்தல் வேண்டும். 'இந்தியாவில் தோன்றிய சந்திர கிரகணங்கள்' (Eclipses of the Moon in India) என்ற தலைப்பில் ராபர்ட் சுவெல் (Robert sewell) எழுதிய கணித நூலிலிருந்து கி. பி. 683, 684, 701, 702, 711, 720 ஆகிய ஆண்டுகளில் வைசாக பூர்ணிமையிலே சந்திர கிரகணம் நேரிட்ட

5. ஸ்ரீ க. அ. நீலகண்ட சாஸ்திரிகள் எழுதிய Foreign Notices of South India பக்கங்கள் 16, 116-17.

6. சாசன இலாகாவின் ஆண்டறிக்கை. 1941-42-ஆம் ஆண்டில் தலைமையகத்தார் பிரதி செய்த சாசனங்களுள் (Appendix B.) எண் 22; இன்னும் ஜர்னல் ஆப் இந்தியன் ஹிஸ்டரி (Journal of Indian History) தொகுதி 30, பக்கம் 291.

விவரம் தெரியவருகிறது. அவற்றுள் எதை எடுத்துக்கொள்வது என்பது பற்றி ஆராய்ச்சியாளர்களுள் அபிப்பிராயபேதம் இருந்து வருகிறது. கி. பி. 711-ஆம் ஆண்டில் நேரிட்ட கிரகணமாகவே இருத்தல் வேண்டும் என்றும், அதனுல் அவன் ஆட்சி கி. பி. 700-ஆம் ஆண்டில் தொடங்கியதாக இருத்தல் வேண்டும் என்றும் பெரும்பாலோர் முடிவு கட்டியிருக்கிறுர்கள். [7]

தானம் வழங்கப்பட்ட கிராமமான ரேயூரு என்பது மேல்முண்ட ராஷ்டிரத்திலே இருந்ததெனச் சாசனம் கூறுகிறது. முண்டராஷ்டிரம் என்பது முண்ட நாடு அல்லது முண்டை நாடு என்றும் சாசனங்களில் குறிக்கப்பெற்றிருப்பதும் உண்டு; நெல்லூர் மாவட்டத்திலே, கோவூர் தாலூகாவின் பெரும்பகுதியையும், அதைச் சுற்றியுள்ள பிரதேசத்தையும் கொண்டதாகும். மேல்முண்டராஷ்டிரம் என்று குறிக்கப்பட்டிருப்பதில் இருந்து அந்த நாடு பக்கத்துப் பிரதேசங்களேயும் தன்னுள் கொண்டு பரந்து விரிந்து இரு பகுதிகளாக விளங்கியதென்று கொள்ளலாம்.[8] அதனுல் மேல்முண்ட ராஷ்டிரம் என்பது கோவூர் தாலூகாவிற்கு மேற்கேயுள்ள ஆத்மகூர் தாலூகாவின் பகுதியைக் கொண்டதாக இருத்தல் வேண்டும் என்னலாம். ஆத்மகூர் தாலூகாவிலே ரேயூரு என்ற கிராமம் ஒன்று இருக்கிறது.[9] அதுவே சாசனத்தில் கண்ட தானகிராமம் என்று ஆராய்ச்சியாளர்கள் கருதுவர். [10]

அதே பெயர் கொண்ட கிராமம் ஒன்று அதற்குச் சில ஆண்டுகளுக்கு முன்னதாக இரண்டாம் விஷ்ணுவர்த்தனன் என்னும் வேங்கிச் சாளுக்கிய அரசன் கி. பி. 664-ஆம் ஆண்டில் வழங்கிய ஒரு செப்பேட்டுச் சாசனத்தில் [11] குறிக்கப்

7. எபி. இந்திகா, தொகுதி 29, பக்கம் 92.

8. அதன் அடைமொழியான மேல் என்பதிலிருந்து அந்த நாடு, முண்டராஷ்டிரத்திற்கு மேற்கே ஒரு தனிப் பிரதேசப் பிரிவாக இருந்ததெனக் கொள்ளலாம் என்று கருதுகிறுர் திரு தேசாய். (எபி. இந்திகா, தொகுதி 29, பக்கம் 94)

9. எபி. இந்திகா. தொகுதி 29. பக்கம் 94.

10. இந்த இடத்திலே மற்ருெரு விஷயத்தையும் கவனிக்க வேண்டும். தெலுங்குச் சோழர்கள் ஆண்ட பிரதேசமான ரேநாண்டு அல்லது ரேநாடு என்பது ராய நாடு என்பதன் வேறு வடிவமே என்று தெலுங்கு ஆராய்ச்சியாளர்கள் கருதுவர். மஹாராஜப்பாடி என்று கல்வெட்டுகளில் காணப்படுவதும் அந்தப் பிரதேசமே என்பர். அதன்படி ரேயூரு என்பது அரசூர் அல்லது ராஜபுரம் என்று பொருள் படுவதாக அமைந்ததெனக் கொள்ளலாம். அதே பொருள் கொடுக்கும் ஊர்ப்பெயர்கள் பல அந்தப் பகுதியிலே காணப்படுகின்றன. கோவூர் என்பதும் அத்தகையதே.

11. இந்தியன் ஆண்டிகுவரி, தொகுதி 7, பக்கம் 187.

பட்டுள்ளது. ஆனுல் அங்கே அது கர்மராஷ்டிரத்தில் இருந்ததெனக் காணப்படுகிறது. கர்மராஷ்டிரம் என்பது இன்னும் வடக்கே, நெல்லூர் மாவட்டத்தின் வடக்குப் பகுதியையும் குண்டூர் மாவட்டத்தின் தெற்குப் பகுதியையும், அதாவது, ஏறக்குறைய ஒங்கோல், பாபட்லா தாலூகாக் களைக் கொண்ட பிரதேசமாகும். எனினும், அது இந்தச் சாசனத்தின் தான கிராமத்தையே குறிப்பதாகுமெனவும் திரு. தேசாய் கருதுவர். அதை நாம் அவ்வளவு நிச்சயமாகச் சொல்ல முடியாது. ரேயூரு என்ற பெயர் கொண்ட கிராமங்கள் வேறு இடங்களிலும் காணப்படுகின்றன. உதாரணமாக, ஆந்திரப் பிரதேசத்துக் கிருஷ்ணு மாவட்டத்தில் விஜயவாடைக்குப் பத்து மைல் தூரத் திலே கங்கிபாடுவுக்குப் பக்கத்தில் ரேயூரு ஒன்று உண்டு. இவற்றைக் கவனித்தால் தான கிராமம் நெல்லூர் மாவட்டத்தில் ஆத்மகூர்த் தாலூகாவில் உள்ள தாகவே கருதலாமெனத் தோன்றுகிறது. ஆணத்தியான இராஜாதித்தியன் பரிபாலித்து வந்த நந்தகுற்றம் (நந்தகூற்றம்) என்னும் பிரதேசத்தைப் பற்றி உன்னகுரவயபாளையம் செப்பேடுகளிலும் முன்னுரையில் கூறியிருக்கிருேம்.

தானம் பெற்ற குமாரமண்டசர்மன், குரவஶ்ரீ என்ற இடத்தில் வசித்தவர் என்று சாசனம் கூறுகிறது. மூன்ரும் நந்திவர்மனுடைய தண்டந்தோட்டம் செப்பேடுகளிலே தானம் பெற்றவர்களில் சிலர் குரவசிரி என்ற ஊரைச் சேர்ந்த வர்களாகக் குறிக்கப்பட்டுள்ளனர். வேங்கிச் சாளுக்கிய அரசஞன குணக விஜயாதித்தியனுடைய சாதலூருச் செப்பேடுகளிலும் கொர்வஶ்ரீ என்ற ஊர்ப் பெயர் காணப்படுகிறது.[12] அதுவும் இந்த ஊரையே குறிப்பதாகக் கொள்ளலாம். குரவர்சேரி என்பதே ஊர்ப்பெயரின் சரியான வடிவம் போலும். அதைக் கொண்டு அந்த ஊரில் வித்தையும் சீலமும் நிறைந்த பிராம்மணர்கள் வாழ்ந்து வந்திருத்தல் வேண்டும் என்று கருதலாம் என ஆராய்ச்சியாளர் ஒருவர் கூறுவர். அந்தப் பெயரும் அதையே அறிவிப்பதாக உள்ளது கவனிக்கத்தக்கது.

இந்தச் சாசனத்தை வழங்கிய இரண்டாம் நரசிம்மவர்மனுடைய தந்தை யான முதலாம் பரமேச்வரவர்மன் 'அசுவமேதம் முதலிய அநேக யாகங்களைச் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட முறைப்படி முற்றுவித்தவன்' என்று புகழப்பட் டிருக்கிருன். அவன் அசுவமேத யாகம் செய்தான் என்ற விவரம் வேறு எந்த இடத்திலும் காணப்பெறவில்லை. பரமேச்வரவர்மனே வழங்கிய கூரம், உன்ன குரவயபாளையம் செப்பேடுகளிலும் இந்தச் செய்தி குறிக்கப்பெறவில்லை. அதனுல்

12. ஆந்திர வரலாற்று ஆராய்ச்சிக் கழகத்தின் பத்திரிகை (Journal of the Andhra Historical Research Society), தொகுதி 5. பக்கம் 115. அங்கே தானம் பெற்றவர்களுள் ஒருவரான நாராயணசர்மன் ராதிதர கோத்திரத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அவன் அசுவமேத யாகம் செய்திருப்பானு என்பதையே சிலர் சந்தேகிக்கிறுர்கள். சாசனத்திலே ஆளப்பட்ட தொடர், 'யதாவதாப்ருதாச்வமேதாத்யநேகக்ருதுயாஜி(𑌯𑌥𑌾𑌵𑌦𑌾𑌹𑍃𑌤𑌾𑌶𑍍𑌵𑌮𑍇𑌧𑌾𑌦𑍍𑌯𑌨𑍇𑌕𑌕𑍍𑌰𑌤𑍁𑌯𑌾𑌜𑌿𑌨𑌃)நெல்லூர் -குண்டூர்ப் பகுதிகளிலிருந்து கிடைக்கும் செப்பேட்டுச் சாசனங்களில் பல்லவ வம்சத்தின் பெருமையை உணர்த்தும் இடத்திலே ஆளப்பட்டுள்ளது. உன்னகுரவய பாளையம் செப்பேடுகளிலும் (வரிகள் 1, 2) அதே போலத்தான் உள்ளது. ஆகவே இந்தச் சாசனத்தில் இந்தத் தொடர் தவருகப் பரமேச்வரவர்மனுக்கு ஏற்றிக் கூறப்பட்டதென்றும், உண்மையில் அதை மற்றச் சாசனங்களில் காண்பது போலப் பல்லவ குலத்துக்கு உரித்தானதாகவே கொள்ள வேண்டும் என்றும் ஆராய்ச்சியாளர்களில் சிலர் அபிப்பிராயப்படுகிறுர்கள்.[13]

இன்னும் பல்லவ அரசர்களிலே ஆரம்ப காலத்தில் ஆட்சி புரிந்த சிவஸ்கந்தவர்மன், குமாரவிஷ்ணு ஆகிய இருவர் மட்டும் அசுவமேத யாகம் செய்தவர்களாகக் குறிக்கப்பெற்றிருப்பதால் அவர்களேத் தவிர வேறு யாருமே அவ்விதம் செய்திருக்க முடியாதென்ற ஓர் அபிப்பிராயமும் நிலவி வருகிறது. சமிபத்திலே, செங்கல்பட்டு மாவட்டம் சிவன்வாயல் என்ற இடத்திலிருந்து கிடைத்த பல்லவ சிம்மவர்மன் ஒருவனுடைய கல்வெட்டில் அவன் தசாச்வ மேதம் (பத்து அசுவமேத யாகங்கள்) செய்தவன் என்று கூறப்பெற்றிருக்கிறுன்.[14] அவன் வாதாபி கொண்ட (முதலாம்) நரசிம்மவர்மன் என்று ஆராய்ச்சியாளர்களில் சிலர் கருதுவர். உண்மையில் அவன் சிம்மவிஷ்ணுவின் தந்தையும் பள்ளன்கோவில் செப்பேடுகளே வழங்கியவனுமான சிம்மவர்மனே ஆவன். அவன் வாதாபிச் சாளுக்கியர்களேப் பெருவெற்றி கொண்டதாலே அசுவ மேதயாகம் செய்தவனுக இருத்தல் கூடும்.

அம்மாதிரியே பரமேச்வரவர்மன் அடைந்த பெருவெற்றிகளேக் கவனித்தால் அசுவமேத யாகம் செய்வதற்கு அவன் உரிமை கொண்டவன் என்பது எளிதில் விளங்கும். அவனுடைய கூரம் செப்பேடுகளிலே அந்த வம்சத்தில் பிறந்த அரச குமாரர்களில் சோமயாகம் செய்யாதவன் யாருமே இல்லே என்ற விவரம் இரண்டு இடங்களில் வற்புறுத்திக் கூறப்பட்டுள்ளது. வேத விதிப்படி செய்யவேண்டிய யாகங்களுள் சோமயாகம் முதல்படி. அதை முதலில் செய்த பிறகே மற்ற யாகங்களேச் செய்யவேண்டும். அதனுல் பரமேச்வரவர்மன் சோம யாகத்தைச் செய்தவன் என்பது உறுதியாகும். அதனேக் கொண்டு பார்த்தால் அவன் அசுவமேத யாகத்தையும் செய்திருப்பது முற்றிலும் சாத்தியமானதே.

13. எபி. இந்திகா, தொகுதி 32, பக்கம் 94; தொகுதி 29 பக்கம் 93-யும் பார்க்க.
14. ஷை, தொகுதி 27, பக்கங்கள் 59–62.

மற்றச் சாசனங்களில் குலப்பெருமையை உணர்த்துவதற்காக ஆளப்பட்ட இந்தத் தொடரை அவ்விடத்திலிருந்து பெயர்த்து எடுத்துப் பரமேச்வரவர்மனுடைய புகழைக் கூறுமிடத்தின் நடுவே சேர்க்கப்பட்டிருப்பதைக் கவனித்தால் அவன் அசுவமேத யாகம் செய்தான் என்ற விவரத்தைத் தெரிவிக்கவேண்டும் என்ற நோக்கத்துடனேயே அவ்விதம் எழுதினுர்கள் என்பது விளங்கும்.

அவன் அந்த யாகத்தை எப்போது நடத்தி இருக்க முடியும் என்பதையும் கவனிப்போம். பெருவளநல்லூரில் நடந்த போரில் பரமேச்வரன் சாளுக்கிய விக்கிரமாதித்தியனைத் தோற்கடித்துத் துரத்தி அடைந்த பெருவெற்றி கி. பி. 674-க்குப் பிறகும், 679-ஆம் ஆண்டுக்கு முன்னதாகவும் இருத்தல் வேண்டும். அதற்குப் பிறகு வழங்கப்பட்டதே உன்னகுரவயபாளையம் செப்பேடுகளில் கண்டதானம் ஆகும். கி. பி. 687-ஆம் ஆண்டில் அளிக்கப்பட்ட அந்தச் சாசனத்திலே அவன் அசுவமேத யாகம் செய்தான் என்ற விவரம் காணப்படவில்லை. அந்தச் சாசனம் வழங்கப்பெற்ற நாளில் வாதாபிச் சாளுக்கியர்கள் மகோந்நதஸ்திதியில் இருந்திருக்கிறுர்கள். கி. பி. 693-ஆம் ஆண்டில் விநயாதித்தியன் வழங்கிய (கொல்லாபுரம்) கொல்காப்பூர்ச் செப்பேடுகளில்[15] பல்லவ இராச்சியத்தை அவன் வென்று அடிமைப்படுத்தினுன் என்பதும் அதனுலே அவன் ஆட்சி இந்தோ-சீனுவில் உள்ள காம்போஜம் வரையில் பரவியிருந்ததென்பதும் காணப்படுவதை நாம் மேலே (உன்னகுரவயபாளையம் செப்பேடுகள் முன்னுரையில்) எடுத்துக் காட்டியிருக்கிறோம்.

இந்த நிலையில் சீனர்களுடைய வரலாற்று நூலிலே காணும் ஒரு குறிப்பும் கவனிக்கத்தக்கது. 'தின்–சு' என்னும் மூன்றும் ஆண்டின் மூன்றும் மாதத்திலே, அதாவது கி. பி. 692-ஆம் ஆண்டிலே; கிழக்கு இந்தியா, மேற்கு இந்தியா, தெற்கு இந்தியா, வடக்கு இந்தியா, மத்திய இந்தியா ஆகிய இந்தியாவின் ஐந்து பாகங்களில் உள்ள ஐந்து நாட்டின் அரசர்களும் சீனச் சக்கரவர்த்தியின் சபைக்குத் தங்கள் தூதுவர்களைக் காணிக்கைப் பொருள்களுடன் அனுப்பி வைத்தார்களாம். அந்த அரசர்களின் பெயர்களும் அந்த இடத்திலே கொடுக்கப்பட்டுள்ளன. மேற்கு இந்திய இராச்சியத்தின் அரசன் பெயர் செ–லொ–யிதொ (Che - lo - ito) என்று அவர்கள் மொழியில் கொடுக்கப்பட்டுள்ளது. சீலாதித்தியன் என்ற பெயரின் சீன வடிவமே அது. அதே போலத் தென் இந்திய இராச்சியத்தின் அரசன் பெயர் செ–லு–கி–ப–லொ (Tche-leou-ki-pa-lo) என்று காணப்படுகிறது. 'சாளுக்கிய வல்லபன்' என்ற பெயரின் சீன வடிவமே அது என்று

15- Digest of Annual Report on Kannada Research in Bombay Presidency for the year 1940—41, pp. 9—10. Also. Karnataka Inscriptions (Edited by R. S. Panchamukki), Vol. II. No. 3.

ஆராய்ச்சியாளர்கள் நிச்சயித்திருக்கிறார்கள்.[16] இருபத்தெட்டு ஆண்டு களுக்குப் பிறகு, கி. பி. 720-ல் தென் இந்திய இராச்சியத்தின் அரசனாக ஸ்ரீ நரசிங் கப் போத்தவர்மன் பெயர் சீனர்களுடைய வரலாற்று நூலிலேயே கொடுக்கப் பட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது. அதிலிருந்து கி. பி. 692-ஆம் ஆண்டில் தென் இந்தியாவிலே சாளுக்கியர்களே பேரரசர்களாக விளங்கினார்களென்பதும், பல்லவர்கள் வலிகுன்றி இருந்தனர் என்பதும் நன்கு விளங்கும்.

எனினும், அந்த நிலை அதிக நாள் நீடிக்கவில்லை. கி. பி. 720-ஆம் ஆண்டில் இராஜசிம்மனான நரசிங்கப் போத்தரையன் பேரரசனாக விளங்கி இருக்கிறான். அப்போது அவன் திபேத்தியர், அரபியர் ஆகிய இருவருடனும் போர் நிகழ்த்து வதற்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்து வந்தான் என்பதும் சீன வரலாற்று நூல்களிலிருந்து தெரிகிறது. அதற்கு முன்னதாகவே அவன் சாளுக்கியர்களை வெற்றி கொண்டிருத்தல் வேண்டும்.[17]

அவனுடைய வாயலூர்க் கல்வெட்டின் கடைசிச் சுலோகத்திலிருந்து அவன் ஆட்சி திவாந்தரப் பிரதேசங்களிலும் பரவியிருந்ததென்பது தெரியவரும்.[18] சாசன வாசகத்தின் போக்கைக் கொண்டு அந்தச் சாசனம் அவன் முடி சூட்டப் பெற்ற வுடனேயே பொறிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டுமென்று கருதப்பட்டு வருகிறது. அவ்விதமானால் அந்த இராச்சியங்கள் அவனுக்குப் பிதிரார்ச்சித மாகக் கிடைத்தனவாகும். ஆகவே சாளுக்கியர் மீது பல்லவர் கொண்ட வெற்றி யும் அவன் தந்தையான முதலாம் பரமேச்வரவர்மன் காலத்திலே கிட்டியதாக இருத்தல் வேண்டும். அது 693-ஆம் ஆண்டுக்குப் பிறகும் 700-ஆம் ஆண்டிற்கு முன்னதாகவும் நிகழ்ந்திருத்தல் வேண்டும்.

பல்லவ, சாளுக்கியர்களுடைய சாசனங்களின் வாசகப் போக்கைக் கவனித்தால் அவர்களிடையே மூண்டிருந்த விரோதம் காலத்தோடு தொடர்ந்து வளர்ந்து வந்ததென்பதும் வெற்றி தோல்விகள் மாறி மாறிக் கிட்டி வந்தன வென்பதும் தெரியவரும். அவற்றுள் இராஜசிம்மன் ஆட்சிப்பீடம் ஏறுவதற்குச் சிறிது முன்னதாகப் பரமேச்வரவர்மன் ஆட்சியின் முடிவுக் காலத்தில் பல்ல வர்கள் அடைந்த வெற்றி முக்கியமானது ஒன்றாகும். இளவரசனான இராஜசிம் மனே அதை முன்னின்று முடித்து வைத்தான் போலும். அதன் விளைவாகவே

16. K. A. Nilakanta Sastri, Foreign Notices of South India p. 16.

17. 'சுவர்ண பூமியும் தமிழ்நாடும்' என்ற தொடரில் முதல் தொகுதியான "தென் கிழக்கு ஆசியாவில் காஞ்சிப் பல்லவர்கள்" என்னும் நூலில் நான் இதை விரிவாக விளக்கி யிருக்கிறேன்.

18. எபி. இந்திகா, தொகுதி 18, பக்கங்கள் 151–52.

பரமேச்வரன் அசுவமேத யாகம் நடத்தினுன் என்றும் அதனுலேயே இராஜசிம்மனுடைய சாசனத்திலே அவன் தந்தை நடத்திய அசுவமேத யாகம் சிறப்பாகக் குறிக்கப்பட்டது என்றும் கொள்ளலாம்.

இந்தச் சாசனத்திலே பல்லவ வம்சத்தில் இரண்டாம் மகேந்திரவர்மன், முதலாம் பரமேச்வரவர்மன், இரண்டாம் நரசிம்மவர்மன் ஆகிய மூன்று தலைமுறைகளே கொடுக்கப்பட்டுள்ளன. அந்த வம்சத்து மன்னர்களின் புகழை எடுத்துரைக்கும் தொடர் மொழிகளில் ஏதோ சிலவற்றை ஒதுக்கிவிட்டு மற்றவைகளை அம்மூவருக்கும் பகிர்ந்து ஏற்றிச் சாசனம் கூறுகிறது. புதிதாகச் சேர்க்கப்பட்டதும் உண்டு. தானத்தை வழங்கிய நரசிம்மவர்மனுக்குப் பரமபாகவதன், பரமப்ரமண்யன், பப்பபட்டராக பாதபக்தன் என்பன போன்ற விருதுகளோடு, பரமமாகேச்வரன் என்ற சிறப்புப் பெயரும் காணப்படுகிறது. சிறந்த சிவ பக்தன் என்பதை அறிவிப்பது எனினும் இந்தத் தொடர் பழைய சாசனங்களிலே காணப்படாதது; நரசிம்மவர்மன் ஆழ்ந்த சிவபக்தி நிறைந்தவன் என்பதனுலேயே அதை எடுத்துக் காட்ட இந்தத் தொடரைப் புதிதாகப் பிரசஸ்திகாரர் ஆண்டிருக்கிருர் எனலாம். ஆழ்ந்து நோக்கினுல் மற்றத் தொடர்களையும் அவர் அந்த அந்த அரசர்களின் பெருமையையும் புகழையும் உள்ளபடியே எடுத்துக்காட்ட வேண்டும் என்ற நோக்கத்துடனேயே ஆண்டிருக்கிருரோ என்று எண்ணத் தோன்றுகிறது. இந்தப் பின்னணியில் நோக்கினுல் அந்த அரசர்களின் ஆட்சிக் காலத்துச் சம்பவங்கள் பற்றிச் சில புதிய உண்மைகளை நாம் அறிய முடியும்.

சாசன பாடம்[19]

முதல் ஏடு—பின்புறம்

1. ஸ்வஸ்தி [।*] ஶ்ரீமத்[20] ஜிதம் ஹமவதாம் [।*] காஞ்சிவாஸாயிஷ்டாநா
   த்ருஷ்ட வாநாம்[21] ஹாஸவாஜ
2. ஸமொத்[ர *]ணாம் ஸ்வவீர்யாவாப்தமஹாராஜ்யஸ்ய ஸஹ்யத்விஷத பக்தி
   ஸித்தி ஸம்பந்நஸ்ய

19. எபி. இந்திகா, ஸ்ரீ வேங்கடேச்வரர் கீழ்த்திசை ஆராய்ச்சிக் கழகத்தின் பத்திரிகை ஆகியவற்றில் வெளியான மசிப்படங்களில் இருந்து பெயர்த்து எழுதப்பட்டது.

20. இந்தச் சொல் மற்றச் செப்பேடுகளில் காணப்படவில்லை. தகரஒற்றை 'ர்த' என்றும் வாசிக்க முடியும். அதை ஶ்ரீமதா அல்லது ஶ்ரீமதாம் எனவும் கொள்ளலாம். அதேபோல, ஹமவதாம் எனபதன் கடைசியில் உள்ள மகரப்புள்ளி மற்ற ஏடுகளில் காணுதது.

21. சமயிஷ்டாநாம் என்று இருத்தல் வேண்டும்.

3. ஷ்ராதாவொவகத ஈாஜஃணுருஷ்ய ஃயஃஹொகவாருஷ்ய ஹொக
வாமுாகாஃரி 22

4. ஃஷ்ய வாஃஷ்ரஷ(ர)ணஃஷ்ய ஃஹாஈாஜஷ்ய ஸ்ரீஃஹெஈ்ரவிக்ரம
வஜ்ஃணஃ வௌத்ரஃ வஹா

5. ஷஃஈ விஜயஜ்பயஃஷ்காரஷஷ்ய வியிவிஹிதஷ்வஃயஃாஷ்ஹா
ஷிகிஷ்ஷிதஷ்ய

இரண்டாம் ஏடு—முன்புறம்

6. சுஃதாஜ்ஃகா யஃஷாஹ்ரதாஷ்ஃயாஃஃகக க்ரதாயாஜிநஷ்ஷ்ய
வரதஷ்ய யஜஃ

7. தஃகா ஃஷிஃவி 23 ஃஹெஈ்ரஷ்ய வாஃஷ்ஈவஜஃணஃ வாத்ரஃ
ஹஃஃக்கி ஷஃாவ ஷஃஷ்ஃ

8. த ஷஷ்ஃ[ஃ*] 24 ஷ்ஜா ஷஂஈஂஜக 25 வஷிவாமுநொஜெஷ்யஃ
ஷகதஹாஷ்ய வ்ரதாக்ஷித[ஃ*]க

9. ஷி யாஃஷொஷாவஹாரத யஜெஃஷஃஈண நிசஃஷுஸ்ரஜெ சுகெக ஷஃஈ
ஷஂகஃஜகித விக்ர

10. ஃ வஷாயாதஃஜெஃகவிஈ [ஃ*] ஈாஜஷிஷி 26 ஃணஷ்ஷஃ ஷஜொஹ
விஜிமிஷா [ஃ*] வாஃஹ[ர*]மவத [ஃ*] வ

இரண்டாம் ஏடு - பின்புறம்

11. ஈஃஃாஹெஷ்ஈ[ஃ*] வாஃஷ்ரஷ(ர)ணஷ்ய [ஃ*] ஃஷ்ஹடாஈக
வாஃஹக்கி [ஃ*] ஸ்ரீநாஈவி[ஂ]ஹவஜஃ

22. வஜுஃஷ்ய என்று கொள்ளவேண்டும்.

23. ஃஷிஜெஃவாஃ என்று கொள்ளவேண்டுமெனத் திரு. தேசாய் கருதுவர்.

24. மற்றச் சாசனங்களில் ஸர்வகல்யாண: என்று காணப்படும்.

25. அநுஸ்வாரம் ஜகரத்தின் தலையில் இடப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. அது தவருக எழுதப்பட்டிருக்கிற தென்று பழைய பதிப்பாசிரியர் கருதுவர். அதுவே சரியான முறை என்பதை நாம் மேலே காட்டியிருக்கிரும்.

26. ஈாஜஷிஃ என்று இருத்தல் வேண்டும்.

12. [illegible] 27 [illegible] | 28 [illegible]
[illegible] 29 [illegible]

13. [illegible] [| *] [illegible]29[illegible][ஃ] [illegible]30
[illegible]

14. [illegible]31 [illegible] 32 [illegible]
[illegible]33[illegible] [illegible][*][illegible]

15. [illegible][ஃ] [illegible] 34[illegible] [illegible][*][illegible]
[illegible] [illegible][ஃ] [illegible]

மூன்றும் ஏடு—முன்புறம்

16, [illegible]
[illegible][ᴼ*] [illegible]

17. [illegible] விஜய [illegible] 35 [illegible]
[illegible][ஃ] [illegible] விஜய

18. [illegible] 36
[illegible][ஃ | *] [illegible]

19. [illegible] 37 [illegible] 38 [illegible][ஃ*] [illegible]
[illegible]

27. [illegible] என்று இருத்தல் வேண்டும்.

28. இந்தக் கோடு தேவையில்லாதது.

29. [illegible] என்று கொள்ள வேண்டும்.

30. [illegible] என்று இருத்தல் வேண்டும்.

31. [illegible] என்று திருத்துக.

32. [illegible] என்பதே அவ்விதம் எழுதப்பட்டிருக்கிறது போலும்.

33. இவ்விடத்திலும் அநுஸ்வாரம் பின்னல் வரும் எழுத்தின் தலைப்பில் உள்ளது.

34. [illegible] என்று இருத்தல் வேண்டும்.

35. [illegible] என்று கொள்ள வேண்டும்.

36. [illegible] என்று வாசிக்கவும்

37. [illegible] என்றே கொண்டால் பின்னல் வரும் இகரஉயிர் தேவையில்லை. இகரஉயிர் இருக்கவேண்டுமானல் இது [illegible] என்றே இருத்தல் வேண்டும்.

38. [illegible] என்று திருத்திக்கொள்க.

20. ஸவூ-ிகாவஸ-ாா: 39 வரிஷாரஜு [। *] உசாசாஜீ்ஜாசகிகு ரசெக்ஷ வாவப்ஸ்ாரிமாடிணூசஸ-ிகி । ஸொசாகிதூ

முன்றும் ஏடு--பின்புறம

21. ஸாத[ः ।] ஸ்ரீசாநுாடிகாற்ற நரவெவ்வாரா: [। *] சூஜீூஷீஸ்ராவ நவஸ்ூராஷ்ூ ராஜாகிதூ வுயாவவாநு 40 [। *] யதுரா

22. [ஸ]41 ஷதः பெலூாகः [। *] ஸுஷுவூ 42 விஷம வொாரः 43 ந விஷம விஷாவஷ்தெ [। *] விஷசெகாகிந[० *] ஷஷி ஸுஷு

23. ஷூ வாத்ர வெளதுரகஜ 44 [॥ *] ஷூகசநூம வாஃசநூம வா । 45 பொஷஸெகி 46 வஸாஸாழ [। *] ஷஷ்வ

24, ஷ-ி ஸஹஸு்ராணி । 45 விஷ்டாய[ர*]ம ஜாபதெ கிருமிः [॥ *] பஹாஹி வு-ிஸாயாஃத்தா । 45 பஹாஹி

25. பூாதாவாமுதா[*] யஷ்ூ யஷ்ூ யஷா ஷூமி [ः*] । தஷ்ூ தஷ்ூ தஷா 47 ஷுூ ॥

மொழிபெயர்ப்பு

(வரி 1) மங்களம் உண்டாகட்டும். செல்வம் உண்டாகட்டும். பகவாஞல் வெற்றி கொள்ளப்பட்டது. காஞ்சிபுர அதிஷ்டான இருப்பிடத்திலிருந்து—பாரத்துவாஜ ஸகோத்தரத்தவர்களான பல்லவர்களுக்குள் தன்னுடைய வீரத்திஞல் அடைந்த ராஜ்யத்தை உடையவனும், மிகவும் ஆராதிக்கப்

39. வரிஷாரம என்று கொள்ளவேண்டும்.

40. வுதாவவாநு என்று இருத்தல் வேண்டும்.

41. இந்த எழுத்து உருவம் சரியாக இல்லை ஜ காமாகவும் இருக்கலாம். யஃ தூாஷ-ிः பெலூாகாः என்றே யஃ துஷவநீ பெலூாகாः என்றே அந்தத் தொடர் இருத்தல் வேண்டும்.

42. சுலோகத்தின் ஓசையைப் பூர்த்தி செய்வதற்காக இங்கே ஹி என்ற எழுத்தைச் சேர்க்க வேண்டும். மற்ற இடங்களிலே இவ்விதமே காணப்படுகிறது.

43. வொாரம என்று திருத்தல் வேண்டும்.

44. வெள தூகஜ என்று திருத்திக் கொள்க.

45. இந்தக் கோடு தேவையற்றது.

46. ஷஸெத என்றே இருத்தல் வேண்டும்.

47. சாதாரணமாக வேறு இடங்களில் யஃா என்றும் தஃா என்றுமே உள்ளன.

பட்ட சக்தி, சித்தி, சம்பத்தை உடையவனும்,[48] அரசர்களின் மண்டலத்தைத் தன்னுடைய வீரத்தினுல் வணங்கச் செய்தவனும், லோகபாலர்களில் நடுவில் இருப்பவனும்,(அல்லது நடுவில் உள்ள உலகத்தைப் பரிபாலிப்பவனும்) ஐந்தாம் லோக பாலனும் பிரம்மண்யர்களில் சிறந்தவனும், மகாராஜனுமான ஸ்ரீ மகேந்திர விக்கிரமவர்மனுடைய பெயரன்.

(வரி 4) அநேக போர்களின் வெற்றியால் அடைந்த புகழினுல் ஒளிர்பவனும், சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட எல்லா மரியாதைகளேயும் உடையவனும் (நிலேயில் நிற்பவனும்) குறைவற்ற (அமிதமான) ஞானத்தை உடையவனும், அசுவமேதம் முதலிய அநேக யாகங்களேச் சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட முறைப்படி முற்றுவித்தவனும், உண்மையையே நோன்பாகக்கொண்டவனும் தர்மத்தையே உடலாகக் கொண்டவனும், பூமியாயினும் இந்திரனுக்கு ஒப்பானவனுமான பரமேச்வர வர்மனுடைய மகன்.

(வரி 7) பகவானிடம் கொண்ட பக்தி இருப்பதனுலே சேர்க்கப்பட்ட நன்மை அனேத்தையும் உடையவனும் குடி மக்கள் மகிழும்படியாகக் காப்பாற்றும் முயற்சியையே நித்ய விரதமாகக்கொண்டு எப்போதும் தீக்ஷை பூண்டிருப்பவனும், கலியுக தோஷத்தினுல் அபகரிக்கப்பட்ட தர்மத்தைத் தூக்கி நிறுத்த எப்போதும் சன்னத்தமாக இருப்பவனும் பல போர்களில் தாக்கி அடித்ததால் தோன்றிய விக்கிரமத்தை உடையவனும், பூதலத்தின் ஒப்பற்ற தனி வீரனும், ராஜரிஷிகளின் குணங்கள் எல்லாவற்றின் கூட்டத்தை வெற்றி கொண்டவனும், பாகவதர்களில் (விஷ்ணு பக்தர்களில்) சிறந்தவனும், மாகேச்வரர்களில் (சிவனடியார்களில்) தலேயானவனும், பிரம்மண்யர்களில் சிறந்தவனும், பப்பபட்டாரகருடைய திருவடிகளில் பக்தி பூண்டவனுமான ஸ்ரீ நரசிம்ம வர்மன் மேல்முண்ட ராஷ்டிரத்தில் அகிதாபுரத்தின் வடக்கில் உள்ள ரேயூரு என்ற பெயர்கொண்ட கிராமத்தையும், கிராமத்தைச் சேர்ந்தவர்களேயும் இவ் விதம் கட்டளேயிடுகிருன்.

(வரி 13) இந்தக் கிராமம் குரவசிரியில் வசிப்பவரும், ராதிதரஸ கோத்திரத்தைச் சேர்ந்தவரும் ஆபஸ்தம்ப சூத்திரத்தைப் படிப்பவரும் இரண்டு வேதங்களில் கரைகண்டவரும், வேதம், வேதாங்கம், இதிகாசம், புராணம் ஆகியவற்றின் தத்துவங்களே நன்கு அறிந்தவருமான கூளசர்மனுடைய பெயரனும், இரண்டு வேதங்களில் கரைகண்டவருமான குமாரசர்மனுடைய புத்திரனும், இரண்டு வேதங்களேயறிந்து தன் அத்யயனத்திலேயே எப்போதும் ஊக்

48. 'சக்தி, ஸித்தி, நிறைந்தவனும்' என்னும் பொருள் கொள்ளலாம்.

கம்கொண்டவரும், சோம யாகம் செய்தவருமான குமாரமண்டசர்மனுக்கு நம்முடைய ஆயுள், வலிமை, வெற்றி, செல்வம் ஆகியவை மேன்மேலும் விருத்தியடைவதற்காகப் பிரம்ம தேயமாகச் செய்யப்பட்டு நம்மால் அளிக்கப்பட்டது. மேன்மேலும் விருத்தியாகும் வெற்றி ஆட்சியின் பன்னிரண்டாம் ஆண்டு வைசாக பூர்ணமியில் சந்திர கிரகணத்தின் பொருட்டு அளிக்கப்பட்டது. இவ்விதம் அறிந்து அமாத்தியர்கள், எல்லாக் கணக்கர்கள், எல்லா நியோககர்கள், ராஜவல்லபர்கள் சஞ்சரந்தர் ஆகிய அனைவரும் எல்லா வரி விலக்குகளையும் அளிக்கவேண்டியது. இந்தக் கட்டளையை மீறினல் அந்தப் பாவி சரீர தண்டனை அடையத்தக்கவன்.

(வரி 20) ஸோமாதித்தியன் மகனும், சிமானும் நந்தகுற்றத்தின் குறுநில மன்னனுமான ராஜாதித்தியன் என்று புகழ் வாய்ந்தவன் இந்தக் கட்டளைக்கு ஆணத்தி (நிறைவேற்றுபவன்).

இதுபற்றி ரிஷிகள் இயற்றிய சுலோகங்கள்:—

(சுலோகம்) பிராம்மணன் சொத்து கொடிய விஷம்; வேறு எந்த விஷமும் விஷமாகாது. விஷம் ஒருவனைக் கொல்லும்; பிரம்ம சொத்தோ புத்திர பௌத்திரர்களையும் (கொல்லும்).

....

(சுலோகம்) தான் அளித்தது பிறர் அளித்தது எதுவாயினும் பூமியை அபகரிக்கும் ஒருவன் அறுபதினாயிரம் ஆண்டுகள் மலத்தில் புழுவாகப் பிறந்து உழல்வான்.

(சுலோகம்) அநேகர் நிலம் அளித்திருக்கிறார்கள். பலர் அதைக் காப்பாற்றியிருக்கிறார்கள். எந்த எந்த அளவு பூமியோ அந்த அந்த அளவு பலன்.

ஸ்கந்த சிஷ்யவர்மனுடைய ராயக்கோட்டைச் செப்பேடுகள்

★

முன்னுரை

மூன்று ஏடுகளில் பொறிக்கப்பட்ட இந்தச் செப்பேட்டுச் சாசனம், சென்ற நூற்றாண்டில் ஸர் வால்ட்டர் எல்லியட் என்பவர் சேகரித்த பழம் பொருள்களில் ஒன்றாகும். அது அவருக்கு ராயக்கோட்டை காப்டன் காம்பெல் என்பாரிடமிருந்து கிடைத்ததாம். அதனாலேயே அது ராயக்கோட்டைச் செப்பேடுகள் என்று குறிக்கப்படுகிறது. சேலம் மாவட்டம் கிருஷ்ணகிரி தாலூகாவிலுள்ள ராயக்கோட்டையே அந்த ஊர். எல்லியட் சேகரித்த சரித்திர ஆதாரங்கள் எல்லாம் லண்டனிலுள்ள பிரிட்டிஷ் மியூசியத்தில் வைக்கப்பட்டுள்ளன. இந்தச் சாசனத்தின் மூல ஏடுகளும் அங்கேதான் இருத்தல் வேண்டும்.

இந்தச் சாசனத்தை அறுபது ஆண்டுகளுக்குமுன் எபிகிராபியா இந்திகாவில், ஐந்தாம் தொகுதி, 49-51ஆம் பக்கங்களில் டாக்டர் ஹுல்ஷ் மசிப் படத்துடன் வெளியிட்டிருக்கிறார். [1]

"இந்தச் சாசனத்தின் மூன்று ஏடுகளும் கோத்திருந்த வளையத்தின் முகப்பில் இரண்டு அங்குலம் குறுக்களவு கொண்ட முத்திரை உள்ளது. அதன் நடுவே, இடது புறமாக முகம் வைத்துப் படுத்திருக்கும் ரிஷபத்தின் உருவம் புடைப்பாக உள்ளது. அதனோடு வேறு சில உருவங்களும் உள்ளன. அவைகள் எல்லாவற்றையும் சுற்றி ஒரு வரி எழுதப்பட்டிருக்கிறது. அது தெளிவாக இல்லை" என்று இந்தச் சாசனத்தை நேரில் ஆராய்ந்து பார்த்த டாக்டர் ப்ளீட் குறித்திருக்கிறார்.

முதல் ஏட்டின் முன்புறம் எழுதப் பெறவில்லை. மற்ற இரண்டு ஏடுகளும் இரு புறங்களிலும் எழுதப்பட்டுள்ளன. பக்கத்திற்கு எட்டு வரிகளாக நான்கு பக்கங்களில் மொத்தம் 32 வரிகளும் ஐந்தாவது பக்கத்திலே இரண்டு வரிகளும்

1. Epigraphic India, Vol. V- pp. 49—51. சமீபத்திலே டாக்டர் டி. வி. மஹாலிங்கம் இதைப்பற்றி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். Transactions of the Archaeological Society of South India, 1957-58' pp. 55-66.

இருக்கின்றன. ஆகவே இந்தச் சாசனத்தில் 34 வரிகள் இருக்கின்றன. ஏடுகளின் விளிம்பு தடித்து இல்லே. அவை நல்ல நிலேயில் உள்ளவை என்றே குறிக்கப்பட்டுள்ளது.

இதிலே ஸம்ஸ்கிருதப் பகுதி (1-10, 33, 34 வரிகள்) தமிழ்ப் பகுதி (11-33 வரிகள்) ஆகிய இரு பகுதிகளும் உள்ளன.

ஸம்ஸ்கிருதப் பகுதி விஷ்ணு வணக்கத்தைக் கூறும் சுலோகத்தோடு ஆரம்பிக்கிறது. அந்தச் சுலோகம் பூர்த்தியாக இல்லே, மூன்று பாதங்களே உள்ளன. அடுத்த சுலோகத்தில், தானம் அளித்த அரசனுடைய வம்சாவளி காணப்படுகிறது. விஷ்ணுவின் உந்திக்கமலத்திலிருந்து தோன்றிய பிரம்மாவுக்குப் பின் வரிசையாக அங்கிரஸ், பிரகஸ்பதி, சம்யு, பரத்வாஜர், துரோணர் ஆகியவர்கள் தோன்றினர். மூன்றுவது சுலோகத்தில் அசுவத்தாமனுக்கு நாககன்னிகையிடம் ஸ்கந்தசிஷ்யன் பிறந்தான் என்பது கொடுக்கப்பட்டுள்ளது. கடலேக்குடித்த அகத்திய முனிவரைப் போல ஸ்கந்தசிஷ்யன் என்று பெயர் கொண்ட மற்ருெரு அதாவது, இரண்டாம் அரசன் அதே வம்சத்திலே தோன்றிஞனும். ஸம்ஸ்கிருதப்பகுதி அதனேடு முடிந்து விடுகிறது. சாசனத்தின் விவரத்தைத் தமிழ்ப் பகுதியிலிருந்தே அறிய வேண்டியிருக்கிறது.

தமிழ்ப் பகுதியிலே கோ விசைய ஸ்கந்தசிஷ்ய விக்கிரம வர்மனுடைய ஆட்சியின் பதினன்காம் ஆண்டு, மகாபலி வானராஜர் விண்ணபத்தால், மகேசுவர பட்டர் ஆணத்தியாகப் படுவூர்க் கோட்டத்து மேல்அடையாற்று நாட்டுச் சாருகூரும், அதனேச் சுற்றிய பாழ்நிலமும், ஸ்கந்தசிஷ்ய மங்கலம் என்ற பெயரில் எல்லாப் பரிகாரங்களும் உட்பட வத்ஸ கோத்திரத்து, பிரவசன சூத்திரத்து மாதவ சர்மருக்குப் பிரம்மதேயமாக அளிக்கப்பட்ட செய்தி காணப்படுகிறது.

தானத்தை அளித்த அரசன் எந்த வம்சத்தில் பிறந்தவன் என்ற விவரம் இதிலே காணப்படவில்லே. எனினும், விஷ்ணு முதல் அசுவத்தாமன் வரையில் உள்ள பரம்பரை பல்லவ சாசனங்களில் அதே முறையில் கொடுக்கப்பட்டிருப்பதை நாம் அறிவோம். [2] மற்ற இடங்களிலிருந்து அசுவத்தாமனுக்குப் பல்ல

2. சாளுக்கிய வம்சத்தில் பிறந்தவனும் ராஷ்டிரகூட வம்ச அரசனை மூன்றும் கிருஷ்ணவிடம் அதிகாரியாகவும் அவனுடைய மாப்பிள்ளேயாகவும் கதம்பாளிக ராச்சியத்தின் அதிபதியாகவும் இருந்த ராஜாதித்தியனுடைய ஹிரகோகிளுர்ச் செப்பேடுகளில் அவனுக்கு இதே வம்ச பரம்பரை கொடுக்கப்பட்டுள்ளது. (மைசூர் ஆர்க்கியலாஜிகல் ரிபோர்ட் 1936ம் ஆண்டு அறிக்கை, பக்கம் 177 முதல்) ஆனுல் அது மற்றச் சாளுக்கிய சாசனங்களில் காண்பதற்கு முற்றிலும் மாருக உள்ளது. அவன் நீண்ட காலத்திற்கு முன்னரே சாளுக்கிய நாட்டைவிட்டுத் தொண்டை நாட்டில் வந்து குடியேறிப் பல்லவ அரசின் கீழ் வாழ்ந்து வந்த ஒரு கிளேயில் தோன்றியவன். பல்லவ வம்சத்துடனும் உறவு முறை கொண்டவன் என்று சொல்லலாம்.

வன் என்ற மகன் பிறந்தான் என்பதையும் அவனே பல்லவ வம்சத்தின் மூல புருஷன் என்பதையும் அறிவோம். இங்கே அவ்விதம் கொடுக்கப்படவில்லை. இன்னும் பல்லவன் என்ற பெயரே இந்தச் சாசனத்தில் காணப்பெறவில்லை. எனினும் அவன் பல்லவனே ஆவன். மூன்றும் நந்திவர்மனுடைய வேலூர்ப் பாளையம் செப்பேடுகளிலே பல்லவ வம்சத்தின் மூலபுருஷர்களுள் ஸ்கந்தசிஷ்யன் பெயரும் காணப்படுகிறது. அசுவத்தாமன் மகனை பல்லவனுக்குப் பிறகு, அந்த வம்சத்தில் பிறந்த அசோகவர்மன் போன்றோர் பலரும் காலமானபின் காலபர்த்ரு என்பான் தோன்றினன். அவன் பெயரனும் சூதபல்லவன் மகனுமான வீரகூர்ச்சன் பணீந்த் ரஸுதாவின், அதாவது நாகராஜன் மகளுடைய கைத்தலத்தோடு அரசையும் அடைந்தான் என்றும், அந்தத் தம்பதிக்குப் பிறந்தவன் ஸ்கந்தசிஷ்யன் என்றும் காணப்படுகிறது. இந்தச் சாசனத்திலோ நாக கன்னிகையை மணந்த அசுவத்தாமனுக்குப் பிறந்தவனே ஸ்கந்தசிஷ்யன் என்று உள்ளது.

கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டில் பொறிக்கப்பட்டுத் திருக்கழுக்குன்றக் கோயிலில் காணும் சோழ மன்னனை இராஜகேசரி வர்மனுடைய கல்வெட்டு ஒன்று, அம்மன்னன் கோயிலுக்கு இறையிலி வழங்கிய செய்தியைத் தெரிவிக்கிறது.[3] மூலஸ்தானத்துப் பெருமானடிகளுக்கு, அந்த இறையிலி முதலிலே ஸ்கந்தசிஷ்யனுல் அளிக்கப்பட்டதாகவும், அப்பால் வாதாபி கொண்ட நரசிங்கப் போத்தரையரால் அப்பரிசே ரட்சிக்கப்பட்டதாகவும் பூர்வராஜாக்கள் வைத்தபடியே இராஜகேசரிவர்மனுல் வைக்கப்பட்டதாகவும் சாசனம் கூறுகிறது.[4] வாதாபிகொண்ட நரசிம்மவர்மன் கி. பி. ஏழாம் நூற்றுண்டின் மத்தியில் அரசு புரிந்தான் என்பதை நாம் அறிவோம். அதனுல் ஸ்கந்தசிஷ்யன் அதற்கும் முற்பட்ட காலத்தவனுக இருத்தல் வேண்டும். இவைகளைக் கவனித்தால், ஸ்கந்தசிஷ்யன் பல்லவ வம்சத்தைச் சேர்ந்தவனென்பது தெளிவாகும்.

இரண்டாம் ஸ்கந்தசிஷ்யன் வழங்கியதாக இதுவரையில் இந்த ஒரு சாசனமே கிடைத்துள்ளது. அவனைப் பற்றி வேறு எந்த இடத்திலும் குறிக்கப் பெறவில்லை. பல்லவ வம்சத்திலே அவன் பெற்றிருந்த ஸ்தானத்தையும் அறிய முடியவில்லை. அதனுல், சந்தர்ப்பச் சூழ்நிலையையும் சாசனம் பொறிக்கப்பட்ட எழுத்துகளையும் கொண்டே அவனுடைய ஆட்சிக் காலத்தை நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது.

3. எபி. இந்திகா, தொகுதி 3, பக்கங்கள் 277-80.

4. மூலஸ்தானத்துப் பெருமானடிகளுக்கு வாதாபி கொண்ட நரசிம்மவர்மன் நிலம் வழங்கிய சாசனமும் கிடைத்துள்ளது. சாசன இலாகாவின் அறிக்கை, 1909-ஆம் ஆண்டின் 65 என் சாசனம்; இன்னும் 1933-ஆம் ஆண்டின் அறிக்கை இரண்டாம் பாகம், பாரா 5, சாசனத்தின் மசிப்படமும் அதிலே கொடுக்கப்பட்டுள்ளது.

சாசனத்தின் எழுத்துகள், கூரம், கசாக்குடிச் செப்பேடுகளின் எழுத்து களுக்குப் பிற்பட்டனவாகவும், முதற் பராந்தக சோழன் காலத்தில் வழங்கப் பெற்ற ஹஸ்திமல்லனுடைய உதயேந்திரம் செப்பேடுகளின் எழுத்துக்கு [5] முற்பட்டனவாகவும் காணப்படுகின்றன என்று அதை முதலில் பதிப்பித்த டாக் டர் ஹுல்ஷ் அபிப்பிராயப்பட்டார். ஆகவே அது கி. பி. 700-க்கும் 900-க்கும் இடைப்பட்ட காலத்தைச் சார்ந்ததெனக் கொள்ளலாம். இந்தச் சாசனத்திலே கிரந்தப் பகுதியில் காணும் உயிர் எழுத்தான இகரத்தின் வடிவம் (வரி 10) கூரம் செப்பேடுகளில் (26, 27 வரிகள்) காணும் வடிவத்தையே ஒத்திருக்கிறது என்பதையும், ஆனல் நந்திவர்மன் பல்லவ மல்லனுடைய ஆட்சியின் இறுதியில் வழங்கப்பட்ட தண்டந்தோட்டம் செப்பேடுகளில் (வரி 12) காணும் உருவத் தினும் பழமையானதாக உள்ளது என்பதையும் எடுத்துக்காட்டி இந்தச் சாச னம் எட்டாம் நூற்றுண்டின் மத்தியில் கி. பி. 750 ஆம் ஆண்டளவில் வழங்கப் பட்டிருத்தல் வேண்டுமென்று டாக்டர் மகாலிங்கம் கருதுகிறுர்.

பல்வேறு காரணங்களாலும் அவர் முடிவு கட்டிய காலம் மிகவும் பொருத்தமானதே. எனினும் எழுத்துகளின் வரிவடிவத்தை அவ்வளவு குறுகிய இடைவெளியில் அமையும் காலங்களை நிர்ணயிப்பதற்கு ஆள்வது அவ்வளவு எளி தல்ல. தவிர, இந்தச் சாசனத்திலேயே கிரந்த வகையில் நகரம் ரகரம் போன்ற வேறு சில எழுத்துகள் நன்ருக வளர்ச்சி பெற்ற வடிவங்களிலே காணப்படுகின்றன. இவ்விதம் பழங்கால வடிவம் பிற்கால வடிவம் இரண்டும் கலந்து எழுதப் பெற்றிருப்பதைக் கவனிக்கும்போது இந்தச் சாசனம் உண்மை யான முதல் பிரதி அல்லவென்றும் பிற்காலத்திலே தோன்றிய பிரதியென்றும் எண்ணத் தூண்டும். தமிழ், ஸம்ஸ்கிருதம் ஆகிய இரு பகுதிகளிலும் சாசனம் மிகவும் பிழைபட எழுதப்பட்டிருப்பதும் இதையே வலியுறுத்தும். ஆரம்பத்தில் கடவுள் வணக்கத்தைக் கூறும் சுலோகத்தில் மூன்று பாதங்களே உள்ளன; ஒரு பாதம் இல்லை. லக்ஷ்மி என்ற சொல் லகிஷ்மி என்ற வடிவத்தில் எழுதப்பட்டுள் ளது. உண்மையில் ஸம்ஸ்கிருதப் பகுதியில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்ப தைப் பெரும்படியாகச் சொல்லலாமே யல்லாமல் சரியாக மொழி பெயர்க்க முடியாது. தமிழ்ப் பகுதியும் அதே போலத்தான் பிழைகள் மலிந்துள்ளன. இவைகளைக் கவனிக்கும்போது இந்தச் சாசனம் மூல சாசனத்துக்குக் கி. பி. பத்தாம் நூற்றுண்டளவில் எடுக்கப்பட்ட பிரதியாக இருத்தல் வேண்டு மென்றே எண்ணத் தோன்றும். தானம் வழங்கப்பட்ட கிராமத்திற்கு வடபால் எல்லையாகத் திருவேளாளமுடி அமைந்திருந்ததென்று சாசனம் கூறுகிறது. நந்தி

5. தெ. இ. சாசனங்கள். இரண்டாம் தொகுதி. பக்கம் 375 முதல்.

வர்மன் பல்லவ மல்லனுடைய ஆட்சியின் இருபத்திரண்டாம் ஆண்டு அவனுடைய சேனுபதியான உதயசந்திரன் பிரம்மதேயமாக அளித்த உதயசந்திர மங்கலத்துக்கு வேளாளசிகரம் என்ற மலே ஓர் எல்லேயாக உதயேந்திரம் செப்பேடுகளில் குறிப்பிடப்பெற்றிருக்கிறது. வேளாள சிகரம் என்பதன் தமிழ் வடிவமே வேளாளமுடியாகும். அதனல் ஸ்கந்த சிஷ்யன் பிரம்மதேயமாக இந்தச் சாசனத்தால் அளித்து நிறுவிய ஸ்கந்த சிஷ்யமங்கலமும் உதயேந்திரத்துக்குப் பக்கத்திலேயே இருந்திருத்தல் வேண்டும். உதயேந்திரத்திற்கும் அதைச் சுற்றியுள்ள காஞ்சிவாயல் போன்ற மற்றப் பிரம்மதேயங்களுக்கும் ஆதாரமாகவிருந்த செப்பேட்டுச் சாசனங்களுக்கு முதல் பராந்தக சோழன் ஆட்சிக் காலத்திலே புதிய பிரதிகள் எடுக்கப்பட்டன என்பதை நாம் அறிவோம். முதலாம் நந்திவர்மன் காஞ்சிவாயல் கிராமத்துக்கும் இரண்டாம் நந்திவர்மனை பல்லவ மல்லன் உதயசந்திரமங்கலத்திற்கும் வழங்கியனவாக இப்போது கிடைப்பவை அத்தகைய பிரதிகளே. ஸ்கந்தசிஷ்யன் வழங்கிய இந்தச் சாசனமும் அதே போல, அதே காரணத்துக்காக, அதே காலத்தில் புதுப்பிக்கப்பட்ட பிரதியே எனக் கொள்ளலாம். இவ்விதம் எழுத்துகளின் வரி வடிவத்தைக் கொண்டு இந்தச் சாசனத்தின் காலத்தை நிர்ணயிப்பதற்கு முடியாது.

எனினும், சாசனத்தைப் பார்க்கும்போது, அது போலியாக இருத்தற்கில்லேயென்றும், உண்மையானதாகவே இருத்தல் வேண்டுமென்றுமே எண்ணத் தோன்றுகிறது. சாசனம் பிழைபட எழுதப்பட்டிருந்தாலும் தமிழ்ப் பகுதியில் உள்ள அதன் வாசகம் சிறந்த முறையில் அமைந்துள்ளது; ஸம்ஸ்கிருதப் பகுதியிலே புதிய விவரங்கள் சில காணப்படுகின்றன. அவை உண்மையானவை என்பதை வேறு ஆதாரங்களிலிருந்து அறிய முடிகிறது. இன்னும் சாசன ஏடுகளேக் கோத்திருந்த வளேயத்தில் முத்திரையும் உள்ளது. அதன் வருணனேயிலிருந்து அது உண்மையானதாகவே காணப்படுகிறது. அதைக் கொண்டு பார்த்தால் சாசனத்தையும் சரியானதாகவே கொள்ளவேண்டும்.

அவ்விதமானல் சாசனம் பிழை மலிந்து காணப்படுவதன் காரணத்தையும் நாம் அறிய வேண்டும். அதை எழுதியவனுக்கு ஸம்ஸ்கிருதம், தமிழ் ஆகிய இரு மொழிகளிலுமே மிகவும் குறைவான பயிற்சியே யிருந்ததென்பதைச் சாசன பாடம் தெளிவாகக் காட்டுகிறது. அது பொறிக்கப்பட்ட காலமான கி. பி. 750-ஆம் ஆண்டில் நாடு சீர்குலேந்த நிலேயில் இருந்ததைக் கவனித்தால் அத்தகைய கற்றுக்குட்டிகள் நிர்வாகத்தில் ஈடுபட்டிருந்ததைச் சகஜமானதாகவே கருதலாம். அம்மாதிரியான ஒருவன் வாசகத்தைப் படிக்க அதைக் கேட்டு மற்ருெருவன் எழுதியிருத்தல் வேண்டுமென்பதையே சாசனம் உணர்த்துகிறது.

இந்தச் சாசனத்தை வழங்கிய அரசன் தன்னை இரண்டாம் ஸ்கந்தசிஷ்யன் என்று கூறிக்கொள்வது கவனிக்கத்தக்கது. அந்தப் பெயரைக்கொண்ட முதல் அரசனே அந்த வம்சத்தின் ஆட்சியை இங்கே நிறுவியவன். அவன் குடி மக்களுக்குப் பலவித நன்மைகளைச் செய்து நாட்டிலே நல்லாட்சியை நிறுவியவன். அவன் எவ்விதம் மக்களின் நலனைப் பேணி நன்மை புரிந்தானோ, அதே போல இவனும் நடந்து நாட்டின் பெருமையை உயர்த்துவான் என்பதை மக்களுக்கு உணர்த்தி அவர்களை உற்சாகமூட்டுவதற்காகவே அவன் அதைத் தரித்துக்கொண்டான் என்று கொள்ளலாம். எனினும் பல்லவ அரசர்களின் வம்சாவளியிலே இந்தப் பெயர் காணப்படாததால் அது அவனுடைய இயற்பெயராகவோ அபிஷேக நாமமாகவோ இருத்தற்கில்லை யென்னலாம். அவன் முடிசூட்டப் பெற்ற பெயர் வேறு ஒன்றாக இருத்தல் வேண்டுமென்றும் ஸ்கந்தசிஷ்யன் என்ற பெயரை அதன் சிறப்பை நோக்கி அவன் தரித்திருந்தானென்றும் கருதலாம். அதனோடு ஏதோ சில காரணங்களால் நாட்டு மக்களைத் தன்பால் இழுப்பதற்காகவே அவன் அந்தச் சிறப்புப் பெயரைத் தரித்தான் எனவும் கொள்ளலாம். அவ்விதமானால் அவன் சிங்காதனம் ஏறிய நாளிலே நாட்டில் கொந்தளிப்பும் பிளவும் ஏற்பட்டு இருத்தல் வேண்டும் எனலாம். அவனுடைய அரசுரிமைக்கும் ஓரளவு எதிர்ப்பு இருந்திருத்தல் கூடும். நாம் அறிந்தவரையில் பல்லவ சரித்திரத்திலே அத்தகைய நிலை எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பல்லவ மல்லனான இரண்டாம் நந்திவர்மன் சிங்காதனம் ஏறிய காலத்திலேதான் இருந்து வந்தது.

தந்தைக்குப்பின் மகன் என்ற முறையில் நேர்பரம்பரையில் நந்திவர்மன் பட்டத்துக்கு வந்தவன் அல்லன். இளைய பரம்பரையில் ஆறு தலைமுறைகள் தள்ளி வந்தவன். அவனுக்குமுன் அரசனாக இருந்த இரண்டாம் பரமேச்வர வர்மன் இறந்துவிடவே அரசாளத் தக்கவர் யாரும் இல்லை யென்று மந்திரிகளும் பிரமுகர்களும் பல்லவ மல்லன் தந்தையான ஹிரண்ய வர்மனிடம் வந்து வேண்ட அவன் பன்னிரண்டு வயதுப் பாலகனான பல்லவமல்லனை அனுப்பிவைத்தான். அவன் பல நதி, கிரி, வனங்களைக் கடந்து காஞ்சிபுரம் வந்து பல்லவ அரசனாக நந்திவர்மன் என்ற பெயருடன் முடிசூட்டிக்கொண்டான். இந்த விவரங்கள் காஞ்சிபுரம் வைகுண்டப் பெருமாள் கோவிலிலுள்ள சித்திரங்களை விளக்கும் கல்வெட்டிலிருந்து தெரிகிறது.[6] உள்நாட்டில் அவனுக்கு எதிர்ப்பு இல்லாமல்

6. தெ. இ. சாசனங்கள் (மூலம் மட்டும்), தொகுதி 4, சாசன எண் 135. இன்னும் "காஞ்சிபுரம் வைகுண்டப்பெருமாள் கோயிலில் உள்ள வரலாற்றுச் சிற்பங்கள்" என்ற பெயரில் டாக்டர் ஸி. மீனாக்ஷி ஆங்கிலத்தில் எழுதிய நூல். (Historical Sculptures in the Vaikuntha Perumal Temple, Kanchi by Mr. C. Minakshi-Memoirs of the Archaeological, Survey of Num. 63.)

இல்லை. அவன் முடிசூட்டப் பெறுவதற்காகத் தலைநகரை அடைவதற்கு முன்னதாக வழியிலே பல்லவதியரையன் என்பானுடன் போரிட்டு வெற்றி கொண்டானும்.[7] இன்னும் அவன் முடிசூட்டப்பெற்ற பிறகும் நிலைமை ஸ்திரப்படவில்லை. வாதாபிச் சாளுக்கியனை இரண்டாம் விக்கிரமாதித்தியன் படையெடுத்து வந்து காஞ்சிபுரத்தைக் கைப்பற்றி நந்திவர்மனைத் துரத்தியிருக்கிறான். தலைநகரிலிருந்து வெளியேறிய பல்லவன் நாட்டை இழந்து பல இன்னல்களை அனுபவித்திருக்கிறான். சித்திரமாயன் என்பான் அவனுக்குப் போட்டியாகப் பல்லவ மன்னனாக இருந்திருக்கிறான். இவ்விதம் நந்திவர்மன் ஆட்சியில் முதல் பதினைந்து அல்லது இருபது ஆண்டுகள் ஒரு நிலையில்லாமல் கழிந்தன.[8]

ஸ்கந்தசிஷ்யன் என்ற பெயர் யாரைக் குறிக்கும் என்பது ஆசிரியர்களுக்கு ஒரு புதிராகவே இருந்து வந்திருக்கிறது. இந்தச் சாசனத்தை முதன் முதலாகப் பதிப்பித்த டாக்டர் ஹுல்ஷ் "தேவர்களுடைய சேனாதிபதியின் இந்தச் சிஷ்யன்" யார் என்பது விளங்கவில்லையென்றே குறித்திருக்கிறார். நம் நாட்டுப் புராணங்களிலே ஸ்கந்தனாகிய முருகக்கடவுள் தம் தந்தையான சிவபெருமானுக்கே உபதேசம் செய்தார் என்ற ஒரு கதை உண்டு.

பிரணவத்தின் பொருள் தெரியாத பிரம்மாவை ஒரு சமயம் முருகக்கடவுள் சிறையிட்டாராம். பிரம்மாவுக்குப் பரிந்து பேசின சிவபெருமானுக்கும் அது தெரியவில்லையாம். அதனால் முருகக் கடவுள் தம் தந்தைக்கு அதை உபதேசம் செய்தாராம். அந்த இடம் தஞ்சாவூர் மாவட்டத்தில் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள சுவாமிமலை என்பர். இங்கே கோயில் கொண்டிருக்கும் முருகக்கடவுளுக்குச் சுவாமிநாதன் என்று பெயர். தமிழில் "தகப்பன் சாமி" என்று கூறுவதும் உண்டு.

இந்தோ-சீனாவில் லாவோஸ் ராஜ்யத்தின் தென்கிழக்குப் பகுதியில் வாட்-லுவாங்-கௌ என்றஇடத்திலிருந்து கிடைத்த ஸம்ஸ்கிருதக் கல்வெட்டொன்று[9] தேவாநீகன் என்ற அரசன் அந்த இடத்திலே குருக்ஷேத்திரம் என்ற மஹாதீர்த்தத்தை ஏற்படுத்திய செய்தியைத் தெரிவிக்கிறது. நம் நாட்டிலே கி. பி. 5-ஆம் நூற்றாண்டில் வழங்கிய பல்லவ-கிரந்த எழுத்திலே அது பொறிக்கப்

7. இந்திய வரலாற்றுப் பத்திரிகை (Journal of Indian History) தொகுதி 36, பக்கம் 240.

8. பல்லவ மல்லனுடைய உதயேந்திரம் செப்பேடுகள் முன்னுரை பார்க்க.

9. பிரெஞ்சு தூரக்கிழக்குக் கல்லூரியின் பத்திரிகை Bullentin d' Ecole Francalo d' Extreme - Orient தொகுதி 48, பக்கம் 215

பட்டுள்ளது. அதிலே அந்த அரசன் புராண புருஷர்கள் பலருடன் ஒப்பிடப்பட்டிருக்கிறன். இவனைப் புகழுமிடத்தில், ஸம்யக் மஹாபுருஷ ப்ராஹ்மண்யா தாநுசாரிவ ப்ராஹ்மண்ய ஸாவெ என்ற தொடரும் காணப்படுகிறது. பிராம்மண்ய பாவத்தில் பகவான் மகாபுருஷனுடைய பிராம்மண்யத்தை அநுசரித்துச் செல்வோருக்கு ஒப்பானவன் என்று அது பொருள்படும். ப்ரஹ்மண்யத்தை உடைய மஹா புருஷரான பகவான் ஒருவர், அவரிடமிருந்து அதைக் கற்று, ப்ராஹ்மண்ய பாவத்தை அடைந்து, அவரைப் பின்பற்றிச் செல்லும் சிஷ்யர் ஒருவர்—ஆகிய இருவரும் இதிலே குறிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அவர்கள் ஸ்கந்தனும் அவருடைய சிஷ்யருமே ஆவர். அவ்விதம் குறிக்கப்பட்ட சிஷ்யர் புராண வரலாற்றின்படி சிவபெருமானுகவோ, பிரம்மாவாகவோ இருக்க முடியாது. அவர் வேறொருவராகவே இருத்தல் வேண்டும்.

தமிழ் வளர்த்த குறுமுனியான அகஸ்தியரையும் முருகக்கடவுளின் மாணவராகக் கூறுவர். 'சித்தர் நூல்கள்' எனப் பெறும் வகையில் அவ்விதம் காணப்படுகிறது. முருகக் கடவுளையே தமிழ்த் தெய்வம் என்றும் சொல்லுவர். தமிழ் மக்கள் ஒரு காலத்திலே அகஸ்தியரைக் கடவுளாகக் கொண்டு வழிபட்டு வந்தனர் என்றும் கூறுவர்.

தென்னவற் பெயரிய துன்னருந் துப்பில்
தொன்முது கடவுள்

என்று வரும் "மதுரைக்காஞ்சி" (40, 41) அடிகளுக்கு நச்சினர்க்கினியர், "இராவணனைத் தமிழ்நாட்டை ஆளாதபடி போக்கின, கிட்டுதற்கரிய வலிமையினை உடைய பொதிய மலையிலிருக்கும் கடவுளாகிய பழமை முதிர்ந்த அகத்தியன்" என்று உரை எழுதியிருக்கிறர். இதை வலியுறுத்துவதே போல, தமிழ்நாட்டின் தென்பகுதியில் பொதிகை மலைப் பக்கத்திலே அகஸ்தியருக்குக் கோயில் இருந்ததென்று கி. பி. இரண்டாம் நூற்றுண்டில் டாலமி என்பார் தம்முடைய பூகோள நூலில் குறித்துள்ளார். [10]

அகஸ்தியர் வழிபாடு முன்னுளிலே தமிழ்நாட்டில் மட்டுமல்லாமல் தமிழர் நாகரிகம் பரவியிருந்த தீவாந்தரப் பிரதேசமான தென்கிழக்கு ஆசியா முழுவதுமே பரவியிருந்தது. அங்கே அவருக்குக் கோயில் எழுப்பி வழிபட்டு வந்திருக்கிறர்கள். சந்தன மரத்தாலான அகஸ்தியருடைய திருவுருவம் ஜீர்ணமாகிப் போனதால், அதற்குப் பதிலாகச் சிலாரூபம் ஒன்றைச் செய்து கஜயானன் என்

10. இந்தியன் அன்டிகுவரி.

னும் அரசனுடைய பேரன் ஒருவன் கி. பி. 760-ஆம் ஆண்டில் அங்கே கோயில் எழுப்பிப் பிரதிஷ்டை செய்தான் என்று கிழக்கு ஜாவாவில் திநயம் (Dinaya) என்னும் இடத்தில் கிடைத்த ஒரு வடமொழிக் கல்வெட்டு கூறுகிறது."[11]

தீவாந்தரப் பிரதேசத்து மக்கள் அகஸ்தியருக்கு நிறுவிய திருவுருவங்களை ஜாவா போன்ற கிழக்கிந்தியத் தீவுகளில் நாம் இன்றைக்கும் அங்கங்கே காணலாம். காலக்கிரமத்திலே அகஸ்தியரைச் சிவபெருமானோடு ஐக்கியப் படுத்திவிட்டார்கள். அதனல் அவருடைய திருவுருவத்துக்கும் சிவனுடைய ஸாரூபத்தையே அளித்துவிட்டார்கள். ஆகவே, பல சமயங்களில் அகஸ்தியரின் திருவுருவங்களில் சிவசின்னங்களும் காணப்படும்; சூலாயுதமும் காணப்படும். அம் முனிவர் அங்கே சிவகுரு என்றும் பட்டாரககுரு என்றும், படாரகுரு என்றும் வழங்கப்பெறுவர். பிடாரன் என்று இப்போது வழங்குவது அதன் சிதைந்த வடிவமே.

சுப்பிரமணிய சுவாமியின் சிஷ்யராகக் கருதப்பட்டுவந்த அகஸ்திய முனிவர் இவ்விதம் சிவபெருமானோடு ஒன்றிவிட்டதால், சிவபெருமானையும் சுப்பிரமணிய சுவாமியின் சிஷ்யராகக் கருதவேண்டிய சந்தர்ப்பம் ஏற்பட்டது போலும். அதை விளக்கவே சுவாமிநாதன் வரலாறு எழுந்ததோ என எண்ணத் தோன்றுகிறது. எவ்விதமாயினும் ஸ்கந்தசிஷ்யன் என்று சாசனங்களில் குறிக்கப் பட்ட பெயர் அகஸ்தியர் பெயரைக் கொண்டு ஏற்பட்டதெனவே தோன்றும்.[12]

இந்தச் சாசனத்தை வழங்கிய இரண்டாம் ஸ்கந்தசிஷ்யன் கலசத்தில் தோன்றிய அகஸ்தியரோடு ஒப்பிடப்படும்போது நான்கு சம்பவங்கள் குறிக்கப் பட்டுள்ளன. அவற்றை விவரிப்பதற்குமுன் மற்றொன்றையும் குறிப்பிடவேண்டும். கலசத்தில் தோன்றிவர் அகஸ்தியரை மட்டும் அல்லாமல் பல்லவ வம்சத்தின் மூலபுருஷர்களிலே துரோணரையும் உணர்த்தும் என்பதை நாம் முன்னரே பள்ளன்கோவில் சாசனத்தால் அறிந்திருக்கிறோம்.

அரசனை அகஸ்தியரோடு ஒப்பிடும்போது முதலில் அவர் கடல் குடித்த சம்பவம் காணப்படுகிறது. "கடல் குடித்த குறுமுனி" என்று அவர் பல இடங்களில் குறிக்கப்பட்டிருக்கிறார். அதே சொற்றொடரை அரசனுக்கு ஏற்றிக்கூறும்போது, இவன் நாற்கடலையும் பரிபாலிக்கும் திறமை வாய்ந்தவன் என்று அது பொருள்

11. மஜூம்தார் எழுதிய "ஸ்வர்ணத்வீபம்" முதல் பாகம். பக்கம் 249.

12. "ஸ்வர்ணபூமியும் தமிழ்நாடும்" என்ற தொடரில் இரண்டாம் பாகமான "தென் கிழக்கு ஆசியாவில் பழங்காலப் பாண்டியர்கள்" என்ற நூலில் இதை நான் விளக்கியிருக்கிறேன்.

படும். தெள்ளாற்றெறிந்த நந்திவர்மன் மீது பாடப்பெற்ற "நந்திக் கலம்பக" த்தில்,

நாற்கடற்கு ஒரு நாயகன்

என்று பாடல் 26-ல் வருணிக்கப்பட்டிருக்கிறுன். சாசனமும் அதையே உணர்த்துவதாகும். அதிலிருந்து, மன்னன் கடலிலே கலங்களைச் செலுத்திப் போரிட்டு வெற்றி கொண்டானென்றே நாம் கொள்ளவேண்டும்.

அடுத்தபடியாக, அகஸ்தியர் யாகங்களை நடத்திவைக்கும் புரோகிதர் (கர்த்தா) என்பர். அவர் பாண்டிய மன்னர்களுக்குப் புரோகிதராக விளங்கினுர் என்று பாண்டிய சாசனங்களினுல் அறியலாம். பல்லவ அரசனும் பல யாகங்களைச் செய்தவனுக (பல யாகங்களுக்குக் கர்த்தாவாக) இருத்தல் வேண்டும்.

மூன்றுவதாக, "வேளா விநாச:" என்ற தொடருக்குச் சாதாரணமாகச் சமுத்திரக் கரையை அழித்தவர் என்றே பொருள் கொள்வர். ஆனுல், அகஸ்தியர் நாற்கடலையும் குடித்த செய்தி முன்னரே குறிக்கப்பட்டிருப்பதால் இது மிகையாகும். ஆகவே அந்தப் பொருள் பொருந்தாது. அகஸ்தியர் தென்னுடு போந்த வரலாற்றைத் தொல்காப்பியப் பாயிர உரையில் நச்சினுர்க்கினியர் கூறுமிடத்தில் பின்வருமாறு எழுதுகிறுர்:

"தேவரெல்லாம் கூடி, 'யாம் சேர விருத்தலின் மேருத் தாழ்ந்து தென்திசை உயர்ந்தது. இதற்கு அகத்தியனுரே ஆண்டு இருத்தற்குரியர்' என்று அவரை வேண்டிக்கொள்ள, அவருந் தென்திசைக்கட் போதுகின்றவர்...துவராபதிப் போந்து, நிலங்கடந்த நெடுமுடி அண்ணல் வழிக்கண் அரசர் பதினென்மரையும் பதினெண்குடி வேளிருள்ளிட்டாரையும் அருவாளரையும் கொண்டு போந்து, காடு கெடுத்து நாடாக்கி...இராவணனைக் கந்தருவந்தாற் பிணித்து, இராக்கதரை ஆண்டு வாராமை விலக்கி...பொதியின் கண் இருந்தனர்."

இதிலிருந்து, துவ்ராபதியிலிருந்து பதினென் வேளிரையும் [13] அகஸ்தியர் தமிழ் நாட்டிற்குக் கொணர்ந்து குடியேற்றிய செய்தியையே இவ்விதம் குறித்திருப்பதாகக் கொள்ளலாம்.

"வேளா" என்ற சொல்லுக்குக் காலம், வரையறை என்ற பொருள்களும் உண்டு. தமிழிலே வேளை என்று ஆகும். வேளைக்காரர் என்ற பெயரில் போர்ப்

13. "வேள்" என்ற தமிழ்ச் சொல் ஸம்ஸ்கிருதத்தில் "வேள:" என்று வரும்.

படையின் ஒரு பகுதியினர் சோழர்களுடைய ஆட்சிக் காலத்திலே மிகப் பிரபல மாக விளங்கினர். அவர்களுடைய திறமையும் ராஜவிசுவாசமும் பிரசித்தமா னவை. பெரும்பாலும் அவர்கள் தீவாந்தரப் பிரதேசங்களிலேயே செயற்பட்டு வந்தனர். பல்லவர்களுடைய ஆட்சிக் காலத்திலும் அவ்விதமே தான் இருந்திருத் தல் வேண்டும். அவர்கள் தீவாந்தரப் பிரதேசங்களில் ஆட்சி நடத்திவந்தன ரென்பது தாய்லாந்தில் தகுவா-பா என்னும் இடத்தில் நாங்கூர் உடையான் அவனிநாரணம் என்ற பெயரில் குளம் தொட்டு அதைச் சேனுமுகத்தார் போன்ற மூன்று குழுவினரின் அடைக்கலமாக விட்ட செய்தியைத் தெரிவிக்கும் தமிழ்க் கல்வெட்டிலிருந்து தெரியவரும்.[14] ஸ்கந்தசிஷ்யன் வேளைக்காரர் படையை எதிர்த்துப் போராடி வெற்றி கொள்ளவேண்டி வந்தது போலும். புல்லூர்ச் செப்பேடுகளிலே பல்லவமல்லன் பூமியுடன் ஒப்பிடப்படும் இடத்தில் சிலேடை யாக 'வேலாபாலித பூரி ஸார வஸுத:' (வேளைக்காரரால் பரிபாலிக்கப்பெற்ற செழுமை வாய்ந்த பூமியை உடையவன்) என்று வருணிக்கப்பட்டிருப்பதும் கவ னிக்கத்தக்கது.

பல்லவமல்லன் இளைய பரம்பரையைச் சேர்ந்தவன்; தமிழ்நாட்டிற்கு வெகு தூரத்திலிருந்து வந்தவன். அவன் அவ்விதம் வந்தது தீவாந்தரப் பிர தேசத்திலே உள்ள ஒரு நாட்டிலிருந்தேயாகும் என்பதை நான் வேறோர் இடத் திலே எடுத்துக்காட்டியிருக்கிறேன்.[15] எவ்விதமாயினும் அவன் கடற்போர் பலவற்றை நடத்தி வெற்றி கொள்ளவேண்டி வந்ததென்பதை நிச்சயமாகக் கொள்ளலாம்.

அடுத்தபடியாக அவன் ஸாக்ஷிராஜனை அலையச்செய்த விவரம் காணப்படு கிறது. நகுஷன் இந்திரனுக இருந்த காலத்தில், சப்த ரிஷிகள் சுமந்த பல்லக்கில் இந்திராணியின் வீட்டிற்குச் சென்றபோது (ஸர்ப்ப, ஸர்ப்ப) "இன்னும் வேக மாகச் செல்" என்று கூறிய காலத்தில், (ஸர்ப்போ பவ) "பாம்பாகக் கடவாய்" என்று அகஸ்தியரால் சபிக்கப்பெற்றதால் பாம்பாக மாறி நீண்டகாலம் எல்லா இடங்களிலும் சுற்றி உழன்ற கதையை அனைவரும் அறிவர். ஆயிரம் கண்களை யுடைய இந்திரனை அகஸ்திய முனிவர் திரியச்செய்த சம்பவத்தை உணர்த்துவ தாகவே இவ்விடம் கொள்ளவேண்டும்.

அரசனுக்கு ஏற்றிப் பொருள் கூறுமிடத்தில் "ஸாக்ஷிராஜன்" என்ற பெயர் யாரை உணர்த்துவதென்பது முக்கியத்துவம் வாய்ந்தது. அதுவே ஸ்கந்த

14. Journal of Oriental Research சென்னை, தொகுதி 6. பக்கங்கள் 299-312.

15. "ஸுவர்ணபூமியும் தமிழ்நாடும்" என்ற தொடரில் முதற்பாகமான "தென்கிழக்கு ஆசியாவில் காஞ்சிப் பல்லவர்கள்" என்ற நூலைப் பார்க்க..

சிஷ்யன் யார் என்பதை நிச்சயிப்பதற்கு உதவுவதாகும். ஸாக்ஷிராஜன்என்பதற்கு எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு எரித்துச் செல்லும் சூரியன் என்ற பொருள் கொள்வதானுல், ஆதித்தியன் அல்லது விக்கிரமாதித்தியன் என்னும் வாதாபிச் சாளுக்கிய அரசனே உணர்த்துவதாகும். அவ்விதமானுல் ஸ்கந்தசிஷ்யன் இரண்டாம் நந்திவர்மனே ஆவன்.

அவன் பன்னிரண்டு வயதிலே முடிசூட்டப்பெற்றவன். அந்தச் சிறு வயதிலே அவன் பெயரளவில் தான் அரசனுக இருக்க முடியும். தானே அரசு நடத்துபவனுக இருக்க முடியாது. உண்மையில், அவனுடைய ஸ்தானத்தில் அவன் தந்தையான ஹிரண்யவர்ம மகாராஜாவே அரசாங்கத்தை நடத்தி வந்தார் என்பது பின்வரும் சாசனங்களால் தெரியவரும். பல்லவமல்லன் ஸாக்ஷாத் அரசனுக இல்லாமல் ஸாக்ஷிராஜனுகவே விளங்கினுன் என்று சாசனம் கூறுவதாகக் கொள்ளவேண்டும். அப்போது ஸ்கந்தசிஷ்யன் பல்லவமல்லனுக்கு எதிரியான சித்திரமாயனுகவோ அல்லது அவனைப் போன்ற வேருெருவனுகவோ இருத்தல் வேண்டும்.

மேலே காட்டிய இரண்டும் பாமர வழக்கில் கொண்ட விளக்கங்கள். அக்ஷிஸ்வாமி என்பார் ஒருவர் பெயர் புல்லூர்ச் செப்பேடுகளில் காணப்படுகிறது. அந்தச் சாசனத்துக்கு ஆணத்தியாக நியமிக்கப்பெற்ற பிரம்மாதிராஜனுகிய நாகசர்மன் அக்ஷிஸ்வாமியின் அன்புக்கு உரியவன் ([illegible]) என்று வருணிக்கப் பெற்றிருக்கிறுன். அதிலிருந்து அது அரசனேயோ அவர் குடும்பத்தில் சேர்ந்த ஒருவரையோ உணர்த்துவதாகக் கொள்ளலாம். எனினும் அது ஆளப்பட்ட சூழ்நிலையை நோக்கினுல் அது அரசனுன பல்லவமல்லனேக் குறிக்காமல் வேறு ஒருவரையே உணர்த்துவதாகக் கொள்ளலாம். ஸ்வாமி என்பது பல்லவமல்லன் காலத்திலே அவனின்றும் வேருக அரசுரிமை பூண்டிருந்த ஒருவரையே உணர்த்துவதாகும். அது அவனுடைய தந்தையான ஹிரண்யவர்ம மஹாராஜனே ஆகும்.

அக்ஷிஸ்வாமி என்பதைக் "கண்ணுடைப் பெருமாள்" என்றும் கொள்ளலாம். தமிழிலே "முதுகண்" என்ற சொல் ஒன்றும் உண்டு, சிறுவன் ஒருவனுக்குப் போஷகராக இருந்து அவன் நல்ல வழியில் நடக்கிறுனு என்பதைக் கண்காணிக்கும் முதியவர் ஒருவரைக் குறிப்பதாகும். இந்நாள் வழக்கிலே "கார்டியன்" என்று கூறுவதை ஒக்கும். நந்திவர்மன் பல்லவமல்லனுடைய இளமைப் பருவத்திலே அவனுக்குப் பதிலாக அரசாங்க காரியங்களை நடத்தி (ரீஜன்டு என்று இப்போது கூறுவது போல) முதுகண்ணுக விளங்கிய ஹிரண்யவர்ம மகாராஜனேயே அக்ஷிஸ்வாமி என்னலாம். அதன் ஸம்ஸ்கிருத வடிவமான

(𑌅𑌕𑍍𑌷𑌿𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑍍) அக்ஷிஸ்ஸ்வாமிந் என்பது கண்ணையுடையவனான அரசன் என்றே பொருள் பெறுவதும் கவனிக்கத்தக்கது.

இந்தச் சூழ்நிலையிலே யாப்பருங்கல விருத்தியிலே மேற்கோளாகக் காட்டப்பெற்ற செய்யுள் ஒன்று நோக்கத்தக்கது.[16]

வண்டிவரும் மலர்வெட்சி மாலைமார்பன்
மால்வேண்ட மண்ணளித்த மலிதோள் வள்ளல்
ஞண்டிவரும் தண்படப்பை ஞாழல் மூதூர்
நரபதிக்கு வான்கொடுத்த நகைவேல் நந்தி
தண்டிவரும் தடவரைத்தோள் சயந்தன் வாடச்
சதுமுகனைச் சயஞ்செய்த சங்க பாலன்
தெண்டிரைவாய்த் திருமகளோ டமிர்தம் கொண்டான்
சீர்பரவச் சென்றகலும் செல்லல் தானே

பாண அரசனான நந்தி என்பவனைப் புகழ்ந்து பாடிய செய்யுள் இது. மூன்றடி மண் யாசித்த விஷ்ணுவுக்கு உலகத்தை அளித்த மஹாபலியின் வம்சத்திலே வந்தவன் அவன் என்பது முதலடியிலிருந்து தெரிகிறது. அடுத்த அடியில் ஞாழல்[17] என்ற பெயர் கொண்ட கடற்கரைப்பட்டினத்தின் அரசனை அவன் வானுலகுக்கு அனுப்பினான் என்பது கூறப்பெற்றிருக்கிறது. சயந்தன் என்பவன் மனம் வாடிப் புழுங்க அவன் சதுமுகனை வெற்றிகொண்ட செய்தி மூன்றும் அடியிலிருந்து தெரிகிறது. இம் மூன்றடிகளிலும் அவன் முறையே விஷ்ணு, சிவபெருமான், பிரம்மா ஆகிய மும்மூர்த்திகளுக்கும் மேம்பட்டவன் என்ற செய்தியைக் கவி உணர்த்தியிருக்கிறார். நான்காம் அடியிலே அவன் கடலைக் கடைந்து அமிர்தத்தையும் திருமகளையும் கொண்டானெனக் கூறுவதால், அவன் தேவர்கள் அனைவருக்கும் மேம்பட்டவன் என்றாகும்போலும். அவன் வெற்றிகொண்ட 'சதுமுகன்' (நந்திவர்மன் பல்லவமல்லனுடைய தந்தை) ஹிரண்யவர்மனையே உணர்த்தும். அவன் அவ்விதம் வெற்றிகொண்டதால் வாடிய சயந்தனைப் பாண்டிய அரசனான சேந்தனாகவே கொள்ளலாம். அந்தச் சேந்தனுடைய கல்வெட்டுகள் சிலவும் சமீபகாலத்திலே கிடைத்துள்ளன. நந்தி என்ற பாண அரசனைப் பற்றிய வேறு சில பாடல்களும் அந்த 'விருத்தி'யிலேயே மேற்கோளாகக்

16. யாப்பருங்கல விருத்தி (அரசினர் சுவடி நிலயப் பதிப்பு) பக். 163.

17. ஞாழல்: கொன்றை - சிவபெருமானுக்கு உகந்த மலர். அந்தப் பெயரைக்கொண்ட கடற்கரைப் பட்டினம் ஒன்று இருந்ததென்பது ஐங்குறுநூறு என்னும் சங்கநூலின் நெய்தல் திணையிலே ஞாழல் பத்து என்னும் பகுதியிலிருந்து தெரியவரும்.

காட்டப்பெற்றுள்ளன.[18] அவற்றுள்ளும் அவன் கடல் கடைந்தது,மதுரையிலே போரிட்டது போன்ற செய்திகள் காணப்படுகின்றன. அதனுல் அந்தப் பாடல் களும் இதே நந்திவர்மனைப் பற்றியவை என்று கொள்ளலாம். கி. பி. 9, 10-ஆம் நூற்ருண்டுகளிலே தொண்டை நாட்டின் வடபகுதியில் பாண அரசர்கள் மிகுந்த செல்வாக்குடன் அரசு புரிந்து வந்திருக்கிருர்கள். சிலசமயங்களில் அவர்கள் தனி அரசாகவும் ஆட்சி நடத்தியிருக்கிருர்கள். நந்திவர்மன் அல்லது விஜயநந்தி வர்மன் என்பவனையே அவர்கள் தங்கள் வம்ச பரம்பரைக்கு முதல்வனுகக் கொண்டிருக்கின்றனர். அவன் எட்டாம் நூற்ருண்டின் முற்பகுதியில், அதாவது ஏறக்குறைய இச்சாசனம் வழங்கப்பட்ட காலத்தில் இருந்தவனுகத் தெரிகிறது. குடிமல்லம் செப்பேடுகளிலே[19] இவனைப் பற்றிக் காணும் வருணனை ஒரு பேர ரசனுடையது போன்றதாகவே உள்ளது. இவைகளைக் கவனித்தால், யாப்பருங் கல விருத்தியில் மேற்கோள் காட்டப்பெற்ற பாடல்களில் காணும் நந்திவர்மன் அவனே எனக் கொள்ளலாம். இந்தப் பாடல்களும், இந்தச் சாசனத்தில் காணும் செய்திகளையே குறிப்பனவாகவும் கொள்ளலாம். இந்தச் சாசனம் வழங்குவதற் குக் காரணமாயிருந்த மாவலிவாணராஜனும் அவனே போலும். அவ்விதமானுல் இரண்டாம் ஸ்கந்தசிஷ்யன் பல்லவமல்லனுக இருத்தற்கில்லை. அவனுக்குப் போட்டியாக நின்றவனையே உணர்த்துவதாகும். ஆனுல் அவன் சித்திரமாயனு அல்லது வேறு ஒருவனு என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியாது. பெரும் பாலும் அவன் மற்றவனுகவே இருத்தல் கூடும்.[20]

சாசன பாடம்[21]

முதல் ஏடு—பின்புறம்

1. [1] ஹுவஸ்ரீ [ঃ || *] ஜுகி [2] ஷூ யாஉ ஈயாஜெஹதா. வஸாயா ஸஜூசுதா கஂ ஸஃவிஷஃ [3]

18. யார்பருங்கல விருத்தி பக்கங்கள் 239, 265, 266.

19. எபிகிராபிகா இந்திகா, தொகுதி 17, பக்கம் 1–9.

20. இந்தச் சாசனத்தின் முத்திரையில் காணும் வாசகத்தை வாசித்துப் பார்த்தால் இது நிச்சயமாக விளங்கும்.

21. எபி. இந்திகா, ஐந்தாம் தொகுதியில் வெளியான மசிப்படத்திலிருந்து பெயர்த்து எழுதப்பட்டது.

1. ஆரம்பத்தில் பிள்ளையார் சுழி போன்ற ஒரு குறியின் கோடு லேசாகக் காணப்படு கிறது.

2. ஜுதூ என்று வாசிக்க.

3. ஈஶாஂமஜெகிவஸாயாஸாஂஸதர கஂஸஷிஷஃ என்று இருத்தல் வேண்டும்

2. வதூாகூ: [4] மமநாதருகூநாு வுஸிஷ்ஸிஸிடிஹீயி: கூீஶாஜ்ஜாயி [5]

3, பயாறு"ராநவ வயூ வெயவ்ருராநொ ஹரி [: *] || [க] கூஸீர
ஜ்ஜாஜ[6] பொமி

4. ஷ்ரீஹவநஜநம ஸ்ரீவதெநூாஹிவதூ வ"தூதஸ்யூாமிரா ஷூு [7]
ஸஜ

5. ம் திஷணதஸ்ய ஸூமிநவூஹூவ: ப[ம *]ய" தஸ்யஜயொ[8] ஹூக
ஸஜஹவரஜ"

6. ய:[9] ஸ்ரீஹாஆஜநாஜ தொண: தூண:[10] வுவீண: அாணஜ"வ
மதாழமூ

7. வாநு ஜநூதஹூாநு || [11] [௨*] சஷ்பசூாஜாஸ்ய ததூ-ஜ"[12] ஹ-வெசிவரு"
வ"ஶாவிகரஜாநுகர

8. தாயீயாதொ[13] விஜிஹூாமிநிவ"தூாஹூஹரதியதஜமதாம ஷ்லுஸு[14]பமி

4. வஹூாகெூா என்று வாசிக்கவும். இந்தப் பாதத்தின் மற்றப் பகுதி மிகவும் பிழையாக உள்ளது.

5. கூீஶாஜெ்ஜாயி என்று வாசிக்கவும்.

6. சஜ்ஜாஜ என்று வாசிக்கவும்.

7. ஜநக: ஸ்ரீவதெந-ஜஹி வஹூாதூ" துஹூஸ்யூாமிநா: ஷு: என்றிருத்தல் வேண்டும்.

8. யிஷணஹூஸ்ய ஸூமிநஷ்ஹூ-ஹூவ | பம்ய"ஹூஸ்யாதூஜொ என்று வாசிக்கவும்.

9. த: என்று கொள்க.

10. நாஜா தொணெ தொண: என்று இருத்தல் வேண்டும்.

11. வுவீஶ்ய கூஶண ஜ"வமதாறூபவாஜூநூதஹூாசு என்று வாசிக்கவேண்டும் போலும். டாக்டர் ஹுல்ஷ் வுவீண என்பதைத் திருத்தாமல் விட்டுவிட்டார்.

12. சபயூதூாஜாஸ்ய ததூ"ஶ" என்று வாசிக்கவும்.

13. விகரஜநயூதூரதாயிஜ-ஜதொ என்று இருத்தல் வேண்டும் அந்த வரியின் கடைசியில் ஜமதாழ என்பது வரையில் உள்ள பகுதி சரியாக விளங்கவில்லை. அதனுல் அதைத் திருத்தவும் முடியவில்லை. விஜிஹூாமிநி என்பது விஜிஹூமகா என்று நாககன்னியைக் குறிப்பதாகலாம். அது யாப்பு அமைதிக்கு முரணுக உள்ளது என்பர். ஒருகால் இந்தச் சொல் தமிழின் அமைப்பைக் கொண்டு ஆளப்பட்டது போலும்.

14. ஹூடி என்று வாசிக்கவும்.

இரண்டாம் ஏடு—முன்புறம்

9. ஷஹாயிராஜா|| [15]தக வமெப [16]ஸ்ரீஷ்ஹ [17]பிஷ்யஃ வசஅமி [18] அதஊ வஹாக

10. ராகஹாதஊபஃ [19] கதஹா வெஜாவிதாபஃ கஹுபஹவஊவ ஹஹாஉய வாகுதி

11. ராஜா[20]|| ஹஷ்தி ஸ்ரீ[ஃ*] கொ விசைய கநத பிஷ்ய விக்கிரம பரு[ம*]ர்க்கு யாண்டு

12. பதினுலாவது உஹாவனிவாணராஜர் விண்ணப்பத்தால உஹை

13. பஹா(ஃ)ஹடிர் ஆணத்தியாகப் படுவவூர்க் கொட்டத்து மெல் அடை

14. ய்யறுந் நாட்டு சாருகூரும் மதனைச் சுற்றிய சென்றுழு பாழும் எத்தப்

15. பாடும்ங் காடுமப பிடிலிகையும் உழுகொல்லையும் எறிகாடும்ம்ம[ன்*]று

16. மக காலு மக கரையும் பபரிசும் கஞரமபும் ததலைபபெழையும்

இரண்டாம் ஏடு—பின்புறம்

17. ம் மற்றும் எப்பொர்ப்பட்ட நிலனும் வஹமொதுத்து ஹாவஹந

18. வாமிதுத்து ஊ[ய*]வபஜ ஹடிர்[க்*]கு குடு(ர்)த்தொம் ம்மென்று கொட்டத்தார்க்

19. குந் நாட்டார்க்கும் மெழுகு திருமுகம் அருளுச் செயது விடுதர அது கண்டு

20. கொட்டததாரும்ந் நாட்டாரும்த் தொழுது தலைககு வைய்து கொயிக்

21. கரணத்துக்குக் கொயிலானைக்கும் முன்ஞய்க் கல்லுங் கள்ளியும்

22. ந் நாட்டுக் குடுத்து எழுதி விடுந்த அறையொலைப்படி இ கந்தஷிஷ்ய

23. மங்கலத்துக்குக் கீழ்பால் லெலை மணித்திடலின் மெற்ககும் தென்

24. பால் லெலை குறுமடியின் வடக்கும் மெல் பால்லெலை இலத்

15. ராஜஃ என்று இருக்கவேண்டும்.

16. தவமெப என்று வாசிக்கவும்.

17. வஹ என்று திருத்தவும்.

18. வஊஅமி என்று வாசிக்கவும்.

19. அதஊபஹாமராதஹாதஊபஃ என்றிருக்கவேண்டும் போலும்.

20. ஹஹாஉயதஹிராஜஃ எனஇருக்கலாமோவென்று டாக்டர் ஹூல்ஷ் சந்தேகித்தார். ஹஹாஉயஹாகுதிராஜஃ என்றே கொள்ளவேண்டும் போலும்.

மூன்ரும் ஏடு—முன்புறம்

25. தைப்பாடி யென்னும் முது பதினெக்கு [20] கிழக்கும் வ வடபா
26. றகெல்லெய திருவெளாலமுடியின் மெலெயககுறுக்கு[டி]யின்
27. த தெற்கும் இககுறி அகப்படட பெருநானக கெல்லெயின் அ
28. கமபடிப்பட்ட ஹூமிஉணிநிலம மொழிவின்றி உடுமபொடிஆமை
29. ய்ந்த கழவவதெல்லாம் ப்ராஹ்மணர்க்குக் குடுத்துக குடுத் தப
30. ரிஹாரமாவன் தறியும்க்கூலமும் த தட்டககாணமும் தறிக்கூறை
31. யுமந நலலாவு மந நல்லெருதும் ஈழமப பூச்சியும இடை[ப்]
32. பூசசியும் உளளிருக்கையும் மற்றும எப்பொர்பட்ட ஸவவ[ ]

மூன்ரும் ஏடு—பின்புறம்

33. 𑌵𑌾𑌦𑌪𑌰𑌿𑌹𑌾𑌰த்தால் || 𑌵𑌹𑍁𑌭𑌿𑌰𑍍𑌵𑌸𑍁
𑌧𑌾𑌦𑌤𑍍𑌤𑌾 𑌰𑌾𑌜𑌭𑌿 [𑌃] 𑌸𑌵𑌿𑌰𑌾𑌜𑌭𑌿[𑌃]
34. 𑌯𑌸𑍍𑌯𑌯𑌸𑍍𑌯 𑌯𑌯𑌾 𑌭𑍂𑌮𑌿 𑌤𑌸𑍍𑌯 𑌤𑌸𑍍𑌯
𑌬𑌦𑌾 𑌫𑌲𑌂 || [21]

மொழி பெயர்ப்பு

மங்கலம் உண்டாகட்டும்.

(சுலோகம் 1) லக்ஷமிக்கு இருப்பிடமாக உள்ளவர். சக்ராயுதத்தையும் பூமியையும் தரித்துக்கொண்டிருப்பவர். கம்ஸனைக் கொன்றவர். தாமரை மலரை யொத்த கண்களையுடையவர். பாற்கடலில் படுத்திருப்பவர். அரக்கமங்கையருக்கு வைதவ்யத்தைக் கொடுப்பவர்.

(சுலோகம் 2) திருமகள் கேள்வனை விஷ்ணுவின் உந்திக்கமலத்தி லிருந்து மூன்று (உலகங்களின் தந்தையான) பிரம்மா உண்டானர். அவருடைய மகன் அங்கிரஸ். அவருக்குப் பிறந்தவர் திஷணர்" (பிருகஸ்பதி).அவருக்குச் சம்யு மகனுப் பிறந்தார். இந்தச் சம்யுவிடமிருந்து பரத்வாஜரென்ற த்ரோணமுண்டா

20. முதுபதி[யி]ன(க்கு) என்று வாசித்திருக்கிருர்கள்.

21. இந்தச் சுலோகம் மிகவும் பிழைபட உள்ளது. அதன் சரியான உருவம் பின்வருமாறு:

𑌬𑌹𑍁𑌭𑌿 𑌵𑌸𑍁𑌧𑌾𑌦𑌤𑍍𑌤𑌾
𑌰𑌾𑌜𑌭𑌿𑌃 𑌸𑌗𑌰𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 ।
𑌯𑌸𑍍𑌯 𑌯𑌸𑍍𑌯 𑌯𑌦𑌾 𑌭𑍂𑌮𑌿
𑌸𑍍𑌤𑌸𑍍𑌯𑌤𑌸𑍍𑌯 𑌤𑌦𑌾𑌫𑌲𑌂 ||

யிற்று (வீரியப்) பெருக்கைக்கொண்ட அந்தத் துரோண (பாத்திர)த்திலிருந்து வில் வித்தையில் தேர்ந்தவரான துரோணர் பிறவியைப் பெற்ருர்.

(சுலோகம் 3) முன்பு, தன் பராக்ரமத்திஞல் எதிரிகளே வென்ற அச்வத்தாமன் இவருக்குப் பிறந்தார். அவருக்கு நாககன்னிகை ஒருத்தியிடம் உலகத்திற்கு அரசஞன ஸ்கந்தசிஷ்யன் என்ற அதிராஜன் பிறந்தான்.

(சுலோகம் 4) நாற்கடலேயும் பருகும் திறமை வாய்ந்தவரும், யாகங்களேச் செய்விக்கும் புரோகிதரும், வேளிரை அழிவினின்று காப்பாற்றியவரும், (உடலிலே) கண்களேயுடைய அரசஞன (இந்திரனே) அலேந்து திரியச் செய்தவரும், கும்பத்தில் பிறந்தவருமான அகத்தியரைப் போல, அந்த வமிசத்திலே நாற்கடலேயும் பாதுகாக்கும் நாயகஞகவும், (யாக) காரியங்களே நடத்துகிறவனும், வேளே(க்காரர் படையை) அழித்தவனும் அக்ஷிராஜனுடன், (அதாவது முதுகண்ணுகக் காத்துவரும் அரசருடன்) கூடிய அவனே அலேந்து திரியச் செய்தவனுமான ஸ்கந்தசிஷ்யன் (பாத்திரத்தில் பிறந்த துரோணர் அவதாரமாக)ப் பிறந்தான்.

தமிழ்ப் பகுதி

கொவிசைய ஸகந்தசிஷ்ய விக்கிரம பருமர்க்கு யாண்டு பதிஞலாவது மஹாவலி வாணராஜர் விண்ணப்பத்தால் மஹெசவர ஆணத்தியாகப் படுவூர்க் கொட்டத்து மெல் அடையாற்று நாட்டுச்சாரு கூரும் அதனேச் சுற்றிய சென்றுமுழு பாழும் ஏத்தப்பாடும் காடும் பீடிலிகையும் உழுகொல்லேயும் எறிகாடும் மனலும் காலும் கரையும் பரிசும் கரம்பையும் தலேப்பெழையும் மற்றும் எப்பெர்ப்பட்ட நிலனும் வத்ஸ கொத்ரத்து ப்ரவசந சூத்ரத்து மாதவசர்ம பட்டர்க்குக் குடுத்தொமென்று கொட்டத்தார்க்கும் நாட்டார்க்கு எழுதித் திருமுகம் அருளச் செய்து விடுதக அதுகண்டு கொட்டத்தாரும் நாட்டாரும் தொழுது தலேக்கு வைத்து கொயிலகரணத்துக்கும் கொயில் யானேக்கும் முன்ஞய்[சென்று] கல்லும் கள்ளியும் நாட்டியக்குடுத்து எழுதி விடுந்த அறையொலேப்படி இந்த ஸ்கந்தசிஷ்ய மங்கலத்துக்குக் கீழ்ப்பாலெல்லே. மணித்திடலின் மெற்கும் தென்பாலெல்லே குறுமடியின் வடக்கும் மெல்பாலெல்லே இலத்தைப்பாடி என்னும் முதுபதியினுக்குக் கிழக்கும் வடபாலெல்லே திருவெளாமுடியின் மெலேக் குறுக்குடியின் தெற்கும் இக்குறி அகப்பட்ட பெரு நான்கெல்லேயில் அகப்பட்ட பூமி உள்ளிலம் ஒழிவின்றி உமெபொடி ஆமை தவழ்வ தெல்லாம் இப்பிராமணனுக்குக் குடுத்தது. குடுத்த பரிகாரமாவன தறிய கூலிமும் தட்ட ககாணமும் தறிக்கூறையும் நல்லாவும் நல்லெருதும் ஈழம் பூட்சியும் இடைப்பூட்சியும் உள்ள நான்கையும் மற்றும் எப்பெர்ப்பட்ட ஸர்வ பாத பரிஹாரத்தார்.

நந்திவர்மன் பல்லவ மல்லனுடைய உதயேந்திரம் செப்பேடுகள்-1.

முன்னுரை

சென்ற நூற்றுண்டின் மத்தியிலே கி. பி. 1850-ஆம் ஆண்டில் வடஆர்க்காடு ஜில்லா குடியாத்தம் தாலூகாவில் வாணியம்பாடிக்குப் பக்கத்திலுள்ள உதயேந்திரம் கிராமத்திலிருந்து ஏழு செப்பேட்டுச் சாசனங்கள் கிடைத்தன. அவை ரெவரெண்ட் டி. போக்ஸ் (Rev. T. Foulkes) என்பவரால் "சேலம் மான்யூவல்" (Manual of the Salem District) என்னும் நூலில் இரண்டாம் பாகத்தில் வெளியிடப்பட்டன. அவற்றுள் இந்தச் சாசனமும் ஒன்று. அது பின்னுல் "இந்தியன் அண்டிகுயரி" எட்டாம் பகுதியில் மசிப்படத்துடன் வெளியிடப்பெற்றது. இன்னும் "தென்னிந்திய சாசனங்கள்" - இரண்டாம் தொகுதியின் மூன்றும் பாகத்தில் டாக்டர் ஹுல்ஷ் என்பவரால் பதிப்பிக்கப்பட்டது.

சாசனம் மொத்தம் ஐந்து ஏடுகளைக் கொண்டது. முதல் ஏட்டின் முன்புறம் எழுதாமல் விடப்பட்டிருக்கிறது. மற்ற நான்கு ஏடுகளும் இருபுறமும் எழுதப்பெற்றுள்ளன. கடைசியிலே முதற் பராந்தக சோழன் காலத்திலே எழுதப்பெற்ற கீழீடு (Endorsement) நான்கு வரிகள் தமிழிலே உள்ளன. மற்றப்படி, சாசனம் முழுவதும் ஸம்ஸ்கிருதத்திலேயே அமைந்துள்ளது. தமிழ்ப் பகுதி ஏதுமில்லை.

சாசனத்தின் ஏடுகளைக் கோத்திருந்த வளையத்தின் முத்திரை—முகப்பிலே பள்ளமான தளத்தில் புடைப்புச் சித்திரமாக ரிஷபத்தின் உருவம் ஒன்று காணப்படுகிறது. பக்கத்துக்கு ஒன்றுக இரு புறங்களிலும் உள்ள விளக்குகளுக்கு நடுவில் உள்ள பீடத்தின் வலது புறம் நோக்கி (அதாவது வாசகர்களுக்கு இடதுபுறமாக) ரிஷபம் படுத்திருக்கிறது. அதற்குமேலே, தெளிவாக இல்லாத இரண்டு

பொருள்களுக்கு நடுவில் ஓர் ஆசனத்திலே ஒரு உருவம் அமைந்திருக்கிறது. அந்த முத்திரை இந்தச் சாசனத்திற்கு உரியதென்று கருத இடமில்லையென்றும், அதனோடு கிடைத்த பாண வம்சத்து அரசர்களுடைய சாசனங்களில் ஏதோ ஒன்றுக்கு உரியதாக இருத்தல் வேண்டுமென்றும் டாக்டர் ஹுல்ஷ் கருதினர். அவர் அவ்விதம் குறிப்பிட்ட காலத்தில் பல்லவ சாசனங்களின் முத்திரைகள் அதிகமாகக் கிடைக்கவில்லை. உன்ன குரவயபாலம், ரேயூரு ஆகிய இடங்களிலிருந்து கிடைத்த சாசனங்களின் முத்திரைகளையே இது ஒத்திருக்கிறது என்பதை நாம் இப்போது காணலாம்.

பல்லவ அரசனான நந்தி வர்மன் பல்லவ மல்லனுடைய ஆட்சியின் இருபத்தோராம் ஆண்டிலே அவனுடைய படைத் தலைவனும் பூச்சான் குலத்தில் பிறந்தவனும் வேகவதியின் கரையிலுள்ள வில்வல நகரத்து அதிபதியுமான உதயசந்திரன் விண்ணப்பத்தால், பாலாற்றங்கரையிலே அமைந்த ஒரு கிராமம், உதய சந்திரமங்கலம் என்ற பெயரில் நூற்றெட்டுப் பிராம்மணர்களுக்கு அளிக்கப்பெற்ற செய்தியைத் தெரிவிக்கிறது. ஆனால் சாசனம் பொறிக்கப்பட்டுள்ள எழுத்து அந்த மன்னன் காலத்தில் வழங்கியதாக இல்லை; 200 ஆண்டுகளுக்குப் பிற்பட்ட காலத்தில் வழங்கியதைப் போல் உள்ளது. ஆகவே இது சாசனத்தின் மூலப் பிரதியல்ல என்று, பிற்காலத்திலே பெயர்த்து எழுதப்பெற்ற பிரதி என்பதை இப்போது கிடைக்கும் அதன் வாசகமே நன்கு எடுத்துக் காட்டும். பிழைகள் மலிந்து காணப்படுகின்றன. எனினும் அதை ஆதாரமாகக் கொள்வதற்குத் தகுதியற்ற போலி என்று ஒதுக்கிவிட முடியாது. இந்தச் சாசனத்தைத் தொடர்ந்து அதே ஏட்டில் எழுதப்பெற்றுள்ள கீழீடு ஒன்று அதனை எடுத்துக் காட்டும். சோழ மன்னனான முதற் பராந்தகன் ஆட்சியின் இருபத்தாறும் ஆண்டு, "உதயசந்திரமங்கலத்துச் சபையோமும் காஞ்சி வாயிலாகிய இகன்மறைமங்கலத்துச் சபையோமும் இவ்விரண்டு ஊரோமும் கூடி ஒன்றானமையில் இதன் மேற்பட்டது ஒரூராய் வாழ்வோமானோம்" என்று தமிழில் பொறிக்கப்பட்டிருக்கிறது. அது அந்தக் காலத்தில் வழங்கிய எழுத்தேயாகும். அதனால் கீழீடு பொறிக்கப்பட்ட முதற் பராந்தக சோழன் காலத்தில் அதைச் சரியான ஆதாரம் என்று ஆட்சியாளர் ஏற்றிருந்தார்கள் என்ற விவரம் தெரியவரும்.

உமையுடன் கூடிய சதாசிவப்பெருமானுக்கு வணக்கம் கூறும் கடவுள் வாழ்த்துச் சுலோகத்துடன் சாசனம் ஆரம்பிக்கிறது. நாட்டை எதிரிகளினின்றும் வெற்றி கொண்டு பல்லவ மன்னனுக்கு அளித்த அவன் அதிகாரியான வில்வலபுரத்து அதிபன் புகழ் அடுத்த சுலோகத்தில் காணப்படுகிறது. மூன்றாவது சுலோகம் பல்லவ குலத்தின் பெருமையைக் கூறுவது. பிறகு பிரம்மா முதல் பல்லவன் வரையிலுள்ள அந்த வம்சத்தின் வரன்முறை கொடுக்கப்பட்டுள்ளது. அப்பால்

பின்வரும் அரசர்கள் புகழப்பட்டிருக்கிறார்கள். விஷ்ணு பக்தனான சிம்மவிஷ்ணு. அவன் மகன் மகேந்திரன். அவன் மகன் அகத்தியரைப் போல் வாதாபியை அழித்து, பரியளம், மணிமங்கலம் சூரமாரம் முதலிய இடங்களில் வல்லப ராஜனை வெற்றி கொண்ட நரசிம்மவர்மன். அவன் மகன் மற்றொரு மகேந்திரன். அவனுக்குப் பெருவளநல்லூரில் வல்லபன் சேனையை வெற்றி கொண்ட பரமேச்வரன் பிறந்தான். அவன் மகன் இரண்டாம் நரசிம்மவர்மன். அவனுக்குப் பிறந்தவன் இரண்டாம் பரமேச்வரன். அந்தப் பரமேச்வர வர்மனுடைய மகன் பலபடியாகப் புகழப்பெற்றிருக்கிறான். அந்த வாசகமும், முன்னால் பழைய அரசர்களைப் பற்றியும் பல்லவ வம்சத்துப் பரம்பரையைப் பற்றியும் கூறும் வாசகமும் கூரம் செப்பேட்டுச் சாசனத்தில் காண்பதையே ஒத்திருக்கின்றன. அப்பால் பல்லவ அரசனான நந்திவர்மனைப் பற்றி மூன்று சுலோகங்கள்; (இந்த இடத்தில் சில வரிகள் விட்டுப் போயிருக்குமோ என்றும், அந்த வரிகளில் நந்திவர்மனின் தந்தை ஹிரண்யவர்மனுடைய பெருமை விவரிக்கப்பட்டிருக்குமோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.) திரும்பவும் அவன் மகன் நந்திவர்மன் என்று பல்லவ மல்லனைக் குறிப்பிடுகிறது. அவனுடைய இருபத்தோராம் ஆண்டு முடியும் சமயத்தில் உதய சந்திரன் விண்ணப்பம் செய்ததன் பேரில் இந்தத் தானம் வழங்கப்பட்டது. அந்த ஆண்டை அவனுடைய "ராஜ்ய வத்ஸரம்" அதாவது ஆட்சியின் ஆண்டாகவே ஆசிரியர்கள் கொண்டிருக்கிறார்கள். ஆனால் "அவனுடைய இருபத்தோராம் வயது முடியும் தறுவாயில்" என்றும் அதைக் கொள்ள முடியும். அவ்விதமானால் இளம்பருவம் முடிந்து, அவன் யுக்த வயது அடையும் சமயத்தை ("மேஜர்" நிலையை அடையும் காலத்தை) அது உணர்த்துவதாகும். அப்படியானால் அது அவனாட்சியின் பத்தாம் ஆண்டு என்னலாம். அவ்விதம் உதயசந்திரன் விண்ணப்பம் செய்ததைக் குறிப்பிடும் இடத்தில் அவன் தன் அரசனுக்கு ஆற்றிய பணிகளும் விரிவாகக் கூறப்படுகின்றன. எதிரிகளிடமிருந்து நாட்டை மீட்டுப் பல்லவ சிங்காதனத்தில் நந்திவர்மனை நிலைநிறுத்தியவன் அவனே. அவனுடைய வேண்டுகோளின்படி பச்சிமாச்சரிய நதி விஷயத்தில் குமாரமங்கல வெள்ளாட்டூர் என்ற கிராமத்தை, கொற்றக் கிராமம் என்ற ஊரில் இரண்டு ஜலயந்திரங்களோடு, உதயசந்திரமங்கலம் என்று புதுப் பெயரிட்டு நூற்றெட்டுப் பிராம்மணர்களுக்கு அளித்த செய்தி காணப்படுகிறது.

அவ்விதம் அளிக்கப்பெற்ற கிராமத்தின் நான்கு எல்லைகள் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. அதர்ம காரியங்களைச் செய்யும் வேற்றோரை நீக்கி, அந்த ஊர் அளிக்கப்பட்டது என்ற விவரமும் கூறப்பட்டுள்ளது. தானம் பெற்றவர்களின் விவரமும் விரிவாகக் காணப்படுகிறது. முடிவிலே; சந்திரன் நட்சத்திரம் உள்ளளவும், வானத்திலே சூரியன் சுற்றும் வரையிலும், மலை உள்ளளவும்

பூச்சான்வம்சம் நிலேத்திருக்க வேண்டுமென்று வாழ்த்துக் கூறப்பட்டிருக்கிறது. மேதாவி குலத்தில் பிறந்த சந்திரதேவன் மகன் பரமேச்வரன் என்னும் கவி அந்தப் பிரசஸ்தியை எழுதியதாகக் கூறும் செய்தியோடு சாசனம் முடிவடைகிறது.

இந்தச் சாசனத்தைப் பற்றி முக்கியமான வேறு சில விஷயங்களேயும் கவனிக்க வேண்டும். இதிலே தமிழ்ப் பகுதி இல்லே. வழக்கமாக ஸம்ஸ்கிருதப் பகுதியின் கடைசியில் காணும் பலசுருதி சுலோகங்கள் இதிலே இடம் பெறவில்லே. தானம் பெற்றவர்களுடைய பெயர் முதலியவைகள் ஸம்ஸ்கிருதப் பகுதியிலே காணப்படுகின்றன. வேறு எந்தச் சாசனத்திலும் இவ்விதம் காணப்படவில்லே.

தன்னுடைய பேரரசனை நந்திவர்மன் பல்லவ மல்லனுடைய ஆட்சியை நிலேநிறுத்துவதற்காக உதயசந்திரன் எந்த எந்த வகையில் உதவி செய்து, யார் யாருடன் போரிட்டு, வெற்றி கொண்டு, அந்த அரசை ஊன்றினன் என்ற விவரங்களேத் தெரிவிப்பதே இந்தச் சாசனத்தின் முக்கியத்துவம். அந்த உதவியை செய்வதற்கு அவன் எவ்விதம் முதல் முதலில் விழைந்தான் என்பதும் வருணிக்கப்பட்டுள்ளது. தமிழ் (த்ரமிள) அரசர்களால் நந்திபுரத்திலே பல்லவ மல்லன் முற்றுகைக்கு ஆளாக்கப்பட்டதைப் பொறுக்காமல்...(உதயசந்திரன்) பல்லவ மல்லனுடைய எதிரிகளின் கூட்டங்களுக்குக் கூற்றுவனே போல் பாய்ந்து, சித்திர மாயப் பல்லவ ராஜன் முதலியவர்களேக் கொன்று ராஜ்யம் முழுவதையும் தன் அரசனுக்கு அளித்தானும். நந்திபுரத்திலே பல்லவ மல்லனே வளேத்துக் கொண்டவர்கள் தமிழ் அரசர்கள் என்று பொதுவாகக் கூறப்பட்டிருக்கிறதே யல்லாமல், அவர்கள் யார் யார் என்பது தெளிவாக இல்லே. அவர்கள் சேர, சோழ, பாண்டியர் என்ற தமிழ் வேந்தர் மூவரையும் குறிப்பதாகவே ஆராய்ச்சியாளர்கள் கருதுவர். போரின் முடிவில் சித்திரமாயப் பல்லவ ராஜன் முதலியவர்கள் உதயசந்திரனுல் கொல்லப்பட்டனர் என்று சாசனம் கூறுகிறதே யல்லாமல், அந்த இடத்திலும் தமிழ்நாட்டு முடியுடை வேந்தர் மூவருள் எவரைப் பற்றிய பேச்சும் இல்லே.

அந்நாளிலே திராவிட அல்லது திரமிள என்ற சொல் காஞ்சிபுரத்தை தலே நகராகக் கொண்ட தொண்டை மண்டலத்தையே குறித்து வந்திருக்கிறது:- வாதாபிக்குக் கிழக்கே மஹாகூடம் என்னும் இடத்தில் உள்ள மகுடேச்வர நாதர் ஆலயத்தின் கற்றூணில் காணும் மங்களேசன் கல் வெட்டில் அவன் அண்ணனை முதலாம் கிர்த்திவர்மனுடைய புகழைக் கூறுமிடத்தில் அவன், "வங்கஅங்க, கலிங்க, வட்டுர, மகத, மத்ரக, கேரள, கங்க, மூஷக, பாண்டிய, த்ரமிள (அல்லது த்மிள), சோளிய, ஆளுக, வைஜயந்தி ஆகியவற்றையும் வேறு நாடுகளேயும் வெற்றிகொண்டான் என்று வருணிக்கப்பட்டுள்ளான். அதிலே சேர, சோழ,

பாண்டியர் ஆகிய மூவரையும் தனித் தனியே குறிப்பிட்டுவிட்டு, அவர்களி னின்றும் வேறானவராகத் தமிழரைக் குறிப்பிட்டிருப்பது கவனிக்கத்தக்கது. சாளுக்கியர்களுக்குப் பரம விரோதிகளும் நிச்சயம் அவனோடு போர் புரிந்திருக்க வேண்டியவர்களுமான பல்லவர்கள் பெயர் அந்தச் சாசனத்தில் காணப்படாதது குறிப்பிடத்தக்கது. அது விட்டுப் போயிருக்க முடியாது; வேறு பெயரிலே குறிக்கப்பட்டிருக்க வேண்டுமென்பது வெளிப்படை. தமிழர் என்ற பெயரே அது. கி.பி. 640–ஆம் ஆண்டளவில் காஞ்சிபுரத்திற்கு வந்திருந்த சீன யாத்திரிகரான யுவான் – சுவாங்கும் காஞ்சியைத் தலைநகராகக்கொண்ட பல்லவர் நாட்டைத் திராவிடம் என்ற பெயரிலேயே வருணித்திருக்கிறார். தமிழ்நாட்டு முடியுடை வேந்தர்களில் பாண்டிய மன்னனை உதயசந்திரன் மண்ணைக்குடியில் வென்றான் என்ற செய்தி தனியாகப் பின்னால் கொடுக்கப்பட்டுள்ளதும் நோக்கத் தக்கது. இவற்றைக் கவனித்தால் பல்லவ மல்லனை நந்திபுரத்திலே முற்றுகையிட்டிருந்த தமிழ் நரபதிகள் பல்லவ வம்சத்தைச் சேர்ந்த அரச குமாரர்களேயாவர் என்னலாம்.

பல்லவ மல்லன் முற்றுகைக்கு ஆளான நந்திபுரத்தைக் கும்பகோணத்திற்கு மூன்று மைல் தெற்கில், இப்போது நாதன்கோவில் என்று வழங்கப் பெறும் கிராமம் என்றே ஆராய்ச்சியாளர்கள் கருதி வந்துள்ளனர். நாதன் கோவிலுக்கு ஒரு மைல் கிழக்கே நந்திவரம் என்று இப்போதும் உள்ளது. நந்திபுர விண்ணகரம் என்ற பெயர்கொண்ட அந்தத் திருப்பதியைத் திருமங்கை மன்னன் பாடிய பாசுரத்தில்

> "நந்திபணி செய்த நகர் நந்திபுர விண்ணகரம்
> நண்ணுமனமே"

என்று காண்பதே அதற்கு ஆதாரம். அது சோழ நாட்டின் முக்கிய நகரமான பழையாறையின் பாகமாகவோ புறப்பகுதியாகவோ இருந்திருத்தல் வேண்டும். பாண்டியர்கள் உட்படத் தமிழ் மன்னர்கள் அனைவரும் பல்லவ மல்லனை அங்கே முற்றுகையிட்டிருந்தனர் என்று முன்னாளில் கருதி வந்தது அந்தக் கூற்றை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. எது என்பதை நிச்சயிக்கப் போதுமான ஆதாரங்கள் இப்போது இல்லை.

அடுத்தபடியாக உதய சந்திரன் நிம்ப (வனம்) (அதாவது வேப்பங்காடு) சூதவனம் (மாங்காடு), சங்கர கிராமம், வநலுபுர், நெல்வேலி, சூருவழுந்தூர் முதலிய போர்க்களங்களில் பல்லவன் பொருட்டுப் பல தடவை சத்துருக்களின் சைனியத்தை வெற்றிகொண்டானும். அந்த இடங்களில் அவன் யார் யாருடன்

சண்டைபோட நேர்ந்ததென்பது விவரிக்கப்படவில்லை. அவன் எந்த எந்த ஊர்களில் வெற்றிகொண்டான் என்பது பொதுவாக இவ்விடம் உரைக்கப் பட்டிருப்பதாகவே இதைக் கொள்ளவேண்டும். நெல்வேலிப் போர் அடுத்தபடி தனியாக விவரிக்கப்பட்டிருப்பதே இதை உணர்த்தும். இவ்விடம் குறிக்கப்பட் டுள்ள ஊர்கள் எவை என்பதும் சரியாக நிச்சயிக்கப் பெறவில்லை.

மூன்றாவதாக அவன் சங்க சேனாபதியுடன் நெல்வேலியில் போரிட்டு வெற்றி கொண்ட செய்தி காணப்படுகிறது. பழைய ஆசிரியர்கள் அந்தப் பெய ரைச் சபாசேனாபதி என்று கொண்டு, மேலே கூறப்பட்ட நான்காம் நிகழ்ச்சி யுடன் இதனை இணைத்து ஒன்றாக்கிக் காட்டுவர். மூலத்தில் 𑌶𑌂𑌵𑌰𑌸𑍇𑌨𑌾𑌪𑌤𑌿 என்றிருப்பதை டாக்டர் ஹுல்ஷ் 𑌶𑌙𑍍𑌕𑌰𑌸𑍇𑌨𑌾𑌪𑌤𑌿 என்று திருத்தியுள்ளார். சங் கரன் என்ற பெயர் கொண்டவனாக இருக்குமானால் அந்தப் பெயர் 𑌶𑌙𑍍𑌕𑌰 என்றே இருத்தல் வேண்டும். நாம் மேலே (ராயக் கோட்டைச் சாசனம்) பல்லவ மல்ல னுக்கும் அவனுக்குப் போட்டியாக நின்ற ஸ்கந்த சிஷ்யனுக்கும் இடையில் நடந்த போரில் நந்தி என்ற மறு பெயர் கொண்ட சங்க பாலனாகிய மாவலி வாணரசன் என்பான் ஸ்கந்த சிஷ்யன் பக்கத்தில் நின்று பல்லவ மல்லனுக்கு எதி ராகப் போரிட்டான் என்பதைக் காட்டியிருக்கிறோம். அந்தச் சங்க பாலனே இவ் விடம் குறிக்கப்பட்டவன் போலும். அவன் ஸ்கந்த சிஷ்யனுக்கு அடங்கியவன் என்பதும் தெளிவாகும்.

இந்தப் போர் நடந்த நெல்வேலி எது என்பது பற்றி ஆராய்ச்சியாளர் களிடையே பலத்த விவாதம் உண்டு. பல்லவ மல்லனுடன் சம காலத்தவராக இருந்தவரென்று கருதப்படும் வைஷ்ணவ அடியாரான திருமங்கை மன்னன் காஞ்சிபுரத்தில் இப்போது வைகுண்டப் பெருமாள் கோயில் என்று வழங்கப் பெறும் பரமேச்சுரவிண்ணகரத்தின் மீது பாடிய பதிகத்தில்,

"விடைத்திறல் வில்லவன் நென்மெலியில்
வெருவச் செருவேல் வலங்கைப் பிடித்த
படைத்திறல் பல்லவர் கோன் பணிந்த
பரமேச்சுர விண்ண கரமதுவே"

என்று கூறியிருக்கிறார். உதய சந்திரன் வெற்றி கொண்ட நெல்வேலியே ஆழ்வா ரால் நென்மெலி என்று குறிக்கப்பட்டிருப்பதென்று ஆராய்ச்சியாளர்களில் சிலர் கருதுவர். நென்மெலிப் போரிலே பல்லவன் சேரனை (வில்லவனை) வெற்றி கொண்டான் என்று குறிக்கப்பட்டிருப்பதால், அந்த ஊர் சேர நாட்டை ஒட்டிய

தாக இருத்தல் வேண்டுமென்றும் அது திருநெல்வேலியாகவே இருக்கலாம் என்றும் சிலர் கருதினர். [2] நெல்வேலிப் போர் சபரராஜனை உதயணனோடு இணைத்துக் கூறப்பட்டாலும், சபரர் என்பார் ஒரிஸ்ஸாவில் உள்ள கஞ்சம் மாவட்டம் மகேந்திர மலைப்பகுதியில் இப்போது வாழும் சவரர் என்னும் ஆதிவாசிகள் எனக் கருதப்பெற்றதாலும், நெல்வேலி அந்தப் பக்கத்தில் உள்ள ஓர் ஊராக வேண்டும் என்று ஓர் ஆசிரியர் கருதினர். [3] நெல்வேலிப் போரில் வென்றவர்களெனப் பாண்டியர்களிலும் சிலர் புகழப்பட்டிருக்கிறார்கள். முக்கியமாக அரிகேசரி நெடுமாறனைச் சொல்லலாம். சிவனடியார்களுள் ஒருவனை அவனைச் சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம் திருத்தொண்டத் தொகையில் சேர்த்து உரைக்கும் போது, "நெல்வேலி வென்ற" என்னும் அடைமொழியுடனேயே குறிப்பிடுகிறார். பத்துப்பாட்டில் ஒன்றான மதுரைக் காஞ்சியின் ஆசிரியர் மாங்குடி மருதனார் பாட்டுடைத் தலைவனை தலையானங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனும் நெல்லின் பெயராகக் கொண்ட ஓர் ஊரில் பெருவெற்றி கொண்டான் என்று கூறியிருக்கிறார். பாண்டிக் கோவையிலும் இந்தப் போரைப் புகழ்ந்துரைக்கும் பாடல்கள் உள்ளன. இந்த மூன்று போர்களும் வெவ்வேறு காலங்களில் நடந்தனவே எனினும், ஒரே இடத்தில் நிகழ்ந்தனவென்றும் எண்ண வேண்டியிருக்கிறது. [4]

அந்த நாளிலே வகாராந்தத்துக்கு மகரம் போலியாக வழங்கப்பட்டு வந்திருக்கிறது. தேவாரத்திலே செவ்வானம் என்பது செம்மானம் என்றும், சாசனத்தில் வீசிய என்பது 'மீசிய' எனவும் ஆளப் பெற்றிருப்பதை நாம் அறிவோம். அதன்படி நென்மெலி என்பதை நெல்வேலியின் போலி அல்லது வேறு வடிவமாகக் கொள்ளலாம்.

அரிகேசரி நெடுமாறனும் நெல்வேலிப் போரிலே வில்லவன் அல்லது சேரனையே வெற்றி கொண்டான் என்று சின்னமனூர்ப் பெரிய சாசனத்திலே குறிக்கப்பட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது. [5] இவற்றைக் கொண்டு உதய

2. ஜர்னல் ஆப் ஓரியண்டல் ரிஸர்ச், தொகுதி 5. பக்கம் 79.

3. ஆர். கோபாலன் ஆங்கிலத்தில் எழுதிய 'காஞ்சிப் பல்லவர் வரலாறு' (History of the Pallavas of Kanchi) பக்கம் 125

4. சுவர்ணபூமியும் தமிழ்நாடும் என்ற வரிசையில் இரண்டாவது தொகுதியான 'தீவாந்தரப் பிரதேசங்களிலே பழைய காலத்துப் பாண்டியர்கள்' என்ற நூலில் இது விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

5. தெ. இ. சாசனங்கள், மூன்றாம் தொகுதி பக்கம் 441 முதல்.

சந்திரன் வெற்றி கொண்ட நெல்வேலிப் போர் கடற் படையின் உதவி கொண்டு திவாந்தரப் பிரதேசத்தில் நடைபெற்றதாகக் கொள்ளலாம். மாவலிவாண ராஜனை நந்தியைப் புகழ்வனவாக யாப்பருங்கலவிருத்தியில் மேற்கோள் காட்டப் பட்ட பாடல்களிலும் அவன் கடலைக் கடைந்து அமுதமும் திருவும் அடைந்தான் என்று காணப்படுகிறது. அவன் கடற்போர் நடத்தி வெற்றி கண்டதையே உணர்துவதாகும். அவை ஒரே போரின் வெவ்வேறு கட்டங்களை உணர்த்துவன போலும்.

நான்காவதாக உதயசந்திரன் சபரமன்னனான உதயணனுடன் போரிட்டு மயில் தோகையால் அலங்கரிக்கப்பெற்ற அவனுடைய கண்ணுடித் துவஜத்தைக் கைப்பற்றினன் என்பது கூறப்பட்டுள்ளது. சபரர்கள் யார் என்பது விளங்க வில்லை என்பதை நாம் மேலே குறிப்பிட்டிருக்கிறோம். அவர்களுடைய துவஜம் மயில் தோகையால் ஆனது என்பது குறிப்பிடத்தக்கது. அத்தகைய துவஜம் ஒன்றைத் திவாந்தரப் பிரதேசத்திலே ஓர் அரசு கொண்டிருந்தது சீன தேசத்து வரலாறுகளிலிருந்து தெரிகிறது.[6] சீன மொழியில் பெயர்த்து எழுதப்பெற்ற அவர்கள் பெயரைக் குறு என்றும் குறுவேசாலி என்றும் உருவாக்க முடியும். நிருபதுங்கவர்மன் ஆட்சியில் வழங்கிய வாகூர்ச் செப்பேடுகளில் கண்ட தானத்தை வழங்கிய வேசாலிப் பேரரையன் குருகுலத்தில் பிறந்தவன் என்று கூறப்பட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது. பர்மாவிலே அரக்கான் கடற்கரைப் பிரதேசத்திலே முன்னுளில் வேசாலி என்ற பெயர் கொண்ட நாடொன்று இருந்த தென்பதையும் நாம் அறிவோம். அந்தப் பிரதேசத்திலே ஸபரை அல்லது சபரே என்ற பெயர் கொண்ட மக்கள் சிலர் வாழ்ந்து வந்தனர் என்று கி. பி. இரண்டாம் நூற்றுண்டில் டாலமி (Ptolemy) என்னும் யவன ஆசிரியர் எழுதிய 'பூமி வர்ணனை'யில் குறிப்பிட்டிருக்கிறார். தமிழ்நாட்டிலும் தென் ஆர்க்காடு ஜில்லாவின் தென் பகுதி முன்னுளிலே வேசாலிப்பாடி என்று பெயர் பெற்றிருந்தது. திவாந்தரப் பிரதேசத்து மக்கள் இவ்விடம் வந்து தங்கியதாலேயே அந்தப் பகுதிக்கு இந்தப் பெயர் ஏற்பட்டது என்னலாம்.[7]

இதற்கு மேல் உதயசந்திரன் வட திசையிலும் வெற்றி கொண்டான் என்று சாசனம் கூறுகிறது. அந்தப் பகுதியை டாக்டர் ஹுல்ஷ் பின்வருமாறு மொழி பெயர்த்திருக்கிறார்: "வட திசையிலும் (அவன்) பிரபலமடைய வேண்டு

6. Groeneveldi 'Notes on the Malay Archipelago and Malacca compiled from chinese sources included in the 'Essays relating to Indo-china', Second Series, Vol. I. (Crubuer's Oriental Series, London.) 1887, pp. 241-2.

7. சுவர்ணபூமியும் தமிழ்நாடும் என்ற வரிசையில் முதற் புத்தகம் தென் கிழக்கு ஆசியாவில் காஞ்சிப் பல்லவர்கள் என்ற நூலில் வேசாலி வம்சம் என்ற கட்டுரை பார்க்க.

மென்ற விருப்பத்தோடு அசுவமேதக் குதிரையின் பின்னல் ஓடிக்கொண்டிருந்த நிஷாதர் தலைவனை பிரிதிவி வியாக்கிரனைத் தொடர்ந்து சென்று வெற்றி கொண்டு, விஷ்ணு ராஜனுடைய நாட்டினின்றும் வெளியேற அவனுக்குக் கட்டளையிட்டு, அந்த நாட்டைப் பல்லவனுக்கு அடிமைப்பட்டதாகச் செய்து (ஸாம் ராஜ்யத்துடன் சேர்த்து), காந்தி நிறைந்து குற்றமில்லாத முத்துக்களாலான மாலைகள் பலவற்றையும் எண்ணற்ற பொற்குவியல்களையும் யானைகளையும் கைப் பற்றினன்.

இவ்விடம் குறிக்கப்பெற்ற விஷ்ணு ராஜன் வேங்கி நாட்டுக் கீழைச் சாளுக்கிய வம்சத்து அரசனை மூன்றும் விஷ்ணுவர்த்தனன் (சுமார் கி. பி. 718–752) என்றே ஆராய்ச்சியாளர்கள் கருதுவர். நிஷதபதி என்று சாசனத்தில் உள்ளதை நிஷாதபதி என்று திருத்திப் பிருதிவி வியாக்கிரனை வேடர் தலைவர் களுள் ஒருவனுகவும் கொள்வர். அவனைக் கீழைச் சாளுக்கியர்களுக்கு அடங்கிய வனுகவும் கருதுவர். இவ்விதம் அவர்கள் கருத்துப்படி, 'பிருதிவி வியாக்கிரன் என்ற வேட்டுவத் தலைவன் புகழடைய வேண்டுமென்ற ஆசையால் அசுவமேதக் குதிரையைப் பின் தொடர்ந்து சென்றுகொண்டிருந்தான். [8]

உதய சந்திரன் அவனைத் தொடர்ந்து சென்று முறியடித்து, கீழைச் சாளுக்கிய நாட்டினின்றும் அவனை வெளியேற்றி அந்த நாட்டை பல்லவ ஸாம் ராஜ்யத்துடன் சேர்த்து விட்டான்; இன்னும் முத்து மாலைகள், யானைகள், பொன் முதலியனவற்றைக் கைப்பற்றிக் கொணர்ந்து தன் அரசனுக்கு அளித் தான்' என்பர்.

அதிலே அசுவமேதக் குதிரையை அனுப்பியவன் யார் என்பது தெளி வாகக் குறிக்கப் பெறவில்லை.

டாக்டர் வே. ராகவன் உதவியுடன் ஸம்ஸ்கிருதப் பகுதியிலே சில திருத் தங்களைச் செய்து டாக்டர் என். வேங்கடரமணய்யா பின் வருமாறு மொழி பெயர்த்துள்ளார்: [9]

"வட திசையிலும் அவன் (உதய சந்திரன்) அசுவமேதக் குதிரையின் பின்னல் ஓடிக்கொண்டிருக்கும் நிஷாதபதியான அந்தப் பிருதிவி வியாக்கிரனை பின்தொடர்ந்து சென்று தோற்கடித்தான்; விஷ்ணு ராஜன் நாட்டைப் பல்லவ

8. பல்லவனுடைய ஆதிக்கியத்தை வேங்கி மன்னன் ஏற்றுக்கொண்டானுயினும் அவன் கீழ்ச் சிற்றரசனை நிஷாதபதி அதை ஏற்றுக்கொள்ளவில்லையாம்.

9. டாக்டர் என். வேங்கடரமணய்யா, "வேங்கி நாட்டுக் கீழைச் சாளுக்கியர்" (ஆங்கிலம்) பக்கங்கள் 74-6.

னுக்கு உரிமையானதாகச் செய்தான். (அதாவது விஷ்ணு ராஜனைத் தோற்கடித்து அவனுடைய நாட்டைப் பல்லவ ராஜ்யத்துடன் சேர்த்து விட்டான்; நிரவத்யர் முதலியவர்களைத் தன்னுடைய ஆதினத்தின் கீழ்க் கொணர்ந்ததோடு அவர்களிடமிருந்து அழகிய மாலைகளையும், ஏராளமான பொன்னையும், அநேகம் யானைகளையும் கைப்பற்றினான்."

நந்திவர்மனே அசுவமேதம் செய்வதற்காகக் குதிரையை அனுப்பினான் என்று அவர் கருதுகிறார். இன்னும் நிஷாதபதியான பிருதிவி வியாக்கிரன் நெல்லூர் மாவட்டத்தில் உள்ள உதயகிரிப் பிரதேசத்தில் வாழ்ந்து வந்த போயர் என்னும் மக்களின் தலைவன் என்றும், அவன் வேங்கிச் சாளுக்கியர்களுக்கு அடங்கியவன் என்றும், உதய சந்திரனோடு அவன் நடத்திய போரில் தோற்றதன் விளைவாகவே நெல்லூர் மாவட்டத்தில் அடங்கிய பிரதேசம் வேங்கியின் ஆட்சியிலிருந்து பல்லவர்களுக்கு மாறியது என்றும் கருதுவர். நிரவத்யன் என்பது ஒருவருடைய பெயரே ஆகும்; ஆயினும் அது எவருடைய இயற் பெயரும் அன்று, சாளுக்கிய மன்னர்களில் சிலர் தரித்திருந்த விருது ஆகும். வேங்கிச் சாளுக்கியர்களிலே மேலே குறிப்பிட்ட விஷ்ணு வர்த்தனனுக்கு முன்னால் அரசு புரிந்த அவன் அண்ணன் இரண்டாம் ஜயஸிம்மனும், அதே சமயத்தில் வாதாபியில் அரசு புரிந்த விஜயாதித்தியனும் அந்த விருதைத் தரித்திருந்தார்கள். பல்லவ மல்லன் ஆட்சிக்கு வருவதற்கு நீண்ட காலம் முன்னதாகவே ஜயசிம்மன் காலமாகி விட்டதால், இவ்விடம் குறிக்கப்பட்டவன் வாதாபிச் சாளுக்கியனான விஜயாதித்தியனாக இருத்தல் வேண்டுமென்று கருதினர்.

நாம் மொழி பெயர்த்தபடி இந்தப் பகுதி பின்வரும் மூன்று வெற்றிகளைக் குறிப்பனவாகும்.

1 "வட திசையிலும் (உதய சந்திரன்) புகழ் அடைந்து வரும் நிஷதபதியான பிருதிவி வியாக்கிரனை அசுவமேதக் குதிரையைப் பின்தொடர்வது போலத் தொடர்ந்து சென்று வெற்றி கொண்டான்.

2 விஷ்ணு ராஜனுடைய நாட்டினின்றும் பல்லவனைக் கௌரவிக்கக் கட்டளையிட்டான்.

3 நிரவத்யன் முதலியவர்களையும் சாந்தி வீசும் முத்து மாலைகளையும் அளவற்ற பொன் குவியல்களையும் யானைகளையும் கைப்பற்றினான்.

இதில் அசுவமேதக் குதிரையைப் பற்றிய பிரஸ்தாபம் ஓர் உதாரணமாகவே காணப்படுகிறது. அசுவமேதக் குதிரையைப் பின்தொடர்ந்து செல்வது போல, பிருதிவி வியாக்கிரனை உதய சந்திரன் தொடர்ந்து சென்று போரிட்டு வெற்றி கொண்டான் என்று கூறப்பட்டுள்ளது. அதிலிருந்து பல்லவ மல்லன்

அசுவமேத யாகம் செய்தான் என்று சொல்வதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை என்பது தெளிவாகும். ஒருவனைப் பின்தொடர்ந்து சென்று போரிட்டு வெற்றி கொள்வதை அறிவிப்பதற்கு மற்ற உதாரணம் எதையும் கூறாமல், அசுவ மேதக் குதிரையை உவமித்துக் காட்டுவதால் பிரசஸ்தி எழுதிய கவி ஏதோ ஒன்றை வெளிப்படையாகச் சொல்லாமல், குறிப்பாக உணர்த்திச் செல்கிறாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. அதை அறிந்து கொள்வதற்கு நிஷதபதியைப் பற்றியும் அறிந்து கொள்ளவேண்டும்.

சாசனத்திலே அவன் *நிஷதபதி* என்றே குறிக்கப்பட்டுள்ளான். அதை *நிஷாத* என்று மாற்றி அவனை வேட்டுவ அரசனாக ஆசிரியர்கள் கொள்வர். அதற்குப் பதிலாக நிஷய என்றே கொண்டோமானால், அவன் நிஷத நாட்டு அரசனாக ஆவான். நிஷத நாட்டு அரசன் என்று புராணப் பிரசித்தமான நள மஹாராஜன் வம்சத்தில் தோன்றியவர்களென்று கூறிக்கொள்ளும் அரசர்கள் சிலரைப் பற்றி நாம் அறிவோம். நள வம்சத்தைச் சேர்ந்த மன்னர்களுடைய கல்வெட்டுகளில் சிலவும் விதர்ப்பத்துக்குக் கிழக்கே மகேந்திரமலை பிரதேசத்தில் கோராப்பட்டுச் சீமையில் கிடைத்துள்ளன.[10] அவற்றுள் ஒன்றிலே பிருதிவி வியாக்கிரனைப் பற்றிய பிரஸ்தாபமும் காணப்படுகிறது. எனினும் அது காலத்தால் சிறிது முற்பட்டதாகக் காண்கிறதென ஆராய்ச்சியாளர்கள் கூறுவர். இவைகளைக் கவனித்தால் உதய சந்திரன் வெற்றி கொண்ட நிஷதபதியான பிருதிவி வியாக்கிரன் நள வம்சத்தைச் சேர்ந்த மன்னன் ஒருவனாகவே இருத்தல் வேண்டுமென்பது பெறப்படும்.

அவர்கள் ஆட்சி புரிந்த நாடு வேங்கிக் (கீழை)ச் சாளுக்கியர்களுடைய ராச்சியத்தை ஒட்டி வடக்கே இருந்தது. வேங்கிச் சாளுக்கியர்கள் தங்கள் தாயாதியாகிய வாதாபிச் சாளுக்கியர்களுடைய ஆதிக்கியத்துக்கு அடங்கியவர்கள். வாதாபியின் ஆட்சிக் காலம் வரையில் அவர்கள் அவ்விதமே இருந்தார்கள். வாதாபி அரசை நிலைக்கச் செய்த முதல் அரசனான முதலாம் கீர்த்திவர்மன் நளர்களையும் வெற்றி கொண்டான் என்று சாசனங்களில் காணப்படுகிறது. ஆகவே நிஷத அரசனான பிருதிவி வியாக்கிரன் சாளுக்கியர்களுடைய ஆதிக்கியத்துக்கு உட்பட்டவன் என்னலாம்.

பிருதிவி வியாக்கிரன் யாராக இருந்தாலும் அவன் பல்லவ மல்லனுடைய எதிரியின் பக்கம் சேர்ந்தவன் என்பது நிச்சயம். உதய சந்திரன் அவனைப் பின்

10. கர்நாடக – ஆந்திர எல்லையில் பெல்லாரி, கர்நூல் மாவட்டங்களை ஒட்டிய பகுதி முன்னாளிலே நளவாடி என்று வழங்கப்பெற்று வந்ததாகக் கூறுவர். (பம்பாய் கெஜட்டியர், முதல் வால்யம், இரண்டாம் பாகம் பக்கம் 335–6)

தொடர்ந்து வெற்றி கொண்டான் என்று கூறப்பெறுவதால், அந்தப் போர் தொடர்ந்து பல இடங்களிலும் நிகழ்ந்தது எனலாம். அசுவமேதக் குதிரையைப் பின் தொடர்வது போலப் பிருதிவி வியாக்கிரனை உதயசந்திரன் பின் தொடர்ந்தான் என்று கூறப்பட்டிருப்பதற்கு, பிருதிவி வியாக்கிரன் ஓர் அசுவமேதக் குதிரையைப் பின் தொடர்ந்து சென்றான் என்றும், அந்தக் குதிரையைப் பின்னால் தொடர்வது போலவே உதய சந்திரனும் பிருதிவி வியாக்கிரன் பின்னால் சென்று, ஒவ்வோர் இடத்திலும் அவனுடன் போரிட்டு வெற்றி கொண்டான் என்றும் பொருள் கொள்ள முடியும். அவ்விதமானால் அசுவமேதத்தைப் பல்லவ மல்லனுடைய எதிரிகளுள் ஒருவன் செய்ய விழைந்தான் என்றும், அவன் விடுத்த குதிரையைப் பிருதிவி வியாக்கிரன் தொடர்ந்து பாதுகாவலனாகச் சென்றான் என்றும் கொள்ள வேண்டும். சாளுக்கிய விக்கிரமாதித்தியன் அத்தகைய வேள்வி ஏதும் செய்ததாகத் தெரியவில்லை. அதற்குப் பதிலாக, பல்லவ ஸ்கந்தசிஷ்யன் ஏதோ ஒரு யாகத்தைச் செய்தவன் என்று ராயக்கோட்டைச் செப்பேட்டுச் சாசனம் அவனைக் 'கர்த்தா' எனப் புகழ்கிறது: சாதாரணமாகவே ஓர் அரசனைப் பற்றிக் குறிக்கும்போது அவன் யாகம் செய்தவன் என்று சிறப்பாக எடுத்துக் காட்டினால், அது அசுவமேதம், இராஜசூயம் போன்ற வெற்றியைக் கொண்டாடும் வேள்வியாகவே இருக்கும் எனலாம். அதுவும் பட்டத்துக்கு இருவர் போட்டியிட்டு வந்த அந்தக் காலத்துச் சூழ்நிலையை நோக்கினால், ஸ்கந்தசிஷ்யன் அசுவமேத யாகம் செய்தான் என்று கொள்வது தவறாகாது.

அப்பால் விஷ்ணு ராஜன் நாட்டினின்றும் பல்லவனைப் பெருமைப் படுத்திக் கௌரவிக்க உதயசந்திரன் கட்டளையிட்ட செய்தி காணப்படுகிறது. ஏதோ ஒரு விஷயத்தை இது தெளிவாகச் சொல்லாமல் சூசகமாய்க் குறிப்பதாகவே எண்ணத் தோன்றுகிறது. இன்னும் அதற்கு முன்னதாக பல்லவ மல்லன் சிறுமைப்பட்டிருந்தான் என்பதும் பெறப்படும். ஏதோ ஒரு காரணத்தால் அவன் சாளுக்கியர்களிடம் சிக்கி விஷ்ணு ராஜனுடைய நாட்டில் சிறைப்பட்டிருந்தான் என்றும், அந்தப் பிரதேசத்தை வென்று பல்லவ மல்லனை சிறை மீட்டு, அந்த இடத்திலிருந்து உரிய மரியாதைகளுடன் மன்னனைக் காஞ்சிக்கு அழைத்துச் செல்ல உதயசந்திரன் கட்டளையிட்டான் என்றும் கொள்ளலாம். ஒருகால் மன்னன் பிருதிவி வியாக்கிரனிடம் சிக்கி அவனால் போகுமிடம் எல்லாம் அழைத்துச் செல்லப்பட்டான் போலும். அதனாலே உதயசந்திரனும் பிருதிவி வியாக்கிரனைப் பின் தொடர்ந்து சென்று, அங்கங்கே போரிட நேர்ந்ததோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

இந்தச் சந்தர்ப்பத்திலே மற்றொன்றையும் கவனிக்க வேண்டும். இதே காலத்தில் வாதாபி அரசனாக இருந்த இரண்டாம் விக்கிரமாதித்தியனுடைய தந்தை விஜயாதித்தியனும் ஒரு சமயம் எதிரிகளிடம் சிக்கிச் சிறைப்பட்டிருந்தானாம். சாளுக்கியர்களுடைய செப்பேடுகளிலேயே இந்தச் செய்தி காணப்படுகிறது. [11] அவனிடம் தோற்று ஓடிப்போன எதிரிகள் வழி நடுவில் ஓர் இடத்தில் மறைந்திருந்து, பின்னால் அவர்களைத் துரத்தி வந்த சாளுக்கிய அரசன் விஜயாதித்தியனைச் சுற்றி வஞ்சகமாக வளைத்துப் பிடித்துச் சிறை செய்து, தங்களுடனே அழைத்துச் சென்றனராம். அது விதியின் சதியே என்று சாசனம் கூறுகிறது. அப்பால் சிறிது காலம் பொறுத்து, அவன் பிறருடைய உதவி ஏதும் இல்லாமல் வத்ஸராஜன் போலச் சிறையிலிருந்து தப்பி வந்து, தன் நாட்டை அடைந்தானாம். அவன் சிறையிடப்பட்டது உண்மை என்பதை உணர்த்துவதே போல, அவனுடைய சாசனங்கள் சுமார் பத்து ஆண்டுக் காலத்துக்குக் கிடைக்கவில்லை என்பதும் கவனிக்கத்தக்கது. அவனைச் சிறை செய்த எதிரிகள் யார் என்பது சாசனங்களில் குறிக்கப் பெறவில்லை. எனினும் சந்தர்ப்பங்களை ஒட்டிப் பார்த்தால், அவர்கள் பல்லவர்களாகவே இருத்தல் வேண்டும் என்னலாம். அந்தக் கறையைப் போக்குவதற்காகவே சாளுக்கியர்கள் பல்லவ மல்லனைச் சிறை செய்தனர் என்றும் கொள்ளலாம்.

இந்தப் பின்னணியில் காஞ்சீபுரம் வைகுண்டப் பெருமாள் கோயிலில் காணும் வரலாற்றுச் சிற்பங்களில் சில கட்டங்கள் கவனத்துக்கு உரியவை. பல்லவ மல்லனுக்கு உதவியாக உதய சந்திரன் நடத்திய போர்களை விளக்குவனவாக டாக்டர் மீனாக்ஷி கருதும் சிற்பங்களில் இரண்டு கட்டங்களைப் பின் வருமாறு அவர் வருணிக்கிறார்: [12]

கட்டம் 14. இந்தக் கட்டமும் இரு பிரிவுகளாக உள்ளது. எனினும் ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்ச்சிகளை விளக்குவனவாகக் காண்கிறது. மேல் பிரிவின் ஒரு புறத்தில் நீண்ட வாளைக் கையில் ஏந்திக் கொண்டு நந்திவர்மன் உட்கார்ந்திருக்கிறான். அவனுக்கு வலது புறத்தில் (போர்வீரன்) ஒருவன் உட்கார்ந்திருக்கிறான். எதிரிலே இரு வீரர்கள் மண்டியிட்டு அரசனிடம் ஏதோ முக்கியமான செய்தியை அறிவிப்பவர்களைப் போலக் காண்கின்றனர். (படம் 18–3)

11. டாக்டர் பிளீட் எழுதிய 'கர்நாடக ஜில்லாக்களின் அரச பரம்பரைகள் (Dynasties of the Kanarese Districts.) பம்பாய் கெஜட்டியர், முதல் தொகுதி, இரண்டாம் பாகம் பக்கம், 371.

12. டாக்டர் மீனாக்ஷி "காஞ்சி வைகுண்டப் பெருமாள் கோயிலில் காணும் வரலாற்றுச் சிற்பங்கள்' (Historical Sculptures in the Vaikuntha-Perumal Temple Kanchi by Dr. C. Minakshi- Memoirs of the Archaeological Survey of India; No. 63.) பக்கம் 39.

"இவர்களுக்குப் பின்புறமாக மேலும் மூவர் நின்று கொண்டிருக்கிறார்கள். அடிப் பகுதியில் முன் கட்டத்தைச் சேர்ந்த போர் வீரர்களில் ஐவர் அணிவகுத்துச் செல்வதே போல் உள்ளனர். அவர்கள் குதிரை மீது அமர்ந்து செல்லும் ஒருவனைப் பின்பற்றுவதே போல் உள்ளனர். அழகனாகவும் இளைஞனாகவும் குதிரை மீது அமர்ந்து செல்லும் அவ்வீரன் உதய சந்திரனே போலும். போட்டியிடும் சித்திர மாயனுடைய சேனையை எதிர்த்துச் செல்வது போலக் காண்கிறான் அவன்.

* * *

14-ஆம் கட்டத்தின் ஒரு பகுதியும் 15-ஆம் கட்டம் முழுவதும் இந்த நிகழ்ச்சிகளை (அதாவது பல்லவ மல்லனை உதயசந்திரன் நந்திபுரம் முற்றுகையிலிருந்து மீட்ட நிகழ்ச்சியை)ச் சித்திரிப்பவைகளாக உள்ளன. 14-ஆம் கட்டத்தின் மேல் பாதியின் வலது கோடியில் மூவர் உள்ளனர். அவர்களுள் ஒருவனை மற்றொருவன் ஒரு தூணின் பின்னாலிருந்து பிணைத்துக் கொண்டிருக்கிறான். அவ்விதம் பிணைக்கப் பெறுபவன் தப்பி ஓடி விடாதபடி தடுப்பதே போல, வலது கையை நீட்டிக்கொண்டு மூன்றாமவன் எதிரிலே அமர்ந்திருக்கிறான். நந்திவர்மனுக்கு வேண்டிய ஒருவன் துரதிர்ஷ்டவசமாக எதிரிகளிடம் சிக்கி இருவரால் கட்டப்படுவதையே இந்தச் சித்திரம் எடுத்துக் காட்டுகிறதாக எண்ணலாம். இந்தக் காட்சிக்குக் கீழே மூன்று வீரர்கள் அமர்ந்திருக்கிறார்கள்."

பிடிபட்டவன் நந்திவர்மனுடைய கட்சியைச் சேர்ந்த ஒருவன் என்பதைக் காட்டிலும் நந்திவர்மனாகவே இருத்தல் கூடும். ஊன்றிக் கவனித்தால் இந்தச் சிற்பங்கள் மேலே நாம் விவரித்ததைச் சித்திரிப்பனவாகவே உள்ளன என்று கருதலாம்.

அடுத்தபடியாக, நிரவத்யன் முதலிய பிரமுகர்களையும் பொன்மணி முதலியவற்றையும் உதயசந்திரன் கைப்பற்றிய செய்தி காணப்படுகிறது. நிரவத்யன் என்னும் பெயர் சாளுக்கிய விஜயாதித்தியனையே குறிப்பதாக இருத்தல் வேண்டுமென்று டாக்டர் வேங்கடரமணய்யா விளக்கியதை நாம் மேலே காட்டியிருக்கிறோம்.

வைகுண்டப் பெருமாள் கோயில் சிற்பங்களின் விளக்கக் குறிப்புகளிலே பத்தாவதாக உள்ளது நந்திவர்மனுக்கு அபிஷேகம் செய்யப்பட்டதை கூறுகிறது. அடுத்த 11-வது கட்டத்திலே சாளுக்கியரைப் பற்றிய குறிப்பு ஏதோ உள்ளது. எனினும் எழுத்துகள் சிதிலமாக உள்ளமையால் விவரத்தை அறிய முடியவில்லை. இங்கே பெருமானடிகளாகிய ராஜ்யஞ் செய்யாநிற்க......மந்திரி

களும் மூலப் பிரகிருதியும்சி.........திகையும் பராக்ரமோத்ஸாகமுடைய ஸ்ரீ சாலு......ள்க என்று...இடம். இந்தக் கட்டத்தை டாக்டர் மீனுக்ஷியின் பின்வருமாறு வருணிக்கிறுர்: [13]

"11-ஆம் கட்டம் நடுவிலே படுக்கையாக ஒரு கரை போட்டு இரண்டு பாகமாக பிரிக்கப்பட்டுள்ளது. மேலே உள்ளது மூன்று பிரிவுகள். முதல் பிரிவில் மந்திரிகளும் மூலப் பிரகிருதிகளும் உள்ளனர் போலும். அடுத்ததிலே நந்திவர்மன் உட்கார்ந்திருக்கிறுன். சாளுக்கியர்களால் ராச்சியத்திற்கு ஏற் படக்கூடிய கெடுதல்களே அவனிடம் முதல் மந்திரி எடுத்துக் கூறுகிறுர் போலும். அவர்களுக்குப் பின்புறமாக ஒரு தூணுக்குப் பக்கத்தில் வேறு சில ரும் நின்றுகொண்டிருக்கிறுர்கள். அடிப் பகுதியில் போர் வீரர்கள், பிராம் மணர்கள், அரசனுடைய மந்திரிகள் ஆகியோர் கூடியிருப்பதைக் காட்டு கிறது. பிராம்மணர்கள் உட்கார்ந்திருக்கிறுர்கள். மற்றவர்கள் நிற்கிறுர்கள். அவர்கள் கொண்டிருக்கும் கவலே ஒவ்வொருவர் முகத்திலும் பிரதிபலிக் கிறது. (படம் 20-1)

* * *

"12-ஆம் கட்டத்தின் மேல் பகுதியில் போர் வீரர்கள் பணிவுடன் சூழ்ந்து நிற்கும் ஒருவன் எதிரிலே மற்றுெருவன் மண்டியிட்டிருக்கிறுன். அவனுக்குப் பின்புறமாக இடது கையை உயரத் தூக்கியபடி வீரன் ஒருவன் நின்றுகொண் டிருக்கிறுன். அடிப் பகுதியிலே ஆறு வீரர்கள் வரிசையாக அணிவகுத்து நிற் கின்றனர். அவர்களுள் சிலர் வாளேத் தோள் மீது ஏந்தியபடி உள்ளனர். மண்டியிட்டிருக்கும் உருவம் சாளுக்கிய மன்னனுக்குப் பணியும் நந்திவர்மனுக இருக்கலாம். சிற்பத்தில் குறிக்கப்பட்டது அரசனு அல்லது அவன் சேனுதி பதியா என்பது தெரியவில்லே. *(படம் 18-1)

சிற்பமும் விளக்கக் குறிப்பும் இதற்கு நேர்மாறுன ஒன்றைத் தெரிவிப்ப தாகக் கொள்ளலாம். இரண்டு ஆண்டுகளுக்கு முன் யுவராஜனுக இருந்தபோது விக்கிரமாதித்தியன் காஞ்சியின் மீது படையெடுத்து வந்து- இரண்டாம் பரமேச் வர வர்மனிடம் திறை பெற்றுச் சென்றிருக்கிறுன். அதற்கு முன்னுல் இராஜ சிம்மன் ஆட்சி நீடித்த வரையில் சாளுக்கியர்களால் பல்லவர்களுக்கு ஏதும் செய்ய முடியவில்லே. இராஜசிம்மன் காலமானதும் கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடாமல் அவர்கள் காஞ்சியின் மீது தங்கள் ஆதிக்கியத்தைச் செலுத்து வதற்கு முயன்று வெற்றியும் கண்டார்கள். அரிதில் பெற்ற அந்த ஆதிக்கியம் மறுபடியும் கை நழுவாமல் இருப்பதற்குத் தக்க ஏற்பாடுகளேயும் அவர்கள் செய்

13. அதே நூலில்.

திருப்பர். பரமேச்வரவர்மனுக்குப் பிறகு பல்லவ மல்லன் வருவதற்கு முன்னதாகவே காஞ்சியில் பல்லவதிரையன் அரசனுக ஆட்சி நடத்தி வந்திருக்கிறன். அவன் தன் சேனையோடு பல்லவ மல்லனை எதிர்த்து யானைப் போர் நடத்தியிருக்கிறன். எனினும் அவன் நகர்ப் புறத்துப் போரில் பட்டு இறந்தான். அதற்குப் பிறகே பல்லவ மல்லன் நகரத்தை அடைந்து முடி சூட்டப் பெற்றுன். இறந்துபட்ட பல்லவதியரையன் சாளுக்கியர்களுடைய ஆதரவைப் பெற்றவனே என்னலாம். இன்னும் சாளுக்கியர்களுடைய பிரதிநிதி ஒருவன் பல்லவ ராஜ்யத்திற்குள், தலைநகரில் இல்லாவிட்டாலும் எங்காவது ஓரிடத்தில், நிச்சயம் இருந்திருப்பான். அவனையும் செயல் இழக்கச் செய்த பிறகே பல்லவ மல்லன் முடி சூட்டப் பெற்றிருப்பான். இவ்விதம் பல்லவமல்லன் அரசை முடி சூட்டப் பெற்றது சாளுக்கியர்களுக்குப் பேரிடியாகும்.

ஏறக்குறைய இதே காலத்தில் சாளுக்கிய மன்னனை விஜயாதித்தியன் காலகதி யடைந்தான். அவன் மகன் இரண்டாம் விக்கிரமாதித்தியன் அரசனுக முடி சூட்டப் பெற்றுன். அது நிகழ்ந்தது கி. பி. 733-34ஆம் ஆண்டு என்று சாளுக்கிய சாசனங்களிலிருந்து தெரிகிறது. இன்னும் அவன் முடி சூட்டப் பெற்றவுடனேயே தன்னுடைய குலத்துக்கு எதிரியானபல்லவனை வேரறுக்க நிச்சயித்து மிக்க அவசரத்தோடு துண்டக ராஷ்டிரத்துக்கு தன் படையை நடத்திச் சென்று தாக்கி, எடுத்த எடுப்பிலேயே பல்லவ அரசனை நந்திபோத்தவர்மனை ஓடிப்போகும்படி செய்தான் என்றும் கூறப்பட்டுள்ளது. இன்னும் அந்த வம்சத்து அரசர்களின் புகழை எல்லாம் களவாடி அபகரித்துத் தன்னுடையதாக்கிக் கொண்டவன்' என்று சாளுக்கிய சாசனத்திலே நந்திவர்மனை வருணிக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. அதிலிருந்து அவன் பல்லவ குலத்தில் பிறந்தவனே யாயினும் அரசுக்கு உரிமை பெற்றவன் அல்ல என்றே சாளுக்கிய அரசர்கள் கருதியது வியப்பிற்கு உரியது. நிரவத்யன் என்பது சாளுக்கிய விஜயாதித்தியன் விருதுகளுள் ஒன்றுகும். அவனுக்கு எதிராகப் பல்லவ மல்லன் நாட்டை அடைந்து, சாளுக்கியப் பிரதிநிதியை ஒடுக்கி, முடி சூட்டிக் கொண்டதையே சிற்பங்கள் உணர்த்துவனவாக உள்ளன.

ஒருகால் நிரவத்யன் என்பது அரசனுல் அளிக்கப் பெற்ற விருதைத் தாங்கிய சாளுக்கிய அதிகாரி ஒருவனைக் குறிப்பதாக இருக்குமாயின், அவன் யார் என்பது தெரியவில்லை.

அப்பால், காளி பகவதியால் காப்பாற்றப்பட்டு, வந்த காளி து[ர்க்]கத்லத உதய சந்திரன் உடைத்துக் கைப்பற்றிய செய்தி காணப்படுகிறது. அது எந்த இடம் என்பது தெளிவாக இல்லை. மதுரைக்கு நான்கு மைல் தூரத்தில் உள்ள

காளி காப்பான் என்னும் ஊராகவே இருத்தல் வேண்டும் என்று டாக்டர் மீனுகூஷி கருதுகிருர். துர்க்கம் என்பது அரண்வலி கொண்ட மலை உச்சியையே உணர்த்தும். அந்த விவரம் காளி காப்பானுக்குப் பொருந்தாது. அவ்விடத்தில் உதயசந்திரன் வெற்றி கொண்ட எதிரி யார் என்பதே தெளிவாக இல்லை. காஞ்சி புரம் போலவோ சமயபுரம் போலவோ பகவதி அம்மனுடைய சாந்தித்யம் நிறைந்த ஊராகவும் அரண்வலி கொண்ட மலைச்சிகரமாகவும் அது இருத்தல் வேண்டும். திருத்தணிக்கு அருகில் உள்ள நாராயணவனத்துக்கு மூன்றரை மைல் தூரத்தில் கெம்புலபாளையம் என்று வழங்கப்பெறும் ஊருக்குப் பக்கத்தில் இருந் திருத்தல் வேண்டும் என்று திருவேங்கடராமனும் ஸ்ரீநிவாசனும் கருதுவார்கள்.

பரமேச்சுவர விண்ணகரப் பதிகத்திலே,

தேம் பொழிற் குன்றெயில் தென்னவனைத்
திசைப் பச்செருமேல் வியந்தன்று சென்ற
பாம்புடைப் பல்லவர் கோன் பணிந்த
பரமேச்வர விண்ணகரமதுவே."

என்று திருமங்கை மன்னன் பாடியுள்ளதிலே காணும் குஜறெயில் என் பதும் அதுவே என்னலாம். அவ்விதமானல் பாண்டியனைப் பல்லவன் வெற்றி கொண்டான் என்பது கவனிக்கத்தக்கது.

கடைசியாக, அவன் மண்ணைக்குடி என்ற இடத்திலே பாண்டியனை வென்ற செய்தி காணப்படுகிறது. பரமேச்சுவர விண்ணகரப் பதிகத்திலே,

'நிரந்தவர் மண்ணையிற் புண்ணுகர்வேல்
நெடுவாயிலுகச் செருவில் முனநாள்
பரந்தவன் பல்லவர் கோன் பணிந்த
பரமேச்வர விண்ணகர மதுவே.'

என்று திருமங்கை மன்னன் பாடியதிலே காணும் மண்ணை என்பதும் மண்ணைக்குடி என்பதும் ஒன்றே என ஆசிரியர்கள் கருதுவர். அதைத் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள மணக்குடி என்ற ஊராகச் சிலர் கொள்வர்; செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள மண்ணிபாக்கம்எனக் கொள்வாரும் உண்டு.சோழர்கள் ஆட்சிகாலத்திலே மண்ணை என்ற சொல் மண்ணைக் கடக்கம் என்பதன் குறுகிய வடிவமாக அமைந்து, மான்ய கேடம் என்ற இராஷ்டிரகூடர் தலை நகரைக் குறித்து வந் திருக்கிறது. இன்னும் அவர்களுடைய ராச்சியத்தின் தென் பகுதியான கங்க வாடியில் மற்றொரு தலைநகரமாக அமைந்திருந்த மான்யபுரமும் மண்ணை

(மண்ணை) என்றே குறிக்கப்பட்டு வந்திருக்கிறது. அதனால் இவ்விடத்தில் குறிக்கப்பட்டுள்ள மண்ணையும் அதுவாகவே இருத்தல் வேண்டும் என்னலாம். தன்னுடைய ஆட்சியின் ஆரம்பக் காலத்திலே பல்லவ மல்லன் அவனுக்குப் பரம விரோதிகளான சாளுக்கியர்களுக்கு எதிராக இராஷ்டிரகூட வம்சத்து அரசனை தந்திதுர்க்கனுடன் இணைந்து தன்னுடைய போர்களை நடத்தி வந்தான் என்பதையே நாம் அறிவோம்.

மதுரைப் பாண்டியர்கள் பல்லவ மல்லனுக்கு எதிராக இருந்தாலும் அந்த வம்சத்தைச் சேர்ந்த ஜயந்தன் அல்லது சேந்தன் என்பவன் பல்லவ மல்லன் தந்தையான ஹிரண்யவர்மனுக்கு உறுதுணையாக நின்றான் என்பதை மேலே நாம் ராயக்கோட்டைச் செப்பேடுகளில் எடுத்துக் காட்டிய யாப்பெருங்கல விருத்தி மேற்கோட் செய்யுளிலிருந்து தெரிகிறது. ஜயந்தன் அல்லது சேந்தன் மங்கலபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆண்டு வந்தவன். அது மேலைக் கடற்கரையில் இப்போது மங்களூர் என்று வழங்கப்பெறுவதாகும். கொங்கணத்தின் தலைநகராகவும், பாண்டியர்களுள் நெருங்கிய தொடர்பு கொண்டு அவ்வம்சத்தின் ஒரு கிளையினரோ என்று எண்ணக்கூடிய ஆளுப மன்னர்களின் இராசமா நகரமாகவும், அது விளங்கியிருக்கிறது. இவைகளைக் கவனித்தால் கடைசி இரண்டு போர்களும் கர்நாடகப் பிரதேசத்தில் நிகழ்ந்தனவாக இருக்குமா என்று எண்ணத் தோன்றுகிறது.

சாசன பாடம்[1]

முதல் ஏடு—பின்புறம்[2]

1. ஸ்ரீ ஸ்வஸ்தி [।*] ஸுமேருகி [ரி*] ரிவ ஸுஸ்திர ப்ரவரபோமபலாவஸ
2. ஜமதுப[3] விலஸிதபெரவிபபராக நெதுஅப[4] ஸுராவஸிதராதுரா-
3. துதுயவாருரு முக்திப்ரதுழ வதாரிவ ஸஹ நஹாகிரிரவராஜடாயா
4. ரிண்டு ॥ [க*] ஸ்ரீராகநெகராணவிஷ்ணு வஞூவாய ராஜஷு ப்ரது: வ:ர

1. 'இந்தியன் ஆண்டிகுவரி' எட்டாம் தொகுதியில் வெளியான மசிப் படத்தின் உதவியுடன் பெயர்த்து எழுதப்பெற்றது.

2. இடதுபுறம் க என்று எண்ணிடப்பட்டுள்ளது.

3. ஜமதுப என்று வாசிக்கவும்.

4. அபழ உசா என்று பிரித்து வாசிக்க வேண்டும்.

5. 𑌸𑍍𑌥𑌿𑌤 [𑌃*] [illegible] [।*] [illegible] 𑌤𑌿𑌲𑌕𑌃 𑌪𑍍𑌰𑌥𑌿𑌤𑌃
[illegible]

6. [illegible] [।*] [௨*] [illegible]
𑌪𑌲𑍍𑌲𑌵𑌾𑌨𑌾

7. [𑌮] [illegible] 5 [illegible] 𑌪𑌲𑍍𑌲𑌵𑌾𑌨𑌾𑌮𑍍 [।*] [illegible]
[illegible] 6 [illegible]-

8. [illegible] 𑌪𑌲𑍍𑌲𑌵𑌾𑌨𑌾𑌮𑍍 [।௩*] [illegible]-

9. 𑌤 [illegible] 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑌿𑌃 𑌬𑍃𑌹𑌸𑍍𑌪𑌤𑍇[𑌃*]
𑌶𑌂𑌯𑍁𑌃 𑌶𑌂-

10. 𑌯𑍋 [𑌃] 𑌰𑌦𑍍𑌵𑌾𑌜𑌾 𑌭𑌰𑌦𑍍𑌵𑌾𑌜𑌾𑌦𑍍𑌰𑍋𑌣𑌃 7 𑌦𑍍𑌰𑍋𑌣𑌾[illegible]

11. [illegible] 𑌪𑌲𑍍𑌲𑌵𑌃 [।*] [illegible]

இரண்டாம ஏடு—முன்புறம்

12. [illegible] 𑌸[𑌨𑍍𑌤]𑌤𑌿 [illegible] 𑌪𑌲𑍍𑌲𑌵[illegible]
[illegible]-

13. 𑌤 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 𑌸𑌿𑌂𑌹𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃 [।*] 𑌸𑌿𑌂𑌹𑌵𑌿𑌷𑍍𑌣𑍋𑌰𑌪𑌿 𑌮𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌰𑍍𑌮 8
𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑍋

14. 𑌮𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌰𑍍𑌮𑌾 [।*] [illegible] 𑌇𑌵 𑌵𑌿𑌜𑌯𑌿𑌤𑌵𑌾𑌨𑌾𑌪𑌿
[illegible]

15. [illegible] 9 [illegible] 𑌪𑌲𑍍𑌲𑌵[illegible]
[illegible]

16. [illegible] [।*] 𑌤𑌸𑍍𑌯 [illegible] 𑌮𑌹𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌵𑌰𑍍𑌮𑌾 [।*]
𑌤𑌤𑌃 [illegible] 𑌵𑌿-

5. மகரம் ஒற்றுப்போல எழுதப்பெற்றுள்ளது.

6. [illegible] என்று வாசிக்கவும்.

7. 𑌜𑌾 𑌦𑍍𑌰𑍋𑌣𑌃 என்று வாசிக்கவும்.

8. [illegible] என்று வாசிக்கவும்.

9. [illegible] என்று வாசிக்கவும்.

17. ஜித(ঃ) வஜ்ஜஸஙஃ வஸ்ரேஷ்ஸவஜ்ரா [। *] தஸ்யா த்ருஜ ராஜஷ்ஸ வஜ ஸ்ரஜ-

18. ஜொர் தஸவிஙஹ வஜ்ரா [। *] தஸ்யவஸ்ரேஷ்ட [ஸ *] [ஐ] வாயிக ரூபஸ்கஃ வஸ்ஜயாஜிககஃ

19. வஸ்ரேஷ்ஸ வஜ்ரா [। *] தஸ்ய வஸ்ரேஷ்ஸ வஜ்ரணஃ வஸ்த்ரா லஸத ஐவ லவுக்ஷ

20. தொ ஜெஸ்ஸிவாஅஃ ஷிவஸகஸ ஐவ ஷுகஜெஸெவஸிவஸகஜஸா த்ரெரா

21. ய ஜெஷஃ ஶயாயஸஐவ ஸகஙகஙா வஸிணதஃ நஃகரத [10] நரமநஜ நிஷயந

22. ஸஷ நாஸாமஹமிஸயாப ஜாந [ஃ *] வஸநஸவதிமஷஹுவிமஜிதஜ

23. ஷ ஜம(ர)யாஸா ஷஷ்ஷிர்ந கஜ்ஷா கரத [11] வாஜதஸ பாஹஸஷ

இரண்டாம் ஏடு—பின்புறம்

24. ணுஃ ஷிமஸந்த [12] விஜர [ஜ்] ஜாண கஜஸவந விவஸுகித்திஃ [13] வ்ரணதா வநிவதிஜ

25. கடாஜிகாஜிப வஸணஸவிஷஃ கஸஸஜஆவ ஐவவவ[ஷி]வத்ஸ[ர]

26. ஜ ஐவ கஜ்ஜேஷ நகஞஐவதஸமஜேஷ கஜ்ஜந ஐவகாஜ கெ ஜெண ஐ

27, வயநஸ்லெஷ காவநாடிகாவஜாயிகாவ வ்ரவிணஃ [14] பஷஜகி மஷ[ப]அத

28. த்ர் வ்ரஜொத்ர ஸக்ஷ [15] ஸவஸதகஜாத[ர *]வஸதகாஷிஷ நிவஸணஃ நபநியஜர்ந

10. கஜ்ஷா கரதா என்று வாசிக்கவும்.

11. நஃக்ரதா என்று வாசிக்கவும்.

12. ஷிமஜஸா என்று வாசிக்கவும்.

13. கிகிஃ என்று வாசிக்கவும்.

14. வ்ரவிணஃ என்று வாசிக்கவும்.

15. ஜவொஷ வ்ரஜொஜிகாக்ஷா. என்று வாசிக்கவும்.

29. ஹாஜநஃ கஞ்ஞகாஷிதஃ கஷிபஷுஃஜநஃ க[ஷுக] வுருதஃ [।*] கருதாநெ்தா
ரிஷீணாஉநம்

30. மெ வயமேநாஉஷுஞ்வெஷ்ரா ஸஞாநா உநமெநா மணாநாம் [।*] பாணஷ்ஃ
வருஜாநாம்

31. ஸதாம் கஷுவுகூ்ஃ 16 கருதீ நநிவஜஸாவதிஃ பஷுவ[ர*]ந[ர*]ழ । [ச*]
தீஷெக்ஷபலாஸெணெபெலா ந

32. ர நாய [ஃ*] கஷிஸெநஷுழ ஹிடிநாஜெள ராஜதி ராஜாரண பஷேரஃ[।*]
உகுழ ஹிடிஷா]

33. நூ ஸஉஷஷம் கரஜாஷெரஷயநூஜெள வஂகஜஸஙு ஷுவிநெவ[।ரு*]
ஜெதர

34. ஙநுஃ கரவிஷஷண உஂமராமஷு நாஉஷெவஷு ரிஷுவாரண
தூநவாஷி [। *] கூ

35. க[ஷு]உ[து] 17 வரஜெதஷுதாரகிதெ்த 18 யஸேஷ்ரு வரு [ஹொஹ]
வதி வ[ஷு]

முன்றும் ஏடு—முன் புறம்

36. வகெதநஸஷ்ரு । [।கூ*] நரவதிரயிவதிரவநெநூயஷாரஃ வஷுவஉஷொ ந

37. நிவஜலா தஸஷ்ரு வுநெரா ஸஹவே । தஷுநிநுஹிம் 19 பாவதி [ந]ர
வஷெள தஷெஸஷுவ ந

38. நி வஜெலா ஹகவிஂபதி ஸஂவஷ்ராழ வமெரயதி ஸஂவஷுரெகுஉகநா-

39. ஷி கெரஸஷகாரதாஷு ஹிஞாஷுதஉாஷு நாம வுநூாம ரதூா
பொககுர-

40. ஷு உாயவீ கணிகார வுஹமதி 20 தருஹவநொவ பொஹித
தீராயா(ஃ) உது

16. வுகூஃ என்று வாசிக்கவும்.

17. கஷுஉதுரு என்று வாசிக்கவும்.

18. கீதெ்த என்று வாசிக்கவும்.

19. நுஹீம் என்று வாசிக்கவும்.

20. கூரவகஉாய விகணிகார பெருஹருதிம் என்று வாசிக்கவும்.

41. [illegible] [21] [illegible] [ா*] [illegible]

42. [illegible]

43. [illegible] [22] [illegible]

44. [illegible]

45. [illegible]

46. [illegible] [23] [illegible]

47. [illegible] [24]

48. [illegible] [25] [illegible]

மூன்ரும் ஏடு—பின்புறம்

49. [illegible] [26] [illegible]

50. [illegible]

51. [illegible] [ா *] [illegible] ([illegible])

52. ([illegible]) [27] [illegible] [ா*] [illegible]

21. [illegible] என்று வாசிக்கவும்.

22. [illegible] என்று வாசிக்கவும்.

23. [illegible] என்று வாசிக்கவும்.

24. [illegible] என்று வாசிக்கவும்.

25. [illegible] என்று வாசிக்கவும்.

26. [illegible] என்று வாசிக்கவும்.

27. தவருக இவ்விடம் எழுதப்பெற்றது. பின்ஞல் 54-ஆம் வரி பார்க்க. இது தவறென் பது ஏட்டிலேயே இரு புறங்களிலும் வளைவுக் கோடுகள் இட்டுக் காட்டுப் பெற்றுள்ளன.

53. தி ஸ:[ர*]ராமஸ நு நிதிஷய ஈமஜ ஸ௦ஸ டிநக்ஷிதஃதிஜாரு
ஸ:[ர *]ஞு௦

54. க்ருதபாஹாடிணு: ப்ருதிவக்ஷ:டியதாஷியாந௦ பபவராஜுஷ் ஷி

55. க்வா ஃயமர கமுாவாரஷிதடிவு் ணொஜ௦ ஸ்ரு ஜீதவாநு [। *]
உதாஸ்யா 28

56. ஃவிதிபி ப்ரயிவி 29 வ்யாவ்ராஷியா 30 நிஷுதிவகிழ ப்ரபமுாய ஃாந
ஃபூஜெ

57. ய தா௦ம:[ர*]நாஸாணஃிவ 31 த:நாஹ்ருதது 32 விஜிதத்
விஷ்ணுராஜ விஷயாத்வு

58. ஶூவ௦ ஸாத்ரதத்யாதிப நிாவதிது ப்ர:வா௦பஹாராநவமிஃிதஸாவ

59. ண[ர*]ஸனெயம் கஜுராநவி யொ ஜஶ்ராஹ காஞ்சி ஹமவதி வம்

நான்காம் ஏடு—முன்புறம

60. வாஷித காஞ்சி தி[ஞ௦*]வி[வடி]யிக்வா 33 ஃமிணொகாபி ஶ்ராஃெ
வாணுதிஸெநா௦

61. விஜிதவாநஃதிப[அ]ந்த்ர[ா]வதியீஃவா: வாவகர்திண்ஹ் ஷ்ாஃிதெ
விஜுவவு

62. வாந [। *] தஷிஜோவந[ய]ா ஸ்கமுராஜத ப்ருதிதாஷியாரா
நிக்ஷ்ரயாதூ

63. ழ வபதீஃாமுய நதிவிஷயெ கஃாா ஃ௦மரு வெள்ளட்டூர் கொற்ற ஶ்ரா

64. ஜெ ஜமு யநுதயனு உதியவந்ர ஃ௦மருஷிதி நாஃக்ருக்வா அஷொதூர
பபதெஹெஜா

28. உதூாஸ்யா என்று வாசிக்கவும்.

29. வுரயிவீ என்று வாசிக்கவும்.

30. ஷியம் நிஷயபகிழ என்று வாசிக்கவும். பழைய ஆசிரியர்கள் இதை நிஷாதி என்று திருத்தி இருக்கிறார்கள்.

31. 'ஷிவ' என்று வாசிக்கவும்.

32. ஸ்ரதது என்று வாசிக்கவும்.

33. ஷிவடியது என்று வாசிக்கவும்.

65. [illegible] [। *] [illegible]
[illegible] [। *] [illegible]

66. [illegible]

67. [illegible] கொற்ற [illegible]
[illegible]

68. [illegible]

69. [illegible] [[illegible] *] [illegible] ([illegible]) [illegible]
[illegible] [[illegible] । *]

70. [illegible]

71. [illegible]

72. [illegible] । [illegible]

நான்காம் ஏடு - பின்புறம்

73. [illegible] [। *] [illegible]

74. [illegible] [। *] [illegible] [[illegible]] [। *] [illegible]
[illegible] [[illegible]] [illegible]

75. [illegible] [[illegible] *] [[illegible]] [illegible] [[illegible]] [illegible]
[illegible] । [illegible]

76. [illegible] 34 [illegible] 35 [illegible] [। *
[illegible] 36 [illegible]

77. [illegible]
[illegible]

78. [illegible]
[illegible]

79. [illegible]
[illegible]

34. [illegible] என்று வாசிக்கவும்.

35. [illegible] என்று வாசிக்கவும்.

36. [illegible] என்று வாசிக்கவும். பின்னால் வரும் பெயர்கள் முதலியன மிகவும் பிழைபட எழுதப்பெற்றுள்ளன. எனினும் எளிதில் விளங்கும். ஆகவே அவற்றைத் திருத்தவில்லை.

80. [illegible]
[illegible]

81. [illegible]
[illegible]

82. [illegible]
[illegible]

83. [illegible]
[illegible]

84. [illegible]
[illegible]

85. [illegible]
[illegible]

86. [illegible]

ஐந்தாம் ஏடு—முன்புறம

87. [illegible]
[illegible]

88. [illegible]
[illegible]

89. [illegible]
[illegible]

90. [illegible]
[illegible]

91. [illegible]
[illegible]

92. [illegible]
[illegible]

93. [illegible]
[illegible]

94. [illegible]
[illegible]

95. [illegible] [।*] [illegible] [ய*] [illegible]
[illegible]

96, [illegible] [ா ய*] [illegible]
[illegible] [ய] [illegible]

97. [illegible] [ஃ*] [illegible]
[illegible]

98. [illegible] [ஃ*]
[illegible]

99. [illegible] [யா*] [illegible] [illegible*] [illegible]
[illegible] [ா ய*] [illegible]

ஐந்தாம ஏடு—பின்புறம்

100. [illegible] [।*] [illegible] [யா*] [illegible]
[illegible] [।*]

101. [illegible] ஒற்றியூரந் [।*] [illegible]

102. [illegible] [।*] [illegible]
[illegible] [*] [illegible]

103. [illegible]
[illegible]

104. [illegible] [।*] [illegible] [ஃ*] [illegible]
[illegible] [*எ*] [illegible] [ஃ*] ஸ்ரீ[illegible]

105. [illegible] [ஃ।*] [illegible]
[illegible] ॥ [அ*] ccஉ மதிரை.

106. கொண்ட கொப்பர கெஸரிவஸூற்க்கு யாண்டு இருபத்தாருவது உத
[ய*] சந்திரமங்கல

107. தது ஸபைெயொமும் க [ா] ஞ்சி வாயிலாகிய இகந்மறை மங்கலத்து
ஸபைெயொமும் [1*]

108. இவ்விரண்டுரோமுங் கூடி யொந்றுநமையில் இதந் மெ[ல்]ப்பட்டது
ஒருராய்வா

109. ழ்வொமா நொம் ccஉ

மொழிபெயர்ப்பு

மங்களம் உண்டாகட்டும்

சுலோகம் *1:* மூவுலகத்தின் மேன்மைக்காகச் சுமேருமலையின் உச்சியிலே சிறந்த யோகபந்த நிலையில் அமர்ந்திருப்பவரும், சூரிய சந்திரர்களை இரு கண்களாக உடையவரும், உமையுடன்கூடியவரும், ஆதரவுடன் மேன்மை அளிக்கக்கூடிய உதய சந்திரனுக்குத் திருவை அளிக்கக்கூடியவரும், சடைமுடி தரித்தவருமான சதாசிவனை நான் நமஸ்கரிக்கிறேன்.

சுலோகம் *2:* சீமானும் அநேக போர்க்களங்களில் பல்லவன் பொருட்டு ராச்சியத்தை வென்று அளித்தவனும், அயலாருக்கு நன்மையளிப்பவனும், விரோத வேந்தர்களைத் தண்டிப்பவனும், பூசான் குலத்திற்குத் திலகமானவனும், பிரசித்தி பெற்ற வில்வலபுரத்தின் அதிபதியுமான உதயசந்திரன் பூமியில் நீண்டகாலம் இருக்கட்டும்.

சுலோகம் *3:* அரசர்களால் நமஸ்கரிக்கப்பட்ட தளிர் போன்ற திருவடிகளை உடையவர்களும், தானம் வழங்கும்போது வார்க்கும் நீரின் பளுவினுல் துவண்ட தளிர்க் கரங்களை உடையவர்களும், தங்களுடைய நல்ல குணங்களினுல் குடிமக்களின் இன்னல் ஒரு சிறிதும் இல்லாமல் போக்கடிப்பவர்களுமான பல்லவர்களின் அம்சம் [1] இந்த உலகத்திலே நீண்டகாலம் நிலைத்து நிற்கட்டும்.

வரி *8:* தெளிவற்ற (அவ்யக்தம்) பொருளான பரம்பொருளினின்றும் பிரமன் தோன்றினுன். பிரம்மாவிடமிருந்து அங்கிரஸ் தோன்றினுர். அங்கிரஸுக்குப் பிரஹஸ்பதி (பிறந்தார்.) பிரஹஸ்பதியிடமிருந்து சம்யு, சம்யுவிடமிருந்து பரத்வாஜர், பரத்வாஜரிடமிருந்து துரோணர்; துரோணரிடமிருந்து அளப்பரிய வீரத்தின் இருப்பிடமான அச்வத்தாமன்; அவனிடமிருந்து (குடிமக்களுக்குத்) துன்பம், விபத்து ஆகியவற்றில் ஒரு சிறிதும் ஏற்படாது வெருட்டியடித்த பல்லவன் தோன்றினுன்.

வரி *11:* இவ்விதம் முறையான வழித்தோன்றலால் பரம்பரையாகப் பல்லவ குலம் வளர்ந்தபோது பக்தியால் விஷ்ணுவை ஆராதித்தவனுன சிம்மவிஷ்ணு தோன்றினுன். சிம்மவிஷ்ணுவிடமிருந்து மகேந்திரனுக்குச் சமமான பராக்கிரமம் கொண்ட மகேந்திரவர்மன் தோன்றினுன். அவனிடமிருந்து (வாதாபி என்னும் அசுரனை அழித்த) அகத்தியர் போல, வாதாபி என்ற நகரை

1. வம்சம் எனவும் கொள்ளலாம்.

அழித்தவனும்; பரியளம், மணிமங்கலம், சூரமாரம் முதலிய போர்க்களங்களில் வல்லப அரசனை அநேக தடவைகள் வெற்றி கொண்டவனுமான நரஸிம்ஹ வர்மன் தோன்றினான். அவனுடைய மகன் மறுபடியும் ஒரு (இரண்டாம்) மகேந்திரவர்மன் அவனிடமிருந்து பெருவளநல்லூரில் நடந்த போரில் வல்லபன் (அதாவது சாளுக்கிய அரசன்) சேனையை வெற்றி கொண்ட பரமேச்வரவர்மன் தோன்றினான். அவனிடமிருந்து சிறந்த சிவபக்தனும், பிரம்மண்யத்தை உடையவர்களில் தலையானவனுமான நரஸிம்ஹவர்மன் தோன்றினான். அவனுக்கு அதிகமான தர்சனம் (கண்) ஒன்றை உடைய பரமேச்வரன்போல் தர்சனம் (அழகு) அதிகம் கொண்டவனும் மிகுந்த தர்மபுத்தி கொண்டவனுமான பரமேச்வரன் பிறந்தான்.

வரி 19 அந்தப் பரமேச்வரவர்மனுடைய மகன் பரதன்போல எல்லோரையும் அடக்கும் திறன் கொண்டவன்; மேருவைப் போல அசைவு அற்றவன் (நிலைத்திருப்பவன்); சூரியன் தன் கிரணங்களால் இருட்டை அகற்றுவது போல் எதிர்த்துவரும் சத்துருக்களைத் தன் புஜங்களாலேயே தடுத்துப் போக்கடிக்கத்தக்கவன்; கலைகள் நிரம்பிய முழுமதி போல் எல்லாக் கலைகளிலும் நிரம்பிய அறிவு கொண்டவன்; நிருகன் நிஷத அரசனான நளன், நகுஷன், நாபாகன், பகீரதன் ஆகியோருடைய கர்வத்தைக் குறைத்தவன்; [2] எதிரி அரசர்களின் (யானைகளுடைய) கன்னப் பிரதேசத்தில் பெருகும் மதஜலத்தின் தாரைகளால் 'துர்த்தின'மாகச் [3] செய்யப்பட்ட (அதாவது புள்ளியிடப்பட்ட) தண்டாயுதம் போன்ற வலது கையை உடையவன்; ஆம்பல் கூட்டங்களைப்போல வெளுத்து, திக்குகளின் கோடி வரையில் தாவிப் பரவும் புகழை உடையவன்; வணங்கிய அரசர்களின் கிரீடக் கூட்டங்களால் தொடப்பெற்ற தாமரை மலர் போன்ற திருவடிகளை உடையவன் (ஆவான்). மலர்க்கணையான் மன்மதன் போன்ற வடிவழகு பெற்றவன்; யானைகள் விஷயத்தில் வத்ஸராஜனுக்கு ஒப்

2. "பகீரதாய மாந" என்ற சொல்லின் முடிவில் ஒரு விஸர்க்கத்தைச் சேர்த்து இரு தனித் தொடர்களாகக் கொண்டு டாக்டர் ஹுல்ஷ் மேலே கண்டவிதம் பொருள் கூறியிருக்கிறார். விஸர்க்கத்தைச் சேர்க்காமல் முழுவதையும் ஒரே தொடராகக் கொண்டால் அது பின்வருமாறு பொருள்படும் "நிருகன், நிஷத அரசனான நளன், நகுஷன், நாபாகன், பகீரதன் ஆகியோர் போன்ற, தன்னால் தாழ்த்தப்பட்ட எதிரி அரசர்களின் (யானைகளுடைய) கன்னப்பிரதேசத்தில் பெருகும் மத ஜலத்தின் தாரைகளால் துர்தினமாகச் செய்யப்பட்ட தண்டாயுதம் போன்ற வலது கையை உடையவன்!

3. "துர்த்தினம்" என்பது சூரியன் தெரியாமல் மப்புப் போட்டு வானத்தை மறைத்தும் மழை பெய்யாமல் சிறு துளிகளாக தூற்றல் போட்டுக்கொண்டிருக்கும் நாள். மதஜலத்தின் திவலைகள் தெரித்து விழுவதையே துர்தினம் என்று கவி வர்ணித்திருக்கிறார் போலும்.

பானவன்; குதிரைகள் விஷயத்தில் நகுலன் போன்றவன். வில் போரில் அர்ச்சுனனை ஒத்தவன்; வில் வித்தையில் (தனுர் வேதத்தில்) துரோணர் போன்றவன்; காவிய, நாடகங்களை இயற்றுவதில் சமர்த்தன்; பிந்துமதி புள்ளிகளை (அதாவது ஒற்றெழுத்துக்களை விடுதல்), கூடசதுர்த்த பாதம் (நாலாவது பாதத்தை மறைத்து விடுதல்) பிரகேளிகை (வெளிப்படையாக இல்லாமல் பெயர் முதலிய வற்றை மறை பொருளாகக் கூறுதல்), அக்ஷரச்யுதகம் (எழுத்தை விடுதல்), மாத்ராச் யுதகம் (மாத்திரைகளை விடுதல்), போன்ற செய்யுள் வகைகளை இயற்றுவதில் கெட்டிக்காரன்; நீதியின் பொக்கிஷம்; தனத்தின் இருப்பிடம்; களங்கமற்றவன், (அதாவது குற்றமற்றவன்); கலியின் பலத்தை அழிப்பவன். கல்ப மரத்தின் விரதம் பூண்டவன். (வரையாது கொடுக்கும் வள்ளல்).

சுலோகம் 4: சத்துருக்களுக்கு எமன், மங்கையருக்கு மன்மதன், அயோக்கியர்களால் ஏமாற்றமுடியாதவன். குணங்கள் குறையாதவன், குடிமக்களுக்குப் புகலிடம், நல்லோர்களுக்கு கல்பவிருக்ஷம். ஸமர்த்தன். பல்லவர்களுக்கு அரசனுன (தலைவனுன) நந்திவர்மன்.

சுலோகம் 5: கூர்மையான பாணங்களால் போரிலே யானைப் படையை உடைத்தவனும், ரணசூரனும் (போரில் திறமை மிகுந்தவனும்) மனிதர்களின் தலைவனும் (நரநாதனு)மான அந்த அரசன் மலையிலிருந்து தோன்றி தன்னுடைய நூற்றுக்கணக்கான கிரணங்களால் மெல்ல இருட்டின் கூட்டங்களைப் போக்குபவனும், தாமரை மலர்களுக்கு நண்பனுமான சூரியன் போலப் பிரகாசிக்கிறுன்.

சுலோகம் 6: பல்லவ குலத்தின் வெற்றிக்கொடி போன்றவனும், ஊழிக்காலம் வரையில் (கல்பபரியந்தம்) பாரிலே புகழ்பெற்ற கம்பீரமான பிரபுவுமான இந்த அரசனுடைய கைகளை வெற்றியளிக்கும் வில்லும் சரீரத்தைப் போர்க்களங்களிலே முன் வரிசையில் நிற்கும் எதிரி அரசர்களின் யானைகளுடைய மதஜலமாகிய சிவந்த பூச்சும் அணிகளாக அலங்கரித்தன.

வரி 36: நரபதியும் பூமிக்கு அதிபதியும் நீதியைத் தாங்குபவனும், (நயபரன்) பல்லவ மல்லனும், அரசனுமான நந்திவர்மன் அவனுக்கு மகனுகப் பிறந்தான்.

வரி 37: அந்த அரசன் உலகை ஆண்டு வரும்போது அதே நந்திவர்மனுடைய இருபத்தோராம் ஆண்டு பூர்த்தியாகின்ற அளவில் பாக்கு, தென்னை, மா, பலா, ஹிந்தாளம் (கூந்தல் பனை) தமாலம் (பச்சிலை) நாகம், புந்நாகம். சிவப்பு அசோகம், மருதோன்றி, குரசகம், மாதவி, (முல்லை) கர்ணிகாரம் முதலிய மரங்கள் நிறைந்த பூங்காக்களினுல் அலங்கரிக்கப்பட்ட கரையை உடைய

தும், மதத்தினுல் (காமத்தினுல்)நிறம் மாறிய வெறி நிரம்பிய உள்ளம் கொண்ட மானம் மிக்க குலப்பெண்களின் கொங்கையில் நுனியிலிருந்து வழிந்த குங்குமத்தின் நறுமணத்தை வீசுவதுமான வேகவதி நதியின் தலைவனும் (கணவனும்) மழைக்காலத்து மேகங்களை ஒத்து மசியைப் போன்ற கருமை வாய்ந்த யானைக் கூட்டங்களின் துதிக்கைகளின் சந்துகளிலிருந்து (மூக்குக் குழாய்களிலிருந்து) வெளிவரும் ஜலத்தின் திவலைகளால் நனைக்கப்பெற்ற (நீர் தெளிக்கப்பெற்ற) கடைத் தெரு வழியை உடையதும், எல்லா உலகங்களுக்கும் முக்கிய ஆபரணம் போன்றதுமான வில்வலம் என்ற பெயர் கொண்ட நகரத்தினுடைய அதிபதியும், பரம்பரையாக வந்த ஊழியத்தால் பல்லவகுலத்தை தலைமையாகக் கொண்ட பூச்சான்குலத்தில் பிறந்தவனும் (பல்லவ குலத்தின் ஊழியத்தையே கொண்டவனும், இடையருத பரம்பரையைச் சேர்ந்த பூச்சான் குலத்திலே பிறந்தவனுமான உதயசந்திரன்), (த்ரமிள) தமிழ் அரசர்களால் நந்திபுரத்திலே பல்லவ மல்லன் முற்றுகைக்கு ஆளாகித் தடுக்கப்பட்டதைப் பார்த்து, அது பொறுக்காமல் ஆம்பல் இதழின் காந்தி போன்ற பளபளத்த உறை நீக்கிய கூர்மையான கத்தியினுல் பல்லவ மல்லனுடைய எதிரிகளின் கூட்டங்களுக்குக் கூற்றுவனே போலப் பாய்ந்து சித்திரமாயப் பல்லவராஜன் முதலியவர்களைக் கொன்று, ராஜ்யம் முழுவதையும் தன் அரசனுக்கு அளித்தான். நிம்ப (வனம்), சூதவனம், சங்கர கிராமம், வநலூர், நெல்வேலி, சூராவழுந்தூர் முதலிய போர்க்களங்களில் பல்லவன் பொருட்டுப் பல தடவை சத்துருக்களின் (பலத்தை) சேனையை வெற்றி கொண்டவனும், சாதாரண ஜனங்களால் நெருங்க முடியாததும் பயங்கரமானதுமான நெல்வேலிப் போரிலே எதிர்த்து வந்த சேனுதிபதியான சங்கன் ஏறியிருந்த யானையின் இரு தந்தங்கள் உராய்வதால் பெருக்கெடுத்த மதஜலத்தின் சேர்க்கையால் அலங்கரிக்கப்பட்ட தண்டாயுதம் போன்ற கைகளையுடையவனும், சத்துருவானனும் உதயணன் என்ற வேட அரசனை வென்று அவனுடைய மயில் தோகைகளால் செய்யப்பட்ட கண்ணுடி துவஜத்தைக் கைப்பற்றினுன். வடதிசையிலும் பிரிதிவி வியாக்ரன் என்ற நிஷத அரசனை ஓடுகின்ற அச்வமேதக் குதிரையைப் பின்தொடர்வது போல் தொடர்ந்து சென்று வெற்றி கொண்டவனும், விஷ்ணு ராஜனுடைய நாட்டினின்றும் பல்லவனை (ப் பெருமைப்படுத்தி)க் கௌரவிக்கக் கட்டளையிட்டவனும், நிரவத்யன் முதலிய பிரமுகர்களையும் காந்தியுள்ள மாலைகளையும், அளவற்ற பொன் குவியல்களையும், யானைகளையும் கைப்பற்றியவனும், காளி பகவதியால் காப்பாற்றப்பட்டு வந்த காளி துர்க்கத்தை உடைத்துக் கைப்பற்றியவனும், மண்ணைக்குடிக் கிராமத்தில் பாண்டியன் சேனையை வெற்றி கொண்டவனும், வீரர்களில் தலைசிறந்தவனும், வேற்றரசர்களைத் தண்டிப்பவனுமான உதயசந்திரன் தன் எஜமானனிடம் விண்ணப்பித்துக்கொண்டான்.

வரி 62: சகல ராச்சியத்தையும் அளித்த அவனுடைய சுத்தி முனைக்கு அன்பளிப்பாக அவனுடைய வேண்டுகோளுக்கிணங்கி, பச்சிமாச்ரய நதி விஷயத்தில் (மேல் அடையாறு நாட்டில்) குமாரமங்கல வெள்ளட்டூர்க் கிராமத்தையும், கொற்றக் கிராமத்தில் இரண்டு ஜல யந்திரங்களையும் (அதாவது ஏற்றங்களையும்) உதயசந்திரமங்கலம் என்று பெயரிட்டு, நூற்றெட்டுப் பிராம்மணர்களுக்குத் தானம் செய்தான். அந்தக் கிராமத்திற்குக் கிழக்கு எல்லை ஸ்தோக நதி (சிற்றாறு); தெற்கு எல்லை சமுத்திரதத்தச் சதுர்வேதி மங்கலத்தின் வடக்கும், சக்கர தீர்த்தத்தின் வடக்கும்; இன்னும் மேற்கில் கொற்றக் கிராமத்துக் கோயிலின் வடக்கும், இன்னும் மேற்கில் முன்சொன்ன சமுத்திரதத்தச் சதுர்வேதி மங்கலத்தின் வடமேற்கு எல்லை உரகஹ்ரதம் என்னும் குளத்தின் வடக்கும் இன்னும் அதற்கு மேற்கில் அநடுத்பாலாசலம் என்னும் மலையின் (தக்ஷிண பார்ச்வம்) தென் சரிவு. இதன் மேற்கு எல்லை லோஹிதகிரி. அதனின்றும் வடக்காகச் சென்று வேளாள சிகரத்திற்குக் கிழக்கிலும் (அடுத்து) கிருஷ்ணசிலைப்பாறை மேட்டிற்கு மேற்கிலும், ரௌஹிண குகை. அதன் வடமேற்கு எல்லை சிந்துவாரஹ்ரதம் (மடுவு), வடக்கு எல்லை காஞ்சித்வாரம் என்ற கிராமத்தினுடைய தென் எல்லைக்குத் தெற்கு வடகிழக்கெல்லை க்ஷீர நதி (பாலாறு).

இப்படி நான்கு எல்லைக்குள் நதி, கால்வாய், ஜாலம் (மதகு) இவைகளுடன் அனுபவிக்கத் தகுந்ததும், எல்லாவிதமான நல்ல பரிகாரங்களுள்ளதுமான பூமியை மற்ற அதர்ம வேலைகளை ஒழித்து தானம் செய்தான்.

★

இனி தானம் பெற்ற பிராம்மணர்களின் கோத்திரம், சூத்திரம், ஊர்ப் பெயர், பெயர் முதலியன கீழே தரப்படுகின்றன:—

என்	கோத்திரம்	சூத்திரம்	ஊர்ப்பெயர்	பெயர்	பங்கு
1	கௌண்டின்ய	ப்ரவசன	—	ருத்ரசர்மன்	2
2	”	”	—	கணதிண்டசர்மன்	3
3	”	”	—	கணமாதசர்மன்	3
4	”	”	—	தாமசர்மன்	3
5	”	”	—	அக்னிசர்மன்	3
6	”	”	—	மண்டசர்மன்	3
7	”	ஆபஸ்தம்ப	—	மாதவசர்மன்	3

எண்	கோத்திரம்	சூத்திரம்	ஊர்பெயர்	பெயர்	பங்கு
8	”	”	—	மண்டசர்மன்	3
9	”	”	—	நாராயணசர்மன்	3
10	”	”	—	துரோணசர்மன்	3
11	”	”	—	அக்னிசர்மன்	3
12	காச்யப	”	—	பவமாதபட்டன்	3
13	”	”	—	மணிசர்மன்	2
14	காச்யப	ஆபஸ்தம்ப	—	காளசர்மன்	2
15	”	”	—	திண்டசர்மன்	2
16	”	”	—	வீரமண்டன்	2
17	”	”	—	கூளன்	2
18	பாரத்வாஜ	”	—	ருத்ரகுமாரன்	2
19	”	”	—	ஸூந்தன்	2
20	”	”	—	நாராயணன்	2
21	”	”	—	தாழிசர்மன்	2
22	”	”	—	சேட்டசர்மன்	2
23	”	ப்ரவசன	—	சூலமண்டன்	2
24	”	”	—	ஸ்கந்தன்	2
25	”	”	—	த்ரோணருத்ரன்	2
26	ஜாது கர்ண	”	—	பொற்கூளகேயன்	2
27	வத்ஸ	ஆபஸ்தம்ப	அவுண்டி	கோவிந்தசர்மன்	2
28	”	”	—	மாதவசர்மன்	2
29	”	”	—	பத்ரகாளன்	2
30	”	”	—	தாழிசர்மன்	2
31	”	”	—	நீலகண்டசர்மன்	2
32	”	”	—	ராமசர்மன்	2
33	அக்னிவேச்ய	”	—	த்ரோணசர்மன்	2
34	வாதூல	”	—	நாராயணன்	2
35	ஆத்ரேய	”	சட்டிபுரம்	நந்தி	2
36	விஷ்ணு வ்ருத்த	பஹ்வ்ருச	—	நிம்பதாஸிசர்மன்	2

எண்	கோத்திரம்	சூத்திரம்	ஊர்பெயர்	பெயர்	பங்கு
37	”	”	—	நீலகண்டன்	2
38	”	”	—	பிட்டசர்மன்	2
39	”	”	—	நீலகண்டசர்மன்	2
40	லோஹித	ஆபஸ்தம்ப	காராம்பி	நந்திசர்மன்	2
41	வசிஷ்ட	ப்ரவசன	காவனூர்	மண்டசர்மன்	2
42	”	”	—	த்ரோணசர்மன்	2
43	கௌதம	ஆபஸ்தம்ப	—	நிம்பசர்மன்	2
44	”	”	—	அக்னிசர்மன்	2
45	”	ப்ரவசன	—	ருத்ரமண்டன்	2
46	பராசர	”	—	கணமாதசர்மன்	2
47	”	”	—	மாதவசர்மன்	2
48	”	ஆபஸ்தம்ப	—	நாகசர்மன்	2
49	ஹரித	”	—	விநாயகசர்மன்	2
50	”	”	—	ஸ்கந்தன்	2
51	”	”	—	கொண்டன்	2
52	”	”	—	தாமசர்மன்	2
53	”	”	—	தேவசர்மன்	2
54	முத்கல	”	—	சன்னகாளி	2
55	முத்கல	ஆபஸ்தம்ப	—	த்ரோண	2
56	கௌசிக	”	—	குமாரமண்டன்	2
57	”	”	—	சன்னகுமாரன்	2
58	”	ப்ரவசன	—	திண்டத்ரோணசர்மன்	2
59	”	ஆபஸ்தம்ப	—	கூளசர்மன்	2
60	”	”	—	கடுகுச்சத்தி – பாலபோச ஒற்றியூரன்	1
61	”	”	—	பரமேச்வரன் (உத்தர காரணிகன்)	1
62	”	”	—	வைத்யன்	1
63	”	”	கங்கபுரம்	த்ரோண ச்ரேஷ்டிபுத்ரன் ரேவதி	2

சுலோகம் 7: சூரியன் எத்தனை காலம் உலகில் சுற்றிவருவானே, பர்வதங்கள் எத்தனை காலம் இருக்குமோ, அத்தனை காலம் அதாவது சந்திரனும் நக்ஷத்திரங்களும் உள்ளவரை (ஆசந்த்ர தாரகம்) பூசான்குலம் ஸ்திரமாக இருக்கட்டும்.

சுலோகம் 8: ஸ்ரீ சந்திர தேவனின் புத்திரனும், மேதாவிகுலத்தில் உதித்தவனுமான பரமேச்வரகவி என்பவன் இந்தப் பிரசஸ்தியின் கவிதையை இயற்றினன்.

நந்திவர்மன் பல்லவ மல்லனுடைய கசாக்குடிச் செப்பேடுகள்

முன்னுரை

பதினேரு ஏடுகளில் பொறிக்கப்பட்ட இந்தச் சாசனம் தஞ்சாவூர் மாவட்டத்தை யொட்டி முன்னளில் பிரெஞ்சுக்காரர்களின் ஆட்சிக்குட்பட்டிருந்த காரைக்காலுக்கு நான்கு கிலோமீட்டர் தூரத்திலுள்ள கசாக்குடி என்னும் கிராமத்தில் எண்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, 1,879-ம் வருஷத்திலே, பூமியிலிருந்து கிடைத்தது. முதல் முதலாக இதை வெளியுலகுக்கு அறிமுகம் செய்தவர் புதுச்சேரியைச் சேர்ந்த ஜூல்ஸ் தேலா போன் (Mons Jules de la Fon) என்பவர் ஆவார். வாகூர்ச் செப்பேடுகளை வெளிக்கொணர்ந்தவரும் இவரே. இந்தச் சாசனம் டாக்டர் ஹூல்ஷ் என்பவரால் "தென்னிந்தியச் சாசனங்கள்" இரண்டாம் தொகுதியில் மூன்றும் பாகத்தில் மசிப்படத்தோடு வெளியிடப்பட்டுள்ளது; [1] இப்போது சென்னை அரசினர் பொருட்காட்சிச் சாலையில் வைத்துப் பாதுகாத்து வரப்படுகிறது.

இந்தச் சாசனத்தின் ஏடுகளைக் கோத்திருந்த வளையத்தின் முகப்பில் உள்ள முத்திரையில் இடதுபுறம் நோக்கிப் படுத்திருக்கும் ரிஷபத்தின் உருவமும் அதன் மேலே லிங்கத்தின் உருவம் ஒன்றும் காணப்படுவதாக டாக்டர் ஹூல்ஷ் குறிப்பிட்டிருக்கிறுர்.

முதல் ஏடும் கடைசி ஏடும் உட்புறம் மட்டுமே எழுதப்பட்டுள்ளன. பாக்கி ஒன்பது ஏடுகளும் இருபுறமும் எழுதப்பட்டுள்ளன. ஆக மொத்தம் இரு

1. இதன் பல பகுதிகளைக் கொடுத்து, பாரிஸ் நகரத்துப் பேராசிரியர் ஜூலியன் வின்ஸன் Julien Vinson என்பார் பிரெஞ்சு மொழியிலே ஒரு கட்டுரையும் வெளியிட்டிருக்கிறுர்.

பது பக்கங்களில் அடங்கியது இச்சாசனம். கடைசிப் பக்கம் ஒன்றைத் தவிர மற்ற பக்கங்கள் ஒவ்வொன்றிலும் ஏழு ஏழு வரிகள் உள்ளன. கடைசிப் பக்கத்தில் மட்டும் ஐந்து வரிகள். ஆகவே சாசனம் மொத்தம் 138 வரிகளில் எழுதப்பட்டுள் ளது. இதன் பெரும் பகுதி (வரிகள் ௧–104) ஸம்ஸ்கிருத மொழியில் உள்ளது. தாற்போல் 104—133 வரிகள் கொண்ட பகுதி தமிழில் உள்ளது. திரும்பவும் நடுவில் (137) ஒரு வரியைத் தவிர முடிவு ஸம்ஸ்கிருதத்திலே (வரிகள் 133...138) காணப்படுகிறது.

ஸம்ஸ்கிருதப் பகுதி விஸ்தாரமாகக் காவியம்போல உரைநடையிலும் செய்யுளிலும் எழுதப்பட்டிருக்கிறது. கடவுள் வாழ்த்தாக ஆரம்பத்திலே ஒன் பது சுலோகங்கள் உள்ளன. முதலிலே பரப்பிரம்மத்தையும் அப்பால் விஷ்ணு-வின் திரிவிக்கிரம அவதாரத்தையும் மூன்றுவதாகத் திரிபுரம் எரித்த சிவபெரு மானையும் தனித்தனிச் சுலோகங்களில் வாழ்த்துகிறார் கவி. நான்காவது சுலோ கம் விஷ்ணுவும் சிவனும் ஒன்றாகக் கலந்த ஹரிஹரனுக்கு வணக்கம் தெரிவிப்ப தாகும். அப்பால் ஒரு சுலோகத்தால் லட்சுமியையும் மற்றொன்றால் பகவதியை யும், அடுத்த சுலோகத்தில் விநாயகப் பெருமானையும் வணங்கியிருக்கிறார். எட்டாம் சுலோகம் பல்லவ குலத்தை வாழ்த்துவதாக அமைந்துள்ளது. ஒன்ப தாம் சுலோகம் சாசனம் வழங்கிய அரசனான நந்திவர்மன் புகழ்பாடுவதாக உள்ளது. அப்பால் வம்சத்தலைவர்களான புராண புருஷர்கள் பிரம்மா, அங்கிரஸ், பிரகஸ்பதி, சம்யு, பரத்வாஜர், துரோணர், அசுவத்தாமன் ஆகியோர் ஒவ்வொருவரும் ஒவ்வொரு சுலோகத்தால் வருணிக்கப்பட்டுள்ளனர். இந்திர னால் அனுப்பப்பட்ட மேனகை என்னும் தேவ மாதிடம் அசுவத்தாமனுக்கு மக னாகப் பல்லவன் பிறந்த செய்தி ஒரு சுலோகத்தில் (17) காணப்படுகிறது. அடுத்த சுலோகம் பிரம்ம க்ஷத்திரியர்களின் பெருமையை விரித்துரைக்கிறது. அந்த வம்சத்திலே அசோகவர்மன் என்ற அரசன் பிறந்த செய்தியை ஒரு சுலோகம் (19) கூறுகிறது. அப்பால் பல்லவர்களுடைய புகழ் விஸ்தாரமாக உரைநடை யில் கூறப்பட்டுள்ளது. வரி 34 முதல் 50 வரை: அந்த வம்சத்திலே கந்தவர்மன், கலந்தவர்மன், கானகோபன், விஷ்ணுகோபன், வீரகூர்ச்சன், வீரசிம்மன், சிம்ம வர்மன், விஷ்ணுசிம்மன் முதலியோர் வெற்றிப்புகழுடன் ஆண்டுவானுலகம் சென்ற விஷ்ணுசிம்மன் முதலியோர் வெற்றிப்புகழுடன் ஆண்டு வானுலகம் சென்ற செய்தியும் காணப்படுகிறது. இதிலே பல்லவர்கள் குமாரக்கடவுளுடன் பலவா றாக ஒப்பிட்டுக் காட்டப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது. அப்பால் அவனிசிம்மன் என்பவன் தோன்றினான். அவன் சிம்மன என்னும் ஓர் அரசனை வெற்றி கொண் டான். இன்னும் மாளவத்தையும், பிறகு களப்ர, மாளவ, சோழபாண்டிய மன்னர் களையும் சிங்கள கேரள வேந்தர்களையும் வெற்றி கொண்ட செய்தி காணப்படு

கிறது. (சுலோகம் 20). பிறகு முதலாம் மகேந்திரவர்மன் வாதாபி கொண்ட நரசிம்மவர்மன், இரண்டாம் மகேந்திரவர்மன், முதலாம் பரமேச்வரவர்மன், இரண்டாம் நரசிம்மவர்மன் இரண்டாம் பரமேச்வரவர்மன் ஆகியோர் ஒவ்வொரு சுலோகங்களில் குறிக்கப்பட்டுள்ளனர். (சுலோகம் 21—26) இரண்டாம் பரமேச்வரவர்மனுடைய ஸ்தானத்தில் அப்போது நந்திவர்மன் ஆண்டு வந்தான் என்ற செய்தி ஒரு சுலோகத்தில் விவரிக்கப்பட்டுள்ளது. சிம்மவிஷ்ணுவின் தம்பியான பீமவர்மன், அவனுக்கு முன்னுல் ஆறும் தலைமுறையில் வந்த மூதாதையன். பீமவர்மன், புத்தவர்மன், ஆதித்தியவர்மன், கோவிந்தவர்மன், ஹிரண்யவர்மன், நந்திவர்மன் என்ற முறையில் அந்த வம்ச பரம்பரை விவரிக்கப்பட்டுள்ளது. தானம் வழங்கிய அரசனுன நந்திவர்மனுடைய புகழ் செய்யுளாகவும் உரைநடையாகவும் விஸ்தாரமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. (வரிகள் 66—80).

நந்திவர்மனுடைய ஆட்சியின் இருபத்திரண்டாம் ஆண்டு நடக்கும்போது, இந்தச் சாசனத்தில் கண்ட தானம் வழங்கப்பட்டது. ஊற்றுக்காட்டுக் கோட்டத்தின் ஊற்றுக்காட்டு நாட்டில் கொடுகொள்ளி என்ற கிராமத்தில் பழைய தேவதானப் பிரம்ம தேயங்களை நீக்கி எஞ்சிய பகுதிக்கு ஏகதீரமங்கலம் என்ற புதுப் பெயரிட்டு, பாரத்துவாஜ கோத்திரத்தில் பிறந்து சாந்தோக சூத்திரத்தைப் பின்பற்றுபவரான சாமவேதி ஜ்யேஷ்டபாத சோமயாஜி என்பவருக்குப் பிரம்மதேயமாக அளிக்கப்பெற்ற செய்தி விரிவாக (வரிகள் 80—104) உரைக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பகுதி சரியாக மொழிபெயர்க்கப் பெற்று விளக்கப்படவில்லை. முக்கால் நூற்றுண்டுக்கு முன் டாக்டர் ஹுல்ஷ் அதைப் பதிப்பித்த காலத்தில் பல்லவர்களைப்பற்றி நமக்கு அதிகமாகத் தெரிந்திருக்கவில்லை. அந்த நிலையிலே அவர் அளித்துள்ள விளக்கம் பெரிதும் பாராட்டத் தக்கது. எனினும் பின்னுல் பல்லவ சரித்திரத்தை ஆராய்ந்து ஆசிரியர்கள் பலரும் அதை அப்படியே ஏற்றுக்கொண்டதுதான் விந்தை! முக்கிய மந்திரியான பிரம்ம ஸ்ரீராஜன் (வரி 94) அல்லது பிரம்மயுவராஜன் (வரிகள் 103, 106) என்பவன் விண்ணப்பத்தால், கோரசர்மன் ஆணத்தியாக அரசன் தானத்தை அளித்தான் என்று டாக்டர் ஹுல்ஷ் கொண்டிருக்கிறுர். அதன்விளைவாக சாசன வாசகத்தில் தானம் பெற்ற சோமயாஜியின் புகழும், விண்ணப்பம் செய்ததாகக் கருதப்படும் மூக்கிய மந்திரியின் புகழும் பிறழ்ந்து கலந்து எழுதப்பட்டிருப்பதாகவும், அவர் கொண்டார். அதனுல் வரி 80 முதல் 102 வரி வரையில் காணும் வாசகத்தில் ஒரு பகுதியை மந்திரிக்கும், மற்றைப் பகுதியைத் தானம் வாங்கினவனுக்கும் ஏற்றிக் கூறியிருக்கிறுர் அவர். எல்லா ஆசிரியர்களும் அதையே பின்பற்றி வந்துள்ளனர்.

உண்மையில், அந்தப் பகுதி தெளிவாகத்தான் இல்லை. 'தேந ராஜாதி ராஜ பரமேச்வரேன' என்று 71-ம் வரியில் நந்திவர்மன் பல்லவமல்லன் புகழைக் கூறும் பகுதி 79-ம் வரியில் 'மஹாராஜேந' என்று முடியும் வரையில் மூன்றும் வேற்றுமையில் உள்ளது. அதனால் அந்தப் பகுதிக்கு 'மஹா ராஜனான நந்திவர்மனால்' என்று பொருள் கொள்ள வேண்டும்.

80-ஆம் வரியிலே காணும் 'சந்த: பாராவார பார காய' என்பது முதல் 86-ஆம் வரியிலே 'மத்திம லோகைக மித்ராய' என்று முடியும் வரையில் உள்ள பகுதி நான்காம் வேற்றுமையில் காணப்படுகிறது. அது வேதமறிந்த பிராமணர் ஒருவரைப் பற்றிக் கூறுவது. ஏனினும், அதிலே பெயர் ஏதும் காணப்படவில்லை. அதனால் அந்தப் பகுதி 'ஏதோ ஒரு பிராமணருக்கு' என்ற அளவில் பொருள் கொடுக்கும்.

அதைத் தொடர்ந்து 'லோக மித்ரேண' என்று அதே வரியில் காண்பதிலிருந்து 92-ஆம் வரியில் 'ஜ்யேஷ்டேண புத்ரேண' என்பது வரையில் உள்ள பகுதி திரும்பவும் மூன்றும் வேற்றுமையில் உள்ளது. பிரம்மஸ்ரீ ராஜன் என்ற பெயர் அதிலேதான் காணப்படுகிறது. அதனால் அந்தப் பகுதி, 'பிரம்மஸ்ரீ ராஜனால் கொடுக்கப்பட்டது' என்பதை உணர்த்துவதாக அமையும்.

அதைத் தொடர்ந்து, 97-ஆம் வரியிலே 'ஸுப்ராஹ்மணாய' என்பது வரையில் உள்ள பகுதி திரும்பவும் நாலாம் வேற்றுமையிலே காணப்படுகிறது. தானம் பெற்ற ஜ்யேஷ்ட பாத சோமயாஜியின் பெயர் இந்தப் பகுதியிலேதான் உள்ளது. அதனால் இந்தப் பகுதி 'ஜ்யேஷ்ட பாத சோமயாஜி என்ற நல்ல பிராம்மணனுக்கு' என்று பொருள்படும்.

இவ்விதம் 71 முதல் 97 வரையில் உள்ள 27 வரிகள் மூன்றும் வேற்றுமையில் இரண்டு பகுதியும், நான்காம் வேற்றுமையில் இரண்டு பகுதியுமாக, மாறி மாறி மொத்தம் நான்கு பகுதிகளாகப் பிரிந்து அமைந்துள்ளன. டாக்டர் ஹுல்ஷ் மூன்றும் வேற்றுமைப் பகுதிகளை ஒன்றாகவும், நான்காம் வேற்றுமைப் பகுதிகளை ஒன்றாகவும் கொண்டார். மூன்றும் வேற்றுமைப் பகுதிகள் இரண்டும் முறையே 'அரசனால்', 'பிரம்மஸ்ரீ ராஜனால்' என்று அமைவதால், அவ்விரண்டையும் இணைக்க, 'விஜ்ஞப்தேந' (விண்ணப்பத்தினால்) என்ற சொல்லைச் சேர்த்து, "அரசனால்......பிரம்மஸ்ரீ ராஜனுடைய விண்ணப்பத்தினால்" என்று பொருள் கொண்டார். நான்காம் வேற்றுமையில் உள்ள இரு பகுதிகளில் முதல் பகுதியிலே பெயர் ஒன்றும் இல்லை; இரண்டாம் பகுதியிலேதான் தானம் பெற்றவர் பெயர் காணப்படுகிறது. அதனால் அவ்விரு பகுதிகளையும் ஒன்றாக இணைப்பதில் அவ்

விரண்டும் தொடர்ச்சியாக இல்லையென்பதைத் தவிர, வேறு ஆட்சேபம் எதையும் அவர் காணவில்லை.

அதன்படி, 'பல்லவமல்லனுன நந்திவர்மனுல் பிரம்மஸ்ரீ ராஜன் விண்ணப்பத்தின் பேரில் ஜ்யேஷ்ட பாத சோமயாஜிக்குத் தானம் வழங்கப்பட்டது' என்று ஆகும்.

103-ஆம் வரியிலே 'இதி விஜ்ஞப்தி பிரம்மயுவராஜஸ்ய' (இவ்விதம் பிரம்மயுவ ராஜனுடைய விண்ணப்பம்) என்று உள்ளது. தமிழ்ப் பகுதியில் 106-ஆம் வரியிலே, 'பிரம்மதுவ ராஜன் விண்ணப்பத்தால்' என்று காண்பதால், பிரம்மஸ்ரீ ராஜன், பிரம்மயுவ ராஜன், பிரம்மதுவ ராஜன் ஆகிய மூன்றும் ஒருவரையே குறிப்பதாகவும் அவர் கொண்டார். பிரம்மதுவராஜன் என்பது பிரம்மயுவ ராஜன் என்பதன் வேறு வடிவமே. ஆனுல், பிரம்மஸ்ரீ ராஜன் என்பது அவ்விதமல்ல. உண்மையில், பிரம்மஸ்ரீ ராஜன் என்பது ஒரு பதவிப் பெயர். பின்னுல் அந்தப் பதவிக்கு வரக்கூடிய இளவரசப் பதவியில் இருந்தவனை உணர்த்துவதே பிரம்மயுவ ராஜன் என்பது.

தமிழ்ப் பகுதியின் கடைசியிலே, 'பரதத்தி சென்றது' எனக் காணப்படுகிறது. 'பரதத்தி' என்பது பிறன் ஒருவன் கொடுத்த தானத்தைக் குறிப்பதாக நாம் முன்னரே கண்டோம். அதனுல் இந்தச் சாசனத்தில் கண்ட தானம் அரசன் அளித்ததாகாது: வேறு ஒருவன் வழங்கிய தானத்துக்கு அரசாங்கம் அங்கீகாரம் அளித்தது என்றே ஆகும். ஆனுல், ஸம்ஸ்கிருதப் பகுதியிலே 97-ஆம் வரியிலே 'ஸ்யமேவ ப்ரஸாதாத்' என்று காணப்படுகிறது. மேலே குறிப்பிட்ட விதம் பொருள் காணும்போது, அது அரசனைக் குறிப்பதாகவே கொண்டிருக்கிருர், டாக்டர் ஹுல்ஷ். அந்தத் தொடருக்கு, "(நல்ல பிராம்மணர் பொருட்டு)த் தாமாகவே பிரசாதத்தினின்றும் (அதாவது, அருளால் தமக்குக் கிட்டிய பூமியினின்றும்) கொடுத்தார்" என்றுதான் பொருள் கூறவேண்டும். அது அதற்கு முன்னதாக உள்ள பிரம்மஸ்ரீ ராஜனையே சுட்டும். அவ்விதமானுல் சாசனத்தில் காணும் தானத்தைப் பிரம்மயுவ ராஜனுடைய விண்ணப்பத்தால், முக்கிய மந்திரியான பிரம்மஸ்ரீ ராஜன் தமக்கு அரசன் அருளால் கிட்டிய பூமியிலிருந்து ஜ்யேஷ்டபாத சோமயாஜிக்கு வழங்கினுர் என்பதாகும்.

அரசனுக்குச் சமமாகவும், அரசனுக்குப் பதிலாகவும் கட்டளையிடக்கூடிய மந்திரியின் நிலை மிகவும் உயர்ந்ததாகவே இருத்தல் வேண்டும். பிரம்மஸ்ரீ ராஜன் என்று அவர் பெயர் கொண்டிருப்பதும் கவனிக்கத்தக்கது. பிரம்மராயன் என்று பின்னுல் வழங்கப்பட்டதும் இதுவே போலும். பிரம்மயுவராஜன் என்று பெயர் கொண்ட ஒருவர் இருப்பதையும் கவனிக்க வேண்டும். இந்தச் சாசனத்தில்

கண்ட தானத்தை அளிக்க வேண்டும் என்று விண்ணப்பம் செய்தவரும் இவரே. இதே அரசனுடைய 33-ஆம் ஆண்டில் வழங்கப்பெற்ற புல்லூர்ச் செப்பேடுகளி லும் அவர் பெயர் காணப்படுகிறது. அதனுல் பிரம்மயுவராஜன் என்பது பிரம்ம ஸ்ரீராஜன் என்ற பதவிக்கு வரப்போகும் இளவரசரைக் குறிப்பதாகும்.

தானம் வழங்கப்பட்ட நிலத்தின் நான்கு எல்லைகளும் கொடுக்கப்பட்டுள் ளது. பிரசஸ்தி என்று குறிக்கப்பட்ட ஸம்ஸ்கிருதப் பகுதியைத் திரிவிக்கிரமன் என்பவன் இயற்றினுன் என்ற விவரத்தோடு ஸம்ஸ்கிருதப் பகுதி முடிவடை கிறது.

தமிழ்ப் பகுதி 'கோனேலை' கொண்டது; அரசனுடைய இருபத்திரண்டாம் ஆண்டில், ஊற்றுக்காட்டுக் கோட்டத்துத் தன்னுட்டுக் கொடுகொள்ளி என்னும் கிராமத்தைப் பிரம்மதுவராஜன் விண்ணப்பத்தால், கோரசர்மன் ஆணத்தி யாகத் தேவதான பிரம்மதேயம் நீக்கிக் குடிநீக்கிச் சாமானிய இரண்டு பட்டி படியால் பாரத்துவாஜ கோத்திரத்துச் சாந்தோக சூத்திரத்துப் பூனி வாசியான செட்டிரெங்க சோமயாஜிக்குப் பிரம்மதேயமாக அளிக்கப்பட்ட செய்தியைக் கூறுகிறது. வழங்கப்பட்ட நிலத்தின் நாற்பால் எல்லையும், அதிலே தானம் பெற்ற வர் கோண்டுள்ள உரிமைகளும் விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளன. 'நிலைக்களத் தாரும், அதிகாரரும், திருவாய்க்கேட்பாரும் உள்ளிருந்து பரதத்தி சென்றது, என்ற குறிப்போடு அது முடிகிறது.

கடைசியிலே அந்தத் தானத்தைக் காப்பவர் அடையும் புண்ணியத்தை யும், கெடுப்பவர்க்கு நேரும் துன்பத்தையும் எடுத்துக் கூறுவனவாக வழக்க மாகக் காணும் சுலோகங்கள் மூன்று உள்ளன. பரமேச்வர மஹா காஷ்டகாரி என்பானுல் அந்தச் சாசனம் எழுதப்பட்டது என்ற விவரமும் காணப்படுகிறது. 'இவன் பேறு மனையும் மனைப்படைப்பும், இரண்டுபட்டி நிலமும்' என்று சாச னத்தின் சுருக்கம் கடைசியிலே கொடுக்கப்பட்டுள்ளது. அப்பால் மங்கள வாசகத் தோடு சாசனம் முடிவடைகிறது.

ஒரு பட்டி நிலம் ஆயிரத்திருநூறு குழி கொண்ட தென்பதைக் கூரம் சாசனத்தில் கண்டோம். அதனுல் இரண்டு பட்டி என்பது இரண்டாயிரத்து நானூறு குழி கொண்டதாகும். "சாமாந்ய இரண்டு பட்டிப் படியால் "நிலம் வழங்கப்பெற்றதாகச் சாசனம் (வரி 107) கூறுவதால் அதுவே பிரம்மதேயக் கிராமங்களில் ஒவ்வொருவருக்கும் அளிக்கப்பெறும் (நிலத்தின் அளவு) பங்கு ஆகுமென்னலாம். தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் தாலூகாவில் உள்ள உடையாளூரில் இன்றைக்கும் இரண்டாயிரத்து நானூறு குழி கொண்ட நிலம் (எட்டு ஏக்கர்) ஒரு பங்கு என்றே குறிக்கப்பட்டு வருவதும் கவனிக்கத்தக்கது.

அதைக் கொண்டு பார்த்தால் தானம் பெற்றவர் முழுக் கிராமத்தையும் அடையாமல் அதிலே ஒரே ஒரு பங்கை மட்டுமே பெற்றிருந்தார் என்பதும் விளங்கும். அவ்விதமானல் அவரைப் போலவே அந்தக் கிராமத்தில் பூதானம் பெற்ருேர் வேறு சிலரும் இருந்திருக்கக்கூடும். பிரம்மதேயம் வழங்கியதைத் தெரிவிப்பனவாக நமக்குக் கிடைக்கும் செப்பேடுகளில் பெரும்பாலானவற்றில் அந்தக் கிராமத்தைப் பெற்ற பலருடைய பெயர்களும் அவர்களில் ஒவ்வொருவரும் பெற்ற பங்கும் விவரிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அவ்விதம் அவை தானம் பெற்ற பலருக்கும் பொதுவாக வழங்கப்பெற்ற மூலபத்திரங்களாகும். அவ்விதம் அல்லாமல், அவர்களில் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகவும் மூலப்பத்திரங்கள் வழங்கப்பெற்று வந்திருத்தல் வேண்டுமென்பதை இந்தச் சாசனத்தால் கொள்ளலாம்.

சிம்மவிஷ்ணுவின் காலத்திலிருந்தே பல்லவ மன்னர்களின் புகழ் இந்தச் சாசனத்தில் வருணிக்கப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது; அதற்கு முன்னல் காணும் பகுதி தெளிவில்லாத புராண வரலாறே ஆகும். மற்றச் சாசனங்களிலும் ஏறக்குறைய இதேபோலத்தான் காணப்படுகிறது. சிம்மவிஷ்ணுவிற்கு அவநிசிம்மன் என்ற பெயர் உண்டென்பதும், சிம்மன் என்ற மற்ருேர் அரசனை அவன் வெற்றி கொண்டான் என்பதும் கூறப்பட்டுள்ளன. (சுலோகம் 20) அவன் மற்ருெரு சிம்மவிஷ்ணுவை வென்ற செய்தியை முன்னரே (பள்ளன் கோவில் சாசனம் முன்னுரையில்) விவரித்திருக்கிருேம். இன்னும் அவன் மாளவத்தையும் பிறகு களப்ர, மாளவ, சோள, பாண்டிய மன்னர்களையும், தன் புஜபலத்திலே கர்வமடைந்த சிங்கள மன்னனையும், கேரள அரசர்களையும் ‘வெற்றி கொண்டான்’ என்ற செய்தி குறிக்கப்பட்டுள்ளது. இதிலே மாளவம் என்ற பெயர் இரண்டு இடங்களில் காணப்படுகிறது. முதலில் உள்ளதை மலையம் என்றும், பின்னல் உள்ளதை மளவம் (மழவம்) என்றும் ஆராய்ச்சியாளர்கள் கொள்வர். களப்பிர மழவ, சோழ, பாண்டியர்களை அவன் வெற்றி கொண்டான் என்பதால் தமிழ் நாடு முழுவதுமே அவனுடைய ஆதிக்கியத்துக்கு உட்பட்டிருந்தது என்னலாம். இன்னும் அவன் வெற்றி கொண்ட சிங்கள அரசன் மிகுந்த வலிமை பெற்றவன் என்று கூறப்பட்டிருப்பதும், கேரள அரசர்கள் என்று பன்மையில் குறிக்கப்பட்டிருப்பதும் முக்கியமானவை. அந்தக் கேரள அரசர்கள் திவாந்தரப் பிரதேசத்திலே வாழ்ந்தவர்கள் போலும்.

முதலில் மலையம் தனியாகப் பிரித்துக் காட்டப்பட்டுள்ளது. அது அகத்திய முனிவர் தங்கிய மலையின் பெயர் [2] தென்கோடியில் உள்ள பொதிய மலை

2. மலயம் என்பது திவாந்தரப் பிரதேசத்திலே மலாய் நாடான மலைமண்டலத்தையும் உணர்த்துவதாகும்.

யையே குறிப்பதாகக் கருதப்படுகிறதாயினும், மேற்குத் தொடர்ச்சிமலே முழு வதையும் உணர்த்துவதாகக் கொள்வதும் உண்டு. அகத்திய முனிவருடைய கமண்டலத்தைக் கவிழ்த்ததால் ஓடிய நீரே காவிரி நதியாயிற்றென்ற கதை உண்டு. அந்த நதி பிறக்கும் இடத்திலே அகஸ்தியர் ஆசிரமம் இருந்ததாகவும் கொள்வர். அந்தப் பிரதேசம் அந்நாளிலே கதம்பர்களுடைய ஆளுகையில் அடங்கி இருந்தது. எனினும் வாதாபியிலே ஊன்றிக்கொண்டு தலேயெடுத்துவந்த சாளுக்கியர்கள் அந்தப் பிரதேசத்தின்மீது கண்ணோட்டம் கொண்டனர். முதலாம் கீர்த்திவர்மன் கதம்பர்களுக்குக் காளராத்திரிபோல விளங்கினுன் என்று அவனு டைய மகன் இரண்டாம் புலகேசியின் ஐஹொளே சாசனம் கூறுகிறது. [3] பல் லவர்கள் கதம்ப ராச்சியத்தைத் தங்களுக்கு அடங்கியதாகக் கருதி வந்தார்கள். அதனுல் பல்லவர்கள் நிச்சயம் கீர்த்திவர்மனுடன் போரிட்டிருப்பர். அவனும் (தமிழரை) பல்லவரை வெற்றி கொண்டதாகக் கூறிக்கொள்கிறுன். இவற்றைக் கொண்டு மலயம் என்று இங்கே குறிக்கப்பட்டிருப்பது மேற்குத் தொடர்ச்சி மலேயின் கர்நாடகப் பிரதேசத்தை உணர்த்துவதாகவே கருதலாம். அதன்படி சிம்மவிஷ்ணு கர்நாடகப் பிரதேசத்துக் கதம்பர்களுடனே; அப்போது அங்கே தலேயெடுத்து வந்த வாதாபிச் சாளுக்கியர்களுடனே போரிட்டு வெற்றி கொண்ட செய்தி தெரியவரும்.

29. 𑌨[𑌿]𑌵𑍇𑌦𑌿𑌤𑍋 𑌕𑍁𑌟𑍁𑌮𑍍𑌬[𑌿𑌨]𑌃 𑌵𑌿𑌜(𑌯)𑌯𑌾 𑌵𑌿𑌵𑍃𑌦𑍍𑌧(𑌯)𑌯𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑌵𑍍𑌯 35 𑌤𑍋𑌯 𑌕𑍇𑌤𑍍𑌤𑌃
30. 𑌸𑍍𑌮𑌾𑌸𑍍𑌵𑌾𑌸𑌨 36 𑌇𑌤𑌿 𑌕𑍃𑌤𑍇 𑌸𑌾𑌵[𑌃] 𑌶𑌾𑌸𑍀𑌮𑍍 𑌉𑌕𑍍𑌤[𑌞𑍍𑌚 𑌵𑍍𑌯𑌾]𑌸𑌿 [|*] [𑌸𑍍𑌤𑍍𑌯]
31. 𑌵𑌿 𑌆𑌤𑍍𑌮𑌾𑌕𑍍𑌷𑌿 𑌶𑍍𑌲𑍋𑌕𑌃 37 [|*] 𑌸𑍍𑌵𑌦𑌤𑍍𑌤𑌾𑌂 𑌪𑌰𑌦𑌤𑍍𑌤𑌾𑌂 𑌵𑌾 𑌯𑍋 𑌹𑌰𑍇𑌤 𑌵𑌸𑍁
32. 𑌨𑍍𑌧𑌰𑌾𑌂 𑌗𑌵𑌾𑌂 𑌶𑌤𑌸𑌹𑌸𑍍𑌰𑌸𑍍𑌯 𑌹𑌨𑍍𑌤𑍁𑌃 𑌪𑌿𑌬𑌤𑌿 𑌕𑌿𑌲𑍍𑌬𑌿𑌷𑌮𑍍 [||*] 𑌸𑍍𑌵
33. 𑌦𑌤𑍍𑌤𑌾𑌂 [𑌪]𑌰𑌦𑌤𑍍𑌤𑌾𑌂 𑌵𑌾 𑌯𑍋 𑌰𑌕𑍍𑌷𑍇𑌤𑍍 [|*] 𑌯𑌃 𑌪𑍍𑌰𑌯𑌚𑍍𑌛𑌤𑌿 [𑌸𑍍𑌵]
34. 𑌦𑌂 𑌹𑌿 𑌸𑌰𑍍𑌵𑌪𑌾𑌪𑌾𑌤𑍍 𑌪𑍍𑌰𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑌿 𑌸𑌃 [||*] 𑌬𑌹𑍁𑌭𑌿𑌰𑍍𑌵𑌸𑍁𑌧𑌾 38 𑌦𑌤𑍍𑌤𑌾 𑌬𑌹𑍁𑌭𑌿
35. 𑌶𑍍𑌚𑌾𑌨𑍁𑌪𑌾𑌲𑌿𑌤𑌾 [|*] 𑌯𑌸𑍍𑌯 𑌯𑌸𑍍𑌯 𑌯𑌦𑌾 𑌭𑍂𑌮𑌿 [𑌃*] 𑌤𑌸𑍍𑌯 𑌤𑌸𑍍𑌯 𑌤𑌦𑌾 𑌫𑌲𑌂 [||*]

★

மொழிபெயர்ப்பு

பகவானல் வெற்றி கொள்ளப்பட்டது.

மங்களம் உண்டாகுக.

ஸ்ரீ விஜய பலாத்கடம் என்ற இருப்பிடத்திலிருந்து, பிரம்மண்யர்களில் சிறந்தவனும், தன்னுடைய தோள்வலியால் அடைந்து உறுதியாக்கப்பெற்ற வீரர்களின் தவச் செல்வத்தை உடையவனும், சாஸ்திரங்களால் விதிக்கப்பெற்ற எல்லா மரியாதைகளை உடையவனும், முறையான நிலையில் நிற்பவனும், அதிக

35. 𑌸𑌂𑌪𑍍𑌰𑌤𑍍𑌤𑌃 𑌯𑌪𑍇𑌤 என்று வாசிக்க.

36. 𑌸𑍍𑌵𑌾𑌸𑌨 என்று வாசிக்க.

37. 𑌶𑍍𑌲𑍋𑌕𑌾𑌃 என்று வாசிக்க.

38. 𑌵𑌸𑍁𑌧𑌾 என்று வாசிக்க.

ஞானம் உடையவனும், தன்னுடைய வீரத்தினுல் அரசர் கூட்டங்களை வணங்கச் செய்தவனும், மகாராஜனுமான ஸ்ரீ ஸ்கந்தவர்மனுடைய கொள் பெயரன்.

சித்தி நிறைந்தவனும், பூதலத்திலே ஒப்பற்ற தனி வீரனும், மகாராஜனுமான ஸ்ரீ விஷ்ணுகோபவர்மனுடைய பெயரன். தெய்வம், இரு பிறப்பாளர், ஆசிரியர், முதியவர்கள் ஆகியவர்களை உபசரிப்பவன். நன்ருகப் பெருகிய வணக்கத்தை உடையவனும், பசு, பொன், பூமி ஆகிய பல தானங்கள் செய்தமையால் நன்கு பெருகிய தர்மங்களின் கூட்டத்தை அடைந்தவனும், குடிமக்களைப் பாது காப்பதையே நோக்கமாகக் கொண்டவனும், உலகத்தைக் காப்பவர்களான லோகபாலர்களில் ஐந்தாம் லோகபாலனும், உண்மையையே சரீரமாகக் கொண்டவனும், மகாராஜனுமான ஸ்ரீ சிங்கவர்மனுடைய மகன்.

பகவானிடம் கொண்ட பக்தியினுல் வரத்தகுந்த எல்லா மங்களங்களின்
கூட்டங்களையுடையவனும், வேள்வியில் எப்போதும் தீட்சை பெற்றிருப்பவ
னும், பல போர்களில் சாகஸமாகத் தாக்கி அடைந்த வெற்றிப் புகழினுல் ஒளி
பெற்று விளங்குவோனும், கலியுக தோஷத்தால் முடிவு பெற்ற தர்மத்தை
உயர்த்தி நிலைநிறுத்துவதில் எப்போதும் சன்னத்தமாக இருப்பவனும், ராஜ
ரிஷிகளின் குணங்கள் அனைத்தையும் கொண்டவனும், பகவானுடைய பாதங்
களை எப்போதும் தியானிப்பவனும், பப்ப பட்டாரகருடைய பாதங்களிலே
பக்தி பூண்டவனும், விஷ்ணு பக்தர்களில் சிறந்தவனும், பாரத்வாஜ கோத்திரத்
தில் பிறந்தவனும், திருவுக்கு இருப்பிடமாகவும், அனேக அச்வமேத யாகங்களை
நடத்தியதாகவும் உள்ள பல்லவ குலத்தில் பிறந்தவனும், தர்மமகாராஜனு
மான ஸ்ரீ விஜயவிஷ்ணு கோபவர்மன். கர்மராஷ்டிரத்திலே சுரா என்று பெயர்
கொண்ட கிராமத்தவர்களுக்கும், இன்னும் அதிகாரிகளான எல்லா நையாயிகர்
களுக்கும், சஞ்சரந்தர்களுக்கும், ராஜவல்லபர்களுக்கும் கட்டளையிடுகிருன்.

இந்தக் கிராமத்தில் மேல்புறத்தில் ழகும்பறு என்ற பெயர் கொண்ட
கிராமம் இருக்கிறது: அதன் கீழ்பால் எல்லை, கீழைக்குளத்தின் கிழக்கே
போகும் இராடிப் பெருவழியுடன் கூடியது. தெற்கில் உள்ள பாகுஹூரு
கிராம எல்லை (இன்னும்) இவ்விசைத்த மூன்று ஊர்கள் கூடும் மேழிதாபம்
மேல்புறத்திலே நாகோளாமி கிராமத்தின் எல்லை. வடபுறத்திலே வடக்குக்
குளத்தின் வடக்கு. இவ்விதம் நான்கு எல்லைக்கு உட்பட்ட பூமி நூற்றெட்டு
நிவர்த்தன நிலம். அந்தக் கிராமத்திலேயே நடுவட்டக் கிராமத்தின் நடுவோடு
ஒட்டிய தென்பாகத்தில் குடியிருப்பான மனை (இடம்) முதிடி (அதாவது
பழைய) குளத்தின் தென்கரையில் வாடிகை (தோட்டக்கால் மனைப்படப்பு)
நிலம். (இவற்றில்) ஒரு நிவர்த்தனம் பூமி. குண்டூரில் வசிப்பவனும், காசியப

கோத்திரத்தைச் சேர்ந்தவனும், விஷ்ணுசர்மன் பேரனும், துவேதைய (த்வி வேதி) விருத்தசர்மன் மகனும், நான்கு வேதங்களை அறிந்தவருமான தேசா ஸாமி சர்மனுக்கு உத்தராயண புண்ய காலத்தின் பொருட்டு, நம்முடைய ஆயுள், பலம், வெற்றி ஆகியவை அபிவிருத்தியடைவதற்காகப் பிரம்மதேய மரியாதைக்குட்பட்டு, சர்வபரிகாரங்களுடன் நீரோடு அட்டிக்கொடுத்தோம். நம்முடைய இந்தக் கட்டளையை எவன் மீறுகிருனே அந்தப் பாவி சரீர தண்டனை அடையத்தக்கவன். இது பற்றி மேலும் ரிஷிவாக்கியமான சுலோகங்கள் உள்ளன; பூமி தானத்தைக் காட்டிலும் உயர்ந்த தானம் இருந்ததில்லை, இருக்கப் போவதுமில்லை. [அதை அபகரிப்பதைக் காட்டிலும் (வேறு) பாவம் இருந்தது மில்லை; இருக்கப்போவதுமில்லை.] பூமிதானத்தைக் காட்டிலும் சிறந்த தானம் இவ்வுலகில் அறிந்ததில்லை. எவன் பூமியை அளிக்கிருனே, அவனுடைய எல்லா ஆசைகளும் நிறைவேறும். அநேகர் பூதானம் செய்திருக்கிருர்கள். அநேகர் பரிபாலித்திருக்கிருர்கள். எந்த எந்த அளவு பூமியோ அந்த அந்த அளவு பலன்,

முதல் நந்திவர்மனுடைய உதயேந்திரச் செப்பேடுகள்-2

கி. பி. 1,850-ம் ஆண்டு வடார்க்காடு ஜில்லா, குடியாத்தம் தாலுகாவில் வாணியம்பாடிக்குப் பக்கத்திலுள்ள உதயேந்திரம் கிராமத்திலிருந்து ஏழு சாசனங்கள் கிடைத்தன. அவை ரெவரெண்டு டி. போக்ஸ் Rev. T. Foulkes என்பவரால், "சேலம் மான்யுவல்" என்னும் நூலிலே வெளியிடப்பட்டன. அவற்றுள் இந்தச் சாசனமும் ஒன்று. இது பின்னல் "இந்தியன் அன்டிகுவரி" - எட்டாம் தொகுதியில் 50--55ஆம் பக்கங்களில் மசிப்படத்துடன் வெளியிடப்பட்டது. இன்னும் "எபிகிராபியா இந்திகா" - மூன்ரும் தொகுதியிலும் டாக்டர் கீல்ஹார்ன் Dr. Kielhorn என்பவரால் பதிப்பிக்கப்பெற்றது. சாசனத்தின் மூலப்பிரதி மூன்று ஏடுகளைக் கொண்டது. முதல் ஏடும் கடைசி ஏடும் உட்புறத்தில் மட்டுமே எழுதப்பட்டுள்ளன. முதல் ஏட்டின் முன்புறத்தில், பிற்காலத்தில் முதற் பராந்தக சோழனுடைய ஆட்சிக்காலத்தில் எழுதப்பெற்ற கடையீடு ஒன்றும் காணப்படுகிறது. ஏடுகளைக் கோத்திருந்த வளையத்தில் இருந்திருக்க வேண்டிய முத்திரையைப் பற்றிய விவரம் ஏதும் தெரியவில்லை. சாசனம், பல்லவ அரசனை நந்திவர்மனல் காஞ்சிபுரத்திலிருந்து வழங்கப்பட்டது. இவன் தன்னுடைய ஆட்சியின் முதலாம் ஆண்டு, வைசாக மாதம், சுக்கில பக்ஷம், பஞ்சமியில் அடையாற்று நாட்டில், காஞ்சிவாயல் கிராமத்தையும், காட்டு நிலம் நான்கு பட்டிகளையும், இந்த ஊரைச் சேர்ந்த கூலசர்மன் என்பவனுக்குப் பிரம்மதேயமாக அளித்த செய்தியைத் தெரிவிக்கிறது. முழுவதும் ஸம்ஸ்கிருத மொழியிலேயே உள்ளது.

தானம் அளித்த நந்திவர்மன், ஸ்ரீ ஸ்கந்தவர்மனுடைய மகனும், சிம்மவர்மன் என்பவனுடைய பெயரனும், மற்ருெரு ஸ்கந்தவர்மனுடைய கொள்

பெயரனும் ஆவான். சாசனத்தின் முதல் ஏட்டின் முன்பக்கத்திலே, மதிரை கொண்ட கோப்பரகேசரி வர்மனுன முதற் பராந்தக சோழனுடைய ஆட்சியின் இருபத்தாரும் ஆண்டு, காஞ்சி வாயிலாகிய இகன்மறை மங்கலத்து ஸபையோமும், உதயசந்திரமங்கலத்து ஸபையோமும், இவ்விரண்டு ஊரோமும் கூடி ஒன்ருனமையில் இதன்மேற்பட்டது ஒரூராய் வாழ்வோமாஞேம் என்று தமிழில் எழுதப்பட்டிருக்கிறது.

இந்தச் சாசனம் அளித்த நந்திவர்மனைச் சரித்திர ஆசிரியர்கள், பல்லவ வம்சத்து முதலாம் நந்திவர்மன் என்று குறிப்பார்கள். கி. பி. ஆரும் நூற்ருண்டின் மத்தியில், 550ஆம் ஆண்டுக்குச் சிறிது முன்னதாக, அவன் ஆட்சி நடைபெற்றிருத்தல் வேண்டுமென்று கருதுவர். சாசனம், தமிழ்நாட்டிலே கிடைத்ததாயினும், இவ்விடம் கிடைத்த மற்றைச் சாசனங்களில் காண்பதைப் போல இதிலே தமிழ்ப் பகுதி ஏதும் இல்லே என்பதை நாம் முன்னரே குறிப்பிட்டிருக்கிருேம். ஸம்ஸ்கிருத மொழியிலே உள்ள இந்தச் சாசனம், தமிழ்நாட்டிலே வழங்கிவந்திருந்த எழுத்துகளால் பொறிக்கப்படவில்லே. ஆந்திரப் பிரதேசத்திலே வழங்கிவந்த தெலுங்கு - கன்னட எழுத்துகளில் உள்ளது. அதுவும், தானம் அளித்த அரசன் நந்திவர்மனுடைய காலமான ஆரும் நூற்ருண்டிலே வழக்கில் இருந்த எழுத்துகளாக இல்லே. நான்கு நூற்ருண்டுகளுக்குப் பிறகு கி. பி. பத்தாம் நூற்ருண்டில் வழங்கிவந்த எழுத்துகளை ஒத்திருக்கின்றன.

அதிலிருந்து இது சாசனத்தின் மூலப்பிரதி அல்ல என்பதும், பிற்காலத்திலே தோன்றிய பிரதி என்பதும், தெளிவாகும். சாசனம் பிற்காலத்திலே பெயர்த்து எழுதப்பட்ட பிரதி என்பதை இப்போது கிடைக்கும் அதன் வாசகமே நன்கு எடுத்துக் காட்டும். பிழைகள் மலிந்து, சொற்களும் தொடர்களும் விடுபட்டுப் போய், எழுதப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. சாசனம் வழங்கப்பெற்ற காலத்தில் எழுதிய மூலப்பிரதி அவ்விதம் ஒருபோதும் இருக்காது. எனினும், ஆதாரமாகக் கொள்வதற்குத் தகுதியற்ற போலி என்று அதை ஒதுக்கிவிட முடியாது. முதற் பராந்தக சோழனுடைய ஆட்சிக் காலத்திலே, எழுதப்பெற்ற கடையீடு இதை நன்கு எடுத்துக்காட்டும். அந்நாள் அரசாங்கம் இதை உண்மையான ஆதாரமாக ஏற்றுக் கொண்டிருக்கிறது. இல்லாவிட்டால் அந்தக் க்டையீடு அதன்மீது எழுதப்பெற்றிருக்காது.

★

சாசன பாடம்

முதல் ஏடு—முன்புறம்

1. மதிரை கொண்ட கொபப ரகெ பரிவரூஹக யாண்டிருபத்தாருவ
2. து காஞ்சி வாயில் ஆகிய இகன்மறை மங்கலத்து ஸ
3. ஹையொமும் உஷெய சந்திரமங்கலத்து ஸஹை
4. யொமும் இவ்விரண்டு ரொமுங்கூடி ஒன்ருயினமையில்
5. இதன் மெறபட்டது ஒருராய வாழ்வொமானெம்.

முதல் ஏடு—பின்புறம்

1. ஸ்வஸ்தி [|| *] ஜித [ம்*] ஹமவதா ராஜ்ஞ[1] [|| *] ஸ்ரீவிஜயகாஞ்சீ
   வாஸாத்வரஃ ப்ரஹ்மண்யஸ்ய ஸ்வபாஹூ வஜ்ரா [2]
2. ஜிதொஜ்ஜித விஙிவிஹித ஸர்வமரியாதஸ்ய [3] ராஜ்ஞ ஸ்ரீஸ்கந்த
   வர்மண [ஃ *] ப்ரபௌத்ர [4] சுஹ்ருத்ஸ்
3. த ஶக்தி ஸி[த்*]தி ஸம்பந்நஸ்ய ப்ரதாபொபநத [5] ராஜமண்டலஸ்ய
   வஸுதா [6] தலைக வீர [7]
4. ஸ்ய ம(ா)ஹாராஜ ஸ்ரீ ஸிம்ஹவர்மண பௌத்ர [8] தெவத்விஜ குரு
   வியொவஅாயிநொ [9] வியூ வெ

1. ராஜ்ஞா என்று இருத்தல் வேண்டும் போலும். ஆனால் இவ்விடம் தேவையில்லாதது.
2. பஹுஜித்தொஜ்ஜித என்று திருத்தவேண்டும்.
3. மர்யாதஸ்ய ராஜ்ஞஃ
4. ஸந்தியிலே ‘ப்ரௌத்ரஸ்ய’ என்று வரும்.
5. ப்ரதாபொ பநத என்று வாசிக்கவும்.
6. வஸுதா முதலில் விட்டுப் போய் தகரமும் சுகரமும் வரிக்கு அடியில் எழுதப்பட்டுள்ளன. அதேபோல விகரத்துக்கும் ரகரத்துக்கும் நடுவில் எழுதப்பெற்ற ககரமும் அடிக்கப்படும்.
7. டி ஆம்பரில் ஹா என்பது முதலில் கா என்று எழுதிப் பின்னுல் திருத்தப் பெற்றுக் காண்கிறது.
8. ஸிம்ஹவர்மணஃ பௌத்ரோ
9. வ்யவஸாயிநோ வ்யவஸிதஸ்ய

5. கெயஸ்ய ஸௌமொ 10 ஹிரண்ய ஹஂஃஸ்யாயி ஞாயாநெ 11
ஞவியக்ஷ யஜுக்ஷஜுயஸ்ஷ ஞஜா

இரண்டாம் ஏடு—முன்புறம்

6. வாமுந உக்ஷஸ்ய ஸத்யாத்தொ ஊஹாராஜ 12 ஸ்ரீஹ்ஷுவஜுக்ஷணஃ
வாத்தொ ஹமவத ஹக்தி ஸஹூா 13

7. ரித ஸவுக்ஷ கமுஃ [ர *] ண [ஃ *] ஞஜா ஸம்ஞஜ்ஞ வரிவாமு
நொந்யெவமத மதத ஸதர பரத

8. தீக்ஷித 14 நெக ஸஉர ஸாஹஸாவஊக்ஷ ருவ வி(ெ)ஜய(ர)
ஞகாஸந 15 கவியாம ஷொ-

9. ஷாவமக்ஷுக்ஷா த்ரண16 நித்ய ஸந்நியொ ஹமவகவாநாயஷ்தொ
வவு ஹடாரமொ வாத 17 ஹ

10. த்த [ஃ *] வரஊஹாமவதொ பாரஅாஜ ஸமொத்ரு [ஃ *]
வஜூவ[ர*]நாம யஜுக்ஷ [உ*]ஹாராஜ [ஃ *] ஸ்ரீநந்திவஜுக்ஷ[ர*]

இரண்டாம் ஏடு—பின்புறம்

11. ண அபெயார ராஷ்ர காஞ்சிவாமூஉ18 சூரண்ஷ்கெக்ஷத்ரு அதாஷயஜு
வமிவெக்ஷாவ ஹாத்த ஊரியா

12. ஷெயா 19 ஷெயா காஞ்சிவாயிஜு [ர *] ஷூவஷ்ய ஙாஹ்மண 20 ,
கௌஷிகஸ மொத்ரு[ர *]ய ஷைதரய அரண ஸூத்ரத

10. ஸௌ என்னும் எழுத்து அதிகப்படி. 'அநெக' என்று இருத்தல்வேண்டும் போலும்.

11. சூதிஞதாநெஃ ஞவஷ்ஜுஂ என்று கொள்க.

12. ஐகரம் வரிக்கு அடியில் எழுதப்பட்டிருக்கிறது.

13. ஹமவஹூக்தி ஸஹூாஂ

14. வரிவாமுநொஷெஷ்ாம ஸதத ஸத்ரு வரத தீக்ஷிதொ
என்று இருக்கவேண்டும் போலும்.

15. ருஜு விஜய யமஃ ஞகாமநஃ

16. சூவஸந்ந யஜெக்ஷாயரண

17. ஹமவத்தாதாநாயஷ்ாதொ பவுவடாரகவாத

18. வஜுக்ஷாபெயார ராஷெ்ர காஞ்சிவாமூஉஂ

19. ஊயஷாதயா

20. ஙாஹ்மணாய

13. [illegible] 21 [illegible] [*] [illegible]
[illegible] 22 [illegible]

14. [illegible] 23
[illegible] [*] [illegible]

15. [illegible] [*] [illegible] [ ] [illegible]
[illegible] 24 [[*] [illegible]-

மூன்ரும் ஏடு—முன்புறம்

16. [illegible] 25
[illegible] [*] [illegible] 26 [illegible] [| *]

17. [illegible] 27 [illegible] [| *] [illegible]
[illegible] 28 [illegible] [|| *]

18. [illegible] [*] 29 [illegible] [| *] [illegible]
[illegible] [*] [illegible] [ ]

19. [illegible] [|| *] [illegible] 30 [illegible]
[illegible] [*] [illegible] ||

மொழிபெயர்ப்பு

மங்களம் உண்டாகுக.

பகவானுல் வெற்றி கொள்ளப்பட்டது.

திருவும் வெற்றியும் கொண்ட காஞ்சிபுரத்திலிருந்து, பிரம்மத்தை அறிந்தவர்களில் சிறந்தவனும், தன்னுடைய தோள்வலிமையால் அடைந்து உறுதியாக்கப்பட்ட ராஜ்யத்தை உடையவனும், சாஸ்திரங்களால் விதிக்கப்பட்ட

21. [illegible]
22. [illegible]

* [illegible] கரம் வரியின் அடியில் எழுதப்பட்டிருக்கிறது.

23. [illegible] தானம் வழங்கியவன் படர்க்கையில் குறிக்கப்பட்டிருப்பதால் [illegible] என்றே இருத்தல் வேண்டும்.

24. [illegible]
25. [illegible]
26. [illegible]
27. [illegible]
28. [illegible]
29. [illegible]
30. [illegible]

வரையறையில் நிற்பவனுமான அரசன் ஸ்ரீ ஸ்கந்தவர்மனுடைய கொள் பெயரன்; பூஜிக்கப்பட்ட சக்தி, சித்தி ஆகியவை நிறைந்தவனும், அரசர் கூட் டத்தை வணங்கச் செய்த வீரம் உடையவனும், பூதலத்திலே ஒப்பற்ற தனி வீர னும், பேரரசனுமான ஸ்ரீ ஸிம்ஹவர்மனுடைய பெயரன்; தெய்வம், பிராம்ம ணர், குரு, முதியோர் ஆகியோரை உபசரிப்பவனும், பெரியோர்களால் நல் லுபதேசம் பெற்றவனும், அனேகம் பசுக்கள், பொன், பூமி முதலியவற்றைத் தானம் செய்வதால் நன்கு பெருகிய தர்மங்களின் கூட்டத்தை அடைந்தவனும், குடிமக்களைப் பாதுகாப்பதில் கெட்டிக்காரனும், உண்மையையே உயிராகக் கொண்டவனுமான மஹராஜன் ஸ்ரீ ஸ்கந்தவர்மனுடைய மகன்;

பகவானிடம் கொண்ட பக்தியினுல் சம்பாதிக்கப்பெற்ற எல்லாக் குணங் களையுடையவனும், குடிமக்களை மகிழச் செய்து காப்பாற்றும் முயற்சியான ஸத்ரமென்ற வேள்வியில் எப்போதும் தீட்சை பூண்டிருப்பவனும், பல போர் களில் அடைந்த வெற்றிப் புகழினுல் விளங்குபவனும், கலியுக தோஷத்தை அடக்கித் தர்மத்தை உயர்த்தி நிலைநிறுத்துவதில் எப்போதும் தயாராக இருப் பவனும், பகவானுடைய பாதத்தை எப்போதும் தியானிப்பவனும், பப்பபட்டா ரகருடைய திருவடிகளில் பக்தி பூண்டவனும், பாகவதர்களில் சிறந்தவனும், பாரத்வாஜ சகோத்திரத்தில் பிறந்தவனும், பல்லவர்களின் தர்மமகாராஜனு மான ஸ்ரீ நந்திவர்மன் அடையாறு ராஷ்டிரத்தில் காஞ்சிவாயல் கிராமத்தை யும் காட்டு நிலம் நான்கையும் சேர்த்து, முன்னுளில் அனுபவிக்கப்பட்ட அள வுக்குக் காஞ்சிவாயலில் வசிக்கும் பிராமணன் கௌசிக சகோத்திரத்துத் தைத்தி ரீய சரணத்துப் பிரவசன சூத்திரத்து கூலசர்மனுக்குப் பிரம்மதேய வரையறை யில் எல்லாப் பரிகாரங்களும் உள்பட, தேவபோக உழவை நீக்கி, நம்முடைய ஆயுள், வலிமை, வெற்றி, ஐசுவரியம் ஆகியவை அபிவிருத்தி அடைவதற்காக அளித்தோம். அதை அறிந்து காஞ்சிவாயல் கிராமம் காட்டு நிலம் நான்கு உள்பட எல்லா வரி விலக்குகளையும் கொண்டு இறையிலியாக நடத்த வேண்டி யது; நடத்தப்பெற வேண்டியது: இந்த என் கட்டளையை எவன் மீறுகிறுனே அந்தப் பாவி சரீர தண்டனை அடையத்தக்கவன். இதுபற்றிய சுலோகங்கள் உள் ளனவே:—

பூதானத்திலும் சிறந்த தானம் இருந்ததுமில்லை; இருக்கப்போவது மில்லை. அதை அபகரிப்பதைக் காட்டிலும் (அதிகமான) பாவம் இருந்தது மில்லை; இருக்கப்போவதுமில்லை.

தான் அளித்ததோ பிறன் அளித்ததோ எதுவாயினும் அந்தப் பூமியை அபகரிக்கிறவன் நூருயிரம் பசுக்களைக் கொன்ற பாபத்தை அடைவான்.

ஓங்கிவளரும் வெற்றி அரசின் முதலாம் ஆண்டு, விசாக மாதம் சுக்கில பட்சம் பஞ்சமி நாள் அளிக்கப்பட்ட பட்டயம்.

யுவமகாராஜன் சிவஸ்கந்தவர்மனுடைய மயிதவோலுச் செப்பேடுகள்

1899-ம் ஆண்டின் மத்தியில் ஆந்திரப் பிரதேசத்திலே, குண்டூர் ஜில்லா விலுள்ள நரசராவ் பேட்டைக்குப் பன்னிரண்டு மைல் கிழக்கே உள்ள மயித வோலு என்னும் கிராமத்தில் ஒரு குடியானவன் ஊருக்கு வடக்கே உள்ள ஒரு பாழ்மேட்டில் மண் வெட்டிக் கொண்டிருந்தான். அப்பொழுது இந்தச் சாசனம் மண்ணுக்கடியிலிருந்து கிடைத்தது. டாக்டர் ஹுல்ஷ் இந்தச் சாசனத்தை எபிகிராபியா இந்திகா, ஆறும் தொகுதி 86-89ஆம் பக்கங்களில் வெளியிட்டிருக்கிறார். இப்போது அது சென்னைப் பொருட்காட்சிச் சாலையிலே வைக்கப் பட்டுள்ளது.

எட்டு மெல்லிய ஏடுகளைக் கோத்திருக்கும் வளையத்தின் முத்திரையில் ஒன்றேகால் அங்குலம் குறுக்களவு கொண்ட முகப்பு உள்ளது. அதிலே, வலது புறம் நோக்கியதாகப் படுத்திருக்கும் மிருகத்தின் உருவம் ஒன்று காணப்படு படுகிறது. அதன் முதுகிலே திமில் காணப்படுவதால் அதை ரிஷபத்தின் உருவ மாகக் கொள்ளலாம். அதனடியில் [illegible] என்ற எழுத்துகள் உள்ளன. சாசனம் பொறிக்கப்பட்டுள்ள எழுத்திலிருந்து இது வேறுபட்டுக் காண்கிறது. ரிஷபத்தையும் எழுத்துகளையும் உள்ளடக்கி, விளிம்பை யொட்டி வட்டமாக ஒரு கோடும் உள்ளது. அதிலே ஒரு பகுதியே காணப்படுகிறது.

சாசனம், முதல் ஏட்டின் உட்புறம் ஆரம்பித்துப் பக்கத்துக்கு இரண்டு வரிகளாக இருபத்தெட்டு 28 வரிகளில் முடிகிறது. கடைசியான எட்டாம் ஏட்டின் வெளிப்புறம் காலியாக விடப்பட்டுள்ளது. முதல் ஏட்டின் முன்புறத்திலே 𑀤𑀺𑀞𑀁 என்ற சொல் பொறிக்கப்பட்டுள்ளது. த்ருஷ்டம் அல்லது பார்க்கப் பட்டது என்பதே ஆகும் அது: பொறிக்கப்பட்ட ஏடுகளை ஒப்பிட்டுப் பார்த்து அங்கிகரிக்கப்பட்ட செய்தியையே அது அறிவிப்பதாகும்.

சாசனம் பிராகிருத மொழியிலே பொறிக்கப்பட்டுள்ளது. அதனுல் எழுத்துகள் பிரஹத் பலாயன கோத்திரத்து ஐயவர்மனுடைய கொண்டமுடிச் செப்பேடுகளின் எழுத்துகளையே பெரிதும் ஒத்திருக்கின்றன. ஸ, ம ஆகிய எழுத்துகள் சாதாரணமாகக் காணும் பிராமி எழுத்துகளின் வடிவங்களை ஒத்திருக்கவில்லை: அந்த எழுத்துகள் வலதுபுறத்திலிருந்து இடதுபுறமாக அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது. ஹ, ஜ ஆகிய எழுத்துகளும் அந்தக் காலத்துப் பிராமி வடிவத்தை ஒத்திருக்கவில்லை. ந, ண, [illegible], [illegible], ஆகியவை வேறுபாடு இல்லாமல் உள்ளன. அ, க, ர ஆகிய எழுத்துகளின் நேர்க்கோடுகள் நாகார்ஜுன கொண்டா எழுத்துகளையே நமக்கு நினைவூட்டுகின்றன. முதல் ஏட்டைத் தவிர மற்ற ஏடுகள் முன்புறத்திலே எண்ணிடப்பட்டுள்ளன.

காஞ்சிபுரத்திலிருந்து, பல்லவ குலத்தைச் சேர்ந்தவனும் பாரத்வாஜ கோத்திரத்தில் பிறந்தவனுமான யுவமகாராஜன் சிவஸ்கந்தவர்மன், தான்ய கடத்திலுள்ள அதிகாரிக்கு இடும் கட்டளையைக் கொண்டது சாசனம். ஆந்திரா பதத்திலுள்ள விரிபரம் என்னும் கிராமத்தை, தன்னுடைய ஆயுள், தர்மம், வெற்றி ஆகியவற்றின் அபிவிருத்திக்காக, அக்னிவேச கோத்திரத்தவர்களான பூர்வகோட்டி ஆர்யன், கோநந்தி ஆர்யன் ஆகிய இரு பிராமணர்களுக்கு, அவன் பிரம்மதேயமாக அளித்த செய்தியைத் தெரிவிக்கிறது.

தான்யகடம் என்பது பல சாசனங்களிலே காணப்படும் பெயராகும். இது குண்டூர் ஜில்லாப் பிரதேசத்தின் தலைநகராக விளங்கியதென்றும் சொல்வர். அமராவதி, தரணிக்கோட்டை ஆகியவற்றை ஒட்டியதாகவே இது இருந்திருத்தல் வேண்டுமென்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுவர்.

தானம் வழங்கப் பெற்ற விரிபரம் என்ற கிராமத்தை, நரசராவ்பேட்டைத் தாலுகாவிலுள்ள விப்ரல்லா என்ற ஊராகவே சிலர் கருதுவர். இரண்டாம் புலகேசியின் கொப்பாரம் செப்பேடுகளிலே, விற்பாறு என்று காணப்படும் ஊரே இதுவென்றும் கூறுவர். மற்றும் ஓர் ஆசிரியர், இது தரணிக்கோட்டைக் கிராமத்தின் தென்புறத்திலே, அமராவதி ஸ்தூபத்திற்கு வடமேற்கே ஒரு

மைல் தூரத்தில் உள்ள மேட்டுப்பிரதேசமேயாகும் என்று, அவ்விடம் வழங்கும் கர்ணபரம்பரைச் செய்தியைக் கொண்டு கூறுவர். எவ்விதமாயினும், ஸ்ரீ பர்வதராஜ்யத்தின் முக்கிய பிரதேசமாக விளங்கிய இந்தப் பகுதி, சாசனம் வழங்கப்பெற்ற காலத்தில் பல்லவர்களுடைய ஆட்சிக்கு உட்பட்டிருந்தது கவனிக்கத்தக்கது.

★

சாசன பாடம்

முதல் ஏடு—முன்புறம்

தி○ം [। *] [ஸித்ம் *] [1]

முதல் ஏடு—பின்புறம்

1. [கா ം] [2] சீபுராதொ யுவமஹாராஜொ
2. ஹாரதாய ஸகொத்தொ பலவாநം [3]

இரண்டாம்ஏடு—முன்புறம்[4]

3. ஸிவகம்தவமொ யாநுகபெ
4. வாபதம் ஆநபயதி [। *]

இரண்டாம் ஏடு—பின்புறம்

5. கஹொஹி தாநி [5] சுஹவெஜயிகெ
6. [யം] ஊயபவஹ வயநிகெ ய [6]

1. ஏட்டின் இடது பக்கம் எழுத்துகளின் சுவடு காண்பதாகக்கொள்ளலாம்.

2. வரியின் ஆரம்பத்தில் இடம் விடப்பட்டிருக்கிறது. இந்த எழுத்துருவம் அங்கே இருந்திருத்தல் வேண்டும்.

3. டாக்டர் ஸர்க்கார் அவர்கள் "பலவாநாம்" என்றே சாதித்திருக்கிருர்.
[D. C. Sricar: Select Inscriptions Vol. I P. 433.]

4. ஏட்டின் இடதுபுறம் 2 என்ற எண் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

5. சு கரத்தின் மேல் சுநுஸ்வாரழ போன்ற புள்ளியும் காணப்படுகிறது.

6. அ என்று வாசிக்கவேண்டும்போலும்.

மூன்றும் ஏடு—முன்புறம் 7

7. 𑌬𑌮𑍍𑌹𑌨𑌾𑌨𑌂 𑌅𑌗𑌿𑌵𑍇𑌸 𑌸𑌗𑍋𑌤𑍍𑌤𑌸
8. 𑌪𑍁𑌵𑌕𑍋𑌟𑍍𑌠𑌜𑌸 𑌅𑌗𑌿𑌵𑍇𑌸 - 𑌸𑌗𑍋𑌤𑍍𑌤𑌸

மூன்றும் ஏடு—பின்புறம்

9. 𑌗𑍋𑌣𑌂𑌦𑌿𑌜𑌸 8 𑌅𑌂𑌯𑌾𑌵𑌕𑍀𑌯 𑌗𑌾𑌮𑍋
10. [𑌵𑌿𑌰𑌿𑌪]𑌰𑌂 𑌅𑌮𑍍𑌹𑍇𑌹𑌿 𑌉𑌦𑌕𑌾𑌦𑌿𑌂

நான்காம் ஏடு முன்புறம் 9

11. 𑌸𑌂𑌪𑌦𑌤𑍋 [|*] 𑌏𑌤𑌸 𑌗𑌾𑌮𑌸
12. 𑌵𑌿𑌰𑌿𑌪𑌰𑌸 𑌸𑌵𑌬𑌮𑍍𑌹𑌦𑍇𑌯

நான்காம் ஏடு—பின்புறம்

13. [𑌪𑌰𑌿𑌹𑌾]𑌰𑍋 𑌵𑌿𑌤𑌰𑌾𑌮 [|*] 𑌅𑌲𑍋𑌣[𑌖]𑌾𑌦𑌕𑌂
14. 𑌅-𑌰-𑌠-𑌸𑌂 10 [𑌵𑌿] 𑌨𑌯𑌿𑌕𑌂 𑌅𑌪𑌰𑌂𑌪𑌰𑌾 𑌬𑌲𑍀𑌵 11 [𑌦𑍍𑌦𑌂*]

ஐந்தாம் ஏடு—முன்புறம் 12

15. 𑌅-𑌭𑌟-𑌪𑌵𑍇𑌸𑌂 𑌅-𑌕𑍂𑌰-𑌚𑍋𑌲𑌕
16. 𑌵𑌿𑌨𑌾𑌸𑌿 𑌖𑌟 [𑌾*] 𑌸𑌂𑌵𑌾𑌸𑌂 [|*] 𑌏𑌤𑍇𑌹𑌿

ஐந்தாம் ஏடு—பின்புறம்

17. 𑌅𑌨𑍇𑌹𑌿 𑌚 𑌸𑌵-𑌬𑌮𑍍𑌹
18. 𑌦𑍇𑌯 𑌉𑌜𑌾𑌦𑌾𑌯

7. இடதுபுறத்தில் ௩ என்ற எண் பொறிக்கப்பட்டுள்ளது.
8. இந்த எழுத்தை வா எனவும் வாசிக்க முடியும்.
9. இடதுபுறம் விளிம்பில் ௪ என்ற எண் பொறிக்கப்பட்டுள்ளது.
10. ஒ என்று வாசிக்க முடியும்.
11. வா என்றும் கொள்ளலாம்.
12. இடதுபுறம் விளிம்பில் ௫ என்ற எண் பொறிக்கப்பட்டுள்ளது.

ஆரும் ஏடு—முன்புறம் 13

19. ஸவ பரிஹாரெஹி பரிஹாரிதொ [।*]
20 பரிஹாரய பரிஹார [ா] வெயஉ [।*]

ஆரும் ஏடு—பின்புறம்

21. ஜொ ஸஹ-ஸாஸநம் ஸதிஷி
22. தமந வீரா பாயா காரெஜ்ஜா 14 [வா] 15

ஏழாம் ஏடு—முன்புறம் 16

23. [த] 17 காராபெஜ்ஜா 18 வா தஸ ஸஹெ்ரா
24. ஸாவீர [ம்] ஸாஸநம் கரெஜாஶொ [।*]

ஏழாம் ஏடு—பின்புறம்

25. ஸ [ம்] வஹரம் தஸஶம் ய ஷிஹ்ரா
26. பவெ அமடொ கா திவஸம் பம்அசி ரு [।*]

எட்டாம் ஏடு—முன்புறம் 19

27. சூநகீ ஸயத்தி உத்தா
28. பஷிகா [॥*]

13. இடது விளிம்பில் சூ என்ற எண் உள்ளது.

14. அந்தக் காலத்துக் கல்வெட்டுக்களில் காணும் "ஜொ" என்ற எழுத்தின் வடிவம் போலவே உள்ளது. பழைய அதனை ஜ்ஜ என்று வாசித்திருக்கிருர்கள்.

15. முதலில் இந்த எழுத்து பொறிக்கப்பட்டுப் பின்னுல் அடித்து அழிக்கப்பட்டிருக் கிறது. எனினும் வாசிக்க முடியும். பின்புறம் 17–ஆம் அடிக் குறிப்பையும் பார்க்க.

16. இடது விளிம்பில் எ என்ற எண் பொறிக்கப்பட்டுள்ளது.

17. இந்த எழுத்து முதலில் எழுதப்பெற்றுப் பின்னுல் அடித்து அழிக்கப்பட்டிருக்கிறது. எனினும் சுவடு தெளிவாக உள்ளது. காராபெஜ்ஜா என்பதை எழுதுவதற்கு முன்னதாக மேலே வரும் வாதஸ என்ற சொற்களை எழுத முற்பட்டுப் பின்னுல் அதை அடித்துத் திருத்திச் சரியாக எழுதியிருக்கிருர்கள் என்று தெரிகிறது. முன்புறம் 15–ஆம் அடிக் குறிப்பைப் பார்க்க.

18. ஜ்ஜ என்ற எழுத்து ஜொ என்பதுபோலவே உள்ளது. இதை நாம் முன்னரும் குறிப்பிட்டிருக்கிரேம்.

19. இடது விளிம்பின் நடுவில் அ என்ற எண் பொறிக்கப்பட்டுள்ளது.

மொழிபெயர்ப்பு

பார்க்கப்பட்டது.

(வரி 1) காஞ்சிபுரத்திலிருந்து யுவமகாராஜனும், பாரத்துவாஜ சகோத்திரத்தில் பிறந்தவனும், பல்லவ குலத்தைச் சேர்ந்தவனுமான சிவஸ்கந்த வர்மன் தம்ஞகடத்தின் (தான்யகடத்தின்) அதிகாரிக்கு ஆணையிடுகிறான்; (வரி 5) நம்மால் இப்போது நம்முடைய வெற்றிக்கும் அறம், ஆயுள், வலிமை ஆகியவற்றின் பெருக்கத்துக்குமாக அகிவேஸ (அக்னிவேச்ய) ஸகோத்திரத்தைச் சேர்ந்த புவகோஜன் (பூர்வகோடி ஆர்யன்) அகிவேஸ (அக்னிவேச்ய) ஸகோத்திரத்துக் கோநந்திஜன் (கோநந்தி ஆர்யன்) ஆகிய இரு பிராமணர்களுக்கும் ஆந்திர பதத்தில் உள்ள விரிபரம் என்னும் கிராமம் நம்மால் நீரோட்டிக் கொடுக்கப்பட்டது. (வரி 11) இந்த விரிபரம் என்னும் கிராமத்துக்கு பிரம்ம தேயத்துக்கு உரிய எல்லா விலக்குகளும் அளிக்கப்படுகின்றன. உப்புக்காகக் குழி தோண்டாமை, ராஷ்டிரர்களால் அழிக்கப்பெறுமை , பொதி சுமக்கும் மாற்றுக் காளைகளைக் கைப்பற்றுமை, படை வீரர்கள் நுழையாமை, சோறு தண்ணீர் (விறகு) கட்டில், தங்குமிடம் அளிக்க வேண்டாமை இன்னும் இவை போன்ற மற்றவைகளும் பிரம்மதேய மரியாதைகள் அனைத்தும் உள்பட எல்லாப் பரிகாரங்களையும் பெற்றதாக விலக்கு அளிக்க வேண்டியது. விலக்களிக்கச் செய்ய வேண்டியது.

(வரி 21) எவன் நம் கட்டளையை மீறி பீடையும், பாதையும் அளிக்கிறானோ அவனுக்கு நம்மால் சரீர தண்டனை அளிக்கப்படும்.

(வரி 25) பத்தாம் ஆண்டு வேனிற்காலம் ஆறாம் பக்ஷம் பஞ்சமி [நாள்]

(வரி 27) நானே ஆணத்தியாக நின்று பட்டயம் அளித்தது.

சிவஸ்கந்தவர்மனுடைய ஹீரஹடஹள்ளிச் செப்பேடுகள்

எட்டு ஏடுகளைக் கொண்ட இந்தச் சாசனம், சென்ற நூற்றாண்டின் கடைசியிலே, பெல்லாரி ஜில்லாவிலுள்ள ஹீரஹடஹள்ளி என்னும் ஊரில், வியாபாரியான சென்னப்பாவிடமிருந்து விலைக்கு வாங்கப்பட்டு, இப்போது சென்னை அரசினர் பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ளது. முதன் முதலாக இது, எபிகிராபியா இந்திகா, முதல் தொகுதி-2-ஆம் பக்கத்தில், வெளியிடப்பட்டது. ஏடுகளைக் கோத்திருக்கும் வளையத்தின் முகப்பில் உள்ள முத்திரை மிகவும் குலைந்திருக்கிறது. வலதுபுறம் நோக்கிய மிருகத்தின் உருவம் ஒன்று அதிலே காணப்படுகிறது. அது மானாகவோ, குதிரையாகவோ இருக்கலாம் என்று பழைய ஆசிரியர்கள் கருதினர். ஆனால், அது ஒரு ரிஷபத்தின் உருவமே ஆகும். அதனடியிலே ஶிவஸ்கந்த [வஃ-ணோ] என்று கிரந்த எழுத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

சாசனம், முதல் ஏட்டின் பின்புறத்திலிருந்து ஆரம்பமாகி, எட்டாம் ஏட்டின் முன்புறத்தில் முடிகிறது. கடைசி ஏட்டின் பின்புறம் எழுதப்பெறாமல் காலியாக உள்ளது. முதல் ஏட்டின் முன்புறத்திலே. அதாவது த்ருஷ்டம் அல்லது பார்க்கப்பட்டது என்று எழுதப்பட்டுள்ளது.

ஸித்தம் என்ற மங்கலச் சொல்லுடனே சாசனம் ஆரம்பமாகிறது. காஞ்சிபுரத்திலிருந்து அக்னிஷ்டோம, வாஜபேய, அச்வமேத யாகங்களைச் செய்த தர்ம ராஜாதி ராஜன், பாரத்வாஜ கோத்திரத்தில் பிறந்தவன். பல்லவ வம்சத்தைச் சேர்ந்தவனான சிவகஸ்கந்தவர்மன் தன்னுடைய அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டு

அறிவிப்பதாக உள்ளது இந்தச் சாசனம். ஸாதாஹநி ராஷ்டிரத்தில் சில்லரேக கொடுங்க என்னும் ஊரின் தென்புறம் உள்ள தோட்ட நிலத்தை மகாராஜரான பப்பசுவாமிகள் ஆபிட்டி [1] என்னும் கிராமத்தில் வசிப்பவர்களும், சில்லரேக கொடுங்க கிராமத்தை அனுபவிப்பவர்களுமான பிராமணர்களுக்கு முன்னுளிலே இதைத் தானம் செய்தாராம். இதைப் பல்லவ மன்னன் சிவஸ்கந்தவர்மன் அந்தப் பிராமணர்களுக்கு வேறு சில பூமிகளோடு மறுபடியும் அளித்துப் பட்டயத்தை வழங்கினுன். முதலில் அந்தத் தானம் அநேகங்கோடி பொன்னேயும் நூறுயிரம் பசுக்களேயும் உழவு நிலங்களேயும் அளித்தவர் என்றும், அவர் கட்டளேயை யாரும் மீற முடியாது என்றும் வர்ணிக்கப்பட்டிருக்கும் ஓர் அரசருடைய — அவருடைய குலகோத்திரத்தினுடைய—தர்மம், வலிமை, புகழ் ஆகியவற்றின் பெருக்கத்துக்கும், வெற்றிக்கும் வெற்றிப்பேற்றுக்குமாகச் செய்யப்பட்டதாம். அந்த அரசன் பெயர் காணப்படவில்லே. எனினும் அவன் யார் என்பதைச் சுலபமாக நிச்சயித்துவிட முடியும். நாகார்ஜுன கொண்டத்திலே புதைபொருள் ஆராய்ச்சியால் கிடைத்த கல்வெட்டுகளில் அந்த இரு தொடர்களும் அங்கே இட்சுவாகு வம்சத்தின் அரசை நிறுவிய முதல் அரசனுன ஸிரிசாந்தமூலனுக்கு ஏற்றிக் கூறப்பட்டுள்ளன. அவன் ஸ்ரீ சாந்தமூலனேயாவன். பல்லவர் அரசு நிறுவப்பெற்ற காலத்தை நிர்ணயிப்பதற்கு இது மிகவும் உதவியாக இருக்கும் என்பது தெளிவு. சாசனம், பிராகிருத மொழியில் உள்ளது. எனினும், கடைசியிலே உள்ள மங்கலவாசகம் ஸம்ஸ்கிருதத்திலே காணப்படுகிறது.

"பப்பர்" என்ற சொல்லுக்குத் தந்தை என்று இதுகாறும் ஆராய்ச்சியாளர்கள் பொருள் கொண்டிருக்கிறுர்கள். அதனுல், இந்தச் சாசனத்தை வழங்கிய பப்பஸ்வாமி பல்லவ வம்சத்தின் முதல் அரசர் என்றும், சிவஸ்கந்த வர்மனுடைய தந்தை என்றும் கருதி வந்திருக்கிறுர்கள். இந்தச் சாசனத்தை முன்னுளிலே பதிப்பித்த ஆசிரியர்கள், சாசன வாசகத்திலே இலக்கணப் பிழைகள் என்று கருதிச் சில திருத்தங்களேச் செய்திருக்கிறுர்கள். அவ்விதம் திருத்திய பாடத்தின்படி மேலே கண்ட இரு தொடர்களும் பப்பஸ்வாமிக்கே உரியனவாகும். ஆனுல் சாசனவாசகம் அதற்கு மாருக உள்ளது. திருத்தங்கள் அவசியமில்லே என்றே தோன்றுகிறது. ஆகவே சாசன பாடம் உள்ளபடியே பொருள் கண்டு அப்படியே மொழிபெயர்த்துக் கொடுக்கப்பட்டுள்ளது.

1. ஆபிட்டி என்ற ஊர் குண்டூர் மாவட்டத்தில் உள்ள அப்பிகட்லா என்பதே ஆகும் என்று ஹீராஸ் பாதிரியார் கூறுவார், அது ஏற்கத்தக்கது அல்ல எனப் பி. வி. கிருஷ்ண ராவ் மறுத்திருக்கிறுர்.

பெல்லாரி மாவட்டத்தில் ஆதோனி தாலூகாவில் உள்ள மியாகதோனி என்னுமிடத்திலிருந்து சாதவாகன மன்னர்களில் கடைசி அரசராகக் கருதப்படும் புளுமாவியின் பிராகிருதக் கல்வெட்டு ஒன்று கிடைத்திருக்கிறது. அதிலே, அந்த இடம் சாதவாஹனிஹார என்ற பகுதியில் அடங்கியிருந்ததாகக் குறிக்கப்பட்டுள்ளது. ஆஹரம், ராஷ்டிரம் ஆகிய இரண்டு சொற்களும் பிரதேசப் பிரிவுகளைக் குறிப்பனவே. அதைக் கொண்டு, தானம் வழங்காப்பட்ட கிராமம் பெல்லாரி மாவட்டத்தைச் சேர்ந்ததாகவே இருத்தல் வேண்டுமென்று ஆராய்ச்சியாளர்கள் கருதுவர்.

சாசன பாடம் [2]

முதல் ஏடு—முன்புறம்

ஸி○

முதல் ஏடு—பின்புறம்

ஸிஜழ || [3]

1. கா○சீபுரா [4] அகிட்ஹொம [5] வாஜபெயஸ்ஸமெதயாஜி தம்மமஹா
2. ராஜாதிராஜொ பாரத்தாயொ பல்லவாண ஸிவகம்தவமொ
3. அம்ஹம் விஸயெ ஸவத்த ராஜகுமார ஸேநாபதி

இரண்டாம் ஏடு—முன்புறம் [6]

4. ரட்டிக [7] மாடபி [க] [8] தெஸாதிகதாதீகெ காமாகாம பொஜகெ
5. வல்லவெ கொவல்லவெ அமச்செ ஆரம்ஞாதிகதெ [9] கும்மிகெ தூதிகெ
6. நெயிகெ அந்தெ வி அ அம்ஹ பெஸ[ண]ப்பயுத்தெ ஸம்சரம்தகெ

2. எபி இந்திகாவில் வெளியான மசிப்படத்தையும் சென்னை அரசினர் பொருட்காட்சிச் சாலையில் உள்ள மூல ஏட்டையும் கொண்டு, பெயர்த்து எழுதப்பட்டது.

3. இடது விளிம்பின் நடுவில் ஸிஜழ என்பது எழுதப்பட்டிருக்கிறது. அதற்கு மேலே க என்ற எண் உருவமும் காணப்படுகிறது.

4. முதல் எழுத்து கொ என்று முதலில் எழுதப்பட்டு, பின்னல் திருத்தப்பட்டுள்ளது. பூலர் சீ காரமாக வாசித்திருக்கிறுர்.

5. டொ என்பதில் அடியில் உள்ளது டு போலக் காணப்படுகிறது. அதனுல் பூலர் தொ என்று வாசித்திருக்கிருர். ஆனுல் மேலே உள்ளது த கரம் அல்ல, ட கரமே.

6. இடது விளிம்பில் உ என்ற எண் காணப்படுகிறது.

7. ரட்டிக என்று வாசிக்கவும். பூலர் அவ்விதமே வாசித்திருக்கிருர்.

8. இந்த எழுத்து நு என்பதுபோல் காணப்படுகிறது. பூலரும் அவ்விதமே வாசித்திருக்கிருர்.

9. பூலர் சூரண என்று வாசித்திருக்கிருர்.

7. ஸஜஉநாஸாண [கஜஷெ] 10 வஙிஹாஸஂ விதஙாஉ ஊதூ தாணி

இரண்டாம் ஏடு—பின்புறம்

8. [சூ]ஸிஷ் வதுவாண அிஜுஸெக கொஜஂக ஹொஜக வ ஊணாணஂ
அவ்ஸு

9. ண கஙு-மொத்தஸ யஉாயஙபஷு யஸொ வயதிகெ விஜய வெஜயிகெ

10. வ காதஙிணஂ அவ்புகிஹத ஸாஸநஸு அஸெக[11] ஹிஸொமொ-கொஷி

11. மொஹநு ஸ்த ஸஹஸ்ஸவ்புஸாயிதொ[12] உஹாஙாஜ ஙவுஸா ஙீஹி

மூன்ரும் ஏடு—முன்புறம் 13

12. வாஜக அிஜுஸெநகொஜஂகெ வஙவுதூஂ [। *] மொஷுஸஉஜஸ
வகிஹாமொ க

13. சூதெப ஸமொதஸ அமிஸஉஜஸு வகீஹாமொ ச

14. உாஜஙஸ வகீஹாமா பெ உ ஜாஉாதஙகஸ அமிஜுஸ வகீ

15. ஹாமொ க ஹாஙித ஸமொதஸ காஷுஸஉஸ வகீஹாமா ௩

மூன்ரும் ஏடு—பின்புறம்

16. ஹாஙதாப ஸமொதூஸ கஙஉாஙஸஉஸ வகிஹாமா ௩ 14 கொவிக 15

17. ஸமொதஸ கஙஉாஙநஂதி கஙஉாஙஸஉ கொடுஸஉ ஸதிஸு அ

18. வதஙணூஂ ஹாதஙகாண அதாஙி ஹதிஹாமா ச கஸுவெ ஸமொதூ

19. ஸ ஹபிஸ வகிஹாமொ க ஹாஙதாப ஸவஂதா கொஂஷி ஸ

10. மூன்ருவது எழுத்தில் உயிர்க் குறியான ஓகாரத்தை மட்டுமே பூலர் வாசித்து மெய் யெழுத்து விளங்கவில்லையென்று விட்டிருக்கிருர். டாக்டர் ஸர்க்கார் அதை கஜஷொ என்று வாசித்து அடிக் குறிப்பில் ஹஜஉநஸெ சூணவெகி என்று இருத்தல் வேண்டுமெனக் குறிக்கிருர்: [Select Inscriptions. Vol. I. p. 438].

11. மூலர் இதை ஹிஸொம என்று வாசித்திருக்கிருர். ஹிஙண என்றே இருக்க வேண்டும்.

12. டாக்டர் ஸர்க்கார் ஸாஙிதொ என்று இருத்தல் வேண்டும் என்று அடிக் குறிப் பில் திருத்தி இருக்கிருர்.

13. இடது விளிம்பின் நடுவில் ௩ என்ற எண் காணப்படுகிறது.

14. மூலர் இந்த எண்ணை ௨ எனக் கொண்டிருக்கிருர்.

15. கடைசி எழுத்து முதலில் கா என்று எழுதப்பட்டது.

நான்காம் ஏடு—முன்புறம் 16

20. வகீஹாமா ஸெ உ வஂஷஜஸ வகீஹாமொ க ஸவ்லுவ
21. [வ] 17 கீஹாமொ க ஷக்கஜஸ வகி ஹாமா ஸெ உ நஂஷிஜஸ
22. வகிஹாமா ந வக்ஸஸமொதஸ ஶுஷ ஸஜஸ வகீ
23. ஹாமொ க ஷாஜஜஸ வகீஹாமொ க ஸாகுஸஜஜஸ வகி
24. 18 ஹாமொ க

நான்காம் ஏடு—பின்புறம்

25. வஸிஜிதஸ வகீஹாமொ க நாமநஂஜிஸ வகீஹாமொ க மொயிஸ
26. வகீஹாமொ க வஂஷஸஜஸ வகிஹாமொ க ஸாஜிஜஸ வகிஹாமொ க
27. ஊதெஸி பஹ்ணாணஂ அமிஸஜஜ வஜஷவாணஂ ஸாதாஹ கி ஶடெ
28. மாஜெ வெஞுஶெக கொஶஷஂகெ ஷவிண ஸீஜஂ வஷவுஷக்கஂ

ஐந்தாம் ஏடு—முன்புறம் 19

29. அஜெஹி வி குஷஸ தாஶ காஞெக 20 காதஶணஂ உஷகாஷி ஸஂவ
30. ஷெக்கா ஊதஂ பஹ்ணாணஂ அஞெஶெக கொஶஷஂக வாஶகஂ 21
31. கஶஶயொஞுக 22 விதெஸி வடாவாஸஂ அஷஶய ஷயி மஹணஂ
32. அஶட ஸஂவிநயிகஂ அஞொண மஷுஹொஹஂ அகஶவெஷி

ஐந்தாம் ஏடு—பின்புறம்

33. கொஂஜஞுஂ அவாஶஂவஶ பஞிவஹ மஹணஂ அதண கட மஹ
34. ணஂ அஹரிதக ஸாக வஷஹ மஹணஂ ஊவஜாஜீகெஹி அடா
35, ஶஸ ஜாகி வஸிஹாஶெஹி கிஸயவாஸீஹி அவி
36. ஷிவாஸீஹி அஞெஶெக கொஶஷஂக வாஸீஹி வ வஸிஹரிதவஂ

ஆரும் ஏடு—முன்புறம் 23

37. வஸிஹாவெதவு 24 அ க்கீ [। *] அவிவ குவிஷிபா அமிஸஜஜ

16. இடது விளிம்பின் நடுவிலே ச என்ற எண் பொறிக்கப்பட்டுள்ளது.

17. டாக்டர் ஸர்க்கார் இதை வக்கி என வாசித்திருக்கிறார்.

18. இந்த வரி நான்காம் வரியில் இடது புறத்தில் ஆரம்பிக்காமல் வலது கோடியில் எழுதப்பட்டுள்ளது.

19. இடது விளிம்பின் நடுவில் ரு என்ற எண் பொறிக்கப்பட்டுள்ளது.

20. பூலர் காஞிக என்று வாசித்திருக்கிறார்.

21. வாடகஂ என்று வாசித்திருக்கிறார் பூலர்.

22. அநாஶ என்ற பாடம் கொடுத்திருக்கிறார் பூலர். டாக்டர் ஹுல்டி குகஶஶவொஞுக என்று இருத்தல் வேண்டும் எனக் கொள்வர்.

23. இடதுபுறத்தின் நடுவில் கூ என்ற எண் உள்ளது.

24. டாக்டர் பாடத்தில் முதல் எழுத்து ஹ என்று காணப்படுவது அச்சுப் பிழையே போலும்.

38 வஉ⁻வாண வஜீணாணம் வழுவ கிவதணம் வரவூ கிவத

39. ணம் சழிகா அாதூாரிச ெகாழிகாவெதி உ [।*] ணவ நாதலணம்

40. சுய கொதி வழூல உ०ஃந விழுா வாயா கஒெயஹு காமவெஜா [25]

ஆரும் ஏடு—பின்புறம்

41. வா தவ வ⁻ அஜெ நிமஷ०வாமண [26]காஒெபயஹுாஉகி [।*]
ஸூஒெபா வ

42. வரிவ வஷத வஷவூாகிஒெக வஉகாஒெஞ அஜ० வெழுவ

43. க⁻ழுஉஷ०தெ ஹவிஷூ ஹஒெம அதெ அ நொ

ஏழாம் ஏடு—முன்புறம் [27]

44. வவ⁻யாபி வதபெ [28] அஹஜெஷி ஜொ வககாஒெஞ உவரி

45. ழிவித ஜொதாபெ அணா⁻வடிாவெகி தவ

46. வொ வஜிொகி [।*] பொ அவி விஜெ வஜெ ஜ

ஏழாம் ஏடு—பின்புறம்

47. வ வ வ⁻ வஜுஉஷாவாதக० வ०ஜ⁻ஜொ நஸாயஜொ

48. ஜொ ஜகி ஒதா வழிகா வாவ வதவஹூாய

49. வ०வ அ வாவ கூ திவ டு வஉபாணதம

எட்டாம் ஏடு—முன்புறம் [29]

50. கொழிவாமு ஹொஜகவ ரவவாயிகத வடீ⁻வ

51. ஐவ வஷஜுழிவிதெந வழிகா கஜ [30]

52. வூவூ மொ ஸூாஊணா ஒெவக வாவக ஹொதரஹு ஊகி [।*]

25. ஜூ என்பது ஜொ என்பதன் வடிவத்தையே பெற்றிருக்கிறது.

26. பூலர் நிஷமவாமண என்றே வாசித்திருக்கிருர். டாக்டர் ஸர்க்கார் நிஷமவாமணம் என்பதே சரியான பாடமாக இருக்கலாம் என்று குறிப்பிட்டிருக்கிருர்.

27. இடது விளிம்பின் நடுவில் எ என்ற எண் பொறிக்கப்பட்டுள்ளது.

28. பூலர் இதை வவ⁻யாபிவெ ஹபெ என்று வாசித்திருக்கிருர். ஹ என்று அவர் வாசித்த எழுத்து தகரமே. இன்னும் வகரத்துக்கு முன் கொம்பு சரியாக இல்லே; சிற்பியின் தவருகவே காண்கிறது.

29. இடது விளிம்பின் நடுவில் அ என்ற எண் பொறிக்கப்பட்டுள்ளது.

30. பூலர் இதை கஃ என்று வாசித்திருக்கிருர்.

மொழிபெயர்ப்பு

பார்க்கப்பட்டது.

வரி 1: காஞ்சிபுரத்திலிருந்து; பல்லவ வம்சத்தைச் சேர்ந்தவனும், பாரத் வாஜ கோத்திரத்தில் பிறந்தவனும், அக்னிஷ்டோமம், வாஜபேயம், அச்வ மேதம் ஆகிய யாகங்களைச் செய்தவனும் தர்ம மகாராஜாதி ராஜனுமான சிவ ஸ்கந்தவர்மன்;

வரி 3: நம்முடைய விஷயத்தில் (அதாவது ராஜ்யத்தில்) உள்ள எல்லா அரச குமாரர், சேனுபதி, ராஷ்டிரிகர் (ராஷ்டிரபாலர்), மாடவிகர் (சுங்க அதி காரி), தேசாதிகர் (நாடு ஆட்சி செய்வோர்), கிராமாகிராம போஜகர் (அந்த அந்த ஊரின் போஜகர்), வல்லபர் (குதிரை காவலர்), கோவல்லபர் (ஆனிரை காவலர்), அமைச்சர், அரக்காதிகர் (காவலர்), குமிகர், தூதிகர், நெயிகர் (நையோகிகர் - அதிகாரி), மற்றும் நம்மால் ஏவலை நிறைவேற்றச் செல்லும் சஞ்சரந்தர் (ஒற்றர்-சஞ்சரிப்போர்), படை வீரர் ஆகியோர்களுக்குக் கட்டளை.

வரி 5: ஆபிட்டி கிராமத்தில் வசிப்பவர்களும், சில்லரேக கொடுங்கை அனுபவிப்பவர்களுமான பிராம்மணர்களுக்கு நம்மால் இங்கே இப்போது வரி விலக்குகள் அளிக்கப்படுகின்றன.

வரி 8: அநேகங்கோடி பொன்னும், நூறுயிரம் பசுக்களும் (நூறுயிரம்) உழவு நிலங்களும் அளித்தவரும், எவரும் மீற முடியாத கட்டளையிட்டவருமான அரசருடைய—அவருடைய குல கோத்திரத்தினுடைய—தர்மம், ஆயுள், வலிமை, புகழ் ஆகியவற்றின் பெருக்கத்துக்கும், போரில் வெற்றிக்கும் வெற்றி யால் கிட்டும் பேற்றுக்குமாகச் செய்யப்பட்டு மகாராஜர் பப்பஸ்வாமிகளால் (பின்வரும்) சில்லரேக கொடுங்க கிராமத்தின் தோட்டம் முன்னுளிலே தானம் செய்யப்பட்டது.

வரி 12: கோலஸமஜனுடைய பங்கு அத்தேய சகோத்திரத்து அசி ஸமஜனுடைய பங்கு 4; மாடரனுடைய பங்கு 2; அவன் மாப்பிள்ளை அகில்லனு டைய பங்கு 1, ஹாரித ஸகோத்திரத்து காளசமஜனுடைய பங்கு 3; பாரதாய ஸகோத்தரத்து குமாரசமஜனுடைய பங்கு 3; கோஸிக ஸகோத்தரத்து குமார நந்தி, குமாரஸமன், கொட்டஸமன், ஸத்தி ஆகிய் நான்கு சகோதரர்களுக்குப் பங்கு 4; கஸ்ஸவஸகோத்திரத்து படி என்பானுக்குப் பங்கு 1; பாரதாய ஸகோ த்திரத்து கந்தகொண்டிக்குப் பங்கு 2; கந்தடனுக்குப் பங்கு 1; பப்பனுக்குப் பங்கு 1; தத்தஜனுடைய பங்கு 2; நந்திஜனுடைய பங்கு 3, வத்ஸ ஸகோத்திரத்து ருத ஸமனுடைய பங்கு 1, தாமதஜனுடைய பங்கு 1; ஸாலஸமஜனுடைய பங்கு 1, பரிமிதனுடைய பங்கு 1, நாகநந்தியினுடைய பங்கு 1; கோலியினுடைய பங்கு 1; கந்தஸமனுடைய பங்கு 1; ஸாமிஜனுடைய பங்கு 1;

வரி 27: அகிஸமஜனை முக்கியஸ்தனுகக் கொண்ட இந்தப் பிராம்மணர் களுக்கு ஸாதாஹனி ராஷ்டிரத்தில் செல்லரேக கொடுங்க கிராமத்தில் தென்

எல்லையின் (மேலே குறிக்கப்பட்ட பங்குகள்) முன்னால் அளிக்கப்பட்டன. இந்தத் தானம் சந்திரன் நக்ஷத்திரம் உள்ள காலம் வரையில் நிலைக்கச் செய்யப் பெறுவதற்காகச் செல்லரேக கொடுங்கை கிராமத்தின் தோட்டம் நம்மாலும் அந்தப் பிராம்மணர்களுக்கு நீரோடு அட்டிக் கொடுக்கப்பட்டது.

வரி 31: (அதிகாரிகளுக்குச்) சோறு, தண்ணீர் [விறகு], கட்டில், ஜாகை (முதலியவை) அளிக்கவேண்டாமை; பால் தயிர் கொடுக்க வேண்டாமை; ராஷ்டிரர்களால் அழிக்கப்பெறுமை; உப்புக்காகத் தோண்டாமை; கள் இறக்காமை; (?) பொதி சுமக்கும் மாற்றுக் காளைகள் அளிக்காமை, புல்லும் விறகும் அளிக்க வேண்டாமை; காய்கறி, கீரை, புஷ்பம் அளிக்க வேண்டாமை. இவை போன்ற பதினெட்டு வகை விலக்குகளும் விஷயத்தில் அதாவது ராஜ்யத்தில்) வசிப்பவர்கள், ஆபிட்டி ஊரார் செல்லரேக கொடுங்கை ஊரார் ஆகியோரால் விலக்கு அளிக்கப்பெற வேண்டும், அளிக்கும்படி செய்யவேண்டும்.

வரி 37: மேலும் அகிஸமஜனைப் பிரமுகனுகக் கொண்ட பிராம்மணர்களுக்கு ஆபிட்டியில் நெற்கதிர் அடிக்கும் களத்திற்குப் பூமி நிவர்த்தனமும், குடியிருப்பு மனைக்குப் பூமி நிவர்த்தனமும் அளிக்கப்பட்டுள்ளன. மேலும் அத்திகர் (ஆர்த்திகர்-பாதிக் கூலி பெற்றுக்கொண்டு ஊழியம் செய்யும் அடிமைகள்) நால்வர், கோலிகர் (தறிநெய்வோர்)இருவர், (நம்மால்) அளிக்கப்பட்டுள்ளனர்.

வரி 39: இதையறிந்த பிறகும் யாரானும் ஒருவன்தான் (அரசனுக்கும்) பிரியமானவன் என்ற மதத்தால் (இந்த தர்மத்துக்குக்) கொடுமையோ தீமையோ செய்தாலும், தொந்தரவு கொடுத்தாலும் அவனை நாம் நிச்சயம் தண்டத்தால் தடுப்போம்.

மறுபடியும், நூறுயிரம் ஆண்டுகளுக்கும் அதிகமாக எங்களுடைய பல்லவ குலத்தில் பிறந்து, எதிர்காலத்தில் ஆட்சி புரியப்போகும் பெரிய வீரர்களாயினும், எங்களினின்றும் வேறுன வம்சத்து அரசர்களாயினும், நான் கைகூப்பி வேண்டிக்கொள்கிறேன்: "உங்களில் யார் தம் காலத்தில் மேலே எழுதியபடி நடக்கச் செய்கிறுரோ, அவருக்கு மங்கலம் உண்டாகட்டும், யார் அதற்கு மாறுக நடக்கிறுரோ அவர் மனிதரில் கடையாய் ஐம்பெரும் பாதகங்களின் தோஷத்தை அடைவர்".

வரி 51: நூறுயிரம் ஆண்டுகள் நிலைப்பதற்காக (நம்முடைய ஆட்சியின்) எட்டாம் ஆண்டின் மழைக்காலத்தில், ஆறும் பக்ஷத்தின் பஞ்சமி நாள், இந்தப் பட்டயம் வழங்கப்பட்டது. நிறைவேற்றும் (ஆணத்தியும்) நானே. கோலிவாலம் (என்னும் ஊரின்) போஜகனும் (அந்தரங்கக் காரியதரிசி), ரஹஸ்யாதிக்ருதனுமான பட்டிஸம்மன் தன் கையால் எழுதியது இந்தப் பட்டயம்.

ஆன், அந்தணர், எழுதியவர், படித்தவர், கேட்டவர், அனைவருக்கும் மங்களம் உண்டாகட்டும்.

சாருதேவியினுடைய குணபதேயம் செப்பேடுகள்

சென்ற நூற்றுண்டிலே, ஸர் வால்ட்டர் எலியட் ஆந்திர கர்நாடகப் பிரதேசங்களிலிருந்து ஏராளமான கல்வெட்டுகளின் மசிப்படங்களையும், செப் பேட்டுச் சாசனங்களையும், செப்பேடுகளின் மசிப்படங்களையும் சேகரித்திருந் தார். இவர் காலமான பிறகு இவை லண்டனில் உள்ள பிரிட்டிஷ் மியூஸியம் என் னும் பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று இந்தச் செப்பேட்டுச் சாசனம். இது குண்டூர் ஜில்லாவிலுள்ள குணபதேயம் என்னும் இடத்திலிருந்து கிடைத்ததாம். டாக்டர் ப்ளீட் என்பவரால் இந்தியன் ஆண்டி குவரி 9-ஆம் தொகுதி 100-ஆம் பக்கத்திலும், டாக்டர் ஹுல்ஷ் என்பவரால் எபிகிராபியா இந்திகா 8-ஆம் தொகுதி, 143-ஆம் பக்கத்திலும், மசிப்படங் களுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளது. மூன்று ஏடுகளைக் கொண்ட இந்தச் சாசனத் தின் வளையத்து முத்திரை முகப்பிலே, நின்ற நிலையில் உள்ள மிருகத்தின் உரு வம் ஒன்று காணப்படுகிறது. இது ஒரு மானுக இருக்கலாம் என்று பழைய ஆசி ரியர்கள் கருதினர்கள். இந்த மிருகத்தின் முதுகுக்கு மேலே தெளிவாக இல்லாத சில உருவங்கள் காணப்படுகின்றன. இவை, சூரியன் சந்திரன் ஒன்றிரண்டு நட் சத்திரங்கள் போன்றனவாக இருக்கலாம். இந்த முத்திரையில் காணும் உருவங் களையே கொண்டனவாகக் காஞ்சிபுரத்திலிருந்து சமீபத்திலே ஒரு நாணயம் கிடைத்திருக்கிறது. இது பல்லவ நாணயமாகக் கருதப்படுகிறது. நின்ற நிலையில் காணும் மிருகம் ரிஷபமே.

முதல் ஏடும் மூன்ரும் ஏடும் உட்புறம் மட்டுமே எழுதப்பட்டுள்ளன. நடு வில் உள்ள இரண்டாம் ஏடு, இரு புறங்களிலும் எழுதப்பட்டிருக்கிறது; இதன் முன்புறத்திலே இடது விளிம்பில், உ என்ற எண்ணும் மூன்ரும் எட்டின் முன்புறத் தின் இடது விளிம்பில் ௩ என்ற எண்ணும் உள்ளன. முதல் ஏட்டின் பின்புறத் தில் நான்கு வரிகளும், இரண்டாம் ஏட்டின் முன்புறத்தில் மூன்று வரிகளும், இரண்டாம் ஏட்டின் பின்புறத்தில் நான்கு வரிகளும், மூன்ரும் ஏட்டின் முன்

புறத்தில் ஐந்து வரிகளுமாக மொத்தம் பதினறு வரிகளைக் கொண்டது இச் சாசனம். முதல் ஏட்டின் வலதுபுறம் பாசி பிடித்து அரித்துச் சில எழுத்துகள் சிதைந்து போயுள்ளன. சாசனம், பிராகிருத மொழியிலே உரைநடையில் எழுதப்பட்டுள்ளது. எனினும், கடைசியிலே வழக்கமாக மற்றச் சாசனங்களில் காணும் "பலசுருதி" சுலோகங்களில் இரண்டு ஸம்ஸ்கிருதத்தில் உள்ளன. எழுத்து, மொழி ஆகிய இரண்டைக் கொண்டும் இந்தச் சாசனம், மயிதவோலு, ஹிரஹடகள்ளி ஆகிய இரண்டு இடங்களிலிருந்து கிடைத்தவற்றிற்குக் காலத்தால் பிற்பட்டது என்றே சொல்லலாம்.

பல்லவ வம்சத்தைச் சேர்ந்தவனும், பாரத்வாஜ கோத்திரத்தில் பிறந்தவனுமான யுவமகாராஜன் ஸ்ரீ விஜயபுத்தவர்மனுடைய தேவியும், அங்குரன் என்று முடியும் பெயரைக் கொண்ட ஒருவனுடைய தாயுமான சாருதேவி, ஏதோ ஓர் ஊரில் உள்ள ராஜதடாகத்தின் அருகில் குடிநீர்க் கிணற்றின் வடபுறம் ஆதுகன் என்பான் பயிரிட்டு வந்த நிலத்தில் நாலு நிவர்த்தனம் பூமியைத் தாலூரம் என்னுமிடத்தில், கூளி மகத்தரக தேவகுலத்தில் (தேவகுலம்-கோயில்) * எழுந்தருளியிருக்கும் பகவன் நாராயணனுக்குத் தன்னுடைய ஆயுள், பலம் ஆகியவற்றின் அபிவிருத்திக்காக எல்லாப் பரிகாரங்களுடன் அளித்த செய்தியைக் கூறுகிறது. ரோகிணிகுப்தன் அதற்கு ஆணத்தியாகக் குறிக்கப்பட்டிருக்கிறன். சாசனம் ஸ்ரீ விஜயஸ்கந்த வர்ம மகாராஜாவின் ஆட்சிக் காலத்திலே அளிக்கப்பட்டது. ஆனல், ஆட்சியின் ஆண்டு கொடுக்கப்பட்டிருந்த இடம் சிதைந்து போயிருப்பதால் அறிய முடியவில்லை. நான்காவது வரியில், சிதைந்துபோன பகுதியில் கிடைக்கும் எழுத்துக்களைக் கொண்டு, கடகம் என்னுமிடத்தின் அதிகாரிக்கு அவள் கட்டளையிட்டதைத் தெரிவிப்பதாக ஓர் ஆசிரியரும், கடகம் என்னுமிடத்திலிருந்து அளிக்கப்பட்டதாக மற்ருேர் ஆசிரியரும் கொண்டிருக்கிறர்கள். இன்னும் கடகம் என்பது தான்யகடத்தையே குறிக்கும் என்றும் கொள்வர். விஷ்ணு ஆலயம் இருந்த தாலூர என்ற இடம் எது என்றும் தெரியவில்லை. கிருஷ்ணு நதியின் வடகரையிலே, விஜயவாடா தாலூகாவில் இப்போது தாமலூரு என்று வழங்கப்படும் ஊராகும் என்று பி. வி. கிருஷ்ண ராவ் கருதுகிறர்.

* கூளி மகத்தரக தேவகுலம் என்பது கூளி என்ற பெயர்கொண்ட பிரமுகர் எடுப்பித்த ஆலயம் என்று கருதப்பட்டு வருகிறது. கூளி என்பது ஒரு பெண் தெய்வத்தின் பெயர். காளன்-காளி. கூளன்-கூளி. இந்தப் பெயர்களை முன்னளிலே மக்கள் தரித்து வந்திருக்கிறர்கள். நிர்மாணித்தவர் பெயரைக்கொண்டு முன்னளிலே கோயில்கள் வழங்கப்பட்டு வந்ததில்லை. அதனல் இது ஒரு பெண் தெய்வத்தின் கோயில் என்றே சொல்லலாம்.

சாசனம் வழங்கிய சாருதேவியின் கணவஞன யுவமகாராஜன் புத்தவர்ம னுக்கும் அந்தக் காலத்திலே ஆண்டு வந்த விஜயஸ்கந்தவர்மனுக்கும் என்ன உறவு என்பது சாசனத்திலே தெளிவாக இல்லை. எனினும், விஜயபுத்தவர்மனை விஜயஸ்கந்தவர்மன் மகனுகவே ஆராய்ச்சியாளர்கள் அனைவரும் கருதுவர். சாருதேவியின் மகனுன ராஜகுமாரன் பெயரில் குர என்னும் விகுதியே ஏட்டில் தெளிவாக உள்ளது. அந்தப் பெயரைப் புத்தியங்குர என்று டாக்டர் ஹுல்ஷ் ஊகித்து வாசித்திருக்கிருர். சாசனத்தில் கண்ட தானத்தைச் சாருதேவி, தன்னு டைய ஆயுள், வலிமை ஆகியவற்றின் பெருக்கத்திற்காக அளித்திருப்பதை நோக்கினுல், இவளே ராஜ்ய பாரத்தை ஏற்று நடத்தி வந்தாள் என்றும் எண்ணத் தோன்றுகிறது. பல்லவ ஸாம்ராஜ்யத்தின் ஏதோ ஒரு மாகா ணம் அவளுடைய நிர்வாகத்தில் இருந்துவந்ததென்றும், அவளுடைய கணவன் அப்போது உயிருடன் இல்லையென்றும், தன் மகனுடைய ஸ்தானத்தில் அவள் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தி வந்தாள் என்றும் எண்ணத் தோன்றுகிறது.

இந்தச் சாசனம் வழங்கப்பெற்ற காலத்தில் அரசனுக இருந்த ஸ்ரீ விஜய ஸ்கந்தவர்மனை, மயிதவோலு, ஹீரஹடகள்ளி ஆகிய இரு சாசனங்களையும் வழங்கிய சிவஸ்கந்தவர்மனுகவே ஆராய்ச்சியாளர்கள் கருதுவர். இவனுடைய உண்மைப் பெயர் ஸ்கந்தவர்மன் என்றும், இந்தப் பெயருக்கு முன்னதாக, "சிவ" என்று ஓரிடத்தில் காண்பதும், "ஸ்ரீ விஜய" என்று மற்ருெரு இடத்தில் காண்பதும், மரியாதையாக வழங்கப்பெற்ற மங்கல அடைமொழிகளே என் றும், இவற்றுக்குத் தனியாக முக்கியத்துவம் அளிக்க வேண்டியதில்லை என்றும் அவர்கள் கூறுவர். மயிதவோலு, ஹீரஹடகள்ளி ஆகிய இரண்டு சாசனங்க ளின் முத்திரைகளிலும், "சிவ" என்ற பகுதி அரசனுடைய பெயரோடு சேர்ந்து சிவஸ்கந்தவர்மன் என்று காணப்படுகின்றது. அதை நாம் முன்னரே கண் டோம். இன்னும் குணபதேயச் சாசனம் எழுத்தாலும் மொழியாலும் அவ் விரண்டுக்கும் பிற்பட்டது என்பதையும் கண்டோம். அதனுல் ஸ்ரீ விஜயஸ்கந்த வர்மனைச் சிவஸ்கந்தவர்மனினின்றும் வேருனவன் என்றே நாம் கொள்ள வேண்டும்.

★

சாசன மூலபாடம்

முதல் ஏடு—பின்புறம்

ஸித்தம் || [1]

1. ஸிரிவிஜய கந்தவம்ம மஹாராஜஸ்ஸ ஸம்வச்ச[ர]...[।*]
2. யுவமஹாராஜஸ்ஸ பாரத்தாயஸ்ஸ பல்லவா
3. ணம் ஸி[ரி] விஜய புத்தவம்மஸ்ஸ தெவீ [பு]த்தி [2]
4. குர-ஜநவி சாருதெவி க[டகெ]விய .. [3]

இரண்டாம் ஏடு—முன்புறம் [4]

5. ராஜ தடாக ஹெட்டெ வாணிய [5]
6. பாதூத்தரெ பாஸெ கூதுகஸ்ஸ கலித
7. கெத்தம் தாருகம்மரெ கம்பி மஹாதரக தெவகுல[ஸ்ஸ]

இரண்டாம் ஏடு—பின்புறம்

3. பகவநாராயணஸ்ஸ அம்ஹ ஆயு பல வத்தநீ
9, யம் காதம்ஹே ஹம்ஹிநிவத்தணா அத்தாநி ச அத்தெஹிம்
10. ஸ வத்தா[।*] தம் நாதம்ஹே மாஜெயிகா ஆயுத்தா
11. ஸவ்வ பரிஹாரெஹி பரிஹாரஹ பரிஹாராவெ[ஹ] [।*]

1. ஏட்டின் இடதுபுறம் ஓரமாக எழுதப்பட்டுள்ளது.

2. டாக்டர் ஹூல்ஷ் [பு]த்[தி]குர என்று வாசித்திருக்கிறார். புத்தியங்குர என்றால் புத்தன் அல்லது புத்தவர்மனிடம் தோன்றியவன் என்று பொருள்படும், நான்காம் வரியின் ஆரம்பத்தில் உள்ள குர என்ற இரு எழுத்துக்களே நிச்சயம். மூன்றும் வரியின் கடைசியில் உள்ளவை ஊகித்து உணரப்பட்டனவே.

3. டாக்டர் ஹூல்ஷ் இந்த இடத்தில் க[டகெ]விய[ாபதம்]என்று வாசித்திருக்கிறார். டாக்டர் ஸர்க்கார் காஷிபெ விபா|தம்: எனக் கொள்ளலாம் என்கிறார். Select Inscriptions பக்கம் 443 அடிக் குறிப்பு). முன் பகுதியை 'கட்டளை இடுகிறாள்' என்று பொருள் கொடுப்பதாக கடகெஉ எனக்கொள்ளலாம். "விய" என்பதன் பின்னால் உள்ள எழுத்துக்கள் தானபூமி அடங்கியிருந்த ஊரின் பெயரைக் குறிப்பதாக அமைந்திருக்கலாம்-

4. ஏட்டின் இடதுபுறத்தில் "உ" என்ற எண் பொறிக்கப்பட்டுள்ளது.

5. சிதைந்துபோன இவ்விடத்தை 'கடு' என்ற எழுத்தால் நிரப்பலாம்.

முன்ரும் ஏடு— முன்புறம் [6]

12. 𑌬𑌹𑍁𑌭𑌿𑌰𑍍𑌵𑍍𑌵[𑌸𑍁]𑌧𑌾 𑌦𑌤𑍍𑌤𑌾 𑌬𑌹𑍁𑌭𑌿𑌶𑍍𑌚𑌾𑌨𑍁𑌪𑌾𑌲𑌿𑌤𑌾[|*]
13. 𑌯𑌸𑍍𑌯 𑌯𑌸𑍍𑌯 𑌯𑌦𑌾 𑌭𑍂𑌮𑌿𑌃 𑌤𑌸𑍍𑌯 𑌤𑌸𑍍𑌯 𑌤𑌦𑌾 𑌫𑌲𑌮𑍍 [||*]
14: 𑌸𑍍𑌵𑌦𑌤𑍍𑌤𑌾𑌂 𑌪𑌰𑌦𑌤𑍍𑌤𑌾𑌂 𑌵𑌾 𑌯𑍋[𑌹*] 𑌹𑌰𑌤[7] 𑌵𑌸𑍁[𑌨𑍍𑌧]𑌰𑌾𑌮𑍍 [|*]
15. 𑌗𑌵𑌾𑌂 𑌶𑌤𑌸𑌹𑌸𑍍𑌰𑌸𑍍𑌯 𑌹𑌨𑍍𑌤𑍁𑌃 𑌪𑌿𑌬𑌤𑌿 𑌦𑍁𑌷𑍍𑌕𑍃𑌤𑌮𑍍 [||*]
16. 𑌕𑍂𑌣𑌤𑍍𑌤𑌿 𑌗𑍋𑌹[𑌣𑌿] 𑌮𑌾𑌟[𑌤𑍍𑌤]𑌿 [8] ||

★

மொழிபெயர்ப்பு

நிறைவேறுவதாக.

வரி 1: ஸ்ரீ விஜயஸ்கந்தவர்மனுடைய (ஆட்சி) ஆண்டு...

வரி 2: யுவமகாராஜனும், பாரத்வாஜ கோத்திரத்தில் பிறந்தவனும், பல்லவ வம்சத்தைச் சேர்ந்தவனுமான ஸ்ரீ விஜயபுத்தவர்மனுடைய தேவியும், [புத்தி] குரன்தாயுமான சாருதேவி [கட்டளையிடுகிருள்].

வரி 4: [விஜய...] ராஜதடாகத்தின் அருகில் குடிநீர்க் கிணற்றின் வடபுறம் ஆதுகன் என்பான் பயிரிடும் நிலத்தில் தாலூரில் உள்ள கூளி மகத்தரகர் கோயிலில் பகவான் நாராயணனுக்கு நம்முடைய ஆயுள், வலிமை, வளர்ச்சியைச் செய்வதற்காக நான்கு நிவர்த்தனம் நிலம் நம்மால் அளிக்கப்பட்டது.

வரி 10: இதை அறிந்து ஊராரும் ஆயுக்தகர்களும் எல்லா விலக்குகளும் அடையும்படி விலக்க வேண்டியது; விலக்கச் செய்யவேண்டியது.

6. ஏட்டின் இடதுபுறம் 'ᵹ' என்று எண்ணிடப்பெற்றுள்ளது.
7. 𑌹𑌰𑌤𑌿 அல்லது 𑌹𑌰𑍇𑌤 என்று இருத்தல் வேண்டும்.
8. டாக்டர் ஸர்க்கார் 𑌮𑌾𑌤𑍍𑌤𑌾𑌤𑍍𑌤𑌿 என்று வாசித்திருக்கிருர். (ஷி பக்கம் 444)

சுலோகம் 1. அநேகர் பூதானம் செய்திருக்கிறார். அநேகர் அதைப் பரிபாலித்திருக்கிறார். யார் யாருடைய பூமி எவ்வளவோ அவர் அவர்க்கு அந்த அளவு பயன் கிட்டும்.

சுலோகம் 2. தான் அளித்ததோ பிறன் அளித்ததோ எதுவாயினும் பூமியை அபகரித்தவன் நூறாயிரம் பசுக்களைக் கொன்ற கொடுஞ் செயலைச் செய்தவன் ஆவான்.

சிம்மவிஷ்ணுவினுடைய
ஹொஸக்கோட்டை செப்பேடுகள்

மைசூர் சமஸ்தானத்தில் பங்களூர் ஜில்லாவில் ஒரு தாலூகாவின் பிரதான நகரமான ஹொஸக்கோட்டையில் ஒரு பள்ளி ஆசிரியரிடமிருந்து பெறப்பட்ட இந்தச் செப்பேட்டுச் சாசனம், மைசூர்–புதை பொருள் துறையின் 1938 ஆம் ஆண்டறிக்கையில் (பக்கங்கள் 80-90) வெளியிடப்பட்டுள்ளது. மூல சாஸனத்தை விலைக்கு வாங்கி மைசூரில் உள்ள புதை பொருள் ஆராய்ச்சித்துறை ஆபீசின் பொருட்காட்சியில் வைத்திருப்பதாக அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ளது. ஐந்து ஏடுகளைக் கொண்டது இச்சாஸனம், அந்த ஏடுகளைக் கோத்திருந்த வளையத்தின் முகப்பில் யானையின் உருவம் பொறிக்கப்பட்ட முத்திரையொன்று காணப்படுகிறது. முதல் ஏடும், கடைசி ஏடும் உட்புறம் மட்டுமே எழுதப்பட்டுள்ளன. பாக்கியுள்ள மூன்று ஏடுகளும் இரு புறங்களிலும் எழுதப்பட்டுள்ளன. இவ்விதம் உள்ள எட்டுப் பக்கங்களில் முதல் ஏழு பக்கங்களில் பக்கத்துக்கு ஐந்து வரிகளும், கடைசிப் பக்கத்தில் நான்கு வரிகளுமாக மொத்தம் 39 வரிகளில் எழுதப்பட்டுள்ளது.

பழைய காலத்துத் தெலுங்கு-கன்னட எழுத்துகள் என்று குறிக்கப்பெறும் எழுத்து வகையிலே இச்சாசனம் பொறிக்கப்பட்டுள்ளது. எழுத்துகளுக்குத் தலைக்கட்டு காணப்படவில்லை. கங்க வம்சத்து அரசனான மாதவவர்மனுடைய சாசனக் கோட்டைச் செப்பேடுகள் (எபிகிராபியா இந்திகா-தொகுதி 24) பல்லவ அரசனான குமாரவிஷ்ணுவின் செந்தலூர்ச் செப்பேடுகளில் காணும் எழுத்துகளையே இச்சாசனத்தின் எழுத்துகள் ஒத்திருப்பதாகக் கொள்ளலாம். எனினும், அவற்றிற்கு இது காலத்தால் பிற்பட்டது.

"ஜிதம்பகவதா" என்ற மங்கலத்தோடு ஆரம்பிக்கிறது இச்சாஸனம். கொங்கணி வர்ம தர்ம மகாதிராஜனை முதல் அரசனாகக் கொண்ட கங்க வம்சத்தின் புகழை முதலில் கூறுகிறது. அப்பால், மாதவர்மன், ஹரிவர்மன், விஷ்ணு கோபன், மாதவவர்மன், கொங்கண்யாதிராஜன் ஆகியோர்களை வரிசையாகக் கூறுகிறது. கடைசியாகக் குறிக்கப்பட்ட கொங்கண்யாதி ராஜனுக்கு முன்னால் ஆண்டவர்களைப்பற்றிக் கூறும் பகுதி, அந்த வம்சத்து அரசர்களின் மற்றச் சாசனங்களில் காணப்படுவதேயாகும். கொங்கண்யாதி ராஜனுடைய ஆட்சியின் காலத்தில்தான் சாஸனம் வழங்கப்பட்டது. இவன் பெயர் என்ன என்பது சாசனத்தில் தெளிவாகக் குறிக்கப்பெறவில்லை. எனினும் அவன் தாயின் மடியில் குழந்தையாக இருந்த காலத்திலேயே அரசை அடைந்தான் என வருணிக்கப்பட்டதிலிருந்து இவனை அவிநீதனாகவே ஆராய்ச்சியாளர் கருதுவர். இன்னும் இவன் வயது முதிராதவனாயினும் முதிர்ந்த அறிவு பெற்றிருந்தான் என்றும் சாஸனம் கூறுகிறது. * அதிலிருந்து தானம் வழங்கப்பெற்ற காலத்தில் இவன் இளைஞனாகவே இருந்தான் என்பதும் தெரியவரும்.

பல்லவாதிராஜனாகிய சிம்மவிஷ்ணுவின் தாய் தன்னுடைய கணவனுடைய குலத்தின் கீர்த்திக்கும், தன் புண்ணியம், தர்மம் என்ற இவற்றின் வளர்ச்சிக்குமாக எடுப்பித்த அருகக்கடவுளின் கோயிலுக்காக கோரிக்குந்தம் என்னும் நாட்டில் (பாகத்தில்) புல்லியூர் என்னும் ஊரில் சில நிலங்களும், ஒரு வீடும் யாவனிக சங்கத்திற்கு அந்த ஆண்டில், கார்த்திகை மாதத்துப் பௌர்ணமி நாளில், அரசனால் அளிக்கப்பட்ட செய்தி காணப்படுகிறது. கோயில் எந்த ஊரில் எழுப்பப்பெற்றது என்பது தெளிவாகக் கூறப்படவில்லை. எனினும், அது புல்லியூராகவே இருத்தல் வேண்டுமெனக் கொள்ளலாம். கோயில் எழுப்பியதாகக் குறிக்கப்பெற்ற சிம்மவிஷ்ணுவின் தாயைப்பற்றி வேறு எந்த விவரமும் தெரியவில்லை. முன்னாளிலே ராஜ குடும்பத்தினர், தங்கள் நாட்டைவிட்டு வெளியிடங்களிலே இத்தகைய தருமங்களைச் செய்வது வழக்கமில்லை. அதனால் பல்லவ சிம்மவிஷ்ணுவின் தாய் கங்க ராஜ்யத்தில் கோயில் எழுப்பியதும், கங்க மன்னன் அதற்கு நிலம் வழங்கியதும் முக்கியமான விஷயங்களேயாகும். ஒருகால், இவள் கங்க வம்சத்திலே பிறந்தவளாக இருக்கலாம். அந்த நாளிலே அந்த இரண்டு வம்சங்களுக்கும் இடையில் நிலவிய உறவை இச்சாசனம் எடுத்துக்காட்டுகிறது. இதுவே இந்தச் சாசனத்தின் முக்கியத்துவமும் ஆகும்.

